# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

(பகுதி 4)

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள் (4) |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0 |
| காலம் | : | பிப்ரவரி 2014 |
| அட்டை வடிவமைப்பு | : | Fairy |


**"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்"**


Nilacharal

**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

******

**உபயோக நிபந்தனைகள் :**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

******

# பொருளடக்கம்

சிகப்பாய்க் கொஞ்சம் கண்ணீர் .......... 1
திரும்பத் திரும்ப தேன் நிலவு .......... 10
இனி எனக்கு மரணமில்லை .......... 20
அங்கிள் எனக்கு மனசே சரியில்ல .......... 33
சொர்க்கம் பக்கத்தில் .......... 51
வீடு பேறு .......... 59
சிரித்துக்கொண்டே அழுகின்றேன் .......... 65
அபாய சங்கிலி .......... 72
விஸ்வநாதன் ராமமூர்த்தி .......... 87
மத்தாப்புக் கொளுத்தும் வயசு .......... 96
இது பொம்பளைங்க சமாசாரம் .......... 102
சரஸ்வதி காலம் .......... 106
திருப்பம் .......... 113
தீர்த்த யாத்திரை .......... 124
எங்க ஊர் மக்கள் .......... 129
இன்சுலின் .......... 140
ஜாதி இரண்டொழிய வேறில்லை .......... 150
புதிய பயணம் .......... 158
பரிணாம வளர்ச்சி .......... 164
மழை மறைவுப் பிரதேசம் .......... 175
உறவுக்கு என்றும் இரண்டு பக்கம் .......... 183
கோடைப் பனி .......... 193
இனச் சேர்க்கை .......... 198
ஊனமும் மானமும் .......... 209
சின்னச் சின்ன வட்டங்கள் .......... 216

# சிகப்பாய்க் கொஞ்சம் கண்ணீர்

ஞாயிற்றுக்கிழமையின் மிதப்பில் படுக்கையிலிருந்து எழும்ப மனசில்லாமல் புரண்டு கொண்டிருந்த பாலகிருஷ்ணனைத் திடீரென்று பஸ்ஸரிலிருந்து உற்பத்தியான சங்கீதம் எரிச்சல்படுத்தியது. இந்த அழைப்பு மணி ராகமிசைக்கிறபோதெல்லாம் சரோவின் ஞாபகம் வந்து தொலைப்பதைத் தவிர்க்க இயலவில்லை. எரிச்சலுக்கு அதுவும் ஒரு காரணம்.

இந்த அழைப்பு மணியை சிங்கப்பூர் சூப்பர் மார்க்கெட் ஒன்றில் ஒரு சீனத்து விற்பனைப் பெண் எடுத்துக்காட்டி, 'இருபத்தி நாலு வெவ்வேறு இசை இதில் பொதிந்திருக்கிறது' என்று சொன்ன மாத்திரத்திலேயே சரோவின் மனசு இசையால் நிறைந்துவிட்டது. அதை வாங்கியே ஆக வேண்டுமென்று நச்சரித்து பாலகிருஷ்ணனை வாங்க வைத்துவிட்டாள். இங்கே அதை வீட்டு வாசலில் பொருத்திய முதல் ஞாயிற்றுக்கிழமை, திரும்பத் திரும்ப பஸ்ஸரை அழுத்தி, ஒவ்வொரு அழுத்தலுக்கும் ராகம் மாறுகிற லாவகத்தையும், அந்தச் சின்னப் பெட்டியிலிருந்து எழுந்த விதவிதமான இசையையும் மறுபடி மறுபடிக் கேட்டுக் குதூகலித்தாள். சின்னக் குழந்தை மாதிரி கைகொட்டி ரசித்தாள். அவளுடைய குதூகலம் பாலகிருஷ்ணனை வெறுப்பேற்றியது. பல்லைக் கடித்துக் கொண்டான்.

அடுத்த நாள் திங்கட்கிழமை சாயங்காலம் ஆஃபீஸிலிருந்து திரும்பி, கதவைத் திறக்க பஸ்ஸரை அழுத்தினான். உள்ளே இசையெழுவது வெளியே சன்னமாய்க் கேட்டது. ஆனால் கதவு திறக்கவில்லை. ஒரு அரை நிமிஷ இடைவெளிக்குப் பின்னால் திரும்பவும் அழுத்தினான். 'ம்ஹூம்' திறக்கவில்லை. எரிச்சலோடு மூன்றாந்தரம் அழுத்திய பின்னால் கதவு திறந்தது. முகத்தில் சிரிப்போடும், கண்களில் குறும்போடும், திறந்த கதவுக்குப் பின்னால் சரோ.

"ஹாய் டார்லிங், குட்ஈவ்னிங்" என்றாள். அவளுடைய மலர்ச்சி பாலுவின் கோபத்தை அதிகப்படுத்தத்தான் செய்தது.

"என்ன இவ்வளவு நேரமாக் கதவு தெறக்கல, என்ன செஞ்சிட்டிருந்த? பாத்ரூம்ல இருந்தியா?"

"இல்லியே, இங்கதான் ஹால்ல இருந்தேன்."

"அப்ப ஏன் இவ்வளவு லேட்?"

"சும்மாத்தாங்க. அந்த ம்யூஸிக் எவ்வளவு ஸ்வீட்டா இருக்கு! அதக் கேக்கறதுக்குத்தான். வெளியே நீங்கதான்னு தெரியும். நீங்க ரெண்டு மூணு தடவை அடிக்கட்டுமேன்னு வெய்ட் பண்ணிட்டிருந்தேன்."

அவள் சொல்லி வாய் மூடவும், பளாரென்று அவளுடைய கன்னத்தில் இறங்கியது அவனுடைய முரட்டுக் கை. அவளுடைய கண்களில் மின்னிய குறும்பு, கண்ணீருக்கு

வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டது. கன்னம் கன்றிப் போனதைப் போலவே மனசும் கன்றிப் போனது. சரோவின் தேன் நிலவுக் கனவுகள் அன்றைக்குத்தான் கலைந்தன. புதுப்பொண்டாட்டி மயக்கத்திலிருந்து தெளிந்த, வேஷங்கள் களைந்த பாலகிருஷ்ணன் தன்னுடைய சுயரூபத்தைக் காட்ட அந்த நிகழ்ச்சி ஓர் ஆரம்பமாய் அமைந்தது.

'இதோ ரெண்டாம் முறை பஸ்ஸர் இசைக்கிறது'. பாலகிருஷ்ணன் சலித்துக்கொண்டே எழுந்தான். தன்னுடைய ஞாயிற்றுக்கிழமையின் சுதந்திரத்தை ஒன்பது மணிக்கே சிதைத்துவிட்ட முகந்தெரியாத அந்த நபரை சபித்துக் கொண்டே கதவைத் திறந்தவன், முகத்தைப் பார்த்ததும் அதிர்ந்தான். அதிர்வுக்குக் காரணம் முகத்துக்குரியவன் மட்டுமல்ல, அந்த முகத்திலிருந்த புன்னகையும்தான். 'வாக்களிக்கப்பட்ட வரதட்சணையில் பாக்கியைக் கொண்டுவா' என்று படாதபாடுபடுத்தி மூட்டை கட்டி அனுப்பி வைக்கப்பட்ட மனைவியின் அண்ணன், தன்னைப் பார்த்து சிநேகபூர்வமாய்ப் புன்னகைப்பது பாலுவுக்குப் புதிராயிருந்தது. சுதாரித்துக் கொண்டு, "வாங்க" என்றான்.

"என்ன மாப்ள, ஞாயித்துக்கிழமைய நல்லா அனுபவிக்கிறீய போலயிருக்கு" என்று முத்தையன் சிரித்தான்.

"பொண்டாட்டியப் பொறந்த வூட்டுக்கு அனுப்பிச்சிட்டு தன்னந்தனியா ஜாலி பண்ணுதீயளே மாப்ள, இது ஞாயமா?"திரும்பவும் சிரிப்பு. முத்தையன் சிரித்தாலும், "பொண்டாட்டியப் பொறந்த வூட்டுக்கு அனுப்பிச்சிட்டு"வில் தொக்கியிருந்த கொக்கி பாலகிருஷ்ணனை உறுத்தியது.

அசட்டுத்தனமாய்ச் சிரித்து, "சரோ எப்படியிருக்கா அண்ணாச்சி?" என்று சம்பிரதாயத்துக்குக் கேட்டு வைத்தான்.

"அதான பாத்தேன், நீங்க பாப்பாவப் பத்திக் கேக்காமயிருக்க மாட்டீயளே! அடிச்சிக்கிட்டாலும் புடிச்சிக்கிட்டாலும் புருசம் பொஞ்சாதி ஒறவு மாதிரி, வேற ஒறவு கெடையாதில்லியா மாப்ள!"

"ம் ம்."

"பாப்பாக்கும் சதா ஒங்க ஞாபகந்தான். அவிய எப்படி இருக்காகளோ, சாப்பாட்டுக்கு என்ன செய்தாகளோ, நா இல்லாம என்னமா கஷ்டப்படுதாகளோ அப்படீன்னு சதா ஒங்க நெனப்புத்தான் மாப்ள."

சிரித்து மழுப்பிப் பேச்சைத் திசை திருப்பினான் பாலகிருஷ்ணன். "கொஞ்சம் இருங்க அண்ணாச்சி. நா குளிச்சிட்டு வந்திர்றேன்; டிஃபன் சாப்புடப் போவோம்."

"எங்க?"

"ஹோட்டலுக்குத்தான்."

“நா ரயில வுட்டு எறங்கின கையோட எக்மோர்ல டிபன் பண்ணிட்டு வந்துட்டேன் மாப்ள; நமக்குப் பசி தாங்காது. நீங்க சௌகரியமா குளிச்சிட்டு வாங்க.”

குளித்துவிட்டு வந்த பாலகிருஷ்ணன், வெண்ணைப் பாக்கெட்டை ஃப்ரிட்ஜிலிருந்து எடுத்து வைத்துக்கொண்டு மேஜையில் உட்கார்ந்தான்.

“இதென்ன மாப்ள, ரொட்டியா திங்கப் போறீய? ஓட்டலுக்குப் போவணும்னீய?”

“ஒங்களுக்காகத்தான் அண்ணாச்சி போகணும்னேன், நீங்கதான் சாப்ட்டுட்டு வந்துட்டீங்களே. நமக்கு ப்ரட்தான் ப்ரேக்ஃபாஸ்ட்.”

“இந்தப் பட்டணத்துக்காரவுக சாப்பாடே தனிதான் மாப்ள” என்று சிரித்துக்கொண்ட முத்தையன், பாலு ரொட்டியில் வெண்ணையைத் தடவுவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். குறிப்பாக, பாலுவின் கையிலிருந்த கத்தியை. அதை உணர்ந்த பாலுவின் கைகள் ஏனோ லேசாய் நடுங்கின. “என்ன அண்ணாச்சி பேசாமயிருக்கீங்க” என்றான் அவனுடைய கவனத்தைத் திருப்ப.

கத்தியிலிருந்து பார்வையை விலக்கி முத்தையன், பாலகிருஷ்ணனின் முகத்தைப் பார்த்துச் சிரித்தான்.

“ஒண்ணுமில்ல மாப்ள, வெண்ண வெட்ற கத்திதான இது?”

“இது வந்து…ஆமா…ஏன்?”

“இந்த மொட்டக் கத்திய நெஞ்சுல நட்டமா நட்டு வச்சு சுத்தியல் கொண்டு அடிச்சாலும் உள்ள எறங்காது போலயிருக்கே, ‘இதக் கொண்டுட்டு நீங்க குத்த வந்தீய’ன்னு பாப்பா ஓன்னு ஒப்பாரி வச்சுச்சு பாருங்க, நெனச்சா சிரிப்புத்தான் வருது.”

திரும்பவும் சிரித்தான். சிரிப்பு பாலகிருஷ்ணனை ரொம்ப சங்கடப்படுத்தியது. தான் கத்தியை காட்டி மிரட்டினதை அண்ணனிடம் சொல்லியிருக்கிறாள். ‘இன்னும் என்னவெல்லாம் சொன்னாளோ? எல்லாமே சொல்லியிருப்பாளோ?’

தொண்டைக்குள் ரொட்டி இறங்க மறுத்தது.

“என்ன மாப்ள எந்திரிச்சிட்டீய?”

“இது… பசியில்ல அண்ணாச்சி.”

“அதுவும் நல்லதுக்குத்தான். மதியம் ஒரு நல்ல ஓட்டலாப் பாத்துக் கூட்டிட்டுப் போங்க. சேத்து வச்சு ஒரு புடி புடிச்சிருவோம்.”

“ஒரு புடி புடிச்சிருவோம்” என்று அபிநயம் பிடித்த முத்தையன் குரலைத் தணித்து, “கடேசி கடேசியா இன்னிக்கி ஒரு நாள்தான நீ சாப்புடப் போற” என்றது பாலுவின்

காதில் வெற்று ஒலியாய் விழ, அவன் முத்தையன் பக்கம் திரும்பி, "என்ன அண்ணாச்சி?" என்றான்.

"இன்னிக்கி ஒரு நாள்தான மாப்ள ஒங்களுக்கு ஓட்டல் சாப்பாடு, அதச் சொன்னேன்."

"எப்படிச் சொல்றீங்க?"

"சாய்ந்தரம் ரயிலுக்கு நாம ஊருக்குப் போறோம்ல?"

"நாமன்னா?"

"நாமன்னா, நீங்களும் நானும்."

"நானுமா?"

"ஆமா, பெறவு என்னத்துக்கு கருங்குளத்துலயிருந்து மெனக்கெட்டு மெட்ராஸ்க்கு வந்திருக்கேன்னு நெனக்கீய? ஒங்கள நா வுட்டுட்டுப் போறதாயில்ல மாப்ள. பாப்பா கூட ஒங்கள சேத்து வக்றது ஒண்ணுதான் இப்ப எனக்கு வேல. நீங்களுஞ் சம்மதிப்பீகன்னுட்டுத்தான் திருநவேலியிலேயே ஒங்களுக்குஞ் சேத்து டிக்கட் போட்டுக்கிட்டு வந்துட்டேன்."

"என்ன அண்ணாச்சி இப்படி திடீர்னு வந்து கூப்புட்டா எப்படி அண்ணாச்சி? எனக்கு லீவு இல்லியே."

"லீவு என்னா மாப்ள பெரிய லீவு. ஊருக்கு வாங்க, நாந் தாறேன் ஒங்களுக்கு பெரிய்ய லீவு!"

"என்ன அண்ணாச்சி வெளையாட்டுத்தனமா பேசறீங்க."

"நெசமாத்தாஞ் சொல்லுதேன் மாப்ள. திருநவேலியில ஐக்கிரவுண்டு ஆஸ்பத்திரியில நம்ம ஊர்ப் பையனொருத்தன் டாக்டராயிருக்கான். அவன்ட்ட ஒரு வார்த்த சொன்னா, மலேரியாக் காச்சல்ன்னு சர்ட்டிபிகேட் குடுத்துட்டுப் போறான். அப்புறம் லீவுக்கென்ன!?"

"சரி அண்ணாச்சி வர்றேன். அதுக்கு முந்தி மானேஜர் வீட்டுக்கு ஃபோன் போட்டு சொல்லிர்றேன்."

"அட நீங்க ஒண்ணு மாப்ள, சுத்தக் கோட்டிக்கார ஆளா இருக்கீயளே. காச்சல்ன்னு சர்ட்டிபிகேட் வாங்கித் தாறேங்கேன், நீங்க சொல்லிப்புட்டு வாறேங்கீயளே! சீக்கு, சொல்லிப்புட்டா மாப்ள வரும்? சும்மா தகிரியமா கௌம்புங்க. நா இருக்கேம்லே?"

சாயங்காலம் நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸில் பயணமான போது ரெண்டு பேருக்கும் முட்டை சாப்பாடு பாலகிருஷ்ணனே ஆர்டர் செய்தான்.

“சாப்பாடு எப்ப வரும் மாப்ள?”

“விழுப்புரத்துல. எட்டர மணிக்கி.”

“எட்டரையாகுமா, அதுவரக்யும் நமக்குப் பசி தாங்காதே மாப்ள… இந்த விசயத்துல பாப்பாவும் என்னப் போலத்தான். கொஞ்சங்கூடப் பசி தாங்காது. ஹ்ம்ம் இதுல எனக்குக் கொஞ்சம் வருத்தம் உண்டு மாப்ள.”

அவன் எங்கே வருகிறான் என்று பாலுவுக்குப் புரிந்தது. “சொல்லுங்க” என்றான் ஸீட்டில் அசௌகரியமாய் நெளிந்தபடி.

“பாப்பா சொல்லி அழுதுச்சு, நீங்க ஆபீசுக்குப் போறப்ப அடுப்பங்கரையப் பூட்டி சாவியெக் கொண்டு போயிருவீயளாம். ராவைக்கி நீங்க வந்த பெறவுதான் சமையலாம். மதியம் பாப்பா பட்னியாம்.”

“அது வந்து அண்ணாச்சி, சரோ… வந்து… கொஞ்சம் சதை போட்ட மாதிரி இருந்துச்சு. அதான் டயட்டிங் பண்ணினா சரியாப் போயிரும்னு…”

“அடடே, அது அப்படியா மாப்ள, அதான நான் நெனச்சேன், நீங்க அந்த மாதிரி அநியாயம் பண்ணக்கூடிய ஆள் இல்லியேன்னு.”

‘முத்தையன் உண்மையாய்த்தான் சொல்லுகிறானா அல்லது நக்கலடிக்கிறானா?’ என்று புரியாமல் பாலகிருஷ்ணன் சும்மாவேனும் ஒரு இளிப்பு இளித்து வைத்தான்.

“வேற ஒண்ணுமில்ல மாப்ள, பாப்பாவுக்கு கொழந்த மனசு பாருங்க, உள்ள இருக்கற விசயம் அதுக்குத் தெரியல. வெளிய தெரியத வச்சு இதான் நெசமாக்கும்னு மெரண்டுருது… அப்பறம் இன்னொண்ணு கூட பாப்பா சொல்லிச்சே… ஒங்கண்ணாச்சி புல்லட்டு வேங்கித் தர்றேன்னு சொன்னாரு, என்ன பேச்சையே காணலன்னு அதட்டல் போட்டீயளாம். அதுல ஒரு சின்ன சிக்கல் ஆய்ப்போச்சு மாப்ள. நஞ்ச புஞ்சயெல்லாம் பாதிய வித்துப்புட்டு, பாதிய ஒத்திக்கு வச்சு காசு பாத்துத்தான் நா பாப்பாவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன். கட்டிலு, பீரோ, நகை நட்டு, பண்ட பாத்திரம், ஐஸ்பெட்டி, அப்புறம் நீங்க கேட்ட கலர் டி.வி பெட்டி எல்லாம் வேங்கித் தந்தேன். பெறவு திடீர்னு நீங்க தேன் நிலவுக்கு சிங்கப்பூருக்குப் போவணும்னு ஒரு குண்டத் தூக்கிப்போட்டீயளா, எனக்குக் கையும் ஓடல காலும் ஓடல. கையில் இருந்ததெல்லாம் காலி. ஆனா பாப்பா ஆசப்பட்டு நா எதையும் இல்லன்னு சொன்னதில்ல. அங்க இங்க பொரட்டி ஒங்கள ஏரோப்ளான்ல ஏத்திவிட்டேன். நம்ம கேம்லாபாத் ராவுத்தர் மூத்த பையன் சிங்கப்பூர்ல யாவாரம் பண்ணிட்டிருக்கானே, அவங்க கூடவே நீங்க தங்கிக்கலாம், செலவுக்கு ரூவா தேவையிருந்தாலும் அங்க வேங்கிக்கலாம்னு ராவுத்தர் பெரிய மனசு பண்ணிச் சொன்னாரு. ஆனா நீங்க அவுக கூடத் தங்காம ரூவாய மட்டும் வேங்கிக்கிட்டு அஞ்சு நச்சத்திர ஓட்டலாமே, அங்ஙன போய்த் தங்கினீயளாம். சீனாக்காரன் நடத்தற ஓட்டலாமே அது, பேர் கூட என்னமோன்னு பாப்பா சொல்லுச்சு.”

“ஷிங்ரீலா”

“என்னமோ ஒண்ணு. ராவுத்தர் மகங்கிட்ட மூவாயிரம் வெள்ளி வாங்கினீயளாம். நம்ம ஊர் ரூவாய்க்கி பதினஞ்சாயிரம் ஆவுதுன்னு ராவுத்தர் சொன்னாரு. ராவுத்தர் பணத்துக்காக நெருக்கறவரில்லன்னாலும் கடன் கடன்தான மாப்ள, போன மாசந்தான் கடன அடச்சேன். கேம்லாபாத்துக்குப் போய் ராவுத்தர்ட்ட ரூவாயக் குடுத்துப்புட்டுக் கருங்குளத்துக்கு வாறேன், வாசல்ல பாப்பா கண்ணக் கசக்கிட்டு ஒக்காந்திருக்கு. எனக்கு பக்குன்னு ஆயிருச்சு மாப்ள.”

ஒரு பெரிய பெருமூச்சு முத்தையனிடமிருந்து வெளிப்பட்டது. அவனுக்கு எதிர்த்த ஸீட்டில் பாலகிருஷ்ணன் சலனமில்லாமல் இருந்தான், பார்வையைத் தாழ்த்தி. ஒரு சின்ன இடைவெளிக்குப் பிறகு, முத்தையன் திரும்பவும் பேசினான்.

“நீங்க பாசமலர் படம் பாத்திருக்கீயளா மாப்ள?”

முத்தையனுடைய இந்தக் கேள்வி சம்மந்தா சம்மந்தமில்லாமலிருந்தாலும், பாலகிருஷ்ணனுடைய இறுக்கத்தைப் பெரிதும் தளர்த்துவதாயிருந்தது. முகத்தை நிமிர்த்தி, “சின்ன வயசில பாத்திருக்கேன்.” என்றான்.

“நானும் இருவத்தஞ்சு வருசத்துக்கு முந்தி திருநவேலி ரத்னா டாக்கீஸ்ல பாத்தது மாப்ள. அந்தப் படத்தப் பாத்துட்டு நா அழுத அழுகை எவனும் அழுதிருக்க மாட்டான். ஏன்னா என்னோட சின்ன வயசுக் கத பாசமலர்க் கததான்... பாப்பாவுக்கு ஒரு வயசு இருக்கும்போது ஆத்தா போயிருச்சு. அது வவுத்துல இருக்கும் போதே ஐயா போய்ச் சேந்துட்டாரு. அந்தக் கொழந்தைய நாந்தான் மார்ல போட்டு வளத்தேன் மாப்ள. அது கேட்டதெல்லாம் வேங்கிக் குடுத்தேன். திருநவேலிக்கு அனுப்பிக் காலேஜ் படிப்பு படிக்க வச்சேன். பாப்பா கண்ணுல தூசி விழுந்திருச்சின்னு கண்ணக் கசக்கினாலும் எனக்கு மனசு தாங்காது. பள்ளிக்கூடத்துல வாத்யார் அடிச்சிட்டார்ங்கதுக்காகப் பள்ளிக்கூடத்துல வச்சே அந்த வாத்யாரப் போட்டுப் பொரட்டிப் பொரட்டி அடிச்சேன். உயிர் நிலையில அடிபட்டு அந்த ஆள் பொழச்சதே மறு பொழப்புன்னு ஆயிருச்சு. பெறவு ஊர்க்கூட்டம் போட்டு ஒரு வருசத்துக்கு என்ன ஊர்லயிருந்து வெலக்கி வச்சிருந்தாக. என்னத்துக்கு சொல்றேன்னா, மேல துரும்பு விழுந்திராம அப்படிப் பாத்துப் பாத்து வளத்த புள்ள கட்டிக்குடுத்த எடத்துல அடி ஒதை வேங்கிக்கிட்டு அழுதுகிட்டே வந்து சேந்திருக்குன்னா எம் மனசு என்ன வேதனப்படும் மாப்ள...?”

குரல் தழுதழுத்தது. முத்தையன் குனிந்து வேஷ்டி முனையில் கண்களை ஒற்றிக் கொண்டான். பாலகிருஷ்ணனின் பார்வை ஜன்னலுக்கு வெளியே. குரல் சமனப்பட்டபின், முத்தையன் தொடர்ந்தான்.

“இந்த ஒலகத்துல எனக்கு என்னயிருக்கு மாப்ள, நானோ ஒண்டிக் கட்ட, கிராமத்து ஆளு, அதிகம் படிக்காதவன். எந்தங்கச்சிதான் எனக்கு ஒலகம். அதோட சந்தோசம்தான் எனக்கு சந்தோசம். நீங்கதான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டீய. சரி போட்டும் வுடுங்க. இப்பவும் நா அதத்தாஞ் சொல்லுதேன் மாப்ள. பாப்பா சந்தோசந்தான் என் சந்தோசம். அதனால இப்ப பாப்பாவோட ஒங்களச் சேத்து வக்யதுதான் எனக்கு சந்தோசம் மாப்ள. அதுக்கு நா என்ன வெலை குடுக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்ல மாப்ள.”

பாலகிருஷ்ணனின் கைகளைப் பற்றிக்கொண்டு முத்தையன் உணர்ச்சி பொங்கப் பேசினான்.

விழுப்புரத்தில் சாப்பிட்டுவிட்டு பர்த்களில் படுத்தார்கள். காலையில் திருநெல்வேலியில் இறங்கிக் கருங்குளத்துக்கு பஸ் ஏறினார்கள்.

முத்தையன் வீட்டை சமீபித்தபோது பாலகிருஷ்ணனுக்கு அதிர்ச்சியான ஆச்சர்யம்.

“என்னண்ணாச்சி, வீட்ல பூட்டுப் போட்டிருக்கு, சரோ எங்க?”

“நல்லா கேட்டீக மாப்ள! அதென்னமா பாப்பாவ இங்ஙன தனியா வுட்டுப்புட்டு நா மெட்ராஸ்க்கு வருவேன்! கேம்லாபாத்ல ராவுத்தர் வூட்ல வுட்டுட்டுத்தான் நாங் கௌம்பினேன். நீங்க இரிங்க, நாம்போய் கையோட கூட்டிட்டு வந்திருதேன்.”

‘தங்கையைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்’ என்று பதினோரு மணி சுமாருக்குப் புறப்பட்டுப் போன முத்தையன் சாயங்காலம்வரை திரும்பவில்லை. கருங்குளத்துக்கும். கேம்லாபாத்துக்கும் எத்தனை தொலைவு என்று பாலகிருஷ்ணனுக்குத் தெரியாது. முத்தையனும் சரோவும் எப்போது வருவார்களென்றும் தெரியவில்லை. வீட்டுக்குள்ளேயே புழுக்கத்தில் அடைந்து கிடந்தான். மத்யானம் பட்னி. சோர்ந்து போய்ச் சுருண்டு படுத்துக் கிடந்தான்.

இருட்டுகிற நேரத்தில் முத்தையன் பாலுவை எழுப்பினான்.

“என்ன மாப்ள, நல்ல தூக்கமா? கதவக் கூடத் தாப்பா போட்டுக்காமப் படுத்துக்கெடக்கீக?”

“என்ன அண்ணாச்சி இப்படிப் பண்ணிப்புட்டீங்க, இந்தா வந்துர்றேன்னு போனீங்க இவ்வளவு நேரமாயிருச்சு? சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிட்டாவது போக மாட்டீங்களா, பசி உயிர் போகுது எனக்கு.”

“உசிரு இன்னும் போயிரலியே? இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்குங்க மாப்ள, ஏற்பாடு பண்ணிருதேன்.”

“ஆமா, சரோ எங்க?”

“தோட்டத்துல கிணத்துல இருக்கும் போய்ப் பாருங்க.”

பாலகிருஷ்ணன் குறுகுறுப்புடன் கொல்லைப்புறம் ஓடினான். பின்னாலேயே முத்தையனும்.

“என்னண்ணாச்சி இங்க யாரையுங் காணல?” என்று பாலு ஆச்சர்யப்பட்டதற்கு பதில் சொல்கிற மாதிரி, “கிணத்துக்கு உள்ள பாரு” என்று முத்தையனின் குரல் வித்யாசமாய் ஓங்கி ஒலித்தது. மரியாதை குறைந்த ஏகவசனப் பிரயோகம் பாலுவைக் கொஞ்சம்

உறுத்த, “என்னண்ணாச்சி சொல்றீங்க, கிணத்துக்கு உள்ளேயா? உள்ள எப்படி எறங்க முடியும் அண்ணாச்சி?” என்று பயம் வெளிப்படும் குரலில் கேட்டான்.

“கிணத்துக்குள்ள எறங்க முடியாது. குதிக்க முடியுமில்ல?”

“அண்ணாச்சி?”

பாலுவின் ‘அண்ணாச்சி’யில் கலவரம் தெரிந்தது. முத்தையன் கர்ஜித்தான்.

“அண்ணாச்சி என்னால அண்ணாச்சி? பாவி! கிளிய வளத்துக் கொரங்குக் கையில குடுத்த மாதிரி எந்தங்கச்சிய ஒனக்கு குடுத்தேனேடா, ஒன்னோட அநியாயந்தாங்காம மனசொடிஞ்சி போய் எந்தங்கச்சி இந்தக் கிணத்துல விழுந்து செத்துப் போய்ட்டாடா கொலகாரப் பாவி!”

பாலகிருஷ்ணனின் முகம் இருண்டது. தடுப்பு இல்லாத கிணற்றின் விளிம்பில் கிலியுடன் நின்றிருந்தான். நடுங்கும் குரலில் தட்டுத்தடுமாறி வார்த்தைகள் வெளிப்பட்டன.

“சரோ... போய்ட்டாளா... சொல்லவேயில்லியே அண்ணாச்சி... சரோவையும் என்னையும் சேத்து வக்கிறதா சொல்லிக்கூட்டிட்டு வந்தீங்க...”

க்ஷீணித்துப்போன பாலுவின் குரலைக் காலடியில் போட்டுத் துவைக்கிற ஆக்ரோஷத்தோடு முத்தையனின் பெருங்குரல் பயங்கரமாய் ஒலித்தது.

“இப்பவும் அதத்தாம்ல நாஞ் சொல்லுதேன். அட எம் மாப்ள, இந்த முத்தையத் தேவன் பேச்சு மார்ற சாதி இல்லடா. எந்தங்கச்சியோட ஒன்னச் சேத்து வக்யத்தாம் போறேன். பாப்பா இந்த கிணத்துக்குள்ளதாங் கெடக்கு. ஒன்னையும் பாப்பாவோட சேத்துருதேன். ஆனா அதுக்கு முன்னால நீ கேட்டதக் குடுக்கணுமில்ல?”

முத்தையன் பேசப்பேசப் பாதி உயிராய்ப் போய்க் கொண்டிருந்த பாலகிருஷ்ணன், அவன் முதுகுக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த வஸ்துவை வெளிப்படுத்தியதும் “அண்ணாச்சீ” என்று மரண ஓலமிட்டான்.

முத்தையனின் கையிலிருந்த வேட்டைத் துப்பாக்கி பாலுவைக் குறிபார்த்தது.

“வேணாம் அண்ணாச்சி, சுட்டுராதீங்க அண்ணாச்சி, என்ன மன்னிச்சிருங்க அண்ணாச்சி, ஒங்களக் கையெடுத்துக் கும்புடறேன் அண்ணாச்சி, இப்படியே ஓடிப்போயிர்றேன் அண்ணாச்சி, மன்னிச்சு விட்டுருங்க அண்ணாச்சி.”

முத்தையன் வெடிச்சிரிப்புச் சிரித்தான். நெருப்புக்கங்குகளாய்ச் சிவந்திருந்த அவனுடைய கண்களில் கண்ணீர் தெறித்தது.

“அதெப்படி மாப்ள ஒன்ன அவ்வளவு சுளுவா விட்டுறச்சொல்லுத? நீதான புல்லட்டு வேணும்னு கேட்ட? புல்லட்டு கேட்டுத்தான எந்தங்கச்சியச் சித்ரவத பண்ணின? இந்தா ஒனக்குன்னு புல்லட்டு வேங்கியாந்திருக்கேன். மோட்டார் சைக்கிளும் புல்லட்டுதான், துப்பாக்கித் தோட்டாவும் புல்லட்டுதான். ஒனக்குன்னே பெசலா ராவுத்தர்ட்ட போய் மொசல் சுடதுக்குன்னு துப்பாக்கி வேங்கியாந்திருக்கேன், நீ வாணாங்கியே? நீதாண்டா மாப்ள எனக்கு மொசலு. இந்தா வேங்கிக்க.”

வேட்டுச் சத்தத்தைத் தொடர்ந்து, கிணற்றுத் தண்ணீர் பேரிரைச்சலோடு விளிம்பு வரை தெறித்தது.

அதில் சில துளிகள் சிகப்பாய்.

*--குமுதம், 26.02.1989*

# திரும்பத் திரும்ப தேன் நிலவு

'நிலவும் மலரும் பாடுது' பாடல் காட்சியை அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தபோது அபசகுனமாய் பஸ்ஸர் ஒலித்தது. எரிச்சலோடு டி.வியையும் வி.ஸி.ஆரையும் அணைத்துவிட்டு வாசலுக்குப் போனேன். 'மார்க்கெட்டுக்குப் போனவள் சாவகாசமாய்க் காய்கறி வாங்கிக் கொண்டு சௌகரியமாய் வந்து சேர்ந்தாலென்ன, லீவ் நாளில் கூட என்ன பறப்பு!'

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தால் அவளில்லை. அவசரப்பட்டு டி.வி. வகையறாவை அணைத்தது தப்பு. வெளியே ஒரு பையன். யார் பையன்? எங்கேயோ பார்த்த மாதிரியிருந்தது. எங்கே? ஓ, வீடியோ லைப்ரரியில்.

"என்ன தம்பி?"

"வெல்கம் வீடியோஸ் சார்."

"சொல்லு."

"ஒரு காஸெட் ரொம்ப நாளா ரிட்டன் பண்ணாம வச்சிருக்கீங்களாம். ஞாபகப்படுத்தச் சொன்னாங்க."

"என்ன காஸெட்?"

"தேன் நிலவு."

"அதான் எக்ஸ்டன்ட் பண்ணியிருக்கேனே?"

"எக்ஸ்ட்டன்ட் பண்ணிக்கூட ஒரு வாரம் ஆச்சாமே."

"அதுக்கென்ன இன்னொரு தரம் எக்ஸ்ட்டன்ட் பண்ணிக்கச் சொல்லு. எட்டு ரூபா தானே? இந்தா பத்து. சில்லற வச்சிருக்கியா?"

"இல்ல சார்."

"சரி பரவாயில்ல, ரெண்டு ரூபா நீ வச்சிக்க."

டிப்ஸ் கிடைத்த சந்தோஷத்தைக் கொஞ்சம் முகத்தில் பிரதிபலித்தான். ஆனாலும் இடத்தைக் காலி பண்ணாமல் நின்றிருந்தான்.

"வேற என்னப்பா?"

"சார், நீங்க அந்தக் காஸட்ட எப்ப ரிட்டன் பண்ணுவீங்க?"

“தெரியாது.”

“சார்?”

“தெரியாதுப்பா.”

அதற்குமேல் நின்றிருந்தால் நாகரிகமில்லை என்று உணர்ந்து பையன் நகர்ந்துவிட்டான்.

ஓடிவந்து வி.ஸி.ஆரை ரீவைண்ட் செய்து திரும்பவும் ஓடவிட்டேன்.

திரும்பவும் நிலவும் மலரும் பாடியது.

ஜெமினி கணேசன், வைஜயந்தி மாலாவின் இளமையான முக வசீகரத்திலும், ஏ.எம்.ராஜா, பி.சுசீலாவின் கிறங்கடிக்கும் குரலினிமையிலும் சொக்கிப்போய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இந்தக் காதல் மன்னன் இப்போது முடிதுறந்து சன்யாசம் வாங்கிக்கொண்டார். வைஜெயந்திமாலா தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டார்.

‘இந்தப் படத்தை முதலில் எப்போது பார்த்தேன்? 1962 இன் கடைசியில் என்று நினைக்கிறேன்.’

‘ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுருபரர் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது, தியேட்டர் பேர் என்ன? அந்த ஊரில் அப்போது ஒரேயொரு தியேட்டர்தான். ஜவஹர் டாக்கீஸ், அப்பா மின்சார வாரியத்தில் எஞ்ஜினியராயிருந்ததால் தியேட்டரில் ஓசிப்பிரவேசம். ஆனாலும் மாசம் ஒரு படம்தான். சிவாஜிகணேசனின் படமாய்த்தான் அமையும். அந்த விதி கொஞ்சம் பிசகி அந்த நவம்பர் மாதக் கோட்டா தேன்நிலவுக்கு வாய்த்தது என்று ஞாபகம்.’

ஸ்ரீவைகுண்டம், தாமிரபரணியால் பார்டர் போடப்பட்ட புண்ணியஸ்தலம். அங்கேயிருக்கும் போதுதான் 62-ஆம் வருஷத்துத் தேர்தல் வந்தது.

பம்ப்செட் இணைப்பு சம்பந்தமாய் அப்பாவைப் பார்க்க வந்திருந்த கதர்ச்சட்டை இளைஞனொருவனின் சைக்கிளில் பறந்துகொண்டிருந்த ஒரிஜினல் காங்கிரஸ் கொடியைக் கேட்டு வாங்கி, சித்தப்பாவின் சைக்கிளில் சொருகிக் கொண்டு அரைப்பெடல் போட்டுப் பெருமையோடு ஊரைச் சுற்றி வந்தது நினைவில் பசுமையாயிருக்கிறது.

“அம்மா, அம்மா, அப்பா எந்தக் கச்சிக்கிம்மா ஓட்டுப் போடுவாங்க?”

“நான் போடற கட்சிக்கித்தான்.”

“நீங்க எந்தக் கச்சிக்கிம்மா போடுவீங்க?”

“நீ சொல்ற கட்சிக்கித்தான்.”

“அம்மா, அம்மா, சிவாஜி கச்சிக்கிப் போடுங்கம்மா. ரெட்டைக்காளை.”

62க்குப் பிறகு எத்தனையோ தேர்தல்கள்; எத்தனையெத்தனையோ மாற்றங்கள்.

‘அப்பாவோடு ஊர் ஊராய் மாற்றலாகி, பள்ளிப்படிப்பு முடிந்து, கல்லூரி வாழ்க்கையின் வசந்தகாலம் மாறி, கல்யாணமாகி, அப்பா ரிட்டயர் ஆகி, மெட்ராஸூக்குக் குடி பெயர்ந்து, இருபத்தாறு வருஷங்களுக்குப் பிறகு இதோ திரும்பவும் தேன்நிலவை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். இருபத்தாறு வருஷங்கள் எப்படி பொசுக்கென்று ஓடிவிட்டன!’

“மலரே மலரே தெரியாதோ”பாட்டில் பாதியைக் கடந்தகாலச் சிந்தனையில் கோட்டைவிட்டுவிட்டேன். பாடலின் ஆரம்பத்தில் கதாநாயகியின் க்ளோஸ்அப்பை ரசிக்க விட்டுப்போயிற்று. ‘அதனாலென்ன, ரீவைண்ட் பண்ணு’.

‘விட்டுப்போன விஷயங்களையும் சுவாரஸ்யமான சங்கதிகளையும் எவ்வளவு சுலபமாய் ரீவைண்ட் செய்து திரும்பவும் பார்க்க முடிகிறது! வாழ்க்கையையும் இதே போல ரீவைண்ட் செய்து திரும்பவும் ஆரம்பத்திலிருந்து வாழ முடிந்தால், சந்தோஷமான காலகட்டங்களைத் திரும்பத் திரும்ப வாழ முடிந்தால் எவ்வளவு விசேஷமாயும் ஆனந்தமாயும் இருக்கும்!’

‘விசேஷம் ஆனந்தம் எல்லாம் இருக்கும்தான், ஆனால் வாழ்க்கையை ரீவைண்ட் செய்கிற வசதியிருந்தால் மனித வாழ்க்கைக்கு முடிவே இருக்காதே! மனித இனம் இறந்த காலத்திலேயே அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கும்! உலகத்தில் சாவே இருக்காது. சாவு ஏன், முதுமையே இருக்காது. எல்லோரும் சிறுவர்களாய், இளைஞர்களாய்...’

“சரி, எதற்கு இந்த விபரீதக் கற்பனை! இங்கே டி.வி.யில் ‘காலையும் நீயே மாலையும் நீயே’ பாடல் காட்சி போகிறது, வைஜயந்தி மாலாவின் அற்புதமான அபிநயங்களை ரசி. ”

“என்னங்க இது, கதவத் தெறந்து போட்டுக்கிட்டு இங்க மெய்ம்மறந்து ஒக்காந்திருக்கீங்க, திரும்பவும் தேன்நிலவு தானா? இன்னும் எத்தனை தடவை பாப்பீங்க இதை? உங்களுக்கு போரே அடிக்காதா? போதுங்க, ஆ∴ப் பண்ணுங்க.”

“நீ வர்றதுக்கு முந்தி ஆ∴ப் பண்ணிரணும்னுதான் இருந்தேன். பெல் அடிச்சிட்டு வரக்கூடாது?”

“கதவுதான் ‘ப்ளாச்’னு தெறந்து கெடக்கே, அப்புறம் எதுக்காக பெல் அடிக்கிறதாம்?”

“கதவு தொறந்தாயிருந்தது? அந்த வீடியோ லைப்ரரிப் பையன் வந்திருந்தான்; அவன் போனப்புறம் மூட மறந்துட்டேன் போல.”

“இன்னிக்கும் அவன் வந்தானா? நேத்தும் நீங்க இல்லாத சமயம் வந்தான். அந்தக் காஸட்ட அவன் கையில எடுத்துக் குடுத்துரலாம்னு தேடினேன், கிடைக்கவேயில்ல. எங்க ஒளிச்சு வச்சிருந்தீங்க.”

“என் நெஞ்சத்துக்குப் பக்கத்துல.”

“ஓஹோ.”

“அப்படியே இரு டார்லிங். நீ ஓஹோ சொல்றது, ஒரு ஸீன்ல ஜெமினியப் பார்த்து வைஜயந்தி மாலா ஓஹோ சொல்ற மாதிரி இருக்கு.”

“இல்ல. இது நம்பியாரப் பாத்து சொல்ற மாதிரி. நீங்க வில்லன் மாதிரிதான் இப்ப எனக்குத் தெரியறீங்க. இருந்தாலும் இப்படியொரு சினிமாப் பைத்தியம் ஒங்களுக்கு ஆகாதுங்க.”

“சினிமாவாவது பைத்தியமாவது! இங்க பாரும்மா, நான் சினிமா பாக்கறதை நிறுத்தி அஞ்சு வருஷத்துக்கு மேல ஆச்சுன்னுதான் ஒனக்குத் தெரியுமே. நா சின்னப் பையனாயிருந்தபோது பாத்த படம் இது. அப்ப எனக்கு இதை ரசிக்கிற பக்குவம் இல்ல. ஆனா இப்ப இருபத்தாறு வருஷங்கழிச்சிப் பாக்கறபோது ரொம்ப இம்ப்ரஸ்ஸிவ்வா இருக்கு. அந்த லொகேஷனும், ஏ.எம்.ராஜாவோட மியூஸிக்கும், ஆர்ட்டிஸ்ட்ஸோட அழகும் அப்படியே பாத்துக்கிட்டேயிருக்கணும் போல இருக்கே, நா என்ன செய்ய.”

“சரி, அதுக்காக நடு ராத்திரியில பாதித் தூக்கத்துல எந்திரிச்சி வீடியோ போட்டுப் பார்க்கணுமா?”

“அதையும் நீ பாத்துட்டியாம்மா? நீ முழிச்சிட்டிருக்கும்போது போட்டுப் பாத்தா ஒனக்குப் பிடிக்கலியேன்னு நீ தூங்கினப்புறம் போட்டுப் பாத்தேன். தப்பா?”

“சரி, சரி, ஒங்கள ராத்திரி பேசிக்கிறேன். இப்ப வேலயிருக்கு.”

“எனக்கும் ராத்திரி ஒங்கிட்ட ஒரு வேல ஆக வேண்டியிருக்கு.”

“என்ன வேலயோ?”

“ராத்திரி சொல்றேன்.”

போச்சு. பாதி லீவ் நாள் வேஸ்ட். இவள் இருக்கும் போது தேன்நிலவு பார்க்க முடியாது. வேறு படம் பார்க்கவும் பிடிக்கவில்லை. புஸ்தகம் படிக்கவோ வெளியே போய் வரவோ கூட இஷ்டமில்லாமலிருக்கிறது. என்ன ஆச்சு எனக்கு? இந்தப்படம் ரொம்பவும்தான் என்னை ஆட்கொண்டு விட்டது. இப்போது வருகிற வரட்டுத் தமிழ்ப்படங்களிலும் நமட்டுச் சிரிப்பு பாடல்களிலும் மனம் வெறுத்துப் போய் அஞ்சு வருஷம் அசிரத்தையாய் இருந்தவனுக்கு ஒரு வரப்பிரசாதமாய் இந்தத் தேன்நிலவுக் காஸெட் கிடைத்தது. சுவாரஸ்யமான கதை, சமயோஜித நகைச்சுவை, சாகாவரம் பெற்ற பாடல்கள், குளிர்ச்சியான முகங்கள், கதாநாயகியின் ஒவ்வொரு அசைவும் ரசிக்கிற

மாதிரி… எந்தத் திரைப்படத்தோடும் இந்த அளவுக்கு ஒன்றிப் போனதில்லை. அதுவே மனைவியின் எரிச்சலுக்குக் காரணமாய்ப் போயிற்று. அவள் இல்லாத நேரங்களிலும் தூங்குகிற சமயங்களிலும் திருட்டுத்தனமாய் வீடியோ பார்க்க வேண்டிய நிலை.

“சின்னச் சின்னக் கண்ணிலே வண்ண வண்ண ஓவியம்”பாட்டில் வைஜயந்தி மாலாவின் ஒயிலான நடையொன்று இருக்கிறதே, அது கண்ணுக்குள்ளேயே இருக்கிறது. இன்னொருதரம் ராத்திரி போட்டுப் பார்த்துவிட வேண்டியதுதான். ராத்திரி எப்போது வரும்?

ராத்திரி வந்தது.

மேலோட்டமாய் ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு படுக்கையில் கிடந்தேன். வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு இவள் வந்தாள்.

“ராத்திரி என்னமோ எங்கிட்டப் பேசணும்னியே” என்று இழுத்தேன்.

“நீங்கதான் என்கிட்ட ஏதோ வேல ஆகணும்னு சொன்னீங்க.”

“நீ மொதல்ல சொல்லேன்.”

“ம்ஹூம். மொதல்ல நீங்க.”

“சரி சொல்றேன். ஒண்ணுமில்ல, நேத்து மவுண்ட் ரோட் வழியா வந்துக்கிட்டிருந்தப்ப ஒரு காலேஜ் பொண்ணு லிஃப்ட் கேட்டா.”

“ஹ்ம். தர்ம மஹாப்ரபு நீங்க ஒடனே குடுத்திருப்பீங்களே?”

“பின்னே? ஏதோ நம்மாலான உதவி.”

“ஆள் எப்படியிருந்தா?”

“நல்லாவேயிருந்தா. ஆனா ஒன்னவிடக் கொஞ்சம் கம்மிதான்.”

“ஐயே, போகட்டும். ஆமா, இந்த மாதிரி விஷயங்களெல்லாம் என்ட்ட சொல்ல மாட்டீங்களே?”

“சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுப்போச்சே! அவ போகும்போது என்ன சொல்லிட்டுப் போனா தெரியுமா? ‘தாங்க் யூ அங்க்கிள்’ன்னாளே பாக்கணும்! எனக்கு ரொம்ப அவமானமாப் போச்சு.”

நம்ம ஆளுக்கு ஒரே சிரிப்பு. ரொம்ப சந்தோஷமாய்ச் சிரித்தாள்.

“இன்னுங் கொஞ்சம் சிரியேன். காஷ்மீர்ப் பனிமலைமேலே வைஜயந்தி மாலா சிரிக்கிற மாதிரியிருக்கு உன் சிரிப்பு” என்று நான் சொன்னதும் இவளுடைய சிரிப்பு ‘டக்’கென்று அணைந்துவிட்டது.

“சதா சினிமா ஞாபகந்தானா, போங்க நீங்க ரொம்ப அசிங்கமாப் போய்ட்டீங்க.”

“கொஞ்சம் இரு நான் சொல்ல வந்த விஷயத்தச் சொல்லிர்றேன்; அப்புறம் சிணுங்கு.”

“சொல்லுங்க.”

“ஒடனே வீட்ல வந்து கண்ணாடியில முகத்தப் பாத்தேனா, மீசையில எக்கச்சக்கமா வெள்ளை முடி. நீ ரெண்டு மாசமா எனக்கு ‘ப்ளக்’ பண்ணிவிடல, இங்க பார் எப்படி அசிங்கமா வளந்துடுச்சி.”

“இல்லாட்டியும் நீங்க ரொம்ப சின்னப் பையன்தான்.”

“சின்னப் பையனோ இல்லியோ, ஒரு காலேஜ் பொண்ணு, ‘அங்க்கி’ன்னு கூப்புடுற அளவுக்கு எனக்கு ஒண்ணும் வயசாகல. இந்தாம்மா, கையோட இன்னிக்கிக் கொஞ்சம் களையெடுப்பு செஞ்சிரேன். ப்ளீஸ், இந்தா பின்ஸர் ரெடியா வச்சிருக்கேன்.”

“ம்ஹூம் முடியாது”

“ப்ளீஸ்; நீ என்ன சொன்னாலும் கேக்கறேன்.”

“நிச்சயமா.”

“நிச்சயமா.”

“அப்ப அந்த தேன்நிலவுக் காஸட்டை இப்பவே கொண்டு போய் ரிட்டன் பண்ணிட்டு வாங்க.”

“நாளக்கி.”

“அப்ப நானும் நாளக்கி.”

“ஐயோ, கொஞ்சம் கருணை காட்டும்மா, நா வெளிய தலைகாட்டவே வெக்கமாயிருக்கு.”

“ம்ம், என்ன செய்யறது! சரி, படுங்க.”

அவளுடைய மடியில் தலைவைத்து நான் படுத்துக்கொள்ள, மீசையை விலக்கி ஒவ்வொரு நரை முடியாய் நாசூக்காய்ப் பிடுங்கியெடுக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு முடி

பிடுங்கப்படுகிறபோதும் ஒரு சன்னமான வலி. சுகமான வலி. மொத்தத்தில் இந்த ஆப்பரேஷன் ஒரு ஆனந்தமான அனுபவம்.

தேன்நிலவு பார்க்கிற மாதிரி.

ஆப்பரேஷனுக்கு இடையே மெதுவாய்ப் பேச்சுக் கொடுத்தாள்.

“காலைல என்னமோ லெட்டர் போஸ்ட் பண்ணின மாதிரி இருந்ததே, யாருக்குங்க?”

“தூத்துக்குடியில என் ஃப்ரண்ட் கலைமணிக்கி எழுதினேன். ஏன்?”

“ஒரு லெட்டர்தானா? மறைக்காம சொல்லுங்க.”

“மறைக்கிறதுக்கு என்னயிருக்கு? தேன்நிலவு டைரக்டர் ஸ்ரீதருக்கும் ஒரு லெட்டர் போட்டேன்.”

“அவருக்கு மட்டுந்தானா?”

“ம்ம்... அப்புறம் ஜெமினிகணேசன். ஏ.எம்.ராஜாதான் பாவம் அநியாயமாப் போயிட்டார். அவருக்கு எழுதி ஜிக்கிக்குப் போஸ்ட் பண்ணினேன்.

“அப்புறம்?”

“அப்புறம் அவ்வளவுதான். ஏன் கேக்கறே?”

“சும்மாதான் கேட்டேன். இந்த முடி என்ன போக்குக் காட்டுது பாருங்களேன், இத்தனூண்டு இருந்துக்கிட்டு ட்வீஸர்ல மாட்ட மாட்டேங்குது. ஆமா, நாளக்கி அந்தக் காஸட்டத் திருப்பிக் குடுத்துருவீங்கள்ள?”

“நீ ஏன் அதப்பத்தி இவ்வளவு கவலைப்படற?”

“நிஜம்மாவே எனக்கு கவலையாத்தாங்க இருக்கு. நீங்க அந்தப்படத்துல பைத்தியமாயிருக்கீங்க. இன்னுங் கொஞ்சம் மோசமாப் போச்சுன்னா ஒங்கள சைக்கிரியாட்ரிஸ்ட்கிட்ட போய்க் காட்ட வேண்டியதுதான்.”

“சீ, இதென்ன சைக்கியாட்ரிஸ்ட் அது இதுன்னு பினாத்திக்கிட்டு! எனக்கு அந்தப் படம் ரொம்பப் புடிச்சுப் போச்சு, திரும்பத் திரும்பப் பாக்கணும் போல இருக்கு, அதனால பாக்கறேன். கொஞ்ச நாள்ல திகட்டிப் போச்சுன்னா தன்னப்போல விட்டுருவேன். இதுக்கு நீ ஏன் இப்படி அலட்டிக்கிற?”

“அப்படி திரும்பத் திரும்ப பாக்கறதுக்கு அதுல அப்படி என்னங்க இருக்கு?”

“அதெல்லாம் நான் சொன்னாலும் ஒனக்கு சுவாரஸ்யமிருக்காதும்மா. இது ஒரு மென்மையான காதல் கதை. அதை ரசிக்கிறதுக்கு ஒரு மென்மையான காதல் நெஞ்சம்

வேணும். அது எனக்குத்தான் இருக்கு. கல்யாணத்துக்கு முந்தி நாந்தானே ஒன்ன லவ் பண்ணினேன். நீயா என்னை லவ் பண்ணினே? யேய், அப்படி 'வெடுக்'னு இழுக்காதே வலிக்குது."

"கல்யாணத்துக்கு முந்தி நீங்க என்னை லவ் பண்ணினது சரிதான், எங்கே இதை வாசிச்சு பாருங்க, ஏதாவது ஞாபகம் வருதா பாக்கலாம்."

பிளவுஸுக்குள்ளே மடித்து வைத்திருந்த ஒரு காகிதத்தையெடுத்து நீட்டினாள். வாங்கிப் பிரித்தேன். வெறும் காகிதமில்லை. கவிதை. நமக்குப் பிடித்தமான சங்கதி.

*உன் பட்டுக் கரங்களைப் பற்றி மெல்ல என்*
*கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டும்.*
*உன் புடவைத் தலைப்பின் மென்பரப்பில்*
*முகம் புதைக்க வேண்டும்.*
*உன் மலையாளக் கூந்தலை விரல்களால் நான்*
*அளைந்து விளையாட வேண்டும்.*
*உன் குங்குமச் சிகப்பை அதரங்களினால்*
*ஒற்றியெடுக்க வேண்டும்.*
*உன் புன்னகை இதழ்களை மென்மையாய் என்*
*சுவாசத்தால் தீண்ட வேண்டும்.*
*உன் குறுஞ்சிரிப்பைக் கொள்ளையடித்து*
*உன்னிடம் சரணடைய வேண்டும்.*
*உன்னையே திருடியதற்கு திரும்பவும் நான்*
*உன்னிடமே கைதாக வேண்டும்.*
*இதெல்லாம் கிட்டாது கனவாகிப் போனால்*
*உன்னை நினைத்து நித்தநித்தம்*
*ஆசை தீர அழ வேண்டும்.*

"ஆஹா, ஆஹா! அற்புதமான கவிதை. ஆமா, இது யார் எழுதினது? யேய், கொஞ்சம் இரு, இது என்னோட கையெழுத்து மாதிரி இருக்கே?"

"அதானே, ஒங்களுக்கு எங்கே இதெல்லாம் சட்டுன்னு ஞாபகம் வரப்போகுது? இது ஒங்க கையெழுத்துதான், நீங்க எழுதினதுதான். நம்ம கல்யாணத்துக்கு முந்தி நீங்க என்னை சைட் அடிச்சிட்டிருந்த காலத்துல ஒரு நாள் பஸ் ஸ்டாப்புல வச்சுக் குடுத்தீங்க. ஒங்களுக்கு இருபத்தாறு வருஷப் பழைய படம் ஞாபகம் இருக்கும், என் சம்பந்தப்பட்ட விஷயம் மறந்து போகும். ம்ம், கல்யாணத்துக்கு முந்திதான் நீங்க என்னை லவ் பண்ணினதெல்லாம். கல்யாணத்துக்கப்புறம் நான் தான் ஒங்க மேல பைத்தியமாயிருக்கேன். நீங்க ஒரு சினிமா மேல பைத்தியமாயிருக்கீங்க. ஒங்களுக்கு எம் மேல இப்ப லவ்வே இல்ல."

"அபாண்டம். ஆதாரமில்லாத அபாண்டம்."

"ஆதாரம் வேற வேணுமாக்கும்? நா சிரிச்சா வைஜயந்திமாலா மாதிரி சிரிக்கிறேங்கறீங்க. நா ஓஹோன்னா அதுவும் வைஜயந்திமாலா. தும்மினா

வைஜயந்திமாலா, இருமினா வைஜயந்திமாலா. நீங்க என்னை லவ்வே பண்ணல. மனசுல வேற என்னமோ நெனச்சுட்டிருக்கீங்க."

"ஐயையோ அபசாரம். இந்தாம்மா என் பெண்டாட்டியே, தேன் நிலவுல வைஜயந்திமாலாவை எனக்கு ரொம்பப் புடிச்சுப் போனது உண்மைதான். ஆனா அது இருபத்தாறு வருஷத்துக்கு முந்தின வைஜயந்திமாலா. நான் எலிமன்ட்ரி ஸ்கூல் பையனாயிருந்தபோது கதாநாயகியாயிருந்த வைஜயந்திமாலா. நீ பால் குடிக்கிற பாப்பாவாயிருந்தபோது பாப்புலர் ஸ்டார் ஆகியிருந்த வைஜயந்திமாலா. இப்ப அந்த அம்மா ஒரு அகில இந்திய அரசியல் தலைவி; கண்ணியமான சமூக சேவகி. ஒரு புகழ் பெற்ற எம்.பி நீ அநாவசியமா இப்படியெல்லாம் பேசக்கூடாது; தப்பும்மா."

"சரி, நாந்தான் தப்பாப் பேசறேன். நீங்க ஏன் என்ட்ட உண்மையை மறைக்கணும்?"

"எதை நான் மறச்சேன்.?"

"யார் யாருக்கு லெட்டர் எழுதினீங்கன்னு கேட்டேன்ல்ல?"

"அதான் சொன்னேனே, கலைமணி, ஶ்ரீதர், ஏ.எம்.ராஜா, ஜெமினி கணேசன்."

"வைஜயந்திமாலா?"

"ஆமா அவங்களுக்கும் எழுதினேன். அதுக்கென்ன இப்ப?"

"நேத்து நான் காஸெட்டைத் தேடினப்ப அந்த லெட்டரெல்லாம் கண்ணுல பட்டது. அதச் சொல்லாம ஏன் மறச்சீங்க?"

"அட என்னமோ விட்டுப்போச்சு. விடுவியா, அதப்போய் பெரிசுபடுத்தறியே?"

"சரி எழுந்திருங்க."

"இன்னும் வேல முடியலியே."

"அவ்வளவுதான் முடியும்; எழுந்திருங்க."

"லெஃப்ட் ஸைட்ல இருக்கற முடிதான் எடுத்திருக்க, ரைட் ஸைட்ல இன்னும் ஆரம்பிக்கவேயில்ல."

"இன்னிக்கி அவ்வளவுதான்."

"காலைல நா வெளிய தலைகாட்ட முடியாது."

"காலைலதானே முடியாது, இப்ப ராத்திரியில முடியுமில்ல? ஒடனே போய் அந்தக் காஸட்டை ரிட்டன் பண்ணிட்டு வாங்க, மீதியை எடுக்கறேன்."

“நாளக்கின்னு சொன்னேனே?”

“நாளக்கில்ல, இன்னிக்கே, இப்பவே.”

“இது ப்ளாக் மெய்ல்.”

“நீங்க என்ன பேர் வேணும்னாலும் வச்சிக்கிருங்க. காஸெட்டக் கொண்டு போய்க் குடுத்துட்டு வந்தப்புறம்தான் களையெடுப்பு.”

“மணி ஒம்பதாச்சே?”

“பத்து மணிக்கித்தான் மூடுவாங்க.”

வேற வழியில்லை. எழுந்து, காஸெட்டை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். நெஞ்சில் கொஞ்சம் நெருடல், ‘பரவாயில்லை. நமக்கு சினிமாவா முக்கியம்? சம்சாரம்தானே முக்கியம்’.

*- கணையாழி, அக்டோபர் 1989.*

# இனி எனக்கு மரணமில்லை

தோல்வி.

எங்கும் தோல்வி; இன்ட்டர்வ்யூக்களில் தோல்வி. 'ஒப்பேறாத கேஸ்' என்று பத்தாயிரம் எப்படியோ புரட்டி அப்பா வைத்துக் கொடுத்த பெட்டிக்கடைக்குப் போட்டிக் கடைகளால் நஷ்டம்.

கடைக்கு வந்து போய்க் கொண்டிருந்த சரோ மனசுக்குள்ளும் கொஞ்சம் வந்து போனாள். அவளால் தான் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படப்போகிறது மாதிரி ஒரு பிரமை. அது வெறும் பிரமைதான், ப்ரேமையல்ல என்று உணர்த்துகிற மாதிரி, போன மாசம் வந்து கல்யாணப் பத்திரிகை வைத்து விசேஷமாய் அழைத்துவிட்டுப் போனாள். சின்னச் சின்னக் கனவுகளைக் கலைத்துவிட்டுப் போனாள்.

ரெண்டு தங்கைகளுக்கும் கஷ்டப்பட்டுக் கடன்பட்டுக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார் அப்பா. உடலுழைப்பையன்றி, தங்கைகளின் கல்யாணச் செலவுகளுக்கு ஒரு பத்து ரூபாய் ஒத்தாசை செய்ய வக்கில்லாமல் போனேன். வீட்டுச் செலவுக்கென்று அம்மா கையில் இதுவரை ஒண்ணும் கொடுக்க முடிந்ததில்லை. தண்டச் சோறு. பெற்றவர்களையும் உறவினர்களையும் தலை நிமிர்ந்து பார்க்கக் கூச்சம்.

'ஆண்டவனே, இந்த வாழ்க்கையில் நான் முற்றிலுமாய்த் தோற்றுவிடப் போகிறேன் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது.

ஆட்டத்தைக் கலைத்துவிட்டுத் திரும்ப ஆடலாமா?

கலைப்பது நம் கையில். திரும்ப ஆடுவது யார் கையில்?

சரி, முதலில் கலைத்தாக வேண்டும். தொடர்ந்து ஆடிப் பிரயோஜனமில்லை.

எப்படி? கயிறு? கத்தி? தண்டவாளம்? தூக்க மாத்திரை?

வாழ்க்கைக்கு வாலன்ட்டரி ரிட்டயர்மன்ட் வாங்குவதற்கு வழிகள் எத்தனை இருக்கின்றன?'

'வாழ்ந்துதான் யாருக்கும் நன்மையில்லாமல் போய்விட்டது. என் மரணமாவது யாருக்காவது பிரயோஜனமாய்ப் போக வழி ஏதாவது இருக்கிறதா? இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி மாதிரி ஏதாவது எடுத்திருந்தால், சார்ந்திருப்பவர்களுக்குப் பணம் வரும். இன்ஷ்யூரன்ஸெல்லாம் எட்டாத கனி.

இல்லை. என் சாவு கூட யாருக்கும் நன்மை விளைவிக்கப் போவதில்லை. பைத்தியம் பிடித்துத்தான் சாகப் போகிறேன். 'கோட்டிக்காரன் கோட்டிக்காரன்' என்று எல்லோரும்

கல்லெறிந்துக் காயப்படுத்தி என் கதையை முடிக்கப் போகிறார்கள். இப்போதே பைத்தியம் பிடித்துவிடுகிற மாதிரிதான் இருக்கிறது. உடனே போய் இக்பாலைப் பார்த்தால் ஆறுதலாய் ஏதாவது சொல்லுவான்.

வீட்டில் தனியாய் இருக்கிறான் இக்பால். அவன் மனசைப் போலவே வீட்டையும் திறந்து போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். டி.வியில் என்னமோ ஹிந்தி நிகழ்ச்சி போய்க் கொண்டிருக்கிறது. ஒன்றிப்போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறான். வீட்டில் உருது பேசக்கூடியவனாகையால் ஹிந்தி நன்றாய்ப் புரியும். ‘உயிர் நண்பனுடைய வருகையைக் கூடப் பொருட்படுத்தாமல் டி.வி பார்த்துக் கொண்டிருக்கிறானென்றால் ரொம்ப ரொம்ப விசேஷமான நிகழ்ச்சியாய்த்தானிருக்க வேண்டும்.’ எனக்குப் புரியவில்லை. மிருகக் காட்சி சாலை; ஒரு புலி; ஒரு பெண்மணியோடு பேட்டி. எனக்குப் பொறுமையில்லை

“இக்பால், அப்படி என்னடா பாக்கறே?”

“கொஞ்சம் இரி மக்கா. ‘பரக்’னு ஒரு ப்ரோகிராம். ஒரு சோகமான சங்கதி. முடிஞ்சதும் ஒனக்குச் சொல்றேன். இரி”

பேட்டி காண்கிற டி.வி க்காரரை முன்பு பார்த்த ஞாபகமிருக்கிறது. ஓ! தேர்தல் சமயங்களில் அரை மணிக்கொரு தரம் தேர்தல் முடிவுகளையும் சமயங்களில் நிலவரங்களையும் அலசுவாரே அவர்தான். ப்ரணாய் ராயின் ஹிந்திப் பதிப்பு.

டி.வி யை அணைத்துவிட்டு என்னைப் பார்க்கிறான் இக்பால்.

“சே, ரொம்ப பரிதாபம் மக்கா. பயங்கரம்!”

“பரிதாபங்கற அப்பறம் பயங்கரங்கற. ரெண்டுல எது?”

“ரெண்டுந்தான். பெங்களூர் ஜூல போனமாசம் நடந்த பயங்கரமான பரிதாபம். நாம பாத்த திருவந்தரம் ஜூ மாதிரி இல்லாம பெங்களூர்ல புலி சிங்கத்தயெல்லாம் ஸஃபாரியில ஃப்ரீயா வுட்ருக்காங்க. கூண்டு போட்ட வேன்ல ஜனங்கள ஏத்தி ஸஃபாரியச் சுத்திக் காட்டுவாங்களாம். அப்படி ஒரு நா கூட்டிட்டுப் போறப்ப ஒரு தாத்தா தன்னோட ஒரு வயசுப் பேத்திய மடியில வச்சிக்கிட்டு கதவோரமா இருந்தாராம். எல்லாரும் அந்தப் பக்கமா மிருகங்கள வேடிக்க பாத்துட்டு இருந்தப்ப, இந்தப் பக்கமா வந்த புலி ஒண்ணு கதவுல இருந்த ஓட்ட வழியா மடியில இருந்த கொழந்தயப் ‘படக்’னு இழுத்துக்கிட்டு காட்டுக்குள்ள ஓடிருச்சாம்.”

“ஐயையோ, அப்புறம்?”

“அப்புறம் என்ன, என்ன நடந்ததுன்னு புரிஞ்சவொடன ஜனங்க பீதியில அலறியிருக்காங்க. வண்டிய நிறுத்தி அந்தப் பெரியவரும் டிரைவரும் கொஞ்ச தூரம் ஓடிப் பாத்திருக்காங்க. புலி கண்ணுல படல. கொழந்த போனது போனதுதான்.”

என் சொந்த அவலங்களை மீறி, அந்தப் பச்சிளங் குழந்தைக்கு நேர்ந்த கொடூரம் உடம்பெல்லாம் ஈட்டியாய்க் குத்துகிறது. வனாந்திரங்களில் படமாக்கப்பட்ட சில

ஆங்கிலப்படங்களில் பார்த்ததுண்டு, புலி சிங்கங்கள் அப்பாவி சாகபட்சிணிகளை சாகடித்து, சாகுமுன்பே அவற்றைத் துடிக்கத் துடிக்கக் கடித்துக் குதறிச் சுவைக்கிற கொடுமையை. ஆனால் ஒரு மனிதக் குழந்தை, ஒரு வயசு மழலைக் குழந்தை, சிறு நடை பயில்கிற சின்னஞ்சிறு ஜீவன், அன்பையும் அணைப்பையும் அன்னையையும் அன்றி வேறு உலகத்தை அறியாத புனிதமான சிசு - அதனுடைய பிஞ்சு உடல், பஞ்சு உடல், பட்டு உடல், ராட்சச விலங்கொன்றின் கூரிய நகங்களால் கிழிக்கப்பட்டு, பிசாசுப் பற்களால் குதறப்பட்டு, சிதைக்கப்பட்டு சின்னாபின்னப்பட்டு...

"ஏய், என்ன மக்கா இது, எனக்கு மேல நீ அப்ஸட் ஆய்ட்ட? மூஞ்சி பேயறஞ்ச மாதிரி இருக்கு? ரிலாக்ஸ் ஐ ஸே, ஐஸ் வாட்டர் குடிக்கிறியா?"

என்னுடைய பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே போய்க் குளிர்ந்த தண்ணீர் கொண்டு வருகிறான். ஆனால் தண்ணீரால் தனியாத வெக்கை எனக்குள்ளே.

"ஆமா, ஒரு அம்மா பேட்டி குடுத்தாங்களே, யார் அது இக்பால்?"

"அதுதான் அம்மா. அந்தக் கொழந்தயோட அம்மா. இன்னொரு கொடுமை என்னன்னா, இந்தப் பேட்டி ரிக்கார்ட் பண்ண அன்னிக்கித்தான் அந்த கொழந்தயோட முதல் பர்த்டேயாம்."

'அடக் கொடுமையே, தன் குழந்தையுடைய முதல் பிறந்த தின விழாவை எப்படியெல்லாம் சிறப்பிக்க வேண்டுமென்று அந்தத் தாய் கனவு கண்டிருப்பாள்! யார் யாரையெல்லாம் விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று பட்டியல் போட்டிருப்பாளே! அழையா விருந்தாளியாய் ஓர் அசுர மிருகம் எமனாய் வந்து சேரும் என்று நினைத்திருப்பாளா? மழலை பேசி அந்தத் தாயை மயக்கிக் கொண்டிருந்த அரும்பு, மரண ஹிம்சையில் எப்படி அலறியிருக்கும்! எனக்கே இப்படிப் பதறுகிறதே, அந்த அன்னையின் மனசு எப்படி சித்ரவதைப்பட்டிருக்கும்! அடப் பாவிகளா!'

"ஏன் இக்பால், ஜூக்காரங்க எப்படி இவ்வளவு கேர்லஸ்ஸா இருந்தாங்க? மிருகங்களைப் பராமரிக்க மட்டுமா மிருகக் காட்சி சாலை? மிருகங்களைப் பாக்க வர்ற மனுஷங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டாமா?"

"பாதுகாப்புத் தரணும்தான். என்ன செய்யறது, அந்த லட்சணத்துல ஜூ நடத்துறாங்க. இந்த மாதிரி ஸைட் ஸீயிங் வேன்கள்ள எப்பவும் ஒரு காவல்காரரர் துப்பாக்கியோடப் போகணும்னு ரூல்ஸ் இருக்காம். அத இவங்க ஃபாலோ பண்ணல. ஒரு கொழந்த வெளியில போற அளவுக்கு கதவுல ஓட்ட இருந்துருக்கு, அதயும் செக் பண்ணல. அந்த வேன்லயிருந்து ஆஃபீஸ்க்கு தகவல் சொல்ல வயர்லஸ் வசதி இல்ல. காட்டுக்குள்ள வண்டி பிரேக்டவுன் ஆனாக் கூட எப்படி சமாளிப்பாங்களோ தெரியாது. எல்லாம் ஒழுங்கா நடந்திருந்தா ஒரு பச்சக் கொழந்த அநியாயமாப் பலியாயிருக்காது."

"ஆமா, இது நடந்து ஒரு மாசம் ஆச்சே, பேப்பர்ல பெரிசா நியூஸ் வரல? இன்வெஸ்ட்டிகேட்டிவ் ஜர்னலிஸம் பண்ற பத்ரிக்கைகள் நம்மகிட்ட ஒரு முக்கால் டஜன் இருக்கே. அவன் கட்சி மாறினான், இவன் லஞ்சம் வாங்கினான், அவன் அடுத்தவன் பொண்டாட்டி கூடப் படுத்தான்னு பத்தி பத்தியா எழுதறவங்க இதப் பத்திப் பெரிசா

ஒண்ணும் எழுதினதாத் தெரியலியே, இந்த கொடுமக்கி யாரும் கொதிச்சு எழுந்துக் குரல் குடுத்ததாத் தெரியலியே…”

“எனக்கும் ஆச்சர்யமாத்தாம் மக்கா இருக்கு. ஒரு மாசங் கழிச்சி டி.வியில பாத்துத்தான் எனக்கும், ஒனக்கும், இந்த ஒலகத்துக்கும் இந்த பயங்கரம் தெரிஞ்சிருக்கு. எல்லாரும் சேந்து வேணும்னே இத அமுக்கிட்டாங்களா, இல்ல இது ஒரு விஷயமாவே இவங்களுக்குத் தெரியலியா? எடுத்ததுக்கெல்லாம் ஸ்ட்ரைக் பண்றாங்க, ஊர்வலம் போறாங்க, பேரணி நடத்தறாங்க, சாகும் வரை உண்ணாவிரதம்ங்கறாங்க, ஏன், தீக்குளிச்சி செத்தே போறாங்க. அவங்களுக்கெல்லாம் இந்த விஷயம் ஏன் உறைக்கவேயில்ல?”

இக்பால் கடைசியாய்ச் சொன்னது எனக்கு உறைக்கிறது. ‘இவனைப் பார்க்க வருமுன் என்ன நினைத்துக்கொண்டிருந்தேன்? வாழ்க்கைதான் யாருக்கும் பிரயோஜனமில்லாமல் கழிந்துவிட்டது. மரணமாவது யாருக்காவது நன்மையாய் முடிய வாய்ப்பிருக்கிறதா…

யாருக்காவது நன்மை இருக்கிறதோ இல்லையோ நாலு பேர் பேசிக் கொள்கிற மாதிரியாவது என் மரணம் அமையலாமே… இக்பால் என்ன சொன்னான்? எதற்கெல்லாமோ சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள், எதற்கெல்லாமோ தீக்குளித்து சாகிறார்கள்… அப்படி வலிய முன்வந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொள்கிறவர்களுக்கு மனைவி மக்கள் இருக்கலாம், சார்ந்தவர்கள் இருக்கலாம், முடிக்க வேண்டிய வேலைகள் பாக்கியிருக்கலாம், வேறு கமிட்மென்ட்ஸ் இருக்கலாம். ஆனால், இவை எதுவுமே இல்லாத நான், குடும்பத்துக்கு பாரமாய் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிற நான், செத்துப்போனால் என்ன என்று எண்ணிக் கொண்டிருக்கிற நான், என்னுடைய சாவை இப்படி ஒரு நல்ல விழிப்புணர்ச்சியோடு ஏன் இணைத்துக்கொள்ளக்கூடாது? என்னுடைய சாவு, சம்பந்தப்பட்டவர்களுக்கு சவுக்கடியாய் ஏன் அமையக் கூடாது? ஒரு பப்ளிக் அவேர்னஸ் உண்டு பண்ண ஏன் என் மரணம் உதவக் கூடாது? நான் ஏன் ஒரே கல்லில் ரெண்டு மாங்காய் அடிக்கக் கூடாது?

வாழ்க்கைதான் விசேஷமாய் அமையவில்லை. மரணமாவது விசேஷமாய், வித்யாசமாய் அமையட்டுமே!’

‘தீக்குளிப்பு?
இல்லை. புதிதாய் செய். பொருத்தமாய்ச் செய்.
முள்ளை முள்ளால் எடு.’

திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்துக்கு காலையில் டைரக்ட் பஸ் எத்தனை மணிக்கு? நாகர்கோயிலுக்குக் கால் மணிக்கு ஒரு பஸ் இருக்கிறது. அங்கே போய் மாறிப் போகலாம்.

திருவனந்தபுரம் மிருகக்காட்சி சாலை. மலையாளத்துக்கு மூச்சு முட்டச் செய்கிற மாதிரி பலப்பல தமிழ்க் குரல்கள் என்னைச் சுற்றி. தினம் தினம் புழங்குகிற மொழியானாலும் வெளிமாநிலமொன்றில் தமிழைக் கேட்கிற போது விசேஷமான சந்தோஷந்தான்.

இதோ நான் நாடிவந்த பாதாளம். கொடும்புலியின் வாசஸ்தலம்.

அந்த பெங்களூர்க் குழந்தையின் மழலைக் கதறல் செவிப்பறையில் அதிர்கிறது. சிகப்பாய்ச் சிதைந்து போன பிஞ்சு அவயவங்கள் ஒவ்வொன்றும் நியாயம் கேட்கின்றன. உதவி கேட்டுத் துடிக்கின்றன. 'இதோ நான் வருகிறேன். சிசுவே, உன் உதவிக்கு'.

“அந்தா புலி, அந்தா புலி” என்று சில குதூகலக் குரல்கள்.

'ஓ, ஆட்கொல்லியே வா! என்னை ஆட்கொள்ள வா!
என் வாழ்க்கையின் கடைசி அத்தியாயம். இதோ நான் ரெடி.'

கடைசி கடைசியாய்க் கண்களை மூடிக் கடவுளை தியானிக்கிறேன்.

'இரு, கொஞ்சம் இரு, கடைசியாய் உயிர் நண்பன் இக்பாலுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுவர விட்டுப் போச்சே... இந்த உலகத்துக்கு ஒரு குறிப்பு கூட எழுதி வைக்கவில்லையே...'

'பெங்களூர் மிருகக்காட்சி சாலையில் நடந்த பயங்கரத்தை உலகத்துக்கு உணர்த்துவதற்குத்தான் என்னை நான் மாய்த்துக் கொள்கிறேன் என்பதை இந்த உலகம் உணர வேண்டாமா...?'

திடீரென்று ஒரு அவல அலறல்.

“கொழந்த! கொழந்த! கொழந்த உள்ள விழுந்துருச்சே, ஐயோ நா என்ன செய்வேன்! கடவுளே, யாராவது காப்பாத்துங்களேன். ஐயோ, என் ராசா...”

தொடர்ந்து, கும்பலின் கையாலாகா ஓலம்.

என் கண்கள் திறக்கின்றன.
நிலைமை புரிகிறது.

நெஞ்சில் அறைந்து கொண்டு இந்தத் தாய் துடிக்கிறாள்.

“யாராவது காப்பாத்துங்களேன்!”

'யார்?
நீ தான்.
உன்னிடந்தான் முறையிடுகிறாள் இந்தத் தாய்.
தாமதிக்க நேரமில்லை.
குதிக்கத்தானே வந்தாய்? குதி!'

அடுத்த விநாடி நான் உள்ளே.

கூப்பிடு தூரத்தில் ஒரு காட்டுக் கர்ஜனை.

மூளைக்கும் உடம்புக்கும் எங்கிருந்தோ ஓர் அமானுஷ்ய சக்தி! செடி கொடிகளின் மேலே அலங்கோலமாய்க் கிடக்கிற குழந்தையை அள்ளுகிறேன். என் இருபத்தஞ்சு வருஷ சக்தியையெல்லாம் ஒருமுகப்படுத்தி ஓர் ஏவுகணையாக்கி...

குழந்தை மேல் நோக்கிப் பாய்கிறது.

அதோ பிடித்துக் கொண்டார்கள்.

கர்ஜனை சமீபிக்கிறது.

'நோ.'

"சார், மேல வந்துருங்க." "தம்பி, சீக்கிரம் இந்தப் பக்கம்."

ஜாக்கிசான் படங்களில் கதாநாயகன் செங்குத்தான சுவர்களிலும் அநாயாசமாய் ஏறிவிடுகிற லாவகம் கண்முன்னே விரிகிறது.

வேகம்! வேகத்தால் எதையும் சாதிக்கலாம்!

ஒரே எட்டில் பாதி உயரம். மீதிக்கு ஒரு கொடி கை கொடுக்கிறது. இன்னும் கொஞ்சம். இதோ விளிம்பு! என்னை நோக்கிப் பல ஆதரவுக் கரங்கள். பிறகு ஒரே தூக்கல். எல்லோரும் என்னைத் தலைகளுக்கு மேலாய் உயர்த்திப் பிடித்திருக்கிறார்கள்.

உலகத்தின் உச்சியில் நான்!

கர்நாடகத்தில் நடந்த ஒரு கொடுமைக்குக் கேரளத்தில் பரிகாரம் நடந்திருக்கிறது. பரிகாரம் கண்டது - அட, நான்தான். பாண்டித் தமிழனான நான்.

நான் சாகவில்லை. சாகக்கூடாது. சாக மாட்டேன். கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு காரியத்தை இன்றைக்கு சாதித்திருக்கிறேன். இவர்கள் என்னைக் கொண்டாடுகிறார்கள். இதோ என்னை நோக்கிக் கண்ணீரோடு கரங்கூப்பி நிற்கிற இந்தத் தாயும், என்னை உயர்த்திப் பிடித்துக் கூத்தாடுகிற இவர்களும், இந்த உலகத்துக்கு நான் தேவை என்று சொல்லுகிறார்கள்.

நான் சாதிக்க வேண்டியது இன்னும் இருக்கிறது.

இறந்து சாதிப்பதை விட அதிகமாய் இருந்து சாதிக்கலாம்.

இந்தக் கணத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறது என் வாழ்க்கை.

இனி, வெற்றி மேல் வெற்றிதான்!

-குமுதம், 13.03.1993.

# காதல் துறை

ஒரு வழியாய் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லியாச்சு. அப்பாவை நினைத்தால்தான் பயம். அதுவும், இப்போது அவர் செய்து கொண்டிருக்கிற ஆராய்ச்சிக்கு இடையே, தன்னுடைய மனசுக்குப் பிடித்த அவள் ஒரு போலீஸ் அதிகாரியின் மகள் என்பதை எப்படிச் சொல்வது! சொல்லாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதும் நல்லதல்ல.

அப்பாவின் அறைக்குள்ளே மெல்ல எட்டிப் பார்த்துச் செருமினான்.

அவர் நிமிரவில்லை.

திரும்பவும் ஒரு முறை முயன்றான்.

ம்ஹூம். அவர் எழுதுவதிலே மும்முரமாய் இருந்தார். பின் வாங்கிவிடலாமா? நோ. கூடாது. இன்றைக்கு அப்பாவோடு பேசி ஒரு ஹின்ட்டாவது கொடுத்து வைத்துவிட வேண்டும். பிறகு அம்மாவின் உதவியோடு அவரை ஒரே அமுக்காய் அமுக்கிவிட வேண்டும்.

“அப்பா…”

“ம்ம்? குப்பு? என்னடா விஷயம்?”

“வந்து… உங்க ஆராய்ச்சி எந்த லெவல்ல இருக்குப்பா?”

“அதக் கேக்கவா நீ வந்த? வேற என்னமோ இருக்கு; சமாளிக்கிற.”

“சத்தியமா இல்லப்பா. தேவைப்பட்டா உங்களுக்கு ஏதாவது ஹின்ட் எடுத்துக் கொடுக்கலாமேன்னு.”

“தாங்க் யூ ஸன். இப்பவாவது உனக்கு என் ஆராய்ச்சியில இன்ட்ரஸ்ட் வந்ததே, ரொம்ப சந்தோஷம். ஆனா, உன் உதவி தேவைப்படாதுன்னு நெனக்கிறேன். நான் கிட்டத்தட்ட முடிச்சிட்டேன். பைதவே, ஃபிப்ரவரி இருவத்தாறு ஹிண்டு கெடச்சா எடுத்துப் பார். மொராக்கோல ஒரு போலீஸ் கமிஷனராம், ராஸ்க்கல் அரநூறு பொம்பளைங்களைக் கற்பழிச்சானாம்! அஞ்சோ பத்தோ இல்லடா, அரநூறு! நம்ம ஊர்ப் போலீஸ் ஸ்டேஷன் கற்பழிப்புகள்ளாம் பிச்ச வாங்கணும். எல்லாத்தையும் எழுதிட்டேன். புக் பப்ளிஷ் ஆகட்டும். எல்லாருக்கும் இலவசமாக் குடுக்கப் போறேன். போலீஸ் டிப்பார்ட்மெண்ட் யோக்யதை உலகம் பூரா ஒரே மாதிரிதான்னு எல்லாருக்கும் தெரியட்டும்.”

அப்பாவின் வேகத்தைப் பார்த்து, சொல்ல வந்ததை மென்று விழுங்கிவிட்டு நழுவினான் குப்பு.

சாயங்காலம் பீச்சில் வைத்து சரோவிடம் விஷயத்தைச் சொன்னான்.

“அப்படி என்னங்க உங்கப்பாக்குப் போலீஸ்னா வெறுப்பு?”

சுண்டலை மென்றுகொண்டே கேட்டாள். அவன் விளக்கினான்.

“அப்பா டிவிஷனல் இஞ்ஜினியரா இருந்தப்ப, 1970ன்னு நெனைக்கிறேன், எலக்ட்ரிஸிடி போர்டு இஞ்ஜினீயர்ஸ் எல்லாம் ஸ்ட்ரைக் பண்ணினாங்களாம். அப்ப அப்பாவும் ஸ்ட்ரைக் பண்ணி அரஸ்ட் ஆனாராம். ஒரு நைட் பூரா லாக் அப்ல வச்சிருந்திருக்காங்க. அப்ப ரெண்டு மூணு போலீஸ் ஆஃபீஸர்ஸ் அப்பாவையும் மத்த இஞ்சினீயர்ஸையும் அசிங்க அசிங்கமாத் திட்டினாங்களாம். ஒரு இன்ஸ்பெக்டர் அப்பா முகத்துல டார்ச் அடிச்சு, ‘ஸ்ட்ரைக் பண்ற மூஞ்சியப் பாரு’ன்னு இன்ஸல்ட் பண்ணியிருக்கார். அதுக்கப்புறம் அப்பா ஸூப்ரன்ட்டண்டிங் இஞ்ஜினீயர் ஆகி, சீஃப் இஞ்ஜினீயர் ஆகி, ரிட்டயர்டும் ஆயிட்டார். அதுவரைக்கும் பொறுமையாயிருந்தார். ரிட்டயர் ஆன அடுத்த நாளே ஆராய்ச்சி செய்யப்போறேன்னு ஆரம்பிச்சிட்டார். உலகம் பூராவும் போலீஸ்காரங்க என்னவெல்லாம் அக்ரமம் பண்றாங்கன்னு ஒரு புக் எழுதி இலவசமா விநியோகிக்கப் போறாராம். இந்த லட்சணத்துல உங்கப்பா ஒரு போலீஸ் ஆஃபீஸர், நீ ஐ.பி.எஸ். எழுதிட்டு என் பின்னால சுத்திட்டிருக்கேங்கற விஷயத்தை எப்படி அவர் காதுல போடறது?”

“அடடே, சார் என்னமோ புதுசா சொல்றீங்க? நான் உங்க பின்னாடி சுத்தறேனா நீங்க என் பின்னாடி சுத்தறீங்களா? ப்ளேட்டை மாத்தறீங்களே!”

“அட, நான்தான் சுத்தறேன்னு வச்சிக்கயேன். அதுக்குத்தான் ஃபைன் கட்ற மாதிரி டெய்லி சுண்டலுக்கு அழறேனே. நீ விஷயத்துக்கு வா!”

“இதென்ன ஒரு பெரிய விஷயம்னு நீங்க ஒர்ரி பண்றீங்க குப்பு! ஆமா, உங்கப்பா ஏன் உங்களுக்கு குப்புசாமின்னு பட்டிக்காட்டுப் பேர் வச்சிருக்கார்? கார்த்திக், ப்ரபு, கமல்ஹாசன்னு கவர்ச்சியா வச்சிருக்கப்படாதோ?”

“ஆமா, அதானே இப்ப ரொம்ப முக்கியம்! நான் ஸீரியஸ்ஸா சொல்லிட்டிருக்கேன். நீ வெளையாடறியே!”

“இது ஒண்ணும் பெரிய ஸீரியஸ் விஷயமில்லிங்க. நம்ம கைல விடுங்க, நான் ஸால்வ் பண்றேன். கவலைய விடுங்க.”

“ஸால்வ் பண்ணிருவியா சரோ?”

“பண்ணிட்டா என்ன தருவீங்க?”

“டெய்லி உனக்கு டபுள் சுண்டல்.”

“ச்சீ... நீங்களும் உங்க சுண்டலும்! எத்தனை நாளக்கிக் குப்பு நாம பீச்ல சுண்டல் தின்னுட்டு, லவ் பண்ணிட்டிருக்கிறது? சட்டு புட்டுன்னு பெரியவங்க முன்னாடி விஷயத்தப் போட்டு ஒடைக்க வேண்டாம்? எங்க வீட்ல ஒண்ணும் ப்ரச்சனை இருக்காது. உங்க வீட்ல தான் ப்ரச்சனைங்கறீங்க.

“நீதான் ப்ரச்சினையைத் தீத்து வக்கிறேன்னிறே!”

“வக்கிறேன். நாளைக்கே உங்கப்பாட்ட ஒரு அப்பாய்ன்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணுங்க. உங்க வீட்டுக்கு என்னக் கூட்டிட்டுப் போங்க. அப்புறம் நடக்கறதைப் பாருங்க, நான் வருங்கால ஐ.பி.எஸ்னு எப்படி நிரூபிக்கிறேன்னு.”

அடுத்த நாள் காலை பத்தரை மணிக்கு ஒரு பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டி காண வரப்போவதாக அப்பாவிடம் சொல்லி வைத்திருந்தான் குப்பு.

சொன்ன மாதிரியே சரியாய்ப் பத்து முப்பதுக்கு சரோவோடு அப்பாவின் அறையில் பிரவேசித்தான்.

“அப்பா, பத்திரிகை நிருபர்னு சொன்னேனே, இவ தான். ஐ மீன்…இவங்கதான்.”

அப்பா பார்வையை உயர்த்தினார்.

“நிருபர்னு சொன்னே, நிரூபியைக் கூட்டிட்டு வந்திருக்கிறே!”

அவருடைய ஜோக்கை மெச்சி அவரே சிரித்துக் கொண்டார்.

சரோ மெல்ல அவன் காதைக் கடித்தாள்.

“என்ன குப்பு, ஆரம்பத்திலேயே உங்கப்பா இந்தக் கடி கடிக்கிறாரே…”

“என்னடா அது ரகசியம்? ரொம்ப அந்நியோன்னியமா இருக்கிற மாதிரியிருக்கு, ரொம்ப நாள் பழக்கமோ?”

“ஸ்ஸ்… சரோ, அப்படி ஒட்டாதே. கொஞ்சம் தள்ளி நில்லேன். அது வந்து அப்பா, இப்பத்தான் கொஞ்ச நாளா…பீச்…சுண்டல்…ஆ!”

அவன் ‘ஆ’ வென்று அலறியது அவன் காலை அவள் சடாரென்று மிதித்ததால்.

“என்னடாது, ‘ஆ ஊ’ங்கறே, தேள் கீள் கொட்டிருச்சா?”

“அது… ஒண்ணுமில்லப்பா, திடீர்னு… கால் சுளுக்கு… மேடம், நீங்க ஆரம்பிக்கலாமே!”

அவள் பக்கம் பார்வையை நகர்த்தினார் அப்பா.

“பத்தரைன்னு சொன்னான், கரெக்ட்டா பத்தரக்கி வந்துட்டியேம்மா! ஐ லைக் யுவர் மிலிட்டரி பங்ச்சுவாலிட்டி!”

“இது போலீஸ் பங்ச்சுவாலிட்டி அங்க்கிள். ஸ்ஸ்… ஆ!”

இப்போது காலை மிதித்தது அவன்.

அவள் பங்குக்கு சரோ அலறிவிட்டுக் கிசுகிசுத்தாள்.

“ஏன் குப்பு, அங்க்கிள்னு சொன்னது தப்பா?”

“அதுக்கில்ல மரமண்டை, போலீஸ் பங்ச்சுவாலிட்டிங்கிறியே, அப்பாவுக்குப் போலீஸ்னா புடிக்காதில்ல?”

ரெண்டு பேரும் மாறி மாறிக் கிசுகிசுத்துக் கொண்டிருந்ததை அப்பா முறைத்துக் கொண்டிருந்தார்.

சரோ சுதாரித்துக் கொண்டு சமாளித்தாள்.

“அப்ப அங்க்கிள்... வந்து.. சார், பேட்டியை ஆரம்பிக்கலாமா?”

“ம்...ம்...”

“போலீஸ் இலாக்காவைப் பத்தி நீங்க ஒரு தீஸிஸ் பண்ணிட்டிருக்கறதாயும், அதைப் புஸ்தகமாப் போட்டு இலவசமா விநியோகிக்கப் போறதாயும் கேள்விப்பட்டேன்.”

“ஆமா. உலகம் பூரா பரவலாயிருக்கிற போலீஸ் அக்கிரமங்கள், அயோக்கியத்தனங்கள் பத்தி எழுதிட்டிருக்கேன். அநேகமா முடிஞ்சு போச்சு. இப்ப ஃபினிஷிங் டச்சஸ்தான். என் புஸ்தகம் ரிலீஸ் ஆனப்புறம் ஜனங்களுக்குப் போலீஸைப் பத்தி ஒரு சரியான பார்வை கிடைக்கும். ஒரு பொது விழிப்புணர்வு ஏற்படும். யூ வெய்ட் அண்ட் ஸீ!”

அவர் கண்களில் கனவுகள் தெரிந்தன. சரோ அவற்றைக் கலைக்க முற்பட்டாள்.

“அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் போலீஸ் துறையில மட்டுந்தான் இருக்குன்னு சொல்றீங்களா? அல்லது போலீஸ் துறையில இருக்கறது அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் மட்டுந்தான்னு சொல்றீங்களா?”

“போலீஸ் துறையில ஒண்ணு ரெண்டு நல்ல விஷயங்க இருக்கலாம்; மத்தத் துறைகள்ள கொஞ்சம் அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் இருக்கலாம். ஆனா, அதப்பத்தி எனக்கு அக்கறையில்ல. போலீஸோட அக்கிரமங்களால நான் பாதிக்கப்பட்டிருக்கேன், அவமானப்படுத்தப்பட்டிருக்கேன். அதனால அதப்பத்தி எழுதறேன்.”

“ஸோ, நீங்க பப்ளிக் இன்ட்ரஸ்ட்ல எழுதல. உங்க சுயநலத்துக்காக, அற்ப சந்தோஷத்துக்காக எழுதறீங்க. உங்களை ஒரு ஸாடிஸ்ட்னு சொல்லலாமா?”

அதிர்ந்தார் அவர். சில விநாடிகள் தாமதித்துத்தான் வார்த்தைகள் வெளிவந்தன.

“ஸாடிஸ்ட்? நான்ஸென்ஸ். ஏம்மா, நீ என்னை இன்டர்வ்யூ பண்ண வந்திருக்கியா, இல்ல இன்ட்டராகேட் பண்ண வந்திருக்கியா? லுக் ஹியர் பேபி, போலீஸ்னால பாதிக்கப்பட்டது நான் மட்டுமல்ல. எத்தனையோ அப்பாவி மக்கள் உலகம் பூரா தினமும்

போலீஸ் கொடுமைக்கு ஆளாகறாங்க. அமெரிக்கால போன வருஷம் லாஸ் ஏஞ்சலிஸ்ல ரோட்னி கிங்னு ஒரு நீக்ரோ டிரைவரை அஞ்சாறு போலீஸ்காரங்க சேந்து அடியடின்னு அடிச்சி சின்னா பின்னப்படுத்தினதை டி.வில பாக்கலியா? அப்புறம் லாஸ் ஏஞ்சலிஸ் நகரமே பத்தி எரிஞ்சதே?"

"ஆமா, லாஸ் ஏஞ்சலிஸ் பத்தி எரிஞ்சது. அப்ப லிஸா ஃபிலிப்ஸ்ங்கற ஒரு பெண் போலீஸ் ஆஃபீஸர் தன் உயிரைப் பொருட்படுத்தாம கலவரக்காரங்க மத்தியில புகுந்து அடிபட்டவங்களைக் காப்பாத்துன சாகசத்தைப் பத்தி டிஸம்பர் ரீடர்ஸ் டைஜஸ்ட்ல ஒரு ஆர்ட்டிக்கிள் வந்ததே, தீஸிஸ் எழுதறவங்க அதையும் படிச்சிருக்கணுமே!"

திரும்பவும் ஒரு அடி.

அவர் அவளை ஆழமாய்ப் பார்த்தார்.

"எந்தப் பத்திரிகைமா நீ"

"பத்திரிகை எதுவுமில்லை சார். நான் ஃப்ரீலான்ஸ் பண்ணிட்டிருக்கேன்."

"பேட்டிக்கி நல்லா தயார் பண்ணிக்கிட்டு வந்திருக்க போல?"

"தயார் பண்றதுக்கு என்ன இருக்கு. போலீஸ் டிப்பார்ட்மென்ட்ல எனக்கு இன்ட்ரஸ்ட் இருக்கு, அதான்."

"இன்ட்ரஸ்ட் எப்படி வந்ததுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"ஸிம்பிள். எங்கப்பா ஒரு போலீஸ் ஆஃபீஸர். நானும் ஐ.பி.எஸ் எழுதிட்டு ரிஸல்ட்டுக்குக் காத்திட்டிருக்கேன்."

அவள் டபக்கென்று போட்டு உடைத்ததில் கலவரமடைந்து அவளுடைய காலை அழுத்தப்போன குப்புசாமியைப் பொருட்படுத்தாமல், தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் அவனுடைய அப்பாவை நேருக்கு நேர் எதிர்கொண்டான்.

"சார், எத்தனையோ வருஷத்துக்கு முந்தி நீங்க ஒரு போலீஸ் ஸ்டேஷன்ல அவமானப் பட்டீங்கங்கறதுக்காக உலகத்துப் போலீஸ்காரங்க எல்லாருமே அயோக்கியங்க, அக்கிரமக்காரங்கன்னு டமாரம் அடிக்க ஞாயமே இல்ல. எந்த நாட்டிலயும் போலீஸ் துறை இல்லன்னா உள்நாட்டு அமைதி இருக்காது. மக்கள் நிம்மதியா வாழ முடியாதுங்கறது உண்மை. தினமும் எத்தனையெத்தனையோ திருட்டுகள், கொள்ளைகள், கொலைகள், கலவரங்கள் உலகம் பூரா போலீஸால தவிர்க்கப்படுது, ஒடுக்கப்படுது, குற்றவாளிகள் பிடிக்கப்படறாங்க. தண்டிக்கப்படறாங்க. இதெல்லாம் போலீஸோட தினசரி கடமைங்கறதனால இதுக்கு விளம்பரம் தரப்படறதில்ல. ஆனா எங்கேயோ எப்பவோ சில போலீஸ்காரங்க கடமை தவர்றது விளம்பரப்படுத்தப்படுது. விமர்சிக்கப்படுது. போலீஸ்காரங்களும் மனுஷங்கதானே சார், மனுஷங்க தப்பு செய்யறது இயற்கைதானே! கையில் ஆயுதமும் அதிகாரமும் இருக்கறது சில நேர்மையில்லாத போலீஸ்கார மனுஷங்களுக்கு அத்து மீர்றதுக்கு வசதியாயும் தூண்டுகோலாயும் இருக்கு. அது வெளியில தெரியறபோது மிகைப்படுத்தப்பட்டு

விளம்பரப்படுத்தப்படுது. ஆனா மெஜாரிட்டியான போலீஸ்காரங்க தங்களோட கடமையை ஸின்ஸியராச் செய்யறவங்களாத்தான் இருக்காங்க. அதுல கூட சில ஸ்பெஷல் கடமை வீரர்கள் இருக்காங்க. அந்த லாஸ் ஏஞ்சலிஸ் வீராங்கனை மாதிரி. நம்ம ஊர்க் கிரண்பேடி மாதிரி. உலகத்துல நல்ல விஷயங்கள் எத்தனையோ இருக்கு. நீங்க ஆராய்ச்சி பண்றதுக்கு ஒரு நல்ல விஷயத்தைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். ஒரு நல்ல விஷயத்தைப் பத்தி புஸ்தகம் எழுதி ஃப்ரீயா குடுக்கலாம். இல்ல, உங்களை அவமானப்படுத்தின போலீஸைப் பழி வாங்கியே ஆகணும்னு நீங்க உறுதியா இருந்தா அதைக் கன்ஸ்ட்ரக்டிவ்வா செய்திருக்கலாம். உங்க மகனை ஒரு போலீஸ் அதிகாரியா ஆக்கிக் காட்டி, அவரை நேர்மையும் நாணயமுமான கடமை வீரரா மெருகேத்தி, இதுதாண்டா போலீஸ்ன்னு அவரை ஒரு முன்னுதாரணமா ஆக்கிக்காட்டி மார் தட்டியிருக்கலாம்."

அவர் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அறை வாசலில் கதவைப் பற்றிக் கொண்டு நின்றிருந்த அம்மாவும்.

அவருடைய பார்வை மனைவியின் பக்கம் திரும்பியது.

"என்ன பங்கஜம் சும்மா பாத்துட்டு நிக்கிற! கொழந்தக்கிக் கூல்ட்ரிங்ஸ் கொணாந்து குடும்மா! எவ்வளவு நீளமா வசனம் பேசியிருக்கு!"

இறுக்கம் தளர்ந்து சிரித்தார்.

அப்பா சிரித்தது குப்புவுக்குப் பெரிய ஆறுதலாய் இருந்தது, 'அப்பாடா!' என்றிருந்தது - ரொம்ப நேரம் அடக்கிக் கொண்டிருந்துவிட்டு பாத்ரூம் போய் வந்த மாதிரி.

கொஞ்சம் நிசப்தத்துக்குப் பிறகு அப்பா பேசினார்.

"நீ கடைசியாச் சொன்ன பாய்ன்ட் எனக்கு ரொம்ப சரின்னு படுதும்மா. நான் அப்படிச் செய்திருக்கலாமில்ல? என் மகனைப் போலீஸ் ஆஃபீஸர் ஆக்கியிருக்கலாம். நீ என்ன சொன்ன? மார் தட்டியிருக்கலாம்? ஆஹா! யெஸ், மார் தட்டியிருக்கலாம். இப்ப ரொம்ப லேட். எனக்கு இருக்கறது ஒரே பயல். இவன்தான். என்னமோ இண்ட்ஸ்ட்ரி ஆரம்பிக்கப் போறேன்னு அலஞ்சுட்டிருக்கான். ஒரு பொண்ணு இருந்திருந்தாலாவது உன்னை மாதிரி ஐ.பி.எஸ் ஆக்கியிருக்கலாம்."

"ஐ.பி.எஸ் ஆக்கப் பொண்ணு இல்லன்னா என்ன அங்க்கிள், ஒரு ஐ.பி.எஸ் பொண்ணை மருமகளா ஆக்கிக்கலாம் இல்லியா...?"

குப்புவை ஓரக்கண்ணால் பார்த்தபடி, தணிந்த குரலில் அவள் சொன்னதன் அர்த்தத்தைக் கிரகித்துக் கொண்ட அவர், பெரிசாய் வாய்விட்டுச் சிரித்தார். ரொம்ப நேரம் சிரித்தார்.

"ஓஹோ, அப்படியா சங்கதி? இந்தப்பய பீச்சு, சுண்டல்னு உளர்னப்பவே நெனச்சேன், என்னமோ மீன்வாசனை அடிக்குதேன்னு. புத்திசாலிப் பொண்ணும்மா நீ. ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிக்கிறதுங்கறது இதுதானா! பங்கஜம், இது என்னது கூல் ட்ரிங்ஸா? அட மண்டு, பால் பழம் குடும்மா நம்ம மருமகளுக்கு!"

திரும்பவும் சிரிப்பு.

சரோஜினி (ஐ.பி.எஸ்) வாழ்க்கையில் முதன் முறையாக முகத்தில் நாணத்தைப் படரவிட்டதைக் குப்புசாமி ரசித்துக் கொண்டிருந்தான், திருட்டுத்தனமாய்.

-குமுதம், 08.04.1993

(குப்புசாமியின் காதலி)

# அங்க்கிள் எனக்கு மனசே சரியில்ல

வழக்கமாய் ஏழரை மணிக்கெல்லாம் காலேஜூக்குக் கிளம்பிவிடுகிற ஜெயா, சோதனையாய் இன்றைக்கு இவ்வளவு லேட்டாகியும் கிளம்பவில்லை. தந்தையின் அவசரம் அவனுக்குப் புரிய நியாயமுமில்லை. 'டண்ண் டண்ண்'ணென்று கடிகாரம் அதிர்ந்தது. எட்டு. செல்வகுமார் பொறுமையிழந்து மெல்ல மகனின் அறைவாசலில் எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"ஜெயா, லேட்டாச்சே, கிளம்பல?"

கண்ணாடி முன் நின்று மைக்கேல் ஜாக்ஸனை விஸிலிசைத்தபடி தலைவாரிக் கொண்டிருந்த ஜெயா அப்பாவின் பக்கம் திரும்பினான்.

"டாடி, இன்னிக்கிக் கார் எடுத்துட்டுப் போறேன் டாடி."

செல்வகுமாரின் மூளையில் இன்னொரு 'டண்ண்'.

ஜெயாவுக்குக் கார் இல்லையென்று அவர் என்றைக்குமே சொன்னதில்லை. காரென்ன, மகன் கேட்டு எதையுமே அவர் இன்று வரை மறுத்ததில்லை.

ஆனால் இன்றைக்கு?

ஒன்பது மணிக்கு அடையாரில் இருந்தாக வேண்டுமே. விலாசத்தை வேறு அலைந்து திரிந்து கண்டுபிடிக்க வேண்டும்... கார் இல்லையென்றால் எப்படி... அவசரத்துக்கு அண்ணா நகரில் டாக்ஸி கிடைக்காது. ஆட்டோவில் போனால் அவ்வளவு சிறப்பாக இருக்காது. சாவித்திரியை முதன்முதலாய்ப் பார்க்கப் போகிறபோது பந்தாவாய்ப் போகாவிட்டால் எப்படி...

"ஐம் ஸோ ஸாரி ஸன். எனக்கு ஒரு எங்கேஜ்மென்ட் இருக்கே... ஒம்போது மணிக்கி நான் தாம்பரத்துல இருக்கணும். நேத்தே சொல்லியிருக்கலாமே நீ..."

"இன்னிக்கி ஃப்ரை டே, உங்களுக்கு ஃபாக்டரி லீவ்தானேன்னு நெனச்சேன். லேட் ஆயிருச்சே... பரவாயில்ல டாடி நான் ஆட்டோ புடிச்சிப் போய்க்கிறேன்."

மகனுடைய ஏமாற்றம் செல்வகுமாரை ஹிம்சித்தது. தன்னுடைய சுயநலங்குறித்த குற்றவுணர்வோடு பால்கனியில் நின்று அவனுடக்கு டாட்டா காட்டினபோது மானசீகமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். பார்வையிலிருந்து அவன் மறைந்ததும் செல்வகுமார் விரைவாய்ச் செயல்பட்டார். தாடையைத் தடவித் தடவியுணர்ந்து பிரகாசமாய் ஷேவ் செய்து கொண்டார். காதுகளின் புறங்களிலிருந்த செல்லநரை டச் அப் செய்யப்பட்டது."அம்மாடீ... பெண்ணுக்குத் தங்க மனசு, பொங்குது இந்த மனசு" என்று முணுமுணுத்தபடி கண்ணாடியைப் பார்த்துக் கண்ணடித்துவிட்டுக் குளிக்கக் கிளம்பினார்.

குளித்துவிட்டுப் புத்துணர்ச்சியோடு வெளியே வந்தபோது டைனிங் டேபிளில் காலை உணவு காத்திருந்தது.

“சுந்தரம், டி்ஃபன் வேண்டாம்ப்பா, லேட்டாயிருச்சு. அவசரமா அடையார் வரைக்கும் போகணும்.”

“தம்பிகிட்ட தாம்பரம்னு சொன்ன மாதிரி இருந்துச்சு?”

“ஏதோ ஒரு இடம். விடேன். ஃபௌல் பண்றியே சுந்தரம். உன்னோட சமையலைச் சாப்பிட்டுச் சலிச்சுப் போச்சுப்பா, வேற ஆள் பாத்துட்டிருக்கேன்.”

செல்வகுமார் சிரித்துக்கொண்டேதான் சொன்னாரென்றாலும் சுந்தரத்துக்கு ‘சுருக்’கென்றது.

“ஐயையோ, அப்படியெல்லாம் ஒண்ணும் பண்ணிராதீங்க ஐயா. பத்து வருஷ சர்வீஸ்ங்க ஐயா.”

“பத்து வருஷமா உன் சமையலச் சாப்பிட்டுக் கூட நான் இன்னும் நல்லா இருக்கேன்னா என்ன ஆச்சர்யம் பாத்தியா!”

திரும்பவும் சிரிப்பு.

“இன்னிக்கு ஒரு நாளக்கி எனக்கு விடுதலை குடு சுந்தரம், லஞ்ச் கூட வேண்டாம்.”

‘ஐயா என்றைக்குமில்லாமல் இன்று ஜாலி மூடில் இருக்கிறார்’ என்று உணர்ந்தபோது சுந்தரத்துக்கு ரொம்ப சந்தோஷம்.

உடையணிந்து கொண்டு அறையைத் திறந்து கொண்டு வெளியே வந்த பின்னால் திடீரென்று மனசுக்குள் ஓர் உறுத்தல். திரும்பவும் அறைக்குள் பிரவேசித்து ரோஸியின் படத்தின் முன் நின்றார்.

“... என்னை மன்னிசிரு ரோஸி. பத்து வருஷம் உன்னோட ஃபோட்டோவோடவும் உன்னோட நினைவோடவும் வாழ்ந்துட்டேன். இப்ப எனக்கு இன்னொரு ‘நீ’ வேணும் போல இருக்குது. ஐம் ஸாரி மா...”

படத்தைக் கழற்றி ஒரு முத்தம் ஆழமாய்ப் பதித்துவிட்டுத் திரும்பவும் மாட்டினார். முத்தத்தின் ஈரத்தோடு கண்களின் ஈரமும் படத்தில் பதிந்தது.

காரை ஸ்டார்ட் செய்யும் முன், சட்டைப் பாக்கெட்டிலிருந்து சாவித்திரியின் ஒரு கடிதத்தையெடுத்து முகவரியை மனசில் பதித்துக் கொண்டார்.

கடிதத்தோடு பின் செய்யப்பட்ட புகைப்படம். முப்பத்தஞ்சு வயசுக்கு ரொம்ப இளமை. ரோஸி மாதிரியே அழகு. குணமும் அவளைப்போலவே இருந்துவிட்டால் அதிர்ஷ்டம்தான். கல்லூரியில் காலடியெடுத்து வைத்திருக்கிற மகள். இன்றைக்கு அவள் வீட்டிலிருக்க மாட்டாள். காலேஜுக்குப் போயிருப்பாள். பேர் ‘சரோ’ என்று சாவித்திரி எழுதியிருந்தாள். ‘ஜெயாவும் அவளும் ஒத்துப் போகவேண்டும். சாவித்திரியின் மகளும் ரோஸியின் மகனும் ஒற்றுமையாய் வாழ வேண்டும். எல்லாம் நல்லபடியாய் முடிய வேண்டும். கர்த்தரே...!’

அடையாரில் சாவித்திரியின் ஃப்ளாட் இருந்த கட்டிடத்தைக் கண்டுபிடிப்பது ஒன்றும் சிரமமாயிருக்கவில்லை. ரெண்டாவது மாடி. ஒம்போது, பத்து, பதினொண்ணு இதோ பனிரெண்டு. மனசுக்குள் வண்ணத்துப்பூச்சிகளின் சிறகடிப்பு. சாத்தியிருந்த கதவுக்கு மேலாய் இவருக்குப் பரிச்சயமில்லாத ஒரு சாமி படம். படபடக்கிற மனசோடு பஸ்ஸரை அழுத்திய சில வினாடிகளில் கதவு திறக்கப்பட்டு சாவித்.

'இல்லை. சாவித்திரி இல்லை. கொஞ்சம் சின்ன சைஸ் பொண்ணு. சரோ? வேற யாராய் இருக்க முடியும். சரோதான். காலேஜுக்குப் போகவில்லை? செல்வகுமார், செல்வகுமார், கொஞ்சம் இரு. இந்த முகத்தை எங்கேயோ பார்த்திருக்கிறாயே, எங்கே? சாவித்திரியின் புகைப்படத்தின் சாயலா? இல்லையே, அசலாய் இந்த முகத்தையே பார்த்த மாதிரி இல்லை?'

'வாவ்! யார் இந்த மிடில் ஏஜ் ஹீரோ! திடீரென்று மம்மி காலையில் சொன்ன தூரத்து சித்தப்பா இவர்தானோ. பொண்ணு பார்க்கப் புறப்பட்ட மாப்பிள்ளை மாதிரி ஆள் ஓர் அசத்தலோடு வந்திருக்கிறாரே! ஹி இஸ் ரியலி இம்ப்ரஸ்ஸிவ்யா! இப்படி ஒரு நபர் ஜீவித்திருப்பதை மம்மி ஏன் இத்தனை நாள் சொல்லவில்லை?'

வாசலில் கேள்விக்குறிகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் போது, புடவைத் தலைப்பில் கைகளைத் துடைத்தபடியே வந்து கரங்கூப்பினாள் சாவித்திரி.

"வாங்க. உள்ள வாங்க."

நாணம். படபடப்பு. சந்தோஷம். புன்னகை.

"என்ன சரோ, அவங்கள வாசல்லியே நிக்க வச்சிருக்க... வீட்டக் கண்டுபிடிக்கிறது ஒண்ணும் கஷ்டமாயிருக்கலியே? சரோ, அடுப்புல பாயாசம் இருக்கு, கொஞ்சம் எறக்கி வச்சிட்டு வந்துருமா."

சரோவை அங்கிருந்து நகர்த்திவிட்டபின், தன்னையே பார்த்துக் கொண்டிருந்த செல்வகுமாரின் பார்வையைச் சந்திக்கத் திராணியில்லாமல் தலையைக் கவிழ்ந்தபடியே கிசுகிசுத்தாள் சாவித்திரி.

"உங்களப் பத்தி இவளுக்குத் தெரியாதுங்க. காலேஜ்க்குப் போயிருவான்னு நெனச்சேன். என்னமோ திடீர்னு இன்னிக்கு ஸ்ட்ரைக் பண்ணிட்டா. அதனால அவகிட்ட அவசரமா ஒரு பொய் சொல்ல வேண்டியதாப் போச்சு. அவங்க அப்பாவுக்கு சித்தப்பாப் பையன் நீங்க. அந்தக் காலத்துல எங்க கல்யாணத்துக்கு ஹெல்ப் பண்ணின ஒரே சொந்தக்காரர். ரொம்ப காலமா தொடர்பே இல்ல. திடீர்னு போனவாரம் மவுன்ட்ரோட்ல பாத்தேன். இன்னிக்கி வீட்டுக்கு வர்றதா சொல்லியிருக்கீங்கன்னு சொல்லி வச்சேன்."

"என்ன மம்மி ரெண்டு பேரும் ரகசியம் பேசிக்கிறீங்க, எனக்குத் தெரியக்கூடாத விஷயமா என்ன!"

"ஒண்ணுமில்லம்மா, கணேசலிங்கம் ஆக்ஸிடென்ட் பத்திக் கேட்டேன். ஒங்கம்மா சொல்லிட்டிருந்தாங்க."

“அது யார் அங்க்கிள், கணேசலிங்கம்?”

“ஏன், உங்க அப்பாதான்! முகத்தை மறந்திருப்ப, பேரக்கூட மறந்துட்டியாம்மா!”

“நான் மறக்கல அங்க்கிள். நீங்கதான். டாடி பேர் சுந்தரலிங்கம்.”

செல்வக்குமார் கமுக்கமாய் நாக்கைக் கடித்துக் கொண்டார். சாவித்திரி ஏதோ ஒரு கடிதத்தில் பெயரைக் குறிப்பிட்டிருந்தாள்; மனசில் பதியாமல் போனது.

சமயோஜிதமாய் சாவித்திரி பேச்சை மாற்றினாள்.

“ஸ்டவ்வை ஆஃப் பண்ணியா சரோ? மறந்திருப்பியே?”

“அதெல்லாம் பண்ணியாச்சு. மம்மி, நீங்க பேசிட்டிருங்க, நா மைதிலி வீட்ல போய் ஒரு ஒஸி ஃபோன் பண்ணிட்டு வந்திர்றேன்.”

“யாருக்குடீ ஃபோன்?”

“ம்ம்? பாய் ஃப்ரண்டுக்கு.”

சரோ கண்ணடித்துச் சிரித்தபடி போனாள்.

சாவித்திரி செல்வகுமாரிடம் முறையிட்டாள்.

“திமிரைப் பாத்தீங்களா?”

“ஐ லைக் ஹெர், துருதுருன்னு இருக்கா. கதவை மூடணுமா சாவித்ரி?”

“வேண்டாங்க. திடீர்னு வந்துருவா.”

மௌனம். நிசப்தம்.

பேசிக் கொள்வதற்கு விஷயங்கள் இருந்தாலும் சங்கோஜங்கள் குறுக்கே நின்றன.

சாவித்திரிதான் மௌனத்தைத் தளர்த்தினாள்.

“சொல்லுங்க.”

“என்ன சொல்லச் சொல்றீங்க?”

“ஏதாவது சொல்லுங்க, ஆனா என்னை வாங்க போங்கன்னு மட்டும் சொல்லாதீங்க.”

“உத்தரவு மேடம்.”

“ஆமா, மறந்தே போய்ட்டேனே! எனக்கு அறிவே இல்ல பாருங்க, உங்களுக்கு டிஃபன் குடுக்க மறந்தே போச்சு. இட்லி ஆறிப்போயிருக்கும். கொஞ்சம் இருங்க, தோசை சுடறேன்.”

எழப் போனவளை அமர்த்தினார் செல்வகுமார்.

“வேண்டாம், வேண்டாம் சாவித்ரி. பசியில்ல.”

“கொஞ்சம் பாயசம்?”

“அப்புறம் சாப்புடலாம். உக்காரு. சரோ வர்றதுக்குள்ள ஏதாவது பேசுவோம்.”

“நீங்கதான் பேசமாட்டேங்கறீங்களே...”

“நெறைய்ய பேசணும்னு ஆசையாத்தான் இருக்கு சாவித்ரி. ஆனா எப்படி ஆரம்பிக்கிறதுன்னு தான் தெரியல.”

“சொல்லுங்களேன், உங்க பிஸினஸைப் பத்தி, ஃபாக்டரியைப் பத்தி, உங்க... நம்ம மகனைப்பத்தி, அப்புறம் உங்க ரோஸியைப்பத்தி...”

செல்வகுமார் ஸோஃபாவில் சரிந்து கண்களை மூடினார். நீளமாய் ஒரு பெருமூச்சு.

“ரோஸி...ஷி வாஸ் அன் ஏஞ்ஜல். அவளோட வாழ்ந்த பத்து வருஷமும் ஒரு இன்பக் கனவு மாதிரி. பாதித் தூக்கத்துல கனவு கலஞ்சு போச்சு. ரோஸி ஒரேடியா தூங்கிப் போய்ட்டா. ரோஸியோட ஃபோட்டோவைப் பெரிசா ரூம்ல மாட்டி வெச்சிருக்கேன். இப்ப கிளம்பும்போது கூட ரோஸிக்கு முத்தங்குடுத்துட்டுத்தான் வந்தேன்.”

“பொறாமையாயிருக்குங்க.”

சாவித்திரியின் செல்லப் பொறாமைக்கு செல்வகுமார் லேசாய் சிரித்துக் கொண்டார்.

“அப்புறம்... ஜெயகுமாரைப் பத்திச் சொல்லுங்களேன்.”

“ரோஸி அவனை ஜெயான்னு கூப்புடுவா. நானுந்தான். ரொம்பச் செல்லம் அவனுக்கு, சரோவுக்கு நீ குடுக்கற செல்லம் மாதிரி. அவன் கேட்டு எதையும் நான் இல்லைன்னு சொன்னதில்ல. இன்னிக்கித்தான் சொல்ல வேண்டியதாப் போச்சு.”

“ஏங்க?”

“காலேஜ்க்குக் காரெடுத்துட்டுப் போறேன்னு காலைல திடீர்னு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் ராஸ்க்கல். அவன் காரைக் கொண்டு போயிருந்தான்னா நா சொன்ன டைமுக்கு இங்க வந்து சேந்திருக்க முடியாது.”

“ஏன், கொஞ்சம் லேட்டானாத்தான் என்ன?”

“அதெப்படி, உன் முகத்தை ஃபர்ஸ்ட் டைம் பாக்கப் போறேன், ஒரு நல்ல இம்ப்ரஷன் க்ரியேட் பண்ண வேண்டாமா? பங்ச்சுவாலிட்டி முக்கியமில்லியா... வேறொரு ஆங்கிள்ல பாத்தா இது கொஞ்சம் சுயநலம்தான். பட் ஐ குட்னட் ஹெல்ப் இட்.”

“ஜெயா உங்க பிஸினஸ்ல ஹெல்ப் பண்ணுவானா?”

“அவனுக்கென்ன தெரியும், சின்னப் பையன். வெளையாட்டுப் பையன். காலேஜ் யூனியன் அது இதுன்னு அலையறான். படிப்பு முடிஞ்சப்புறந்தான் அவனுக்கு ட்ரெய்னிங் குடுக்கணும்.”

“தனியா பிஸினஸைக் கவனிக்கிறது கஷ்டமாயில்ல?”

“கொஞ்ச நாளக்கித்தானே, அப்புறந்தான் நீ வந்துருவியே! நீ எனக்கு ஹெல்ப் பண்ண மாட்டியா சாவித்ரி?”

“நிச்சயமா!”

சாவித்திரிக்குப் பெருமையும் பூரிப்பாயும் இருந்தது.

“உங்க ஃபாக்டரியைப் பத்திச் சொல்லுங்க.”

“உனக்குத்தான் எழுதியிருக்கேனே. ப்ளாஸ்ட்டிக் சாமான் செய்யற ஃபாக்டரி. சின்ன ஃபாக்டரிதான். பக்கெட், குடம், கன்ட்டெய்னர்ஸ் எல்லாம் செய்யறது. நேத்து ஒரு அசம்பாவிதம் நடந்து போச்சு. நெறைய பக்கெட் டாமேஜாப் போச்சு. நூத்துக் கணக்கான வாளிங்க. அதை ஒவ்வொண்ணா பரிசோதிச்சு, நல்ல வாளி எது குற்ற வாளி எதுன்னு பிரிச்செடுக்கறதுக்குள்ள போதும் போதும் ஆயிருச்சு.”

“நல்ல வாளி, குற்ற வாளியா! பரவாயில்லையே, நல்லா பேசறீங்களே!”

சாவித்திரி ரசித்துச் சிரித்தாள்.

“ஆனா, கேள்வி கேட்டாத்தான் பதில் சொல்வீங்க போல. நாம பேசிக்கிறது நான் உங்களை இன்ட்டர்வ்யூ பண்ணின மாதிரி இருக்கு!”

திரும்பவும் சிரிப்பு.

“நா கொஞ்சம் ரிஸர்வ்ட் டைப் சாவித்ரி. ரோஸி என்னைப் பாதி சேஞ்ஜ் பண்ணினா. மீதியை நீ பண்ணேன்? என் வீட்டுக்கு வந்தப்புறம் உனக்கு நெறைய வேலை இருக்கு சாவித்ரி.”

“அதைத்தானேங்க நானும் கனவு கண்டுகிட்டு இருக்கேன்! ஏங்க, எல்லாம் நாம நெனக்கிற மாதிரி நடக்குமா?”

“கர்த்தர்ட்ட தினமும் நான் அதைத்தான் வேண்டிக்கிறேன் சாவித்ரி. நீயும் உன் சாமியை வேண்டிக்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். நம்ம குழந்தைங்க நம்மளை

ஏத்துக்கணும். அவங்க ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கணும். அதுதான் முக்கியம்."

"சரோவுக்கு நம்ம விஷயம் ஒண்ணுமே தெரியாது. ஜெயாவுக்கு?"

"பேப்பர்ல வந்த அந்த மாட்ரிமோனியலப் பாத்துட்டு, டாடி நீங்களும் இந்த மாதிரி ஒரு விளம்பரம் குடுங்களேன், உங்களுக்கும் ஒண்ணும் வயசாயிரலியே, யூ லுக் ஸோ யங் அண்ட் ஸ்மார்ட். (இந்த இடத்தில் செல்வகுமார் கொஞ்சம் நிறுத்தினார், சாவித்திரியின் வதனத்தில் வெளிப்பட்ட வெட்கத்தையும் குறுஞ்சிரிப்பையும் ரசிக்க.) எனக்கும் ஒரு மம்மி கெடச்ச மாதிரி இருக்கும். த்ரில்லாயிருக்கும்னு சொன்னான். அவன் ஸீரியஸ்ஸா சொன்னானா சும்மா சொன்னானான்னு தெரியாது. ஆனா, அந்த விளம்பரமே நாங் குடுத்ததுதான்னு அவனுக்கு இன்னிவரைக்கும் தெரியாது!"

"அந்த விளம்பரத்தோட வார்த்தைப் ப்ரயோகம் அவனை அசத்தியிருக்கும்னு நினைக்கிறேன். என்னை அசத்தினா மாதிரி. ரொம்ப வித்யாசமா இருந்ததுங்க. ஒரு நல்ல இலக்கியவாதி வடிவமைச்சுக் குடுத்த மாதிரி நேர்த்தியான ஸ்டைல். நீங்க எதையும் வித்யாசமா செய்யறவர்ங்கற நினைப்பே உங்க மேல ஒரு பெரிய மதிப்பை ஏற்படுத்துச்சு. அதோட, ஜாதி, மத பாகுபாடு பாக்கறதில்லைன்னு எழுதியிருந்தீங்க. விதவையா இருந்தா நல்லது, உறவுக்காரங்க ஆதரவு இல்லாமயிருந்தா நல்லது. அதுக்கும் மேலே, ஒரு மகள் இருந்தா நல்லதுன்னு எழுதியிருந்தீங்க. ஸோ, அது எனக்காகவே வந்த விளம்பரம் மாதிரி இருந்தது. இந்த விளம்பரத்துல தேடப்படற பொண்ணு நீதான், உடனே எழுதிப்போடுன்னு என் உள்மனசு சொல்லுச்சு. நானும் ரெஸ்பாண்ட் பண்ணினேன். அப்புறம் உங்ககிட்டயிருந்து லெட்டர் வந்தது. லெட்டர்ஸ் வந்தது. எனக்கும் வாழ்க்கையில ஒரு பிடிப்பு ஏற்பட்டது. ஆமா, அந்த விளம்பரத்துக்கு நெறைய ரெஸ்பான்ஸ் வந்திருக்குமே?"

"ஒரு முப்பது பேர் எழுதியிருந்தாங்க. ஒரு சினிமா நடிகை கூட எழுதியிருந்தா தெரியுமா!"

"நீங்களும் ஒரு சினிமா ஹீரோ மாதிரிதானே இருக்கீங்க!"

சாவித்திரி ஓரக்கண்ணால் பார்த்துப் புன்னகைத்தாள். அவள் புன்னகையை ஆமோதித்துவிட்டு செல்வகுமார் தொடர்ந்தார்.

"ஆனா, அந்த அத்தனை லெட்டர்லயும் சாவித்ரி, ஒன்னோட லெட்டர்தான் என்னை சுண்டி இழுத்துச்சு. அதுவும் போக, ரோஸிக்கு முன்னால சீட்டுக் குலுக்கிப் போட்டு எடுத்ததுல, நான் விரும்பின மாதிரியே ஒன்னோட பெயர்தான் வந்தது. ஸோ நீ என்னோட செலக்ஷன் மட்டுமில்ல சாவித்ரி, ரோஸியோட செலக்ஷனும் நீ தான்."

"நா அதிர்ஷ்டசாலிங்க."

"அதோட..."

"அதோட..."

“உன் ஃபோட்டோ ரொம்ப ரொம்ப அழகாயிருந்தது. ஆனா, இப்ப நேர்ல பாக்கறப்ப...”

“நேர்ல பாக்கறப்ப?”

“ஃபோட்டோ ரொம்ப சாதாரணமாத் தெரியுது.”

“கணேசலிங்கம் ரொம்பக் குடுத்து வச்சவர்.”

“சுந்தரலிங்கம்.”

“ஐ”ம் ஸாரி. சுந்தரலிங்கம். அஞ்சே வருஷம் வாழ்ந்தாலும் அவர் ஒரு அப்ஸரஸ்ஸோட வாழ்ந்திருக்கார். ஒன்னப் பாத்தா யாரும் முப்பத்தஞ்சு வயசுன்னு சொல்ல மாட்டாங்க சாவித்ரி. ரொம்ப சின்ன வயசுலேயே கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்கன்னு நெனக்கிறேன்.”

“யாரும் பண்ணி வைக்கல. நானே பண்ணிக்கிட்டேன். அப்ப நான் பி.யு.ஸி பண்ணிட்டிருந்தேன். ஒரு நாள் காலேஜ்க்கு ரொம்ப லேட்டாயிருச்சு. எக்ஸாம் வேற. பஸ் ஸ்டாப்ல பஸ் கெடைக்காம தவிச்சிட்டிருந்தப்ப இவர் அந்தப் பக்கமா கார்ல வந்தார். தைரியமா லிஃப்ட் கேட்டேன். குடுத்தார். அப்புறம் அப்பப்ப கேக்காமலே லிஃப்ட் குடுத்தார். அப்புறம் டெய்லி. அந்தக் கார் எங்களோட காதல் வாகனமாச்சு. வீட்டுக்கு விஷயம் தெரிஞ்சபோது ஒரே ஆர்ப்பாட்டம், ரெண்டு பேர் வீட்லயும். அவர் வேற ஜாதி, நாங்க வேற ஜாதி. வீட்டைப் பகைச்சுக்கிட்டு நான் அவருக்குப் பெண் ஜாதியானேன். உறவுக்காரங்க ஒரு காக்கா குருவி கூட எட்டிப் பாக்கல. அஞ்சு வருஷம் ரொம்ப சந்தோஷமாயிருந்தோம். அப்புறம் அந்தக் காரே அவருக்கு எமனாப் போச்சு. அப்பவும் இந்தக் கல்நெஞ்சக்காரங்க யாரும் வந்து ஏன்னு கேக்கல. நானும் வைராக்யமா இருந்துட்டேன். அவரோட இன்ஷ்யூரன்ஸ் பணம் வந்தது. பேபி ஸிட்டிங் பண்ணினேன். ட்யூஷன் எடுத்தேன். எப்படியோ பதிமூணு வருஷம் ஓடிப்போயிருச்சு. எல்லாந்தான் உங்களுக்கு எழுதியிருக்கேனே.”

“ஒன்னோட எல்லா லெட்டர்ஸையும் பத்தரமா வச்சிருக்கேன் சாவித்ரி.”

“நானும் வச்சிருக்கேங்க. ஆனா அதையெல்லாம் இந்தப் பொண்ணு கண்ல படாம பாதுகாக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிரும். துருதுருன்னு ஏதாவது நோண்டிக்கிட்டேயிருப்பா. இதோ வந்துட்டாளே, என்னம்மா சீக்கிரம் வந்துட்ட, அதுக்குள்ள பேசி முடிச்சாச்சு?”

“இல்ல மம்மி, லைன் கட்டாயிருச்சு. இந்த புவனா இல்ல மம்மி? அவ நேத்து சொன்னா, நாளக்கி எனக்கு உடம்பு சரியில்ல, காலேஜ்க்கு வரமாட்டேன்னு. அதான் என்ன விஷயம்னு கேக்கலாம்னு ஃபோன் பண்ணினேன். ஒரு நாப்பது நிமிஷம் கூடப் பேசியிருக்க மாட்டோம் மம்மி, லைன் கட்டாயிருச்சு. போர்யா.”

சாவித்திரியும் செல்வகுமாரும் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டு சிரித்துக் கொண்டார்கள். சரோ சீண்டினாள்.

“என்ன, நா வந்தவுடனே நீங்க ரெண்டு பேரும் கம்னு ஆய்ட்டீங்க, உங்க லைனை நான் கட் பண்ணிட்டேனா?”

“சீ ஔராதடீ. நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க. எனக்குக் கிச்சன்ல வேலயிருக்கு. வடக்கி அரைக்கணும்.”

சாவித்திரி உள்ளே போக எழுந்தும் சரோ குதூகலித்தாள்.

“ஹை! அங்க்கிள் பேரச்சொல்லி இன்னிக்கி வடை பாயசத்தோட லஞ்ச்! ஆமா, அங்க்கிள் பேர் என்னன்னு எனக்குத் தெரியாதே...”

“அவசியம் தெரியணுமோ?”

“சொல்லுங்களேன் அங்க்கிள், நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க, ஒங்க பேர் உங்க உருவத்துக்கு மேட்ச் ஆகுதான்னு பாக்கணும்.”

“முழுப்பேரையும் சொல்லவா, செல்லப் பேரை மட்டும் சொல்லவா?”

“எல்லாப் பேரையுமே சொல்லுங்க.”

“எஸ்.ஜெயராஜ். அதாவது செல்வகுமார் ஜெயராஜ். ஜெயராஜ்ங்கறது குடும்பப் பெயர், செல்வகுமார்ங்கறது இயற்பெயர். க்லோஸ் ஸர்க்கிள்ல ‘செல்வா செல்வா’ன்னு கூப்புடுவாங்க. போதுமா?”

கடைசியில், “செல்வா” என்பதை ஒரு உட்காரணத்தோடு உரக்க உச்சரித்து உள்ளே உளுந்து களைந்து கொண்டிருந்த சாவித்திரியின் செவிகளில் விழுந்தது. “செல்வா” என்று மெல்ல சொல்லிப் பார்த்தாள் அவள். அதரங்களுக்குள் தித்திப்பு.

இங்கே சரோ, ஆரவாரமடங்கி கொஞ்சநேரம் மௌனமானாள். அவளுடைய அமைதி செல்வகுமாருக்கு ஆச்சர்யம் தந்தது.

“என்னம்மா, இருந்திருந்தாப்ல காம் ஆய்ட்ட?”

“அந்தப் பேர் அங்க்கிள். அந்தப் பேரைக் கேட்டதும் நா ஸ்ட்டன்னாயிட்டேன்.”

“எது, செல்வாவா? ஏன், எனக்கு மேட்ச் ஆகலியா?”

“அதில்ல அங்க்கிள். ஜெயராஜ். எனக்கு ரொம்பப் பிடித்தமான பெயர்.”

“ஏன் அது மனசுக்குப் பிடித்தமான பெயர்னு நா தெரிஞ்சுக்கலாமா மகளே?”

சிவாஜி கணேசன் தோரணையில் கனமான குரலில் வந்த கேள்விக்கு சரோ நாணத்தால் மெலிந்த குரலில் பதில் சொன்னாள்.

“மனசுக்குப் பிடித்தமான நபரோட பெயரும் மனசுக்குப் பிடித்தமாத்தானே இருக்கும்...”

“மனசுக்குப் பிடித்தமான நபரா!?”

செல்வகுமார் குரலை உயர்த்திச் சிரித்தார்.

“அப்படியொரு கதை இருக்காம்மா... கொயட் இன்ட்ரஸ்ட்டிங்! சொல்லு சொல்லு...”

உதட்டருகே விரலைக் காட்டி அவர் குரலை எச்சரித்தாள் சரோ.

“ஷ்ஷ்ஷ்... மம்மி. மெதுவாய் பேசுங்க. மம்மிக்கித் தெரியாது.”

அவளுடைய கண்டிப்புக்குக் கட்டுப்பட்டுக் குரலைத் தணித்தார் செல்வகுமார்.

“உன் மம்மிக்கிக் கூடச் சொல்லாத விஷயத்தை எங்கிட்ட சொல்லணும்னு ஒனக்கு எப்படீம்மா தோணிச்சு?”

“ஏன்னா, ஒங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஐ லவ் யூ அங்க்கிள்.”

“அப்ப அந்த ஜெயராஜ்?”

வாய் நிறைய சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டார்.

“ச்சீ... அங்க்கிள்! அது வேற லவ். இது வேற லவ்... அங்க்கிள் யூ ஆர் ரியல்லி நாட்டி!”

சிணுங்கலாய்க் கோபித்துக் கொண்டவளை செல்வகுமார் திரும்பவும் உசுப்பிவிட்டார்.

“தாங்க்ஸ் ஃபார் தி காம்பளிமெண்ட்ஸ், சைல்ட். சரி மேல சொல்லு, மேல சொல்லு.”

“அவர்... வந்து... அங்க்கிள்...”

“ம்ம்... சொல்லு.”

“சிகப்பா... அழகா... மன்மதன் மாதிரி இருப்பாரு.”

“கல்யாணம் வரைக்கும் எல்லாக் காதலனும் மன்மதன் மாதிரிதான் இருப்பான்.”

“ஆனா அங்க்கிள்...”

“ஆனா?”

“ஒரு நாலஞ்சுநாளா ஜே என்னோட பேசறதே இல்ல தெரியுமா...”

“ஐயையோ, ஏம்மா?”

“ஒண்ணுமில்ல அங்கிள், என் க்ளாஸ்மேட் ஒருத்தன் ஸ்கூட்டர்ல லிஃப்ட் குடுத்தான் அங்க்கிள், அவன் கூட நா போனது தப்பாம் அங்க்கிள். இத்தனைக்கும் நா அவன் மேல படாம விலகித்தான் உக்கார்ந்திருந்தேன் அங்க்கிள். யாரோ போய் ஜே கிட்ட வத்தி வச்சிருக்காங்க. பொறாமை புடிச்சவங்க. எனக்கு மனசே சரியில்ல அங்க்கிள், அதான் இன்னிக்கி நா காலேஜ்க்குப் போகல.”

“அடடே... உன் ஜேக்கு மெச்யூரிட்டி பத்தாதும்மா. உன் க்ளாஸ்மேட்தானே, சின்னப் பையனாத்தான் இருப்பான்...”

“என் க்ளாஸ்மேட் இல்ல அங்க்கிள், ஜே எனக்கு ஸீனியர். ஃபைனல் இயராக்கும்!”

“இஸ் இட்? பின்ன எப்படி நீங்க ஃப்ரண்ட்ஸ் ஆனீங்க?”

“ஃப்ரண்ட்ஸ் இல்ல அங்க்கிள், நாங்க லவர்ஸ்.”

செல்வகுமாருக்கு மனசுவிட்டு பலமாய்ச் சிரிக்க வேண்டுமென்று பேராசை எழுந்தது. அடக்கிக் கொண்டார்.

“ஒக்கே, ஒக்கே, தப்பா சொல்லிட்டேன்... சொல்லு, நீங்க எப்படிம்மா லவர்ஸ் ஆனீங்க?”

“அதாவது அங்க்கிள், ஜே எங்க காலேஜ் ஹீரோவாச்சா, காலேஜ் யூனியன் சேர்மன் எலக்ஷன்க்கு அவர் நின்னாரா, நாச்சுரலி பொண்ணுங்க எல்லாம் அவருக்குத்தான் ஸப்போர்ட்டா, அவர் இனிஷியல் ஜே இல்லியா, அதைப் பேருக்குப் பின்னாடி போட்டு ஜெயராஜ் ஜே ஆக்கினோமா, ஜெயராஜ் ஜே... ஜெயராஜ் ஜே.. . ன்னு கூப்பாடு போட்டுக்கிட்டு நாங்க க்ளாஸ் க்ளாஸா போனோமா, எங்க கும்பலுக்கு நான்தான் லீடராச்சா, அதனால அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா... கொஞ்சங் கொஞ்சமா...”

வெட்கத்தில் சரோ தலை கவிழ்ந்து கொண்டதால் செல்வகுமார் முகத்தில் நிகழ்ந்த மாற்றங்களைக் கவனிக்கவில்லை.

“எந்தக் காலேஜ்மா நீ?” என்று ஈனஸ்வரத்தில் கேட்டு வைத்தார். கல்லூரியின் பெயரை அவள் சொன்னதும், தலைக்கு மேலாய் போக்குக் காட்டிக் கொண்டிருந்த இடி, தலையில் இறங்கியேவிட்டது.

கடைசி கடைசியாய் ஒரு அற்ப ஆசை, குரலைச் சரி பண்ணிக் கொண்டு மிருதுவாய்க் கேட்டார்.

“அவன்... அவன் அட்ரஸ் தெரியுமாம்மா?”

“அட்ரஸ் சரியாய்த் தெரியாது அங்க்கிள். ஆனா, அண்ணா நகர்லயிருந்து வருவார்னு மட்டும் தெரியும்.”

சிதைந்து போனார். நெஞ்சத்தின் கூறுகளெல்லாம் சிதறிவிடாமல் இணைத்துப் பற்றிக் கொண்ட மாதிரி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ஸோஃபாவில் சரிந்தபோது மெல்ல தலை நிமிர்ந்தாள் சரோ.

“அங்க்கிள், அங்க்கிள், என்ன ஆச்சு உங்களுக்கு?”

“ஒண்ணுமில்லம்மா, ஐ’ம் ஆல்ரைட். காலைல ப்ரேக்ஃபாஸ்ட் சாப்பிடலியா, பசி மயக்கம். வேறே ஒண்ணுமில்ல.”

“ஏன் அங்க்கிள் பிரேக்பாஸ்ட் சாப்பிடல, வீட்ல கோபமா?”

“நா கோவிச்சுக்கிறதுக்கு யார்மா இருக்கா, இனி கர்த்தரைத்தான் கோவிச்சுக்கணும்.”

“மம்மீ, லஞ்ச் ரெடியா? அங்கிள்க்கு ரொம்பப் பசிக்குதாம். வடை சுட்டாச்சா? நா வந்து ஹெல்ப் பண்ணனுமா?”

சரோ சமையலறைப்பக்கம் திரும்பிக் கூவிய நேரம், அவளறியாமல் கண்களில் ஈரத்தைக் கைக்குட்டையில் ஒற்றியெடுத்தார் செல்வகுமார்.

“நீ ஒண்ணும் இங்க வந்து குட்டையக் குழப்ப வேணாம், அங்கேயே இரு. இதோ அஞ்சு நிமிஷத்துல ரெடியாயிரும்னு அவங்கட்ட சொல்லு.”

சமையலறையிலிருந்து வந்த பதில் இவருடைய காதில் விழுந்தாலும், சரோ அதை ரிலே செய்தாள்.

“அஞ்சு நிமிஷம் ஆகுமாம் அங்க்கிள். அதுவரைக்கும் நாம ஏதாவது பேசிட்டிருந்துதான் ஆகணும்.

“எல்லாந்தான் முடிஞ்சு போச்சேம்மா இனி என்ன பேச!”

மெல்லியதாய் ஒரு பெருமூச்சு. தொடர்ந்து ஒரு முணுமுணுப்பு… “எல்லாமே முடிஞ்சு போச்சு…”

“எது அங்க்கிள் முடிஞ்சு போச்சுங்கறீங்க?”

“உன்னோட விவகாரத்தச் சொன்னேம்மா. நீ அவனை விரும்பற, அவன் உன்னை விரும்பறான்; அவ்வளவுதானே, விஷயந்தான் முடிஞ்சி போச்சே. இனி கல்யாணந்தானே…”

“அதுல ஒரு சின்ன சிக்கல் இருக்கு அங்க்கிள்”

“?”

“அவர் க்றிஸ்ட்டின் அங்க்கிள். மம்மி ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு தைரியந்தான். ஆனா ஜே வீட்ல என்ன சொல்வாங்களோன்னு தான் ஒரே பயம்மா இருக்கு.”

“ஒண்ணும் சொல்ல மாட்டாங்க.”

“அங்க்கிள்?”

“அவங்க வீட்ல நிச்சயம் சம்மதிப்பாங்கங்கறேன்.”

கொஞ்ச நேரத்துக்கு சரோவின் முகத்தை ஆக்கிரமித்திருந்த ஒன்றிரண்டு சோக ரேகைகளும் திடீரென்று கழண்டு கொண்டன.

“எப்படி அங்க்கிள் அவ்வளவு நிச்சயமாச் சொல்றீங்க, அவங்களை உங்களுக்குத் தெரியுமா?”

“அப்படித்தான் வச்சிக்கோயேன். நீ ஏன் கவலப்படற, கம்னு இரு. இந்தக் கல்யாணத்தை ‘ஜாம் ஜாம்’னு நடத்தி வைக்க வேண்டியது என் பொறுப்பு.”

“ரியலி! ஹௌ நைஸ்!”

தொடர்ந்து ஏதோ சொல்ல யத்தனித்தவளை செல்வகுமார் அமர்த்தினார்.

“ஆனா, காலேஜ் படிப்புப் படிச்சாலும் நீ இன்னும் சின்னப் பொண்ணுதான். காலம் ரொம்ப மாறிப் போச்சு. உங்க மம்மி பதினேழு வயசுல கல்யாணம் பண்ணிக்கிட்ட மாதிரி நீ பண்ணிக்க முடியாது. அது நல்லதும் இல்ல. அவனும் படிப்பை முடிச்சிட்டு வாழ்க்கையில காலூன்றணும். ஸோ, அட்லீஸ்ட் இன்னும் நாலு வருஷமாவது நீங்க ரெண்டு பேரும் வெய்ட் பண்ண வேண்டியிருக்கும். நாலு வருஷம் பொறுமையாயிருங்க. அப்புறம் என் செலவுல உங்களுக்குத் தடபுடலா கல்யாணம் பண்ணி வக்கிறேன். நீ மத்த விஷயங்களை மறந்துட்டு நாளையிலிருந்து ஒழுங்காக் காலேஜ்க்குப் போ.”

சரோ எழுந்து அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

“ஓ மை ஸ்வீட் அங்க்கிள்! யூ ஆர் ரியலி கிரேட்! ஐ லவ் யூ அங்க்கிள். ஐ ரியலி லவ் யூ!”

அவருடைய கன்னத்தில் அழுத்தமாய் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டுத்தான் விடுவித்தாள்.

செல்வகுமார் விடுதலை பெறவும் ஹாலுக்குள் சாவித்திரி பிரவேசிக்கவும் சரியாயிருந்தது.

“லஞ்ச் ரெடி. வாங்க.”

டைனிங் டேபிளில் பரிமாறும் ஒலியைத் தவிர வேறு ஓசையில்லை. மூணு பேரும் வேறு வேறு மனநிலைகளில்.

மௌனத்தை ஊடுருவி, இருந்திருந்தாற்போல ‘களுக்’கென்று ஒரு வினாடிச் சிரிப்பு.

“என்னடி உனக்குள்ளேயே சிரிச்சுக்கறே? என்ன ஆச்சு?”

“ஒண்ணுமில்ல மம்மி… நா போனப்புறம் அங்க்கிள் சொல்லுவாங்க.”

குறும்பு விழிகளால் செல்வகுமாரை ஒரு வினாடி தொட்டாள்.

“எங்க போற நீ?”

“ஃபோன் பண்ணத்தான். லைன் பாதியில கட் ஆயிருச்சில்ல மம்மி. அதைக் கம்ப்ளீட் பண்ண வேண்டாமா? இல்லாட்டி புவனா ஃபீல் பண்ணுவால்ல? நா வர்ற வரைக்கும் இருப்பீங்கதானே அங்க்கிள்?”

“ம்? மறுபடியும் லைன் கட் ஆயிருச்சுன்னா பரவாயில்ல. என் நேரத்துக்கு அது கட் ஆகாமப் போயிருச்சுன்னா, நீ எப்பப் பேசி முடிச்சிட்டு என்னிக்கு வருவியோ நா கௌம்பணுமேம்மா.”

“போங்க அங்க்கிள், கிண்டல் பண்றீங்க. நெக்ஸ்ட் எப்ப வருவீங்க அங்க்கிள்?”

“வருவேம்மா. வரும்போது சொல்றேன்.”

“அடிக்கடி வரணும் அங்க்கிள்… பத்தாவது எழுத்தை மறந்துராதீங்க. வரேன் அங்க்கிள், ஸீ யூ.”

“ஸீ யூ சரோ.”

சரோ போன பின்னால் இவர்கள் ரெண்டு பேரும் எதிரெதிரே உட்கார்ந்தார்கள். சாவித்திரியின் கண்களில் ஆர்வம்.

“என்னங்க அவ என்னமோ, புதிர் மாதிரி போட்டுட்டுப் போறா? பத்தாவது எழுத்துங்கறா, நீங்க சொல்லுவீங்கங்கறா, ஒண்ணுமே புரியல?”

“சொல்றேன் சாவித்ரி. அது உன்னையும் என்னையும் பாதிக்கிற விஷயம். நீ அதை எப்படி எடுத்துக்குவேன்னு தெரியல…”

“அவளோட புதிரை விட உங்க சஸ்பென்ஸ் ரொம்ப பயங்கரமாயிருக்குங்க. தாங்காது. சீக்கிரம் உடைங்க.”

“எங்கே நீ உடைஞ்சிரப் போறியோன்னு பயமாயிருக்கு சாவித்ரி… சரோ…சரோ இஸ் இன் லவ்.”

“நெனச்சேன். இத்தினியூண்டு இருந்துக்கிட்டு இது வர்ற வரத்தப் பாருங்களேன், லவ் பண்ற வயசா இது!”

“ஏன், இந்த வயசுல நீங்க லவ் பண்ணலியா?”

“என்ன திடீர்னு மரியாதை எக்கச்சக்கமாகுது!”

உங்களை மரியாதை குடுத்துப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போச்சு சாவித்ரி.”

“புரியலியே...”

“புரிய வக்கறேன். சரோ லவ் பண்ற பையனைப் பத்திச் சொன்னா. பையன் க்றிஸ்ட்டினாம், அண்ணாநகர்க்காரனாம், அவங்க காலேஜ்ல யூனியன் சேர்மனாம். பேர் வந்து ஜெயராஜ் ஜேன்னு சொன்னா. அதாவது, ஜே.ஜெயராஜ். அதாவது ஜெயக்குமார் ஜெயராஜ். அதாவது நம்ம ஜெயா. நம்ம மகன்... ஐ மீன்... என் மகன். உங்களுக்கு வருங்கால மருமகன்.”

செல்வகுமார் சொன்னதை சாவித்திரி பிரமை பிடித்தவள் போல முகம் வெளுக்கக் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு, தனக்கு நேர்ந்திருக்கிற பேரிழப்பின் அழுத்தம் உறைக்க ஆரம்பிக்கவும் வேதனை நெஞ்சைப்பிழிய, திரவ வடிவத்தில் துயரம் கண்களில் வெளிப்பட்டது. புடவைத்தலைப்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பினாள்.

அந்தக்காட்சி செல்வகுமாரின் கண்களில் திரும்பவும் கசிவு ஏற்படக் காரணமாயிற்று.

“உங்களைத் தொட்டுத் தேத்தறதுக்குத் தகுதியில்லாதவனாப் போயிட்டேனே சாவித்ரி” என்றபோது அவர் குரல் உடைந்தது.

தொடுவதற்குத் தகுதி வந்திருந்தால், தேற்றுவதற்கு அவசியமே ஏற்பட்டிருக்காதே என்று உணர்ந்தபோது ஒரு விரக்திச் சிரிப்பு.

சாவித்திரியின் தேம்பல் கொஞ்சங் கொஞ்சமாய்த் தேய்ந்தது. பிறகு, புடவைத் தலைப்பில் கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்தாள்.

“என்னங்க ஒண்ணுமே பேசாம உக்காந்திருக்கீங்க.”

“நீங்க அழுது முடியக் காத்திருக்கேன்.”

“அவ்வளவுதாங்க. கண்ணீர் ஸ்டாக் தீந்து போச்சு.”

சாவித்திரியைப் பார்க்கப் பாவமாயிருந்தது. அவளுடைய மென்மையான பெண்மனசில் வசந்தக்கனவுகளை வளர்த்துவிட்டு, இப்போது சுவடே தெரியாமல் எல்லாக் கனவுகளையும் கலைத்துப்போட, தானே கருவியாகிப் போனது செல்வகுமாருக்கு ரொம்ப வேதனையளித்தது.

இனி என்ன செய்வது? யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பக்குவப்படுவதையன்றிச் செய்ய ஒன்றுமில்லை.

அதை இவளுக்கு உணர்த்த வேண்டும்.

உணர்த்தத் தலைப்பட்டார்.

“கண்ணீர் ஸ்டாக் இல்லைங்கறதுக்காக அழுகையை நிறுத்திக்கிறதுன்னு இல்லாம, நிஜத்தை ஏத்துக்கிட்டு காம்ப்ரமைஸ் பண்ணிக்கிறதுதான் சரியான முடிவாயிருக்கும்னு நெனைக்கிறேன் சாவித்ரி. நீங்க தலையைக் கவிழ்ந்துகிட்டு அழுதுட்டிருந்தப்ப நா கொஞ்சம் யோசனை பண்ணிப்பாத்தேன். சில உண்மைகள் தட்டுப்பட்டுச்சு. நீங்களும் சாவகாசமா சிந்திச்சுப் பாத்தா உங்களுக்கும் இதே விஷயங்கள் தோணலாம்... அதாவது சாவித்ரி, ஓப்பனா சொல்லப்போனா நம்ம ரெண்டு பேருக்கும் டைம் முடிஞ்சி போச்சு. மொதல்ல இந்த யதார்த்தத்தை நாம ஏத்துக்கப் பழகிக்கணும் சாவித்ரி. இனி இருக்கற நம்ம மீதி வாழ்க்கையை நம்ம குழந்தைங்களுக்காகத்தான் நாம வாழணும். நீங்க ரொம்பச் சின்ன வயசிலேயே விதவையாய்ட்டீங்க. நானும் இளைமையிலே தனியாளா ஆய்ட்டேன். கர்த்தரோட சித்தம், நம்ம ரெண்டு பேரோட டைமும் அகாலமா முடிஞ்சு போச்சு. முடிஞ்சு போய் ரொம்ப காலம் கழிச்சு ஆண்டவன்ட்ட எக்ஸ்ட்டன்ஷன் கேட்டுப் பார்த்தோம், கிடைக்கல. மேலோட்டமா பாக்கறப்ப, நா பேப்பர்ல விளம்பரம் குடுத்தது, அதுக்கு நீங்க ரெஸ்பாண்ட் பண்ணினது, நாம கடிதங்களையும், ஃபோட்டோவும் பரிமாறிக்கிட்டது, ஒருத்தரையொருத்தர் நேர்ல பாக்காமலே நேசிக்க ஆரம்பிச்சது, ஒரு வருஷமா கரஸ்ப்பாண்டன்ஸ் வச்சிக்கிட்டது, வருங்கால கற்பனைகளை வளத்துக்கிட்டது, எல்லாமே சரின்னு படும். ஆனா, நம்ம சுயநலத்துல நாம ஒரு அடிப்படையான நிஜத்தை நிராகரிச்சுட்டோம். நம்ம குழந்தைங்க காதலிக்கிற வயசுக்கு வளந்துட்டாங்கங்கறதை மறந்துட்டு நாமே காதலிச்சுட்டு இருந்திருக்கோம் சாவித்ரி, என்ன வேடிக்கை பாத்தீங்களா! ஒரு வருஷமா வளந்து வந்த உறவு இன்னிக்கி க்ளைமாக்ஸை எட்டும்னு நாம ஆசையாயிருக்க, திடீர்னு அது ஆன்ட்டி க்ளைமாக்ஸா ஆய்ப்போனது ரொம்ப வருத்தமான விஷயந்தான். ஆனா இந்த வருத்தத்தை சந்தோஷமா கன்வர்ட் பண்ணிக்கிறது நம்ம கையிலதான் இருக்கு சாவித்ரி. முடிஞ்சு போன காலங்களை ரீவைண்ட் பண்ணித் திரும்பவும் வாழ முடியாது. ஸோ, லெட் அஸ் லுக் அஹெட். இந்தத் தோல்வியை நாம ஸ்ப்போர்ட்டிவ்வா எடுத்துக்கிட்டு வெற்றியை நம்ம வாரிசுகளுக்கு விட்டுக்கொடுப்போம். அவங்களுக்கு சந்தோஷமான எதிர்காலத்தை அமைச்சுக் குடுப்போம்.”

செல்வகுமார் நீளமாய்ப் பேசிவிட்டு சாவித்திரி ஏதாவது சொல்லக் காத்திருந்தார். வாசல் வரை வந்த வசந்தம் எதிர்பாராத வகையில் புறமுதுகு காட்டி ஓடிவிட்ட கொடுமை பழகிப் போக அவளுக்கு நேரம் பிடித்தது.

“என்ன மேடம், இப்ப நா பேசறேன், நீங்க ரிசர்வ்ட் ஆய்ட்டீங்க!”

சாவித்திரியிடமிருந்து ஆற்றாமை ஒரு பெருமூச்சில் வெளிப்பட்டது. விரக்தியோடு சலித்துக்கொண்டாள்.

“என்ன ரிஸர்வ்ட் போங்க. என்னையே நான் உங்களுக்காக ரிஸர்வ் பண்ணி வச்சிருந்தேன். இப்ப திரும்பவும் அன் ரிசர்வ்ட் ஆய்ட்டேன்.”

“என்ன செய்யறது சாவித்ரி, நம்ம குழந்தைங்க வெய்ட்டிங் லிஸ்ட்ல இருக்காங்களே, அவங்களுக்காக நாம விட்டுக்குடுக்க வேண்டிய கடமை இருக்கே! டேக் இட் ஈஸி சாவித்ரி, நாம விரும்பற மாதிரியே இந்த உலகத்துல எல்லாம் நடக்கணும்னு நியதி ஒண்ணுமில்ல. அப்படியொரு நியதி இருந்திருந்தா, இன்னி வரைக்கும் நா

ரோஸியோடவும் நீங்க மிஸ்டர் கணேசலிங்கத்தோடவும் சந்தோஷமா வாழ்ந்துட்டிருந்திருப்போம்."

"சுந்தரலிங்கம்."

"ஐம் ஸாரி. சுந்தரலிங்கம்."

ரெண்டு பேரும் சிரிக்க முயன்றார்கள்.

"தட்ஸ் இட். நாம ரெண்டு பேரும் திரும்ப சிரிக்கப் பழகிக்கணும் சாவித்ரி. இன்னும் நாலஞ்சு வருஷங்கள். அந்த நாலஞ்சு வருஷத்துல நம்மோட சுயநலங்கள் சுத்தமா மரத்துப் போகும். நாம பக்குவப்பட்டுருவோம். அப்புறம் ஜெயாவுக்கும் சரோவுக்கும் கல்யாணம் ஆயிருச்சுன்னா, நீங்களும் சரோவும் என் வீட்டுக்கு வந்துருவீங்க. நாம காலாகாலத்துக்கும் ஒரே வீட்ல இருக்கலாம். ஒரேயொரு வித்யாசந்தான்; தம்பதியா சேந்து வாழ நினைச்சோம். இனி சம்மந்தியா சேந்து வாழப் போறோம்."

மேலே பேச முடியாமல் செல்வகுமார் நிறுத்தினார். திரும்பவும் ஒரு சோகம் சூழும் சூழ்நிலை.

சாவித்திரி ஏக்கத்தோடு கேட்டாள்.

"நீங்க இங்க வந்து போய்ட்டு இருப்பீங்க இல்லியா?"

"வருவேன் சாவித்ரி. என் சம்மந்தியப் பாக்க வருவேன். என் மருமகளைப் பாக்க வருவேன்."

தீர்க்கமாய்ச் சொன்ன செல்வகுமாருக்கு திடீரென்று ஒரு பொறி தட்டியது.

"இப்பத்தான் ஞாபகம் வருது சாவித்ரி, காலைல சரோவை மொத மொதலாய் பாத்தப்ப அந்த முகத்தை எங்கேயோ பாத்த மாதிரியிருந்தது. போன மாசம் ஒருநாள் ஜெயாவோட புஸ்தகத்துலயிருந்து ஃபோட்டோ ஒண்ணு கீழே விழுந்தது... 'யாரோ ஃப்ரண்டோட ஸிஸ்டர், ஸீரியஸ்ஸா எடுத்துக்காதீங்க டாடீ'ன்னு மழுப்பினான். இப்ப நெனச்சுப் பாத்தா, அந்த ஃபோட்டோல இருந்த முகம் சரோவோடதுன்னு ஞாபகம் வருது. நல்ல ஜோடி. தே வில் மேக் ய நைஸ் பேய்ர். ஓக்கே சாவித்ரி, பேசிட்டேயிருந்தா திரும்பவும் நாம ஸென்டிமென்ட்டலா ஆனாலும் ஆயிருவோம். நா கிளம்பறேம்மா."

செல்வகுமார் எழுந்து கொண்டார். சாவித்திரியின் பார்வையை சந்திப்பதைத் தவிர்த்தபடியே வெளியேறினார்.

பால்கனியிலிருந்து சாவித்திரி, பார்வையிலிருந்து கார் மறையும்வரை அல்லது கண்ணீர் அதை மறைக்கும்வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

காரில், செல்வகுமாரின் மனசு அன்றைய தினத்தின் எதிர்பார்ப்புகளையும். திடீர்த் திருப்பத்தையும். எதிர்பாராத முடிவையும் அசைபோட்டுக் கொண்டிருந்தது. துயரத் திரையணிந்த சாவித்திரியின் எழில் வதனத்தின் பிம்பம் கண்முன் தோன்றினபோது

லேசாய் நெஞ்சில் வலி. மனசைத் திடப்படுத்திக் கொண்டு, கண்ணாடிக்கு மேலேயிருந்த தேவகுமாரனின் படத்தில் பார்வையைப் பதித்தார். உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"...சாவித்ரியோட பொண்ணும் ரோஸியோட மகனும் ரொம்ப காலத்துக்கு சேந்து சந்தோஷமா வாழணும். எல்லாம் நல்லபடியா முடியணும். கர்த்தரே..."

- ஆனந்த விகடன், 27.06.1993.

# சொர்க்கம் பக்கத்தில்

ஞாயிற்றுக்கிழமைக் காலையின் சுதந்திரத்துக்கு வேட்டு வைக்கிற மாதிரி தடதடவென்று கதவைத் தட்டுகிற சத்தம். தூக்கங் கலைந்து ரெங்கராஜன் எரிச்சலோடு எழுந்து கொடியில் துவண்டு கிடந்த லுங்கியை எடுத்து உடுத்திக் கொண்டு கதவைத் திறந்து பார்த்தால், வெளியே ஹரி.

"தூங்கிட்டிருந்தியா, ஸாரிடா. டிஸ்டர்ப் பண்ணிட்டேனோ?"

"ம்ம்... ஹெல்மட்டக் கழட்டிட்டு உள்ள வந்து தொலை."

ஹரி, அந்த பிரம்மச்சாரிகள் அறைக்குள் பிரவேசித்து, ஹெல்மட்டைக் கழட்டிப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்தான். கைகளால் தாடையைத் தாங்கிக் கொண்டு ரெங்கராஜன் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். அரைத் தூக்கத்தில்.

"உன் ரூம் மேட்ஸ் ரெண்டு பயல்களும் எங்கடா ஒழிஞ்சு போனானுங்க, ஒர்த்தனையும் காணோம்."

"....."

"ரெங்ஸ், உக்காந்துட்டே தூங்கறியா?"

"ம்? என்ன கேட்ட?"

"ஆனந்தனையும் குப்தாவையும் காணல?"

"தெரியாத மாதிரி கேக்கற? அவனுங்க சனிக்கிழமை சாயங்காலமே சிட்டாப் பறந்துருவானுங்க, அவனவன் ஊரப் பாத்து! நாளக்கிக் காத்தால ஃபஸ்ட் பஸ் புடிச்சி வந்து சேருவானுங்க. அவனுங்களைப் பாக்கத்தான் வந்தியா?"

"ஒங்க மூணு பேரையும்."

"என்ன விஷயம்."

"ஒண்ணுமில்ல மச்சி, நேத்து ஈவ்னிங் பீச்சுக்குப் போயிந்தேன்."

"இதான் விஷயமா? பாவி! இதச் சொல்லத்தானா ஞாயித்துக்கிழமை காலங்காத்தால ஒம்பதே முக்காலுக்கு வந்து என் தூக்கத்தக் கெடுத்த?"

"பீச்சுக்குப் போனது இல்லடா விஷயம் அங்க சுண்டல் வாங்கித் தின்னேன். இரு இரு, கோவப்படாதே. மெய்ன் பாய்ன்ட்டுக்கு வர்றேன். இந்தப் பேப்பரப் பாரு, சுண்டல் மடிச்சு வந்த பேப்பர்."

அவனிடமிருந்த அச்சுக் காகிதத்தைப் பிடுங்கி, வேண்டா வெறுப்போடு நோட்டம் விட்டான் ரெங்கராஜன்.

“பழைய குமுதத்திலிருந்து கிழிச்ச பேப்பர். இதுக்கென்ன இப்ப?”

“கரெக்ட். பக்கத்துக்குப் பக்கம் பத்திரிகையோட பேரை இப்ப அச்சடிக்கிறது எவ்வளவு யூஸ்ஃபுல்லா இருக்கு பாத்தியா?”

“சட்டு புட்டுன்னு விஷயத்துக்கு வாயேன்”

“இரு மச்சி. அவசரப்படாத. அந்த மேட்டரப் படிச்சுப் பாத்தியா?”

“ராத்திரிப் பொழுதுன்னு ஒரு பக்கக் கதை. ஸெக்ஸியா ஒரு படம் வேற. அது போதுமே ஒனக்கு.”

“அதில்லடா ராஸ்க்கல். அடுத்த பக்கத்தப் பாரு.”

“ஆவிகளை அழைப்போம். செத்தவங்க கூட பேசற கட்டுரை. இந்த இஸ்யூ எனக்கு நல்லா ஞாபகம் இருக்கே! நக்மா அட்டைப்படம்!”

“அதெப்படி அவ்வளோ கரெக்ட்டாச் சொல்ற.”

“அந்த நக்மா அட்டையைக் கழட்டி ஆனந்தன் பீரோக்குள்ள ஒட்டி வச்சிருக்கானே. டெய்லி காலைல அந்த பீரோவத் தொறந்து வச்சிக்கிட்டு அஞ்சு நிமிஷம் ஜெபம் பண்ணுவான்.”

“டேய் டேய், அப்ப அந்த இஸ்யூ இங்க எங்கயாவது கெடக்குமேடா?”

“அதெல்லாம் அட்டையக் கிழிச்சிக்கிட்டு அப்பவே கடையில போட்டாச்சு.”

“அடப்பாவிகளா! சரி, ஏதாவது பழைய புஸ்தகக் கடையில கெடைக்கிறதான்னு தேடுவோம். தேதி ஞாபகமிருக்கா ரெங்ஸ்?”

“அந்த பீரோவத் தொறந்து பார். நக்மா அட்டையில தேதி இருக்கும்.”

திறந்து பார்த்து ஜூலை இருவத்தொண்ணு என்றான்.

“மச்சி, சட்டைய மாட்டிக்கிட்டுக் கிளம்பு. மெட்ராஸ்ல இருக்கற பழைய புஸ்தகக் கடையெல்லாம் அலசிருவோம் அலசி.”

“இன்னிக்கி ஞாயிற்றுக்கிழமை மாமு, கடையெல்லாம் அடச்சிருப்பான். அது சரி, அந்தப் பழைய குமுதத்துக்கு ஏன் கெடந்து இப்படி அலையுற?”

“அந்த ஆவிக்கட்டுரையை முழுசாப் படிக்கணும் மச்சி. படிச்சி, அதே மாதிரி செஞ்சு பார்க்கணும். செத்துப் போனவங்களோட பேசறது எவ்வளோ த்ரில்லிங்கா இருக்கும்! எவ்வளோ மர்மமான விஷயங்களையெல்லாம் தெரிஞ்சிக்க முடியும்! சரி, சோம்பேறி நீ

வராட்டி போ. நா எப்படியாச்சும் அந்த நக்மா குமுதத்தத் தேடிப்புடிச்சு வாங்கிர்றேன். நீ ஒண்ணே ஒண்ணு செய். ஆனந்த்கிட்டயும் குப்தாட்டயும் சொல்லு இந்த வீக் எண்ட்க்கு ஊருக்குப் போகாதீங்கடான்னு. கமிங் ஸண்டே நாம இதே ரூம்ல ஆவிகளை வரவழைச்சுப் பேசப் போறோம். மறந்துராதே, நா போய்ட்டு வர்றேன்."

ஹெல்மட்டைப் பற்றிக்கொண்டு சிட்டாய்ப் பறந்து போனான் ஹரி, நக்மாவைத் தேடி.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் ஆனந்தனும் குப்தாவும் ஹரியைக் கரித்துக் கொட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"மணி மூணேகாலாச்சு. ரெண்டு மணிக்கி வர்றேன்னு சொன்ன பயலை இன்னும் காணல. இந்த ஆவி மீட்டிங்கை முடிச்சிட்டு சினிமாவுக்கு வேற போயாகணும்."

ஆனந்தனின் கோபத்துக்கு குப்தா ஒரு பிற்சேர்க்கையைச் சேர்த்தான்.

"இந்த ரெங்ஸையும் சேத்து ஒதைக்கணும். இவன்தான் அவனுக்கு 'ஆமாஞ்சாமி' போட்டு இந்த ஆவி மீட்டிங்கை ஏற்பாடு செஞ்சவன்."

"ஏண்டா ரெண்டு பேரும் 'ஆவி ஆவி'ன்னு இப்படிப் பேயா அலையறீங்க!"

ரெண்டு பேரையும் ரெங்கராஜன் சமனப்படுத்தினான். "கொஞ்ச நேரம் பொறுமையா இருங்கடாப்பா. எப்படியும் வந்துருவான். இதோ பைக் சத்தம் கேக்குது பார். ஹரி வண்டிதான். சொன்னேன்ல, வந்துட்டான்!"

ரெங்கராஜன் சொல்லி வாயை மூடவும், வேகமாய் அறைக்குள் பிரசன்னமானான் ஹரி. ஹெல்மட் தலையோடும் கூப்பிய கரங்களோடும்.

"யாரும் திட்டாதீங்கடா, ரொம்ப ரொம்ப ஸாரிடா. நம்ம வீட்டு வாண்டுங்க ஹெல்மட்டை எடுத்து எங்கேயோ ஒளிச்சு வச்சிருச்சிங்க. அதத் துப்பறிஞ்சுக் கண்டுபிடிச்சு மாட்டிக்கிட்டு கெளம்பறத்துக்கு லேட்டாயிருச்சு."

ஆனந்தன் வெடித்தான்:

"உன் ஹெல்மட் மேல இடி விழ! அதத் தலைமுழுகிட்டு நீ மட்டும் காலாகாலத்துல வந்து சேர வேண்டியதுதானேடா. ஆவிகளோட பேசினத்துக்கப்புறம் நீ சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போறதா வேற ப்ராமிஸ் பண்ணியிருக்க. பாரு இப்பவே மணி மூணரை. இன்னிக்கி ஸண்டே வேற. நாம சாவகாசமாப் போனா எந்த தியேட்டர்ல டிக்கட் வச்சிக்கிட்டு நமக்காகக் காத்திருப்பான்.?"

தன் பங்குக்கு குப்தாவும் எகிறினான்.

“இப்பவாவது அதக் கழட்டித் தொலையேண்டா. எங்கக் கண்ணுல படாம அந்த பீரோ மேல தூக்கி வையி அத. ஊருலகத்துல எத்தனையோ பேர் பைக் ஓட்டறான். இவனுக்கு மட்டும் ஸ்பெஷலா ஒரு ஹெல்மட். உலகத்துல இல்லாத ஹெல்மட்!”

“அடப் போங்கடா, நீங்க ஏன் பேசமாட்டீங்க, அண்ணன் தம்பி கூட பொறந்தவங்க நீங்க. நா அப்படியா? எங்க அப்பா அம்மாவுக்கு ஒரே பிள்ளை, செல்லப்பிள்ளை. எங்கம்மா கண்டிச்சு சொல்லியிருக்காங்க, ஹெல்மட் இல்லாம வண்டிய ஸ்டார்ட் பண்ணக் கூடாதுன்னு. சரி அத வுடுங்க நாம தொழிலுக்கு வருவோம். குமுதத்துல போட்டிருக்கு, ராஜீவ்காந்தி, சந்திரபாபு, திவ்யபாரதி - இவங்களக் கூப்பிட்டுப் பேசுங்கன்னு. சமீபத்துல டி.வில மாமன் மகள், ஆடிப்பெருக்கு படங்கள்ள சந்திரபாபு காமெடி பாத்ததுலயிருந்து அவர்ட்ட பேசணும் போல இருக்கு. ஸோ, சந்திரபாபுதான் ஃபஸ்ட். என்ன சொல்றீங்க?”

“நாங்க சொல்றது இருக்கட்டும். மணி இப்பவே மூணு நாப்பது ஆச்சு. இனி நாம சந்திரபாபுவக் கூப்பிட்டு அரட்டையடிச்சு அனுப்பிச்சிட்டு அதுக்கப்புறம் சினிமாவுக்குப் போகணும்னா எங்கேயும் டிக்கட் கெடைக்காது. ஸோ, நா என்ன சொல்றேன்னா, நா போர்டை ஸெட் அப் பண்ணி வக்கிறேன். நீ விருட்னு போய் டிக்கட் புக் பண்ணிட்டு வந்துரு.”

ரெங்கராஜன் சொன்னதை ஆனந்தன் ஆமோதித்தான்.

“அதான் சரி. நாலு மணிக்கு எல்லாத் தியேட்டர்லயும் புக்கிங் கவுன்ட்டர் க்ளோஸ் பண்ணிருவான். மணி மூணு நாப்பத்திரெண்டு ஓடும்மா ஹரி!”

மவுண்ட் ரோடுல எந்த தியேட்டர்னாலும் பரவாயில்ல. இங்லிஷ் படம். ஏ படம் பாத்து வாங்கு. போஸ்டரைப் பாத்து வாங்கு. மூணு நாப்பத்தி மூணு. ஹரி அப் ஹரி!”

ஹரி பைக்கில் பறந்த பின்னால், அந்த அறைக்குள் ஆவிகளை அழைக்க ஆயத்தம் ஆரம்பமானது.

ரெங்கராஜன், ஒரு பரீட்சை அட்டையின் ஒரு பக்கத்தில் வெள்ளைத்தாளை ஒட்டினான். இடது புறத்தில் A B C D இருபத்தாறு எழுத்துக்களையும் இடைவெளிவிட்டு மூணு வரிசையாய் எழுதினான். வலது புறத்தில் பூஜ்யத்திலிருந்து ஒன்பது வரை எண்களை எழுதினான். நடுப்பகுதியில் ரெண்டு கட்டங்களை வரைந்து ஒன்றில் YES என்றும் மற்றதில் NO என்றும் எழுதினான். இந்த ரெண்டுக்கு மத்தியில் HOME என்று அமைத்தான். அந்த ”வீட்டில்”ஒரு அலுமினியப் பத்து பைசா நாணயத்தை வைத்தான்.

“இப்ப நாம ரெடி. ஆவிதான் ரெடியான்னு தெரியல. அதத் தெரிஞ்சிக்கிறது எப்படின்னு தெரியுமா?”

“சொல்லு.”

“நீங்க ரெண்டு பேரும் ஆள்காட்டி விரலை இந்தப் பத்து பைசா காய்ன் மேல வச்சு, அழுத்தாம லேசாத் தொட்டுட்டிருங்க. இப்ப இந்த ரூமுக்குள்ள சில ஆவிகள் இருக்கு. ஏதாவது ஒண்ணு நமக்கு ரெஸ்பாண்ட் பண்ணும். மொதல்ல, ‘ஸ்பிரிட், ஆர் யூ

ரெடி?’ன்னு கேக்கணும். அந்த ஆவி நம்மோட பேச ரெடியா இருந்தா, நீங்க விரலால தொட்டுட்டிருக்கிற காய்ன் நகர்ந்து ‘யெஸ்’ங்கற கட்டத்துல போய் நிக்கும். நீங்க காய்ன்லயிருந்து விரலை எடுக்கவே கூடாது. தொடர்பு விட்டுப் போகக் கூடாது. அந்த ஆவிக்கு சம்மதமில்லன்னா ‘நோ ங்’கற கட்டத்துக்குக் காய்ன் போகும். அப்ப, நாம வெய்ட் பண்ணனும். இல்லாட்டி வேற ஒரு ஆவியக் கூப்புடணும். ஆவி ‘யெஸ்’னு சொல்லுச்சுன்னா நாம மேக்கொண்டு கேள்விகள் கேக்கலாம். ‘உன் பேரென்ன, எப்ப நீ செத்துப் போனே, எப்படி செத்துப் போனே,’ இந்த மாதிரி கேக்கலாம். ஒவ்வொரு பதிலுக்கும் இந்தக் காய்ன் நகர்ந்து ஒவ்வொரு எழுத்தா, அல்லது ஒவ்வொரு நம்பரா போகும். பதில் முடிஞ்சப்புறம் காய்ன் Homeக்கு வந்துரும். எழுத்துக்களை, நம்பர்களை நாம கூட்டிப் பார்த்து பதிலைப் படிச்சிக்கிற வேண்டியதான்.”

ஆனந்தனுக்கு ஆச்சர்யம்.

“ஒனக்கெப்படிம்மா இதெல்லாம் தெரியும்? இவ்வளோ விளக்கமா குமுதத்ல போடலியே?”

“நானும் ஹரியும் நாலஞ்சு அனுபவசாலிகளைத் தேடிப்புடிச்சு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டோம். சரி, ஆவியக் கூப்புடலாமா?”

“என்ன ஆவியக் கூப்புடலாமாங்கற, ஹரி வரவேணாம்?”

“அதானே, ஹரிதானே முக்கியமான ஆவி... ஐ மீன் முக்கியமான ஆள். அவன் வந்தப்புறம் ஆரம்பிக்கலாமே. மணி என்ன ஆச்சு?”

“மூணு அம்பத்தெட்டு.”

“போய்ச் சேந்திருப்பானா?”

“சேந்திருப்பான். பிசாசு மாதிரியில்ல பறந்து போனான். என்ன படம் புக் பண்ணினானோ.”

“அவன் வர்ற வரைக்கும் ஒரு ரவுண்ட் நாக் அவுட் போடலாமா?”

“மூணு பேர் என்னடா ஆடறது. அதுவும் போக இந்த சூழ்நிலையோட புனிதத்தக் கெடுத்துரக் கூடாது. கொஞ்ச நேரம் பேசிட்டிருப்போம். ஹரி வந்துருவான். டிக்கட்தான் புக் பண்ணியிருப்பானே, நாம ஆறு மணிக்கிக் கௌம்பினாக் கூடப் போதும்.”

சின்னதாய், சன்னமாய் ஒரு அரட்டை ஆரம்பமானது, அதுக்கப்புறம் மரடோனாவுக்கு என்ன ஆச்சு என்பது பற்றி யாசிர் அரஃபாத்துக்கு நோபல் பரிசு பற்றி, செவாலியர் சிவாஜிகணேசன் பற்றி, எம்.ஆர்.ராதாவும் சந்திரபாபுவும், தங்கவேலுவும் நாகேஷும் கட்டிக்காத்த நகைச்சுவையின் தரம் இன்றைய சினிமாவில் சீரழிந்து போனது பற்றி, இடையிடையே ஹரி இன்னும் வந்து சேராதது பற்றி.

“என்னங்கடா இது, மணி அஞ்சாகப்போகுது. இந்தப் பயலை இன்னுங் காணல. வழியில வண்டி பஞ்சர் கிஞ்சர் ஆகி நிக்கிறானோ என்னமோ. இனி இவன் எப்ப வந்து,

சந்திர பாபுவக் கூப்பிட்டு நாம பேசறது எப்ப, சந்திர பாபுவக் கட் பண்ணிட்டு சினிமாவுக்குப் போறது எப்ப?"

"ஒண்ணு செய்வோம். ஹரி வந்தப்புறம் சந்திர பாபுவத் தேடிக் கண்டுபிடிப்போம். அது வரைக்கும் ஏதாவது லோக்கல் ஆவியக் கூப்புட்டுப் பேசிட்டிருப்போம். லெட் அஸ் கெட் ஸ்டார்ட்டட்."

ரெங்கராஜன் சொன்னதை மற்ற ரெண்டு பேரும் ஒப்புக் கொள்ளவும், ஆவிகளுடன் ஒரு அமர்வு ஆரம்பமானது.

ஆனந்தனுக்கு ஒரு சின்ன ஆசை. "கேள்வி கேக்கற வேலைய நா செய்றேண்டா ரெண்டு பேரும் பத்து பைசாவத் தொட்டுக்கிட்டு நில்லுங்கடா."

நின்றார்கள்.

ஆனந்தன் ஆரம்பித்தான்.

"ஸ்பிரிட் ஆர் யூ ரெடி?"

சில நிசப்தமான 'திக் திக்' விநாடிகளுக்குப் பிறகு, விரல்களுக்குக் கீழே நாணயம் ஊர்வது உணரப்பட்டது. ரெண்டு விரல்கள் தொட்டுக்கொண்டே தொடர, பத்துப் பைசா நாணயம் மெல்ல நகர்ந்து 'யெஸ்' கட்டத்துக்குள் பிரவேசித்துவிட்டுப் பிறகு வீடு வந்து சேர்ந்தது.

மூணு பேருக்கும் ஒரே பிரமிப்பு.

நம்ப முடியாத ஒரு அதிசயத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற புளகாங்கிதம். பிரமிப்பிலிருந்து முதலில் மீண்ட ரெங்கராஜன் ஆனந்தனைத் துரிதப்படுத்தினான்.

"ஆனந்தா, கேள்விகளை எடுத்துவிடு. லேட் பண்ணினா ஆவி கோவிச்சுட்டுப் போயிரும்."

ஆனந்தன் ஆவியிடம் கேட்டான்.

"நீ எப்படி செத்துப் போனே."

ரெங்கராஜன் அவன் காதைக் கடித்தான்.

"என்னடா நீ தலைகீழாக் கேக்கறே! மொதல்ல பேரையில்ல கேக்கணும்!"

"எனக்குக் கையும் ஓடல காலும் ஓடல. அதான் மாத்திக் கேட்டுட்டேன். கேள்விய வாபஸ் வாங்கிரட்டுமா?"

"வேண்டாம், ஸ்பிரிட் கன்ஃப்யூஸ் ஆயிரும். இப்படியே கீழேயிருந்து மேலே போ. அதே கேள்வியத் திருப்பிக் கேளு!"

“ஸ்பிரிட், நீ எப்படி செத்துப் போனே?”

பத்துப் பைசா மெல்ல நகர ஆரம்பித்தது. பார்வைகள் ஆர்வத்தோடு பின் தொடர்ந்தன. முதலில் நாணயம் ‘ஹெ’ச்சில் போய் நின்றது. அங்கிருந்து கிளம்பி ‘ஈ’. அப்புறம் ‘எல்’ முழுதும் சுற்றி முடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னால் கூட்டிப் படித்தால் ஹெல்மட் என்று வந்தது.

“ஹெல்மட்! அதாவது ஹெல்மட் மாட்டிக்காம ஸ்கூட்டர்ல போனதால ஆக்ஸிடென்ட்ல செத்துப்போயிருக்கார் பாவம்.”

“நம்ம ஹரி மாதிரி ஸ்ட்ரிக்ட்டா இருந்திருந்தா அநியாயமாய் போயிருக்க மாட்டார். சரி அடுத்தது.”

“ஸ்பிரிட், நீ எப்ப இறந்து போனே?”

பத்துப் பைசா நகர்ந்து எண்களுள்ள பகுதிக்குப் போயிற்று. முதலில் 3. பிறகு 5. கடைசியாய் 8.

இவர்கள் கொஞ்சம் குழம்பினார்கள்.

முன்னூத்தி அம்பத்தியெட்டு.

“கி.பி முன்னூத்தி அம்பத்தெட்டு நாளக்கி முந்தி செத்துப் போயிருக்கார்மா. அதாவது போன வருஷம்.

குப்தாவும் ஆனந்தனும் இந்த மாதிரி கிசுகிசுத்துக்கொண்டிருக்க, ரெங்கராஜனுக்கு வேறு மாதிரி ஒரு பொறி தட்டியது. அதைத் தொடர்ந்து, ஒரு விபரீதத்தை எதிர்பார்க்கிற பயம் லேசாய்த் தலை காட்டியது.

“டேய், நா நினைக்கிறேன் இது இன்னிக்கி... கொஞ்ச நேரம் முந்தி செத்துப்போன ஆளோட ஆவியாயிருக்கலாம். 3.58க்கு உயிர் போயிருக்கலாம்... ஆனந்தா, அடுத்த கேள்வியக் கேளேன்... ஆவியோட பேர்?”

“ஸ்பிரிட், உன் பேர் என்ன?” என்று ஆனந்தன் கேட்டுக்கொண்டிருந்தபோதே ரெங்கராஜனின் இதயத்துடிப்பு லேசாய் வேகமெடுத்தது.

மெல்லிசாய் அதிரும் விரல்களுக்கடியில் பத்து பைசா மெல்ல மெல்ல நகர்ந்தது.

‘ஆண்டவனே, அந்த எழுத்து வரக்கூடாதே!’ என்று ரெங்கராஜன் மனசுக்குள் ஜெபித்துக் கொண்டிருக்க, வந்ததோ அவன் பயந்து கொண்டிருந்த எழுத்துதான்.

‘ஹெச்’

ரெங்கராஜனின் வெளிறிப்போன, வியர்வை துளிர்த்த முகமும், அந்த முதல் எழுத்தும் மற்ற ரெண்டு பேருக்கும் அந்த விபரீதத்தை உணர்த்த ஆரம்பித்தன.

நாணயம் திரும்பவும் நகர்ந்தது. நிசப்தம். மயான அமைதி. இதயத்துடிப்புகள் மட்டும் இடி இடிக்கிற மாதிரி. நகர்ந்து சென்ற நாணயம் நின்ற இடம்.

‘ஏ’

இதயங்கள் துடிக்கிற ஓசை கூட இப்போது சடன் பிரேக் போட்டு நின்றுவிட்ட மாதிரி மூச்சைப் பிடித்துக் கொண்டு அடுத்த எழுத்துக்குக் காத்திருந்தார்கள்.

“ஆர்.”

மூணு முகங்கள் அந்த அறையில் பேயறைந்த மாதிரி.

கடைசியாய் மில்லி மீட்டர் மில்லி மீட்டராய் நாணயம் நகர்ந்து ‘ஐ’ எழுத்தில் நின்றவுடன் ஏக காலத்தில் மூணு பேரும் அலறினார்கள்.

“ஹரீ!”

பீரோவின் மேலே உட்கார்ந்திருந்தது ஹரியின் ஹெல்மட், அநாதையாய்.

-குமுதம், 22.12.1994

(ஹெல்மட்)

# வீடு பேறு

“புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே...”

டி.எம்.சௌந்தரராஜனின் கம்பீரமான குரல் இனிமையாய் இசைத்ததைக் கண்களை மூடியபடி ஸோஃபாவில் சரிந்து ரசித்துக் கொண்டிருந்தபோது இடைமறித்தது இவளுடைய குரல்.

“என்னங்க, நீங்க இப்படி பாட்டைக் கேட்டுட்டுப் படுத்துக் கிடந்தீங்கன்னா வீட்டைப் பாக்கப் போறது எப்போ?”

‘நல்ல பாடலை சுகித்துக் கொண்டிருக்கிறபோது, ரசனை கெட்டுக் குறுக்கிடுகிறாளே’ என்கிற குறை இருந்தாலும், எப்போதும் போலவே இவள் மேல் கோபம் வர மறுத்தது.

பாட்டு முடிந்த பின்னால் பொறுமையாய்க் கண் திறந்தேன்.

“எதுகையிலே பேசுகிற எழுத்தாளன் மனைவியே, எனக்கிருக்கிற இசை ரசனையில் துளியூண்டு ஆண்டவன் உனக்குக் குடுத்திருக்கக் கூடாதா! சரி விடு, இதோ கிளம்பிட்டேன்.”

எழுந்து, ஸ்கூட்டர் சாவியை எடுத்துக்கொண்டு வெளியேறப் போனபோது, அடுத்த பாடல், அடடா, சுசீலாவின் தேன் குரலில்.

“தேனினிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே...”

திரும்பி, ‘குறுக்கிடாதே’ என்று இவளை செய்கை செய்துவிட்டு மறுபடி கண்மூடி ஸோஃபாவில் சரிந்தேன்.

பாட்டு முடியும் வரை பொறுமையுடன் அல்லது பொறுமையின்றிக் காத்திருந்துவிட்டுக் காதருகில் குனிந்து கேட்டாள்:

“உங்க பாட்டு முடிஞ்சு போச்சு. என்னங்க, அணைக்கட்டுமா?”

லபக்கென்று அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு கிசுகிசுத்தேன்.

“ஓக்கே. லெட்ஸ் ஹாவ் ய நைஸ் டைம். வீடு பார்க்க அப்பறமா போய்க்கலாம்.”

வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டாள்.

“கொஞ்சம் ஸீரியஸ்ஸா இருக்கக் கூடாதா நீங்க? ஒண்ணாந் தேதி வரைக்கும் டைம் குடுத்தாங்க. நீங்க பதினஞ்சு வரைக்கும் கேட்டீங்க, போனாப் போகுதுன்னு ஒத்துக்கிட்டிருக்காங்க. இதோ இன்னிக்கிப் பதிமூணு ஆச்சி. பழைய ஓனர்னா

பரவாயில்ல. இப்ப இந்த வீட்டை வாங்கியிருக்கிறவர் எப்படி ஆளோ தெரியாது. திடீர்னு வந்து வாசல்ல நின்னுக்கிட்டு டெட் லைன் தாண்டியாச்சு, காலி பண்ணுங்கன்னார்னா நாம எங்கங்க போறது?"

ஸோஃபாவிலிருந்து எழுந்தேன். 'ஒரு ஞாயிற்றுக்கிழமை நாசமாய்ப் போகிறதே' என்கிற எரிச்சலில் சோம்பல் முறித்துக் கொண்டேன். என்னையே பார்த்துக் கொண்டிருக்கிற இவளை நோக்கினேன்.

"அதுதானேம்மா நா ரெண்டு வாரமா அலஞ்சுக்கிட்டிருக்கேன். நம்ம நேரத்துக்கு ஒண்ணும் அமஞ்சி வர மாட்டெங்குதே, என்ன செய்யச் சொல்ற? இதுவரைக்கும் ஒம்பது வீடு பாத்தாச்சு. எல்லா வீட்டுக்காரங்களும் நல்லாத்தான் பேசறாங்க. வீட்டத் திறந்து காட்டறாங்க. அப்புறம், சொல்லி வச்ச மாதிரி ஒரேயொரு காரணத்துக்காகப் பின் வாங்கிர்றாங்க."

"நீங்க சிகரெட் குடிக்கிறீங்கங்கற காரணத்துக்காக இருக்கும். சிகரெட்ட விடுங்கன்னா கேக்கறீங்களா!"

"சீ மண்டு. உளராதே. காரணத்தச் சொன்னா நீ வருத்தப்படுவ. வேணாம், நாம புது வீட்டுக்குப் போனப்புறம் சொல்றேன்."

ஞாயிறு ஹிண்டுவில் வந்த 'எல்' பிளாக் வீட்டு விளம்பரத்தைக் கத்தரித்து சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு கிளம்பினேன். எட்டரை மணிக்கு சாந்தி காலனி முகப்பில் புரோக்கர் காத்திருப்பார்.

"புரோக்கர்ட்ட போகாதடா, தின்னுருவான்" என்று ஸ்ரீதர் எச்சரித்திருந்தான். ஆனால் புரோக்கர் இல்லாமல் அலைந்து மாளவில்லை.

சாந்தி காலனியில் புரோக்கர் காட்டின ரெண்டு வீடுகளுமே நன்றாய்த்தானிருந்தன. எல்லா விவரங்களும் பரிமாறிக்கொண்ட பிறகு, "புரோக்கர்ட்ட சொல்லியனுப்பறோம்" என்கிற வழக்கமான பல்லவியைத்தான் இவர்களும் பாடினார்கள்.

பாக்கெட்டிலிருந்த 'எல்' பிளாக் விளம்பரத்தில், 'நோ புரோக்கர்ஸ் ப்ளீஸ்!' என்றிருந்ததால் புரோக்கரைக் கழட்டி விட்டுவிட்டுத் தனியாய்ப் போனேன். "டாடி அவசரமாத் தாம்பரத்துக்குப் போய்ட்டாங்க. நைட்ல வருவாங்க" என்றது ஒரு டீன் ஏஜ்.

விளம்பரத்திலிருந்த ஃபோன் நம்பரை சரிபார்த்துக்கொண்டேன். 'நாளை ஆஃபீஸிலிருந்து ஃபோன் செய்யலாம்'.

காலையில் ஃபோனில் பேசியபோது மறுமுனையில் வீட்டுக்காரர் விவரம் கேட்டார்.

"நீங்க எத்தனை பேர் சார்?"

"சின்ன ஃபேமிலிதாங்க. நான், ஒய்ஃப், ரெண்டு பசங்க."

பிறகு சில சில்லறை விசாரணைகள்.

“ஸிங்கிள் பெட் ரூம்தான்” என்றார்.

“சரி” என்றேன்.

“வாடகை ஆயிரத்தி முன்னூறு” என்றார்.

“கொஞ்சம் குறைக்கக் கூடாதா?” என்றேன்.

“சாரி” என்றார்.

“சரி” என்றேன்.

“அப்புறம்... அப்புறம்...

சார் ஒங்க பேரச் சொல்லலியே” என்றார்.

‘எதற்குக் ?’ என்று தெரியும். ‘சுற்றி வளைத்துப் பாய்ன்ட்டுக்கு வருகிறார். ஹ்ம்ம் ஆவது ஆகட்டும்’.

“என் பேர் ஸிராஜ்ங்க.”

கொஞ்சம் நிதானித்து அடுத்த கேள்வி.

“சார், தப்பா நெனச்சுக்காதீங்க, ஒங்க ஒய்ஃப் பேர்...”

“நஃபீஸ்”

“சார், கொஞ்சம் லைன்ல இருங்க” என்று சில விநாடிகள் இடைவெளி. ‘ஃபோனைப் பொத்திக் கொண்டு பக்கத்தில் யாரிடமோ ஆலோசனை செய்கிறார்’ என்று சுலபமாய் ஊகித்தேன்.

பிறகு, நான் ‘திக் திக்’ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வி.

“சார், நீங்க முஸ்லீம்ஸா?”

“ஆமாங்க, அதுக்கென்ன?”

“சாரி சார், முஸ்லிம்ஸ்க்கு நாங்க வீடு தர்றதில்லை.”

‘டக்’கென்று ஃபோன் கட்.

என் மண்டையில் இன்னுமொரு சம்மட்டி அடி.

என்னை கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீதர், சிரித்துக் கொண்டே பக்கத்தில் வந்தான்.

“என்ன ஸிராஜ், இதுவும் அதே பழைய பல்லவி தானா?”

என்னுடைய விரக்தியையும் வேதனையையும் அவனிடம் வெளிப்படுத்தினேன்.

“ஏண்டா ஸ்ரீதரா, இந்தியால முஸ்லிமாப் பிறந்தது அவ்வளவு பெரிய பாவமா? சமத்துவம், சகோதரத்துவம், ஸெக்யூலரிஸம் எல்லாம் வெறும் எலக்ஷன் ஸ்டன்ட்தானா?”

ஸ்ரீதர் சிரித்தான். ‘எதற்கெடுத்தாலும் இவனுக்கு சிரிப்புதான். ‘சிரிப்பு ஸ்ரீதர்’ என்று சும்மாவா இவனுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்!’

“ஏய், ரிலாக்ஸ் ஐ ஸே.”

என்னை அமைதிப்படுத்துகிற மாதிரி முதுகில் தட்டிக் கொடுத்தான்.

“உன்னோட டென்ஷன்ல அவசரப்பட்டு ஏதாவது உளறிட்டிருக்காதே ஸிராஜ். உன்னையும் என்னையும் மாதிரி பரந்த மனப்பான்மையுள்ளவங்க நெறைய பேர் இருக்காங்க. உன்னோட நேரம், உன் அவசரத்துக்குத் தட்டுப்படுறவங்க எல்லாரும் இந்த மாதிரி வக்கிரப்புத்திக்காரங்களாயிருக்காங்க, என்ன செய்ய! இப்ப நீ இருக்கற வீட்டோட பழைய ஓனர் ஹிண்டுதானே? அஞ்சு வருஷம் அவர் உன்னை அலவ் பண்ணலியா? வீட்டை அவர் வித்துட்டதனாலதானே இப்ப ப்ராப்ளம்!”

‘இவன் சொல்வது ஞாயமாயிருக்கலாம். ஆனால், எனக்கு இப்போது அவசரமாச்சே! நஃபீஸ் சொன்ன மாதிரி இந்த வீட்டின் புதுச் சொந்தக்காரன் எந்த நிமிஷமும் வந்து வாசலில் நிற்பானே!

போன ஞாயிற்றுக்கிழமை ‘ஏ ஹெச்’ ப்ளாக்கில் பார்த்த வீட்டை முடிவு பண்ணி அட்வான்ஸெல்லாம் கொடுத்த பிறகு அடுத்த நாள் ஆஃபீஸுக்கு ஃபோன் வருகிறது. “ரொம்ப சாரி சார். என் ஒய்ஃபைக் கன்ஸல்ட் பண்ணாம அட்வான்ஸ் வாங்கிட்டேன். முஸ்லிம்னா வேண்டாம்னு அவ ஒத்தக் கால்ல நிக்கிறா. நீங்க தப்பா நெனைக்காம தயவு செஞ்சு வந்து அட்வான்ஸைத் திருப்பி வாங்கிட்டுப் போயிருங்க சார்.”

அவமானத்தோடு போய் அட்வான்ஸைத் திரும்பப் பெற்றுக்கொண்டு வந்தேன்.

‘அப்புறம் இன்னுமொரு அனுபவம்.

ஒரு ஸோ கால்ட் தேசியவாதி வீட்டில்.

அதைப் பற்றி ஒரு கவிதை கூடத் தோன்றியதே.

அடடா, அதை ஸ்ரீதரிடம் சொல்ல வேண்டுமே...’

“ஸ்ரீதர், இந்த வீடு பாக்கற அனுபவத்துல ஒரு ரியலிஸ்ட்டிக் கவிதை தோணிச்சுடா. சொல்றேன், கொஞ்சம் சிரிக்காமக் கேக்கறியா? கேளு.”

பேசும் முன்பே மறுத்துவிட்டார் வீடு
முஸ்லிமுக்கு இல்லையென்று
வாசலில் மஹாத்மா படம்
முகமெல்லாம் புழுதி படிந்து

ஸ்ரீதர் கவிதையை ரசித்தான், சிரித்துக்கொண்டேதான்.

“கவிதை இஸ் ஒக்கே ஸிராஜ். ஆனா இந்தக் கவிதையோட கதாநாயகன், அல்லது வில்லன் கூட உன்னோட அவசரத் தேடல்ல குறுக்கிட்ட ஒரு அசுரன்தாண்டா. அந்த ஆள் ஒரு உண்மையான காந்தீயவாதியுமில்ல, உண்மையான இந்தியனுமில்ல. யூ கான்ட் ஜெனரலைஸ் ஹிஸ் கேஸ். இப்ப அதை விடு. நிதானமாத் தேடினா இங்கே எத்தனையோ வீடு கெடைக்கும். அண்ணா நகர்க்குள்ளேயே நீ தேடறதுதான் ஒரு சிக்கல். ஸிராஜ், நீ ஒண்ணு பண்ணேன். அவசரப்படாம ரிலாக்ஸ்டா பொறுமையா பாரேன்”

“உளராதடா ராஸ்க்கல். நா பொறுமையா இருந்தா புது வீட்டுக்காரன் வந்து சாமானெல்லாம் வெளியில விட்டெறிஞ்சிருவான். அப்புறம் தெருவுல நின்னுக்கிட்டு பொருமிக்கிட்டுதான் இருக்கணும்.”

ஸ்ரீதர் சிரித்தான், எப்போதும் போல.

“நீ தான் இப்ப உளர்ற. ஒன்னைத் தெருவுல நிக்க நா விட்டுருவேனாடா? நா சொல்ல வந்தது என்னன்னா, இப்ப நீ காலி பண்ணிட்டு என் வீட்டுக்கு வந்துரு. ஒரு மாசமோ, ரெண்டு மாசமோ, மூணு மாசமோ, எப்ப உனக்கு ஒரு நல்ல வீடு கெடைக்குதோ அதுவரைக்கும் நீ குடும்பத்தோட எங்கூடவே இருக்கலாம். என் ஒய்ஃப்புக்கும் ஒரு கம்ப்பெனி கிடைக்கும், குழந்தைங்களும் சேந்து விளையாடிக்கிட்டு சந்தோஷமா இருக்கும், வீடும் கலகலப்பா ‘ஜே ஜே’ன்னு இருக்கும். கொஞ்ச நாளக்கி நாம ஒரு மினி பாரதவிலாஸ் படைக்கலாமே, என்ன சொல்ற?”

எனக்கு சொல்வதற்கு ஒண்ணும் தோணவில்லை. கொஞ்ச நேரம் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டிருந்தேன். ‘சே... இது ஆஃபீஸ். அழுதுவிடக் கூடாது’.

ஆஃபீஸிலிருந்து வீட்டுக்குப் போகிற வழியில் ஷெனாய் நகர் மசூதிச் சாலையில் ஸ்கூட்டர் மெதுவாய்ப் போய்க் கொண்டிருந்தது.

திரும்பவும் டி.எம்.எஸ்.

திரும்பவும் ஒரு தேவகானம்.

“சபரி மலையில் வண்ணச் சந்திரோதயம்...”

மசூதிக்கு எதிர்த்த சாரியிலிருந்த ஐயப்ப பக்தர்களின் பந்தலிலிருந்து ஒலிபெருக்கி மூலம் பாடல் வந்தது.

'கொஞ்ச நேரத்துக்கு ஸ்கூட்டரை ஓரங்கட்டலாமா?' என்று யோசித்தபோது, மசூதியிலிருந்த சாயங்காலத் தொழுகைக்கு அழைப்பு விடுக்கிற பாங்கு ஒலி, ஒலி பெருக்கியில்.

ஆச்சர்யம்.

சட்டென்று சபரிமலைச் சந்திரோதயம் அஸ்தமித்தது. தொழுகை அழைப்பு முழுக்க முடிந்ததும், மீண்டும் சந்திரோதயம், விட்ட இடத்திலிருந்து.

பிற மதத்தவரின் ஆலய அழைப்பை இசையால் இடைமறிக்காமல் ஓரமாய் ஒதுங்கி வழிவிட்டு நிற்கிற நாகரீகம் தெரிந்த அந்த ஐயப்ப பக்தர்களின் பெருந்தன்மையிலும் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையிலுமிருந்த மேன்மையில் மனசு சிலிர்த்தது.

'உண்மைதான். சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மனங்களையும் மதங்களையும் மதிக்கிற நாகரிகம் கொண்டவர்கள் இங்கே இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள். என் ஸ்ரீதரைப்போல, இந்த சபரிமலை பக்தர்களைப் போல. ஸ்ரீதர் சொன்ன மாதிரி, பதட்டப்படாமல் தேடினால் இப்படியொரு உண்மையான இந்தியன் எதிர்ப்படுவான், எனக்காக ஒரு வீட்டையும் வைத்துக் கொண்டு.

ஸ்ரீதரைத் தவிரவும் வேறு ஒரேயொரு இந்தியனை நான் அடையாளங் கண்டு கொண்டால் போதும்.

அல்லா அடையாளங்காட்டுவான்.

இதோ, மசூதிக்குள் போய் அவனைக் கேட்கிறேன்'.

-ஆனந்த விகடன், 08.01.1995.

# சிரித்துக்கொண்டே அழுகின்றேன்

‘எப்போதடா லஞ்ச் டைம் வரும்?’ என்று காத்துக் கொண்டிருந்த மாதிரி சரியாய் ஒரு மணிக்கு என் எதிரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

என்னுடைய மேஜை மேலே பரந்து விரிந்து கிடந்த ஃபைல்களை என்னைக் கண்டு கொள்ளாமலேயே மூடி ஒதுக்கி வைத்தாள். ஒரு பழைய நியூஸ் பேப்பரை எடுத்து மேஜை மேலே விரித்து அவளுடைய லஞ்ச்பாக்ஸை வைத்துத் திறந்தாள். என்னுடைய டிஃபன் பாக்ஸையும், உரிமையோடு எடுத்துத் திறந்து பரப்பி வைத்தாள், என்னுடைய சங்கடத்தையும் அக்கம் பக்கம் விவகாரம் பிடித்த கண்கள் விஷமத்தனமாய் மொய்ப்பதையும் புறக்கணித்து. பிறகு ஓர் அன்புக் கட்டளை.

“ம். போய்க் கை கழுவிட்டு வாங்க.”

“என்ன புவனா இது, எல்லாரும் நம்மளையே பாக்கறாங்க பார்.”

“அதுக்காக? கை கழுவாமச் சாப்பிடப் போறீங்களா?”

“சிரிக்காதே. நீ என்னை சங்கடப்படுத்தற.”

“ஏன் சங்கடப்படணும்? நாம என்ன டுயட் பாடவா போறோம்? லஞ்ச் டைம்ல சாப்பிடப் போறோம், அவ்வளவுதான்.”

“அது சரி. நீ உன் ஸீட்லயும் நா என் ஸீட்லயும் உக்காந்து கூடச் சாப்பிடலாமே?”

“ஏன் தனித்தனியா சாப்பிடணும்? சேந்து சாப்பிடக் கூடாதா? நா ஒங்களுக்குப் பரிமாறினா தப்பா? நீங்க எனக்கு வுட் பி ஹஸ்பண்ட். நா உங்களுக்கு வுட் பி ஒய்ஃப்.”

“நீதான் சொல்லிட்டிருக்க ரெண்டு வருஷமா.”

“இனி நா வாயால சொல்லிட்டிருக்கப் போறதில்ல. இனிமே எல்லாம் ஆக்ஷன்தான். ‘மயிலே மயிலே இறகு போடு’ன்னா நீங்க போட மாட்டீங்க. அதனால...”

“அதனால?”

“சொல்றேன். கை கழுவிட்டு வாங்க. சாப்ட்டுட்டே பேசுவோம், பேசிட்டே சாப்புடுவோம்.”

கை கழுவுவதற்கு பாத்ரூமுக்குப் போகிறபோதும் வருகிற போதும் பலவிதமான பார்வைகள். நான் சமீபித்தவுடன் ஆஃப் ஆகிவிடுகிற கிசுகிசுப்புகள்.

‘கடவுளே!’ என்று சாப்பாட்டின் முன் உட்கார்ந்தேன். புவனா பரிமாறினாள். பரிவோடும் உரிமையோடும்.

“இது எங்க வீட்டு உருளக்கிழங்கு வருவல்ங்க. ஒங்களுக்குப் புடிச்ச ஐட்டமாச்சேன்னு என் கையால ஸ்பெஷலா செஞ்சு கொண்டு வந்தேன். இதென்னது கத்திரிக்காக் கூட்டா? ஐயே, என்னங்க இது ‘சப்’னு இருக்கு! நா ஒண்ணு சொல்லட்டுமா, ஒங்க வீட்டு சமையல்காரம்மா, ஒங்கம்மாவுக்குப் பத்திய சமையல் செய்யறதோட சேத்து எல்லாருக்கும் பண்ணிடுதுன்னு நெனக்கிறேன். ம். இன்னுங் கொஞ்ச நாளக்கித்தான். அப்புறம் நா ஒங்க வீட்டுக்கு, ஐ மீன் நம்ம வீட்டுக்கு வந்தப்புறம் எல்லாத்திலேயும் ஒரு பாஸிட்டிவ் சேஞ்ஜ் வரப்போகுது பாருங்க. ரெண்டே மாசத்துல நீங்க பத்து கிலோ ஏறப்போறீங்க.”

“அதெல்லாம் நடக்கற காரியமில்லை புவனா. நீ அநாவசியமா கற்பனைய வளத்துக்காத.”

“ஏன் நடக்காதுங்கறீங்க? ரெண்டு மாசத்துல பத்து கிலோ கூடறது பெரிய கின்னஸ் அச்சீவ்மென்ட்டா என்ன?”

“உளறாத. நா அதச் சொல்லல. ஒன்னோட கல்யாணக் கனவுகளச் சொல்றேன். அநாவசியமா வாழ்க்கைய வேஸ்ட் பண்ணிக்காத. ஜஸ்ட் ஃபர்கட் இட்.”

புவனாவின் கண்களிலும் குரலிலும் குடியிருந்த குறும்பு எங்கேயோ தலைமறைவாகிவிட்டது. ஸீரியஸ்ஸாய்ப் பேச ஆரம்பித்தாள்.

“விளையாட்டுக்குக்கூட இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதீங்க. நா ஒங்களை என் மனசுல கணவனா வரிச்சு பல காலமாச்சு. எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது ஒங்களோடதான்.”

“நீ யோசிக்காமப் பேசற புவனா. என்னை ஒன்னோட சம்மந்தப்படுத்திக்கிட்டு அனாவசியமா ஒன்னோட வாழ்க்கையைப் பாழடிச்சிக்கப் போறேங்கற. லுக் ஹியர் புவனா, நா ஒரு விடோயர். ஒரு பத்து வயசுப் பொண்ணுக்கும் ஏழு வயசுப் பையனுக்கும் தகப்பன். ஒன்னைவிடக் கிட்டத்தட்டப் பதிமூணு வயசுப் பெரியவன். ஹார்ட் பேஷன்ட்டான அம்மாவை வச்சுக் காப்பாத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ளவன்.”

“இதெல்லாம் எனக்குத் தெரியாத விஷயங்கள்னா இப்ப நீங்க லிஸ்ட் குடுக்கறீங்க? நா ஒங்கள விரும்பறதுக்கு இதெல்லாமே கூட காரணங்களாயிருக்கலாமில்லியா?”

“வாட் ஃபூலிஷ்னஸ்? நீ வாழ வேண்டிய பொண்ணு புவனா, நா வாழ்ந்து முடிச்சவன்.”

“முப்பத்தெட்டு வயசுல வாழ்ந்து முடிச்சவன்னு பேசறதுதான் ஃபூலிஷ்னஸ்.”

“புவனா, நா ரெண்டு குழந்தைகளுக்கு அப்பா. தாயில்லாக் குழந்தைங்க. அதுங்களை வளத்து ஆளாக்கறதுதான் இனி என்னோட வாழ்க்கை.”

“தாயில்லாக் குழந்தைங்கன்னு ஏன் ஓரங்கட்றீங்க? அந்தத் தாய் ஸ்தானத்தை எனக்குத் தாங்கன்னுதானே நா கெஞ்சறேன். அதுங்களை வளத்து ஆளாக்கற வாழ்க்கையை நாம ரெண்டு பேரும் சேந்து வாழ்வோமே? இந்தா பாருங்க, ஒங்கக்

குழந்தைங்க எனக்கும் குழந்தைங்கதான். ஒங்களை நா நேசிக்கிற மாதிரி அந்தக் குழந்தைங்க மேலயும் பாசம் வச்சிருக்கேன். ஒரு வேளை எனக்கு, அதாவது நமக்குக் குழந்தை பிறந்தப்புறம் இந்தப் பாசம் மங்கிரும்னு நீங்க பயந்தீங்கன்னா, நா கொழந்தையே பெத்துக்கல. ஆரம்பத்துலயே ஆபரேஷன் பண்ணிக்கிறேன்."

"முட்டாள்த்தனமாப் பேசற."

"இல்லீங்க, யதார்த்தமாப் பேசறேன். கடவுள் ஒண்ணுக்கு ரெண்டு ரெடிமேட் குழந்தைங்க எனக்குன்னு குடுத்திருக்கிறப்ப நா வேற ஏன் கஷ்டப்பட்டுப் பெத்துக்கணும்?"

"என்ன ஆச்சு ஒனக்கு இன்னிக்கி? ஒரே விடாப்பிடியா இருக்க?"

"காரணமாத்தான். நாளக்கி நா லீவ் தெரியுமோ?"

"சொல்லவேயில்ல?"

"காலைல என்னப் பொண்ணு பாக்க வர்றாங்க."

"ரொம்ப சந்தோஷம்."

"மண்ணாங்கட்டி சந்தோஷம். ப்ளீஸ் கொஞ்சம் ஸீரியஸ்ஸா இருங்க. ஏற்கனவே ரெண்டு வரனை நா தட்டிக் கழிச்சிட்டேன். இந்த வரன்ல அப்பா ரொம்ப ஸ்ட்ராங்கா நிக்கிறார். சரியான ஆல்ட்டர்நேட்டிவ் குடுக்காம இதையும் நா மறுத்தா அப்புறம் அப்பா ரொம்ப மனசொடிஞ்சி போவார். நீங்க மட்டும் 'சரி புவனா'ன்னு ஒரேயொரு வார்த்தை சொல்லுங்க."

"சரி புவனாங்கறது ரெண்டு வார்த்தை."

"ம்? அட என் இலக்கணப் புலியே, விளையாடாதீங்க. பீ ஸீரியஸ். நீங்க இப்ப கிரீன் ஸிக்னல் காட்டிட்டீங்கன்னா, ராத்திரியே அப்பாட்ட நம்ம மேட்டரைப் போட்டு ஒடைச்சிருவேன். அப்பா நிச்சயம் ஓக்கே பண்ணிருவார். அதோட அம்மாவையும் அவரே சமாளிச்சுக்குவார். ஸோ, காலைல பெண் பார்க்கும் நாடகம் கான்ஸல். ஆஹா, அப்புறம் எனக்கு நீங்களே நீங்க, ஒங்களுக்கு நானே நான். என்ன சொல்றீங்க. திஸ் இஸ் மை லாஸ்ட் சான்ஸ்ங்க. சரின்னு சொல்லுங்க, ப்ளீஸ்."

"அதெப்படி டக்னு சரி சொல்லிர முடியும் புவனா, அம்மாவக் கேக்க வேண்டாமா?"

"அப்பாடி, ஒரு படி எறங்கி வந்துட்டீங்க! யெல்லோ ஸிக்னல் விழுந்தாச்சி. அடுத்தது பச்சைதான். அம்மா என்ன கூடாதுன்னா சொல்லிரப் போறாங்க? நானே வேணா அம்மாட்ட நேராவே கேட்டுரட்டுமா? ஈவ்னிங் நீங்க வீட்டுக்குப் போறப்ப நானும் கூட வரட்டுமா?"

"நோ, நோ, அது நாகரீகமில்ல புவனா, நானே கேட்டு நாளக்கி ஒனக்கு சொல்றேன்."

“நாளக்கி நா லீவ்ங்கறேன், காலைல பொண்ணு பாக்க வர்றாங்கங்கறேன். நீங்க என்னமோ நாளக்கி சாவகாசமாச் சொல்றேங்கறீங்களே! எனக்கு இன்னக்கி நைட் தூங்கப் போறதுக்கு முந்தி சம்மதம் கெடைச்சாகணும்.”

“அப்ப நீ எனக்கு வீட்டுக்கு ஃபோன் பண்ணு.”

“அட, ஃபோன் வந்துருச்சா? எப்ப?”

“நேத்துதான் கனெக்ஷன் குடுத்தாங்க. அம்மாவோட மெடிக்கல் ரிப்போர்ட்டக் காட்டி, ஹார்ட் பேஷன்ட்னு சீக்கிரம் கனெக்ஷன் வாங்கிட்டேன். இந்தா நம்பர். நா ஆஃபீஸ் முடிஞ்சு பாரிஸ் போய் அம்மாவுக்கு மருந்து வாங்கிட்டு ஏழு மணிக்கி மேலதான் வீட்டுக்குப் போவேன்.”

“அப்ப நா கரெக்டா ஒம்போது மணிக்கி மெடிக்கல் ஷாப்லயிருந்து ஃபோன் பண்ணுவேன். அதுக்குள்ள ஒங்கம்மாட்ட ஓக்கே வாங்கிருவீங்கல்ல?”

கொஞ்சம் இடைவெளி விட்டவள். திடீரென்னு என்னுடைய சாப்பாட்டுக் கையை அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டாள். பிறர் கவனிப்பதைப் புறக்கணித்து, கண்களில் கண்ணீர்க் கசிவு.

“என்னங்க, என்னை ஏமாத்திர மாட்டீங்களே?”

‘என்னிடம் என்னத்தைக் கண்டுவிட்டு இப்படி என் மேலே பைத்தியமாய் இருக்கிறாள்?’ என்பது புதிராய்த்தான் இருக்கிறது.

‘இவளிடமிருந்து இந்தக் கணத்தில் தப்பித்தாக வேண்டுமே என்று சும்மாதான் அம்மாவிடம் கேட்க வேண்டுமென்று சொல்லி வைத்தேனே தவிர இவளோடு என் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வது பற்றி சத்தியமாய் அக்கறைப்படவே இல்லை.

ஆனால், கடைசியாக என் எச்சில் கையைப் பற்றிக் கொண்டு “என்னை ஏமாற்றிவிட மாட்டீர்களே” என்று கெஞ்சிய அந்த ஏக்கமான முகம் என்னுள் ஒரு சலனத்தை உண்டு பண்ணிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது’.

சாயங்காலம் ஆஃபீஸ் முடிந்து கிளம்புகிய சமயத்திலும் புவனாவின் முகத்தில் அதே எதிர்பார்ப்புகள் மிகுந்த ஏக்கம். அதே பனித்த பார்வை.

“சரியா ஒம்போது மணிக்கு ஃபோன் பண்ணுவேன். நீங்க சம்மதம் சொல்லணும்.”

பாரிஸில் அம்மாவுக்கு மருந்து வழக்கமான கடையில் கிடைக்கவில்லை. நாலஞ்சு கடைகள் ஏறி இறங்கி ஒரு வழியாய் மருந்து வாங்கிக் கொண்டு கிளம்புகிறபோது நன்றாய் இருட்டிவிட்டிருந்தது.

ஸ்கூட்டரில் வீட்டுக்கு வருகிற வழியெல்லாம் புவனாவைப் பற்றியே சிந்தனை. அவள் எதிர்பார்க்கிற பதிலை அவளுக்குத் தந்துவிடலாமா? ஆம் என்றால், அது அவள் மேல் உள்ள இரக்கத்தினாலா அல்லது உண்மையிலேயே அவளை என் மனம் நாடுகிறதா?

புவனாவை ஏற்றுக் கொள்கிற சூழ்நிலை உருவானால், என் நிம்மியோடு நான் வாழ்ந்த அந்தப் புனிதமான அஞ்சு வருஷத் தாம்பத்யத்துக்குக் களங்கம் விளைந்துவிடாதா...?'

நிம்மி போன மறு வருஷமே அம்மா நச்சரிக்க ஆரம்பித்துவிட்டிருந்தார்கள் மறுமணம் பற்றி. "நிம்மியின் இடத்தை இன்னொருத்தியால் ஒருபோதும் நிரப்ப முடியாதம்மா" என்கிற ஒரே அஸ்திரத்தை வைத்து அம்மாவை வென்றுவிட்டேன். தரகர் மூலம் அம்மா வாங்கி வைத்திருந்த ஃபோட்டோக்களிலிருந்த எந்தப் பெண்ணாலும் என்னை வசீகரிக்க முடியவில்லை. ஃபோட்டோக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வந்திருந்த தரகர் ரொம்பவும் கோபித்துக் கொண்டு போனார். என் செல்ல மகள் அந்த எல்லாப் பெண்களுக்கும் மீசை தாடி வரைந்து அலங்கோலம் பண்ணி வைத்திருந்தாள்.

அம்மாவின் வற்புறுத்தல் கொஞ்சங் கொஞ்சமாய் வலுவிழந்து, பிறகு மங்கியே போயிற்று. ஆனாலும், 'இந்த வீட்டுக்குத் திரும்பவும் ஒரு மருமகளைக் கொண்டு வந்துவிடுவது' என்கிற எண்ணம் அம்மாவின் மனசில் நீறு பூத்த நெருப்பாய் இருக்கிற உண்மை எப்போதாவது அம்மாவின் பேச்சில் வெளிப்படும்.

ஏதோ அர்ஜன்ட் ஃபைலில் சந்தேகங்கள் கேட்கிற சாக்கில் புவனா ரெண்டு ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வந்திருந்தபோது, குழந்தைகள் 'ஆன்ட்டி'யென்று அவளிடம் அன்போடு ஒட்டிக் கொண்டதை, ஆர்வத்தோடும் அர்த்தத்தோடும் அம்மா அவதானித்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

'இப்போது புவனா விஷயத்தைப் பற்றி அம்மாவிடம் பேசினால் அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும்.

சரி, என்னோடுதான் வாழ்க்கை என்று புவனாவுக்கு விதித்திருந்தால் அதைத் தடுக்க யாரால் முடியும்?

என்னுடைய ஆறு வருஷ வறண்ட வாழ்க்கையில் ஒரு ஓயாஸிஸ் திருப்பம் இன்றைக்கு ஏற்பட வேண்டும் என்று ஆண்டவன் முடித்திருந்தால் அதற்கு நான் எப்படி மாறு செய்ய முடியும்?

வீட்டுக்குப் போய் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லி அந்தப் பாச நெஞ்சைக் கொஞ்சம் புளகாங்கிதப்படுத்துவோம்.

பிறகு, ஒன்பது மணிக்கு ஃபோன் வரும்'.

"புவனா, எனக்கு நீயே நீ, உனக்கு நானே நான். ஓக்கேதானே புவனா?"

பஸ்ஸரை அழுத்தினேன். கதவு திறக்க கொஞ்சம் தாமதமாகிற மாதிரி தெரிந்தது. ரெண்டாம் முறை அழுத்தப்போனபோது உள்ளே தாள் விலக்கும் சத்தம்.

'பல தினங்கள், ரெண்டாம் முறை மணியடித்த பிறகே அம்மா கதவைத் திறப்பார்கள். இன்றைக்கு மட்டும் அது ஏன் தாமதமாய்த் தெரிகிறது?... ஓ... அட என் கல்யாண மாப்பிள்ளையே!'

“அம்மா, சீக்கிரம் சாப்பாடு எடுத்து வைங்க. சாப்டுட்டு ஒங்கட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்...”

“அதுக்கு முன்னால நா ஒனக்கொரு முக்கியமான விஷயம் சொல்லணும்ப்பா.”

இது என்ன எதிர்ப் புதிர்!

“என்னம்மா?”

“உன் மக பெரியவளாய்ட்டாப்பா.”

திடீரென்று மூளையில் நிசப்தம்.

வரிசையாய் நிறுத்தி வைத்திருந்த சீட்டுத் தொடரின் கடைசி சீட்டை யாரோ ஊதிவிட்டு விட அது, முந்தின சீட்டின் மேல் படிந்து அப்படியே ஒவ்வொரு சீட்டாய் வரிசையாய் அலையலையாய்ச் சரிந்து எல்லாம் சமனப்பட்டுவிட்டன.

ஆட்டம் முடிந்து இப்போது அமைதி.

அம்மா சொன்ன தகவலுக்கு என்னுடைய ரியாக்ஷனுக்கு சில விநாடிகள் பிடித்தன.

“அதுக்குள்ளயா?”

“என்ன அதுக்குள்ளயாங்கற, இந்த ஆகஸ்ட் வந்தா அவளுக்குப் பதினொண்ணு ஆகுதுல்ல? பொட்டப் புள்ளங்க கொஞ்சம் சீக்கிரமாத்தான் வயசுக்கு வந்துரும்.”

பக்கத்து அறைக்குள் போய் விளக்கைப் போட்டேன். அமைதியாய் உறங்கிக்கொண்டிருந்தாள் என் மகள். ஒரு தகப்பனின் வாஞ்சையோடு அவளுடைய தலையைக் கோதிக் கொடுத்தேன். பிறகு, ஹாலில் வந்து ஸோஃபாவில் சரிந்தேன்.

“சாப்பாடு எடுத்து வச்சிருக்கேம்ப்பா” என்ற அம்மாவின் குரலுக்கு, “வேண்டாம்மா, பசி இல்லம்மா’ என்று அனிச்சையாய் ஒரு பதில் தந்தேன்.

“சீக்கிரம் சாப்பாடு வைங்கன்ன?”

“பாரிஸ்ல டிஃபன் சாப்ட்டுட்டு வந்தேன். இந்தாங்க ஒங்க மருந்து.”

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அம்மா அருகில் உட்கார்ந்து கொண்டார்கள்.

“நிம்மி ஞாபகம் வந்துருச்சாக்கும்? ஹ்ம்ம்... அவ இருந்திருந்தா இந்தக் கொழந்தைய எப்படியெல்லாம் சீராட்டியிருப்பா! பாவி, பொசுக்னு போய்ட்டாளே! சரி, நாம குடுத்து வச்சது அவ்வளவுதான். முடிஞ்சுபோன சங்கதிய நெனச்சு வருத்தப்பட்டு என்ன செய்ய, இனி ஆகவேண்டியதப் பாக்கணும்... ஆமா, ஏதாவது சேத்து வச்சிருக்கியா?”

“நீங்க என்னம்மா, நாளக்கே அவளுக்குக் கல்யாணமாகப் போறது மாதிரி!”

“அதுக்கில்லப்பா, பொம்பளப் புள்ள மளமளன்னு வளந்துரும். இப்பவே ப்ளான் பண்ணினாத்தானே! ஏதோ நா இருக்கற வரைக்கும் கொழந்தையப் பாத்துக்குவேன். நானும் சீக்காளி. ஆண்டவன் எப்படியெப்படி வச்சிருக்கானோ? தகப்பன் ஒனக்குத்தான் இனி பொறுப்பு ஜாஸ்தி.”

“சரிம்மா. நீங்க போய்த் தூங்குங்க. நாளக்கி அவ ஸ்கூலுக்குப் போக வேண்டாமில்லை?”

“அதெப்படிப் போவா? ஒரு மூணு நாள் வீட்ல இருக்கட்டும்.”

ஸோஃபாவில் காலை நீட்டிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டேன்.

‘இதற்குமேல் இவனுக்கெதிரில் உட்கார்ந்து கொண்டிருந்து பிரயோஜனமில்லை’யென்று அம்மா எழுந்து போய்விட்டார்கள்.

அம்மா போய்விட்டதையுணர்ந்து கண்களைத் திறந்து, விட்டத்தைப் பார்த்தபடி படுத்துக் கிடந்தேன்.

மனசு வெறுமையாய் இருந்தது.

கடிகாரம் ஒன்பது அடித்து ஓய்ந்த அடுத்த விநாடி டெலிஃபோன் அலற ஆரம்பித்தது.

அலறிக்கொண்டேயிருந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அம்மா ஹாலுக்குள் எட்டிப் பார்த்தார்கள்.

“ஏம்ப்பா, ரொம்ப நேரமா அடிக்குதே... எடுத்து யார்னு பாக்கக் கூடாது?”

“அது ராங் நம்பர்ம்மா. அடிச்சி அடிச்சி தானா ஓய்ஞ்சிரும். நீங்க போய்ப் படுத்துக்குங்க.”

நான் கண்களை மூடிப் புவனாவிடம் மானசீகமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

-ஆனந்த விகடன், 29.01.1995

# அபாய சங்கிலி

“என்னங்க, பதினோரு மணிக்கி திடுதிப்பென்று வந்து நிக்கிறீங்க, ஆஃபீஸ்க்கு மட்டமா?”

வழக்கமாய் ரெண்டு மணிக்கு மேலேதான் லஞ்ச்சுக்கு வருகிற சிவராமன் முன்னறிவிப்பில்லாமல் பதினோரு மணிக்கே வந்து நிற்கிறதைப் பார்த்து விநோதினிக்கு ஆச்சர்யம். ”ஷ்ஷ்ஷ் சத்தம் போடாதே” என்று உதட்டின் குறுக்கே விரல் வைத்து அவளை அமர்த்தினான் சிவராமன்.

“நம்ம வீட்டுக்கு ஒரு புது விருந்தாளி வந்துக்கிட்டிருக்கார்!”

‘யாரது புது விருந்தாளி?’ என்று வாசல் பக்கம் பார்வையைச் செலுத்தின விநோதினி புருவங்களை உயர்த்தினாள்.

ஆளுயர அட்டைப் பெட்டியொன்றை மூணு பேர் சுமந்து கொண்டுவந்து ஹாலில் வைத்துப் பிரித்தார்கள். உள்ளேயிருந்து வெளிப்பட்ட சமாசாரத்தைக் கண்டு விநோதினி அசந்து போனாள்.

“வாவ்! வாட் ய பியூட்டி!”

ரெண்டு கன்னங்களையும் கைகளால் பொத்திக் கொண்டு விழிகளை அகலமாய்த் திறந்து வியந்தாள்.

“டி.வில பவர்ஹவுஸ்ன்னு காட்டறானே அதானேங்க இது? நேர்ல பாக்க ரொம்ப அசத்தலா இருக்கே!”

பவர் ஹவுஸைச் சுமந்து வந்தவர்கள் போய்விட்டார்கள்.

சிவராமன் முன்கதவைத் தாளிட்டுவிட்டு வந்து மனைவியின் தோள்களைப் பற்றினான்.

“ஒன்ன அசத்தறதுக்காகத்தான் வாங்கிட்டு வந்தேன். இன்னிக்கி என் மஹாராணிக்கி பர்த் டே இல்லியா!”

“பரவாயில்லையே, ஞாபகம் வச்சீர்க்கீங்களே, காலைல நீங்க என்னக் கிஸ் பண்ணவுமில்ல, விஷ் பண்ணவுமில்ல, மறந்துட்டீங்களோன்னு ஒங்க கூட டூ விட்டுரணும்னு இருந்தேன். இப்பப் பாத்தா... ஷிவ் மை டார்லிங் யு ஆர் ரியலி கிரேட்.”

அவனைக் கட்டிக் கொண்டாள்.

ஒரு பத்து நிமிஷம் ரெண்டு பேரும் ரொம்ப அந்நியோன்னியமாய் இருந்தார்கள்.

பிறகு புதுசாய் வந்த பவர் ஹவுஸ்ஸை இயக்கிப் பார்க்க வேண்டுமென்று விநோதினிக்கு ஆசை வந்தது.

“என்னங்க, ரெண்டு பேரும் பேசி ரெக்கார்ட் பண்ணிப் பார்ப்போமே” என்றாள்.

சிவராமன் டிராயரிலிருந்து புதிய காஸட் ஒன்றை எடுத்துப் பவர் ஹவுஸுக்குள்ளே திணித்து ‘ஆன்’ செய்தான்.

“ம்ம், கேள்விகளை நீ கேட்கிறாயா, அல்லது நான் கேட்கட்டுமா?”

“ராத்திரி முழிச்சிருந்து டி.வில திருவிளையாடல் பாத்தீங்களா?”

“எத்தனை தடவை பாத்தாலும் திகட்டாத படமாச்சே, டி.வில போட்டா பாக்காமயிருக்க முடியுமா? சரி, பேட்டி முடிஞ்சு போச்சு. ரீவைண்ட் பண்ணிப் போட்டுக் கேப்போமா?”

“அட இருங்கன்னா, என்ன அவசரம், நாம அரட்டையடிக்கிறதே இப்ப அபூர்வமாப் போச்சு. நீங்க பிஸினஸ் பிஸினஸ்ன்னு ஒரே பிஸியா இருக்கீங்க. எனக்குன்னு ஒரு லேடீஸ் கிளப் வந்து சேந்திருக்கு. நாம பழங்கதைகளப் பேசி எத்தன நாளாச்சு. இந்த சாக்கை வச்சிக்கிட்டுக் கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாம்னா ஓடப்பாக்கறீங்களே! பின்னாடி எப்பவாவது போட்டுக் கேக்க இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்ல?”

“அப்ப நா ஆஃபீஸ்சுக்குப் போக வேண்டாங்கறியா?”

“என் பர்த்டே அன்னிக்குக் கூட கொஞ்ச நேரம் எங்கூட இருக்கக் கூடாதா? இருங்களேன், ப்ளீஸ்!”

“யேய், இது எல்லாம் ரெக்கார்ட் ஆயிட்டிருக்கு.”

“ஆகட்டும். சும்மா காஷுவலாப் பேசிட்டிருப்போம். நைட்ல வெளிய போய் சாப்பிடப்போறோம். எங்க போலாம்?”

“வேற எங்க, பாண்டியன் ஹோட்டல்தான். இந்த மதுரையில பாண்டியனை விட்டா வேற கதி?

“ஒங்களுக்கு ஞாபகம் இருக்கா ஷிவ், நாம மொத மொதயா மீட் பண்ணினது பாண்டியன் ஹோட்டல்ல தானே?”

“மறக்க முடியுமா? தேதி கூட ஞாபகமிருக்கு.”

“ஆமாங்க, நீங்க படிச்சதோ அந்த எக்ஸ்ட்ரீம்ல உள்ள மெஜூரா காலேஜ். நா படிச்சதோ இந்தக் கடேசில உள்ள லேடி டோக் காலேஜ். நீங்க எப்படி என்ன லவ் பண்ணீங்க?”

“ஹ்ம்ம், அதாம்மா விதி!”

“ஒதைபடுவீங்க. என்ன ஃபாலோ பண்ணினது, லவ் லெட்டர் எழுதினது, எங்க அண்ணனக் காக்கா புடிச்சது, எங்க வீட்ல வந்து அப்பா முன்னால அசடு வழிஞ்சது எல்லாமே நீங்கதானே!”

“தப்புத்தாம்மா மன்னிச்சிக்க. இனிமே அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்.”

“இந்தா, சீரியஸாப் பேசுங்க. நாம பேசிட்டிருக்கப் போறது கொஞ்ச நேரம், இந்த மாதிரி வெட்டிப் பேச்சிலேயே நேரமும் ஆயிரும், காஸெட்டும் முடிஞ்சிரும். இப்ப நா ஸ்கூலுக்கு வேற போகணும்.”

“ஏன் படிச்சதெல்லாம் மறந்து போச்சா?”

“திரும்பவும் எடக்குப் பேச்சுதானா? சுமியோட ஸ்கூல்லயிருந்து ஃபோன் வந்தது. நாங்க எங்க க்ளப்லயிருந்து ஸ்கூல்ல ஒரு எக்ஸிபிஷன் நடத்தறதாயிருக்கோம். அதைப் பத்திப் பேசக் கூப்புடறாங்கன்னு நெனக்கிறேன். நா அங்கதான் கௌம்பிட்டிருந்தேன், நீங்க வந்துட்டீங்க.”

“அந்த ப்ரின்ஸிபால் அம்மா, பில்டிங் டொனேஷன் கேட்டுட்டிருந்திச்சு. இன்னிக்கி உன் பர்த்டேயும் அதுவுமா ஒங்கையால ஒரு அஞ்சாயிரத்துக்குச் செக் குடுத்துட்டு வந்துரு.”

செக் புஸ்தகத்தை எடுப்பதற்கு சிவராமன் பிரீஃப் கேஸைத் திறந்தபோது பெட்டிக்குள்ளிருந்த ஒரு வாரப் பத்திரிகை விநோதினியின் கண்ணில் பட்டது.

“என்னங்க, நீங்க என்னமோ ‘இலக்கியப் பத்திரிகைதான் படிப்பேன். இந்த மாதிரி ஜனரஞ்சகப் பத்திரிகையெல்லாம் கண்ணாலக் கூடப் பாக்க மாட்டேன்’னு பெரிசாய் பீத்திக்குவீங்க, இது என்னது?”

“எல்லாம் விஷயமாத்தான். இலக்கியத்திலயிருந்து ஒரு பரிணாம வளர்ச்சி! விநோ, இதுல ஒரு கிளுகிளு கட்டுரை வந்திருக்கு பார், ‘சினிமாத் தியேட்டர்ல வச்சு காதலிக்கு முத்தம் குடுக்கறது எப்படி’ன்னு. ஒனக்குக் கட்டாயம் காட்டணும்னு வாங்கிட்டு வந்தேன்.”

“ஐயே, ரொம்ப மோசம் நீங்க.”

“தாங்கள் மட்டும் எப்படி மேடம்? ‘சித்தெரும்பு என்னக் கடிக்குது, அடிக்கடி ராத்திரி துடிக்குது’ன்னு கேசட் போட்டுக்கிட்டு ரசிச்சுக் கேக்கலியாக்கும்.”

“ஏங்க, நாம இப்பப் பேசற அடல்ஸ் ஒன்லி சமாசாரமெல்லாம் இதுல ரெக்கார்ட் ஆயிட்டிருக்கே, சுமி போட்டுக் கேட்டாள்னா அசிங்கம்ல?”

“யாரு, உன் ஸிஸ்டரா?”

“ஆமா, நீங்களும் எல்லாரையும் போலக் கிண்டல் பண்ணுங்க.”

“கிண்டல் இல்ல ஹனி, ஒன்னப் பாத்து யாராவது ‘ஒரு பதினாறு வயசுப் பொண்ணுக்கு அம்மா’ன்னு சொல்லுவாங்களா? எத்தன பேர் ஒன்னையும் சுமியையும் ‘அக்கா தங்கச்சிதான்’னு இன்னும் நெனச்சிட்டிருக்காங்க!”

“ஒங்களக் கூடத்தான் எத்தனையோ பேர் ‘கல்யாணமாயிருச்சா’ன்னு இன்னுங் கேக்கறாங்க!”

“ஹ்ம்ம்... ‘நாம கொஞ்சம் அவசரப்பட்டுட்டோமோ’ன்னு இப்பத் தோணுது விநோ!”

“எதச் சொல்றீங்க?”

“நாம லவ் பண்ணிட்டேயிருந்துட்டு கொஞ்சம் லேட்டாக் கல்யாணம் பண்ணிட்டிருந்திருக்கலாம். நாம கல்யாணம் பண்ணிக்கிட்டப்ப எனக்கு வயசு இருபத்தொண்ணு. ஒனக்குப் பத்தொம்போது. இப்பப் பார் ஒனக்கு வயசு முப்பத்தாறு. பதினாறு வயசுல ஒனக்கு ஒரு ப்ளஸ் டூ படிக்கிற பொண்ணு. அடுத்த வருஷம் சுமி காலேஜுக்குக்குப் போயிருவா...”

“நீங்க சொல்ற மாதிரி நாம லேட்டாக் கல்யாணம் பண்ணிட்டிருந்தா, சுமி நமக்குப் பொறந்திருக்கவே மாட்டாளே, அவ இல்லாத வாழ்க்கையை எப்படிங்க நெனச்சுப் பாக்க முடியும்! டோன்ட் யூ லவ் ஹெர்?”

“அஃப்கோர்ஸ் ஐ டூ. நா எதுக்குச் சொன்னேன்னா, இன்னுங் கொஞ்ச நாள் இளமைய நாம எக்ஸ்டண்ட் பண்ணியிருந்திருக்கலாமே, இன்னுங் கொஞ்ச நாள் லைஃபை எஞ்ஜாய் பண்ணியிருந்திருக்கலாமேன்னு...”

“இப்ப மட்டும் என்ன நாம கொறச்சலாவா எஞ்ஜாய் பண்றோம்?”

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துக் குறும்பாய்ப் புன்னகைத்துவிட்டுத் திரும்பவும் தொடர்ந்தாள்.

“ஒங்களுக்குத் தெரியுமா விஷயம் ஷிவ்? இப்ப டீன் ஏஜர்ஸ் எல்லாம் மதுரையில லைஃப்பை எஞ்ஜாய் பண்ண ஆரம்பிச்சிட்டாங்களாம். போன வாரம் எய்ட்ஸ் கேஸ்ல மெட்ராஸ நம்ம மதுரை ஓவர்டேக் பண்ணியிருச்சாம். காரணம் டீன் ஏஜ் செக்ஸாம்!”

“என்னடா இந்த மதுரைக்கு வந்த சோதனை!”

“திரும்பவும் திருவிளையாடலா? டெலிஃபோன் ரிங் ஆகுது, யாருன்னு பாருங்களேன்.”

ஸோஃபாவிலிருந்து எழுந்து சிவராமன் டெலிஃபோனில் பேசிவிட்டு அதன் வாயைப் பொத்திக் கொண்டு விநோதினியிடம் சொன்னான்.

“ஒன்னத்தான் கூப்பிடறாங்க விநோ, சுமியோட ஸ்கூல்லயிருந்து பேசறாங்க.”

விநோதினி சலித்துக் கொண்டாள் :

“அடடா, இந்த ப்ரின்ஸிபால் அம்மா ஏன் இப்படிப் போட்டு அரிக்குது! ‘நா கௌம்பிட்டேன் அங்கதான் வந்துட்டிருக்கேன்’னு சொல்லியிருங்களேன், ப்ளீஸ்.”

ரிஸீவர் வைக்கப்பட்ட பின் விநோதினி எழுந்து ஆடைகளை சரி செய்து கொண்டு, மேக் அப்பை டச் அப் செய்து கொண்டு கிளம்பினாள்.

“நா காரெடுத்துட்டுப் போய்ட்டு வந்திர்றேங்க, நா வர்ற வரைக்கும் ரிலாக்ஸ் பண்ணுங்க, என்ன? நா டியூப்ளிகேட் கீ எடுத்துட்டுப் போறேங்க, வந்துருவேன், வந்து லஞ்ச் வக்கிறேன், ஓக்கே?”

ஸ்கூலில், ப்ரின்ஸிபால் ரூமுக்குள் நுழைந்ததும், கைப்பையிலிருந்து செக்கை எடுத்து சிரித்தபடியே நீட்டினாள்.

“இந்தாங்க மேடம், என் ஹஸ்பண்ட்கிட்ட பில்டிங் டொனேஷன் கேட்டிருந்தீங்களாம்? இன்ஸிடன்ட்டல்லி, இன்னிக்கி என்னோட பர்த்டே.”

“ஹாப்பி பர்த் டே மிஸஸ் சிவராமன். இந்த செக்குக்கு இப்ப அவசரமில்ல. நா ஒங்களுக்கு ஃபோன் பண்ணச் சொன்னது...”

“எங்க லேடீஸ் கிளப் எக்ஸிபிஷன் விஷயமாத்தானே? ஏற்பாடு பண்ணிரலாம், அதுல ஒண்ணும் ப்ராப்ளம் இல்ல மேடம்.”

“இப்ப ப்ராளம் வேற மிஸஸ். சிவராமன். பத்தாந்தேதி ஹிண்டு பாத்தீங்களா?”

“பாத்திருப்பேன். சொல்லுங்க. என்ன நியூஸ்?”

“எய்ட்ஸ்... மதுரையில...”

“ஆமா மேடம், ‘டீன் ஏஜ் செக்ஸ்னால மதுரைதான் இப்ப எய்ட்ஸ்ல ஸ்டேட் ஃபஸ்ட்’னு போட்டிருந்துச்சே, அசிங்கம்ல? What a disgrace to this holy city! இந்த விஷயத்துல எங்க கிளப் ஏதாவது செய்ய முடியும்னு நெனக்கிறீங்களா மேடம்?”

“ஒங்க கிளப் செய்ய வேண்டியதை எங்க ஸ்கூல் லெவல்ல நாங்களே செஞ்சிட்டோம். பேப்பர்ல நியூஸ் வந்ததுமே நாங்க எங்க ஸ்கூல் டாக்டரை வச்சு ப்ளஸ் டு ஸ்டுடன்ட்ஸுக்கு டெஸ்ட் எடுத்துப் பார்த்தோம்.”

“வேண்டாத வேல மேடம். ஒங்க ஸ்டுடன்ட்ஸ் மேல ஒங்களுக்கே நம்பிக்கையில்லியா!”

வினோதினி சிரித்தாள். ஆனால் அந்தச் சிரிப்பு ப்ரின்ஸிபால் முகத்தில் பிரதிபலிக்கவில்லை. கொஞ்சம் தயக்கத்துக்குப் பிறகு ப்ரின்ஸிபாலின் வாயிலிருந்து வார்த்தைகள் மெதுவாய் வெளிவந்தன.

“நம்பிக்கை இருந்தது மிஸஸ். சிவராமன், ஆனா எந்தப் புத்துல எந்தப் பாம்பு இருக்கும்னு தெரியாதுல்ல?”

“பாம்பு இருந்ததா?”

“இருந்தது. ஒண்ணேயொண்ணு.”

“மை காட்! யார் மேடம் அது?”

“சுமித்ரா.”

“வாட்?”

“ஒங்க பொண்ணுதான், மிஸஸ் சிவராமன்.”

“வாட் நான்ஸென்ஸ்!”

விநோதினியின் குரல் ‘விர்ர்’ரென்று எகிறிக் கூரையைத் தொட்டது. நாற்காலியிலிருந்து எழுந்து நின்று கொண்டு சீறினாள்.

“நீங்க சுய புத்தியோடத்தான் பேசறீங்களா, இல்ல பைத்தியம் புடிச்சிருச்சா? இந்த ஸ்கூலுக்காக நாங்க எவ்வளவோ பண்ணியிருக்கோம். How dare you say such a thing to me? எந்த டாக்டர் எம் பொண்ணை டெஸ்ட் பண்ணினான்? இதைப் பொய்யின்னு ப்ரூவ் பண்ணி என் ஹஸ்பண்ட்ட சொல்லி ஒங்களையும் ஒங்க ஸ்கூலையும் ஒரு வழி பண்றேனா இல்லியா பாருங்க.”

முஷ்டியால் மேஜையைக் குத்திக் குத்தி ஆக்ரோஷமாய் அவள் கத்தின சத்தம் சாத்திய கதவுக்கு வெளியே கசிந்து வெளியேறி, ரெண்டு மூணு ஆசிரியைகள் என்னமோ ஏதோ என்று கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

“ப்ளீஸ், யாரும் உள்ள வரவேண்டாம். இங்க ஒண்ணும் நடக்கல, எல்லாம் வெளிய இருங்க.”

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அவர்களை வெளியேற்றிவிட்டுக் கதவை சாத்தித் தாளிட்டுவிட்டு வந்த ப்ரின்ஸிபால், கத்தி ஓய்ந்து மூச்சிரைக்க நின்றிருந்த விநோதினியின் தோள் மேல் ஆதரவாய்க் கை வைக்க, அந்தக் கையை வேகமாய்த் துடைத்துத் தள்ளிவிட்டு, நிற்க வலுவிழந்து நாற்காலியில் விழுந்தாள்.

முழங்கைகளை மேஜை மேலே ஊன்றி, ரெண்டு கைகளாலும் தலையைத் தாங்கிக் கொண்டு உடைந்து போவதற்குத் தயாராய் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அந்த அறை இருண்டு கிடந்தது. ஏர் கண்டிஷனருக்குள்ளேயிருந்து அனலடித்தது.

ஆசுவாசப்படுத்திக் கொள்ள அவளுக்கு அவகாசம் கொடுத்த பின் ப்ரின்ஸிபாலின் குரல் தீர்க்கமாய் ஒலித்தது.

“மிஸஸ். சிவராமன், இந்த மாதிரி நீங்க அப்ஸெட் ஆவீங்கன்னு நா எதிர்பாத்ததுதான். அது நியாயமுங்கூட. டாக்டர் ரிஸல்ட்டச் சொன்னப்ப நானே அப்ஸெட் ஆய்ட்டேன். அந்த ரிஸல்ட்ட நம்பாம எங்க ஃபேமிலி டாக்டர வச்சு இன்னொரு தரம் டெஸ்ட் எடுத்தேன்... பட் அவரும் இதை கன்ஃபம் பண்ணிட்டார். சுமித்ரா இஸ் ஸச் ய நைஸ் சைல்ட்... எங்கேயோ, எப்படியோ தப்பு நடந்திருக்கு. மாடர்ன் டீன் ஏஜர்ஸ் ஸெக்ஸ்ல ஈடுபடறது இப்பல்லாம் மலிஞ்சு போச்சு. நெறைய பேர் தப்புப் பண்ணிட்டுத் தப்பிச்சிருக்கிறாங்க. சுமித்ரா கேஸ்ல அது மிஸ்ஃபயர் ஆயிட்டிருக்கு... இந்த டெஸ்ட் ரிஸல்ட் சுமித்ராவுக்குத் தெரியாது. ஏன், வேற ஸ்டுடன்ட்ஸ்க்கோ டீச்சர்ஸ்க்கோ யாருக்குமே தெரியாது. இந்த நிமிஷம் வரைக்கும் இந்த விஷயம் நாலே நாலு

பேருக்குத்தான் தெரியும். நீங்க, நான், அந்த ரெண்டு டாக்டர்ஸ்... சுமித்ராவ அவளோட க்ளாஸ்லதான் இப்ப ஒக்காத்தி வச்சிருக்கேன். ஆனா அவளக் க்ளாஸ் ரூம்ல, ஏன் இந்த ஸ்கூல் காம்ப்பஸ்க்குள்ளயே அலவ் பண்றது சரியாயிருக்காதுன்னு நெனக்கிறேன்... என்னோட பொஸிஷனை நீங்க புரிஞ்சுக்குவீங்கன்னு நம்பறேன் மிஸஸ். சிவராமன். ஒங்களுக்கு ஃபோன் பண்ணது இதுக்குத்தான். ஏதாவது காரணம் சொல்லி ஒங்க டாட்டரைக் கூட்டிட்டுப் போயிருங்க. நாளக்கி வீட்டுக்கு டி.ஸி அனுப்பி வைக்க ஏற்பாடு பண்றேன்."

விநோதினி, கைகளால் தலைக்கு முட்டுக்கொடுத்த நிலையிலேயே பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தாள். இன்னும் உடைந்து போகாமல் இருந்தது பெரிய விஷயம். முட்டுக்கொடுத்திருந்த கைகளை அகற்றினால் சரீரமும் இதயமும் பொலபொலவென்று உதிர்ந்துவிடும் போல இருந்தது.

இதயத்தை இறுக்கிக் கொண்டு, என்ன பேசுவதென்று சிந்திப்பதற்கு அவளுக்கு மேலும் சில நிமிஷங்கள் தேவைப்பட்டன.

பிறகு, நிசப்தத்தை மெல்ல விலக்கிக்கொண்டு வார்த்தைகளை வெளிப்படுத்தினாள். குரல் நைந்து போயிருந்தது.

"ஐம் ஸாரி மேடம். I lost control of myself."

பிரின்ஸிபாலின் பதில் நறுக்கென்று வெளிவந்தது.

"like you lost control of your daughter!"

அந்த அக்குபங்ச்சர் ஊசி விநோதினியை 'சுருக்'கென்று குத்தியது.

ஆனால் நெஞ்சைப் பிசைகிற வேதனையின் முன்னால் இந்த ஊசிக்குத்தல் ஒன்றும் பிரமாதமில்லை.

இத்தனை நாள் சகஜமாய்ப் பேசிப் பழகி வந்த ப்ரின்ஸிபாலின் முன்னால் ஒரு குற்றவாளி மாதிரி உட்கார்ந்திருந்தாள். குனிந்த தலை நிமிராமலே மெல்லப் பேசினாள்.

"ஒரு சின்ன உதவி மட்டும் செய்யுங்க மேடம். நா அவ க்லாஸ்க்குப் போக விரும்பல. யாரையாச்சும் அனுப்பி அவளக் காரிடாருக்குக் கூட்டிட்டு வரச் சொல்லுங்க. நா கூட்டிட்டுப் போயிர்றேன்."

ப்ரின்ஸிபால் இன்ட்டர்காமில் பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து, கொஞ்ச நேரத்துக்கப்புறம் சுமித்ரா காரிடாரில் காத்திருப்பதாய்த் தகவல் வர, விநோதினி எழுந்தாள். ப்ரின்ஸிபாலும்.

"ஐம் வெரி ஸாரி மிஸஸ். சிவராமன். இப்படி நடந்திருக்கவே வேண்டாம். Sumithra was one of our best students... ப்ளஸ் டூல ராங்க் வாங்குவான்னு எதிர்பாத்துட்டிருந்தேன்... நாம கற்பனை கூடப் பண்ண முடியாதது என்னென்னமோ நடந்து போச்சு... அவளோட ஹெல்த்தைப் பத்தித் தகவல் குடுத்துட்டிருங்க..."

இப்போதுதான் விநோ தலைநிமிர்ந்து ப்ரின்ஸிபாலை நேருக்கு நேர் நோக்கினாள்.

அவளுடைய கூர்மையான பார்வை, விபரீதமாய் ஏதோ சொல்ல ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாளென்று ப்ரின்ஸிபாலுக்கு உணர்த்தியது. உதறியது.

“ஒக்கே மேடம், அவ சாகக் கெடக்கறப்ப ரன்னிங் காமென்ட்ரி குடுக்கச் சொல்றீங்க, செஞ்சிட்டாப் போச்சு!”

இவ்வளவு நேரக் கட்டுப்பாட்டை உடைத்துக் கொண்டு விநோவுக்கு அழுகை முட்டிக் கொண்டு நின்றது. முந்தானையைப் பந்தாக்கி வாயில் திணித்து அழுகையை அமுக்கி விழுங்கினாள். பிறகு, கண்களைத் துடைத்துக்கொண்டு அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள்.

காரிடாரில் சுமித்ரா.

“ஹாய் மம்மி, என்ன இந்நேரத்துக்கு!”

அன்றைக்குத் திங்கட்கிழமை, பளிச்சென்ற வெள்ளை யூனிஃபார்மில் தேவதை மாதிரி இருந்தாள்.

‘இன்னுங் கொஞ்ச நாளில் தேவதையாகவே ஆகிவிடப் போகிற இந்தப் பரிதாபத்துக்குரிய சின்னப் பெண் மேலே பாசத்தைப் பொழிவதா, அல்லது தன்னுடைய குடும்பத்துக்குத் தீராத களங்கத்தைத் தந்துவிட்ட இவள் மேல் ஆத்திரம் கொள்வதா, அல்லது ப்ரின்ஸிபால் சொன்ன மாதிரி அன்னையின் அஜாக்கிரதைக்கு அநியாயமாய்ப் பலியாகப் போகிற இந்தப் பிஞ்சை அணைத்துக் கொண்டு அழுவதா...?

உணர்ச்சிகளைக் கொட்ட இதுவல்ல இடம்’ என்று மகளிடம் முகத்தைக் கூட சரியாய்க் காட்டாமல் காருக்குப் போய் அவளுக்குப் பின்கதவைத் திறந்துவிட்டாள்.

‘... கொஞ்சம் பொறு, இதோ வீடு வந்து விடும். வீட்டுக்குப் போய் சுதந்திரமாய் அழலாம். குலுங்கிக் குலுங்கி அழலாம். கண்ணீர் காலியாகும் வரை அழலாம். கணவனைக் கட்டிக் கொண்டு அழலாம்...’

சுமி திரும்பத்திரும்பக் காரணம் கேட்டதற்கு,”ஒண்ணுமில்லம்மா, ஒரு ரிஸப்ஷனுக்குப் போகணும். டாடி வீட்டுக்கு வந்துட்டாங்க. ஒன்னக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க” என்று முகத்தைத் திருப்பாமலேயே பதில் சொன்னாள்.

“ஏன் மம்மி என்னைக்குமில்லாம எனக்கு இன்னிக்கு பேக் ஸீட்” என்று சுமி கேட்டதற்கு,”லஞ்ச் நல்லாயிருந்ததா, மஷ்ரூம்ல ஆம்லட் பண்ணி வச்சிருந்தேனே சாப்ட்டியா?” என்று எதிர்க்கேள்வியே பதிலாய் வந்தது.

வீட்டில், ஹாலில் சிவராமன் இன்னும் ஸோஃபாவில் படுத்துக் கிடந்தான், கண்களை மூடியபடி. இவர்கள் கதவைத் திறந்த சத்தம் அவனை உசுப்பவில்லை. பவர் ஹவுஸில் மென்மையாய் ஓர் ஆங்கில இசை. இசையில் லயித்துப் போய்ப் படுத்திருக்கிறானா, அல்லது உறங்குகிறானா என்று தெரியவில்லை.

பவர் ஹவுஸைப் பார்த்ததும் கண்களை அகல விரித்து ‘வாவ்!’ சொல்வதற்கு வாயெடுத்த மகளின் வாயைப் பொத்தினாள் விநோ.

“டாடிய டிஸ்ட்டர்ப் பண்ணாதே. ரெஸ்ட் எடுக்கட்டும். உன் ரூம்க்குப் போ. குளிச்சி டிரெஸ் பண்ணிக்கிட்டு ரெடியாகு. அவசரமில்ல, டைம் நெறைய இருக்கு” என்று கிசுகிசுத்து அவளுடைய ரூமுக்குள் அவளை அனுப்பிவிட்டு, அவள் உள்ளே தாளிட்டுக் கொண்டதும், வெளியே இவள் தாளிட்டாள். பிறகு, ஓடி வந்து பவர் ஹவுஸின் வால்யூமை இஷ்டத்துக்குத் திருகினாள். அது அலறிய அலறலில் சிவராமன் அதிர்ந்து எழுந்தான். அவன் ஸோஃபாவிலிருந்து முழுசாய் எழுமுன்பே அவன் மேலே விழுந்து கட்டிக் கொண்டு கதறினாள். ஏதும் புரியாமல் சிவராமன் அவளை விலக்கி நிமிர்த்தினான்.

“விநோ, என்ன இது, அது ஏன் இப்படி அலறுது, நீ ஏன் இப்படி அழுவுற?”

அவனுடைய கைகளை விலக்கிவிட்டுத் திரும்பவும் அவன் மார்பில் முகம் புதைத்துக் குமுறினாள்.

வீட்டை விட்டுக் காரில் கிளம்பின போது ஒழுங்காய்ப் போனவள், திரும்பி வந்ததும் இப்படிக் கதறுகிறாள் என்றால், அதற்கு ஒரேயொரு காரணத்தைதான் சிவராமனால் ஊகிக்க முடிந்தது.

“விநோ, என்ன ஏதாவது ஆக்ஸிடென்ட் ஆயிருச்சா சொல்லு. ரோட்ல யாரையாவது அடிச்சிப் போட்டுட்டு வந்துட்டியா? பரவாயில்ல நா பாத்துக்கறேன், அதுக்கு ஏன் இப்படி அழுவற! விடு. என்ன அசம்பாவிதம்னாலும் சரி பண்ணிரலாம்.”

அவன் மார்பிலிருந்து முகத்தை உயர்த்தின விநோ, அழுகைக்கிடையே சொன்னாள்.

“இது ரொம்ப பயங்கரமான அசம்பாவிதம்ங்க. ஒங்களால சரிபண்ண முடியாது. யாராலயும் முடியாது.”

“இந்தா எம்மேல நம்பிக்கையில்லியா? அழாத நா பாத்துக்கறேன்னு சொல்றேன்ல?”

“நீங்க பாத்துக்கிட்டே இருக்க வேண்டியதுதாங்க. ஒங்களையும் என்னையும் பாக்க வச்சிட்டு சுமி போயிரப்போறா. கொஞ்சங் கொஞ்சமாக சாகப் போறா. நம்ம ரெண்டு பேரையும் தலை குனிய வச்சிட்டு சாகப் போறா.”

அவளுடைய கன்னங்களிரண்டையும் அழுத்தி முகத்தை நிமிர்த்திப் பிடித்துப் பார்வையால் துளைத்தான்.

“என்ன சொல்ற விநோ? புரியற மாதிரி சொல்லு.”

“சொல்றேங்க. மனசக் கல்லாக்கிக்கிருங்க.”

“புதிர் போடாம சொல்லேம்மா சீக்கிரம்.”

மேலும் இழுத்தடிக்காமல் விநோ டமாரென்று போட்டு உடைத்தாள்.

“நம்ம சுமிக்கு எய்ட்ஸாம்.”

அவளுடைய முகத்தை அவன் மின்னல் வேகத்தில் விடுவித்ததில் விநோ நிலைகுலைந்து தரையில் சாய்ந்தாள்.

சிவராமன் அதே வேகத்தில் எழுந்து நின்று ஆவேசமாய் அலறினான்.

“நோ.”

அவனுடைய ‘நோ’வுக்கு முன்னால் பவர்ஹவுஸின் அலறல் கூட வலுவிழந்துவிட்ட மாதிரியிருந்தது.

பிறகு தரையில் கிடந்த விநோதினியைப் பற்றித் தூக்கி நிறுத்தி அவளுடைய புஜங்களை அழுத்தி உலுக்கினான், அவன் கண்களில் நெருப்புக் கங்குகள்.

“யார் சொன்னது, என்ன நடந்தது, சொல்லு.”

“சொல்றேங்க. நீங்க டென்ஷனாகாதிங்க. ஒக்காருங்க.”

அவனுடைய பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அவன் தோள்களை அழுத்தித் திரும்பவும் அவனை ஸோஃபாவில் அமர்த்தினாள். அப்புறம் தரையில் ஒருக்களித்து உட்கார்ந்து அவனுடைய முழங்காலை அணைத்தபடி பார்வையை நிமிர்த்தி அவனை நோக்கினாள்.

அவன் இன்னும் கொந்தளித்துக் கொண்டுதான் இருந்தான்.

“இந்த சனியன் ஏன் இப்படி அலறுது. அதை ஆஃப் பண்ணித் தொலச்சிட்டு விஷயத்தச் சொல்லு.”

“சுமி ரூம்ல இருக்காங்க. நாம பேசறது கேட்டாலும் கேட்டுரும்” என்று எழுந்து போய் வால்யூமைக் குறைத்துவிட்டு வந்து பழைய நிலையிலேயே உட்கார்ந்தாள். அவனை நோக்கிப் பேச ஆரம்பித்த போது குரல் சற்று சமனப்பட்டிருந்தது.

“ஹிண்டுல ஒரு நியூஸ் வந்ததுன்னு சொன்னேன்ல, மதுரை எய்ட்ஸ்ல ஃபஸ்ட், டீன்ஏஜர்ஸ் செக்ஸ்ன்னு. அதப் பாத்துட்டு சுமியோட ஸ்கூல்ல ப்ளஸ் டூ பொண்ணுங்கள டெஸ்ட் பண்ணிப் பாத்தாங்களாம். சுமி மட்டும் டெஸ்ட்டட் பாஸிட்டிவ்வாம். அவள வீட்டுக்கு அனுப்பிச்சிட்டாங்க.”

“You mean to say she has had sex? she has had sex with an aids victim?”

“ஆமாங்க, அப்படித்தான் தெரியுது.”

அவளுடைய தலை கவிழ்ந்து கொண்டது.

“வாட் டு யூ மீன் அப்படித்தான் தெரியுது, எங்கே அவ?”

வேகமாய் எழுந்தவனைக் கையைப் பிடித்து இழுத்துத் திரும்பவும் உட்கார வைத்தாள் விநோ.

“எக்ஸைட் ஆகாதீங்க. இப்ப அவகிட்ட ஒங்க கோபத்தக் காட்டறதுல அர்த்தமேயில்லை. நாம அனுதாபத்தைக் காட்ட வேண்டிய நெலமையில அவ இப்ப இருக்கா. வெளிய போகணும், குளிச்சி டிரஸ் பண்ணிக்கன்னு சொல்லியிருக்கேன். அவ கிளம்ப ஒரு ஒன் அவர் ஆகும். அதுக்குள்ள நாம இதப்பத்திப் பேசிரணும். ஆமா, நீங்க லஞ்ச் சாப்பிடலியே. எனக்குப் பசியில்ல. ஒங்களுக்கு எடுத்து வைக்கவா? சாப்ட்டுட்டே பேசலாம்.”

“சாப்பாடு இப்ப ரொம்ப முக்கியம்ல்ல? அதை விடு அந்த ராஸ்க்கல் யார்ன்னு கேட்டியா?”

“கேட்டு என்னங்க ஆகப் போகுது? கர்ப்பமானா கருவக் கலைக்கலாம்; இல்ல பண்பாட்டுக்கு பயந்து சினிமால வர்ற மாதிரி அந்தப் பையனையே தேடிப் பிடிச்சு தாலி கட்ட வைக்கலாம். இவ உயிருக்கும் மானத்துக்கும் ஆபத்தான வியாதியையில்ல வாங்கிட்டு வந்திருக்கா. இதுக்கு ஏதுங்க நிவர்த்தி?”

“சரி, யார் காரணம்னு தெரிய வேண்டாமா?”

“நாந்தாங்க காரணம், பாவி நாந்தான் எங்கொழந்தையப் பாழ் பண்ணிட்டேன்.”

திரும்பவும் உடைந்தாள்.

“நாந்தாங்க என் சுமியக் கொன்னுட்டேன்.”

நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதவளின் தோள்களைப் பற்றித் தூக்கி மார்பில் போட்டுக் கொண்டான். அவனுடைய மார்பில் அவள் கேவினாள்.

“அவளுக்கு யரோ பாய்ஃப்ரண்ட்ஸ் இருக்கறது ஜாடமாடையாத் தெரிஞ்சபோதே நா கன்ட்ரோல் பண்ணியிருக்கணும். பண்ணல. ‘வாலன்ட்டைன் டேன்னு சொல்லி, கிஃப்ட் குடுக்கணும், பொக்கே குடுக்கணும்’னு அலஞ்சுட்டிருந்தா. ‘வாலன்டைன் டே பார்ட்டிக்கிப் போறேன்’னா. அப்பவெல்லாம் நா அஜாக்கிரதையா இருந்துட்டேங்க.”

“அதென்னது வாலன்டைன் டே?”

“ஓப்பனாச் சொன்னா, காதலர்கள் தினமாம். வெளிநாட்ல இருந்து பாம்பே வழியா மெட்ராஸ்க்கு வந்து இப்ப இந்த வியாதி மதுரைக்கும் வந்திருச்சு.”

“அதாவது எய்ட்ஸ் மாதிரி.”

“அந்த வாலன்ட்டைன் டேல டீன் ஏஜர்ஸ், செய்யக் கூடாத காரியமெல்லாம் செய்வாங்க போல. அதையெல்லாம் இவளும் பண்ணியிருக்கா... மோசம் போய்ட்டோங்க, நாம மோசம் போய்ட்டோம்....”

இவன் மார்பில் முகம் புதைத்துக் கேவியவளின் முதுகைத் தட்டிக் கொடுத்துத் தேற்றினான். நெருப்புக்கங்குகள் இருந்த கண்களில் ஈரம். ஒரு ஆழமான பெருமூச்சுக்குப் பிறகு சிவராமனின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

“ஒரு விதத்துல சுமிக்கு இந்த நிலமை வந்ததுக்கு நாம ரெண்டு பேருமே காரணமாயிருந்திருக்கோம் விநோ. ‘நீயும் சுமியும் அக்கா தங்கச்சியா’ன்னு மத்தவங்க கேட்டப்ப நீ ஒன்னோட அழகைப் பத்தியும், இளமையப் பத்தியும் கர்வப்பட்டுக்கிட்ட. ‘நா கல்யாணமானவனா பாச்சிலாரா’ன்னு சில பேர் சந்தேகப்பட்டப்ப நா சந்தோஷப்பட்டுக்கிட்டேன். நாம ரெண்டு பேருமே நம்மோட இளமைய அங்கீகரிக்க மறந்துட்டோம். மெச்யூரான பொண்ணு ஒண்ணு நமக்கு இருக்குன்னு உணர்றதுக்கு ஒனக்கும் எனக்கும் மெச்யூரிட்டி இல்லாமப் போச்சு. இப்ப நம்மப் பொண்ணோட உயிரும், நம்மோட மானமும் ஆபத்துல இருக்கு. ஆமா, இந்த விஷயம் ஸ்கூல் பூராத் தெரியுமா?”

“நல்ல வேளையா இந்த விஷயத்துல ப்ரின்ஸிபால் ரொம்பப் பொறுப்பா இருந்திருக்காங்க. அவங்களுக்கும், டெஸ்ட் எடுத்த ரெண்டு டாக்டர்களுக்கும் தவிர வேறே யாருக்குமே விஷயம் தெரியாதாம். டீச்சர்ஸ், ஸ்டூடன்ட்ஸ் யாருக்குமே தெரியாது.”

“அப்பாடி, ஓரளவுக்கு நம்ம மானம் தப்பிச்சது. ஆமா சுமிக்கு?”

“அவளுக்குத் தெரியவே தெரியாது.”

“குட். தெரிய வேண்டாம். தெரியவே கூடாது. விநோ, போன மாசம் மெட்ராஸ்க்குப் போயிருந்தப்ப ரோட்டரி க்ளப்ல எய்ட்ஸ் பத்தி ஒரு லெக்ச்சர் இருந்தது. டாக்டர் ஷ்யாம் சுந்தர் என்னை கெஸ்ட்டாக் கூப்ட்டுட்டுப் போனார். அதுல சொன்னாங்க, ஹெச்.ஐ.வி பாஸிட்டிவ்வா டெஸ்ட் பண்ணினாக்கூட உடனடியா உயிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லியாம். ஜலதோஷம், காச்சல் மாதிரி சின்னச் சின்ன சுகவீனங்களுக்கு உடனுக்குடனா ஸின்ஸியரா ட்ரீட்மென்ட் எடுத்துட்டிருந்தா, பத்துப் பன்னிரண்டு வருஷம் கூடத் தாக்குப் புடிக்குமாம். எய்ட்ஸ் வைரஸ் ஆக்ட்டிவ் ஆகி உயிரைப் பலி வாங்கறதுக்கு வருஷக் கணக்குல ஆகறதுக்குச் சான்ஸ் இருக்காம். ஸோ, சுமிக்கு உடனடியா ஆபத்து ஒண்ணுமில்ல. அதை நெனச்சு நாம கவலைப்பட்டுக்கிட்டே இருக்க வேண்டிய அவசியமுமில்ல. இப்ப நாம செய்ய வேண்டிய காரியம், சுமியை ஜாக்ரதையாப் பாத்துக்க வேண்டியது. இந்த விபரீதம் அவளுக்குத் தெரிய வராம கவனமா இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம். எத்தனை வருஷம் அவ உயிரோட இருக்காளோ, அவ நம்மோட இருக்கற வரைக்கும் சந்தோஷமா வச்சிருந்து, அவ போகும்போது சந்தோஷமா வழியனுப்பி வைப்போம்.”

கடைசி வாக்கியத்தை உச்சரிக்கிறபோது சிவராமன் தன் வசமிழந்து அழுதான்.

இப்போது அவனைத் தேற்ற வேண்டியது விநோவின் பொறுப்பாயிற்று.

சிவராமன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு,”விநோ நாம பேசி ரெகார்ட் பண்ணி வச்சிருந்தோமே, அந்தக் காஸெட் வேண்டாம். ஞாபகமா எரேஸ் பண்ணிரு” என்றான்.

பிறகு, திடீரென்று ஞாபகம் வந்தவனாய், ”விநோ, ஒன்னோட அந்த சித்தெரும்புக் காஸெட் எங்கயிருக்கு?” என்று கேட்டான்.

டிராயரைத் திறந்த அவள் அதைக் கையிலெடுத்ததுதான் தாமதம், அவளிடமிருந்து அந்தக் காஸெட்டைப் பிடுங்கி ‘விர்ர்ர்’ரென்று டேப்பை வெளியே இழுத்து வெறிபிடித்த மாதிரி அதை இஷ்டத்துக்கு அற்றுப் போட்டான், அதை வைது கொண்டே.

“சித்தெரும்பு கடிக்கிதாம். ஒன்னச் சேராமே அடிக்கடி ராத்திரி துடிக்கிதாம். துடிக்கும்டா ராஸ்க்கல்ஸ்.”

பிறகு, பெட்டியைத் திறந்து அந்தப் பத்திரிகையை எடுத்து சுக்கல் சுக்கலாய்க் கிழித்துப் பறக்க விட்டான்.

“காதலிய சினிமாத் தியேட்டர்ல உக்காந்து இருட்டுல தடவுறது எப்படி, முத்தங் குடுக்கறது எப்படின்னு ஆராய்ச்சிக் கட்டுரையா எழுதுறீங்க, படுபாவிங்களா! நீங்க எல்லாரும் சேந்துதானேடா எம் மகளைக் கற்பழிச்சுக் கொன்னுட்டீங்க...”

அவன் திரும்பவும் நொறுங்கிப் போய்விடாமல் இறுக்கிப் பிடித்த விநோ அவனை அப்படியே ஸோஃபாவில் சரித்தாள்.

“நா பொம்பள. நானே மனசத் தேத்திக்கிட்டேன். நீங்க ஆம்பள. பொம்பள மாதிரி அழுதா எப்படிங்க? நீங்கதானே சொன்னீங்க, சுமி உயிருக்கு உடனடியா ஆபத்தில்லன்னு சொன்னாங்கன்னு. அதையே நம்புவோம். இனி, மேல ஆக வேண்டியதப் பாப்போம்.”

கொஞ்ச நேரத்துக்கப்புறம் சிவராமன் சமனப்பட்டு, திரும்பவும் பேசினான்.

“விநோ, நீ கவனிச்சியா, முந்தியெல்லாம் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ் லவ் பண்ற மாதிரி சினிமா எடுப்பாங்க. இப்ப, ஸ்கூல் பசங்க லவ் பண்ற மாதிரிப் படம் எடுக்கறானுங்க பாஸ்ட்டர்ட்ஸ். டீன் ஏஜர்ஸ்ஸைக் கெடுத்து நாசமாக்கறது இவனுங்கதானே! இன்னுங் கொஞ்ச நாள் போனா எல்.கே.ஜி, யூ.கே.ஜி கொழந்தைங்க லவ் பண்ற மாதிரிப் படம் எடுத்தாலும் எடுப்பானுங்க, பாவிப் பசங்க!.”

“அதப்பத்தி இப்ப நமக்கு என்னங்க! நமக்குத்தான் வெள்ளம் தலைக்கி மேலே போயிருச்சே! அடுத்து என்னன்னு யோசிப்போம்.”

“அடுத்து என்ன, அந்தப் பையன் யாருன்னு கண்டு புடிக்கணும்.”

சிவராமன் இதைச் சொன்னதும் வினோ பதறிப்போனாள்.

“நீங்க என்னங்க திரும்பவும் முருங்க மரத்துல ஏர்றீங்க! அதெல்லாம் வேணாங்க. ஆனது ஆய்ப்போச்சு, இப்ப அந்தப் பையனக் கண்டுபிடிச்சி நீங்க ஏதும் செய்யப்போக எல்லாம் விபரீதமாயிரும், விஷயமும் வெளிய பரவிரும்.”

சிவராமன் அவளுடைய தோளைத் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தினான்.

“அவனக் கண்டு பிடிச்சுப் பழி வாங்கணும்னு நா சொல்லலம்மா. அவனும் ஒரு பெரிய இடத்துப் பையனாத்தான் இருப்பான். நம்மள மாதிரி ஒரு அஜாக்கிரதையான அம்மா அப்பா அவனை சுதந்திரமா விட்டிருப்பாங்க. ஆம்பளைப் பையனாச்சே. வசதியான பையன் வேற. சும்மா ஜாலியா இருந்திருப்பான். எங்கேயோ போய் எய்ட்ஸ் வாங்கிட்டு வந்து சுமிக்கு இலவசமாக் குடுத்துட்டான். இப்ப சுமியை நாம வீட்டோட வச்சிக்கிறோம். ப்ராப்ளம் இல்ல. ஆனா சுதந்திரமா இருக்கற அந்தப் பையன் இன்னும் எத்தனை பொண்ணுங்களுக்கு இந்த வியாதியக் குடுக்கப் போறானோ, அந்தப் பொண்ணுங்கட்டயிருந்து எத்தன பையங்களுக்கு இது பரவப் போகுதோ தெரியாதே. இப்ப இந்தப் பையனக் கண்டுபிடிச்சு நாம கட்டுப்படுத்திட்டா, பல உயிர்கள நாம காப்பாத்தின மாதிரி. இத்தனை நாள் நாம விளையாட்டுத்தனமா இருந்திட்டோம் விநோ. இப்ப நாம அதுக்குப் பிராயச்சித்தம் செய்யற மாதிரி கொஞ்சம் தொலைநோக்கோட சிந்திக்க வேண்டிய நேரம் வந்திருக்கு. இந்தப் பையனோட நின்னு போகாம இவன் எவட்டயிருந்து இந்த வியாதிய வாங்கினான்னு கண்டுபிடிச்சு அந்தப் பொண்ணை ஹவுஸ் அரஸ்ட்ல வைக்க ஏற்பாடு பண்ணணும். அப்புறம் அந்தப் பொண்ணு எவன்ட்டயிருந்து சுவீகாரம் பண்ணினான்னு ட்ரேஸ் பண்ணணும். இப்படியே இந்தச் சங்கிலியப் புடிச்சிக்கிட்டுக் கணுக்கணுவா முன்னேறி இந்த மனிதச் சங்கிலியோட மறுமுனையக் கண்டுபிடிக்கணும்.”

“இதெல்லாம் நடக்கற காரியமாங்க!”

“முயற்சி செஞ்சா முடியாத காரியமில்ல விநோ. எய்ட்ஸ் ஆரம்பிச்சது அமெரிக்காலயும் ஆஃப்ரிக்காலயும் தானாம். நாம இந்த மனிதச் சங்கிலியப் புடிச்சிக்கிட்டு அமெரிக்காவுக்கோ ஆஃப்ரிக்காவுக்கோ போயிர முடியாதுதான். ஆனா நம்ம மதுரையிலயிருக்கிற அரசரடி வரைக்குமோ, அனுப்பானடி வரைக்குமோ நாம முன்னேறலாமில்லியா? உலகளவுல எய்ட்ஸ் வேதனையக் கட்டுப்படுத்த நம்மால எதுவும் செய்ய முடியாதுதான்; ஆனா, இந்த மதுரைக்கு வந்த சோதனையையாவது ஓரளவுக்கு நிவர்த்தி பண்ணலாமில்லியா?”

விநோ அவன் மேல் சரிந்து இறுக அணைத்துக் கொண்டாள்.

“ஷிவ் யூ ஆர் கிரேட். ரியலி கிரேட்! நாம நிச்சயமா இதைச் சாதிப்போம். இனி இதுதான் நமக்கு வாழ்க்கை!”

ரெண்டு பேரும் அந்தப் பரஸ்பர ஆதரவு நிலையிலேயே கொஞ்ச நேரம் நீடித்தார்கள். அப்புறம், விநோ அவனிடமிருந்து விலகி, ”சுமி ரெடியாயிருப்பா, நா போய் போல்ட்டத் திறந்து விட்டுட்டு வந்துர்றேன்.” என்று எழுந்து போனாள். அறைக்கதவின் வெளித்தாழ்ப்பாளை விலக்கிவிட்டு வந்து ஸோஃபாவில் கணவனின் கையைப் பின்னிக் கொண்டு உட்கார்ந்தாள்.

சில நிமிஷங்களில் கதவைத் திறந்து கொண்டு, பளிச்சென்று வெளியே வந்தாள் சுமித்ரா.

“மம்மி, நா ரெடி. போலாமா?”

மகளைப் பாசத்தோடும் பரிவோடும் பார்த்து விநோ சொன்னாள்:

“இன்னும் டைம் ரொம்ப இருக்கு சுமி. நீ கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணு.”

-குமுதம் ஸ்பெஷல் - மே, 1996.

# விஸ்வநாதன் ராமமூர்த்தி

லாட்டரி முடிவைப் பேப்பரில் பார்த்த போது ஆச்சர்யமும் சந்தோஷமும். அநியாய சந்தோஷம். அஞ்சு லட்சம் சந்தோஷம். கப்சிப்பென்று அரை நாள் லீவ் போட்டுவிட்டு, வீட்டுக்கு வந்து இவளிடம் சமாசாரத்தை சொன்னபோது புளகாங்கிதத்தில் திக்குமுக்காடிப் போனாள். அப்படியே என்னை பெட்ரூமுக்குள்ளே தள்ளிக் கொண்டு போய்க் கதவைத் தாழிட்டாள். ரெண்டு பேரும் இந்த சந்தோஷத்துக்கு ஒரு பதினஞ்சு நிமிஷம் விழா எடுத்தோம்.

“வெளியே போகணும்மா; அருப்புக்கோட்டக்கி உடனே எஸ்.டி.டி போட்டுப் பேசணும்” என்று நான் எழுந்து கொண்டபோது, புருவங்களை நெறித்து, “எதுக்கு?” என்று சந்தேகப்பட்டாள்.

“என்ன எதுக்குங்கற, இந்த விஷயத்த இக்பாலுக்கு சொல்ல வேண்டாமா? இந்த அஞ்சு லச்சத்துல ஃபிஃப்ட்டி பர்ஸன்ட் அவனுக்கு சேரணுமில்ல!”

இன்னுமொரு” எதுக்கு?”

இந்த முறை புருவங்கள் முன்னிலும் அதிகமாய் நெறிபட்டன.

“எனக்கும் இக்பாலுக்கும் ஒரு அக்ரிமென்ட் இருக்குல்ல?”

“என்ன பெரிய அக்ரீமென்ட்? அவருக்கென்ன எழுதியா குடுத்திருக்கீங்க?”

“மண்டு. ஃப்ரண்ட்ஸ்க்குள்ள எழுதியா குடுப்பாங்க? எல்லாம் ஜென்டில்மென்ஸ் அக்ரிமென்ட்தான்.”

“ஐயா ஜென்டில்மேன் சார், ஒங்க அக்ரிமென்டச் சுருட்டி ஒரு மூலையில வைய்ங்க. மொதல்ல பொழக்கத் தெரிஞ்ச மேனா மாறுங்க.”

“ஏய், நீ என்ன சொல்ற? இக்பாலை மோசடி பண்ணச் சொல்றியா?”

“மோசடியாவது மண்ணாங்கட்டியாவது! பெரிய பெரிய வார்த்தையெல்லாம் போட்டு நீங்களே ஒங்களை சங்கடப்படுத்திக்காதீங்க.”

“இந்தா பாரும்மா, எங்க அக்ரிமென்ட்டப் பத்தி ஒனக்கு நா வெவரமா சொல்லியிருக்கேனோ இல்லியோ எனக்கு ஞாபகமில்ல. இப்ப சொல்றேன் கேட்டுக்க. ரெண்டு வருஷமா இது அமுல்ல இருக்கு. ஒரு மாசம் அவனும் மறுமாசம் நானும் மாறி மாறி லாட்டரி டிக்கட் வாங்க வேண்டியது. அவன் வாங்கினா, அந்த டிக்கட்டுக்கு ஒரு ஜெராக்ஸ் காப்பி எடுத்து எனக்கு மெட்ராஸ்க்கு அனுப்பிருவான். அதே மாதிரி நா வாங்கினா ஒரு ஜெராக்ஸ் காப்பி அவனுக்கு அருப்புக்கோட்டக்கி அனுப்பணும். யாருக்கு விழுந்தாலும் ஃபிஃப்ட்டி ஃபிஃப்ட்டி.”

“ஐயையோ, அருப்புக்கோட்டக்கி ஜெராக்ஸ் அனுப்பிச்சிட்டீங்களா?”

“காப்பி எடுத்து, லெட்டர் எழுதி, கவர்ல போட்டு, அட்ரஸ் எழுதி, ஸ்டாம்ப் ஒட்டி நாலு நாளா அது என் ஹார்ன்ட் பேக்ல தூங்குது. டெய்லி மறந்து மறந்து போறேன்.”

“அப்பா! எங்க, அதக் காட்டுங்க?”

கைப்பையைத் துளாவிக் கவரை நான் கையில் எடுத்ததுதான் தாமதம், படக்கென்று அதைப் பிடுங்கி நாலாய்க் கிழித்து ஜன்னலுக்கு வெளியே எறிந்துவிட்டாள்,”ஏய் ஏய், என்ன செய்ற” என்று நான் தடுக்க முயன்றதை மீறி.

“இப்ப ஒண்ணும் தப்பு நடந்துரல, பதறாதீங்க. சமத்தாக் கொஞ்ச நேரம் படுத்துருங்க, ஸ்வீட் செஞ்சு கொண்டு வர்றேன்.”

சதி.

‘சும்மா வாய் வார்த்தைகளால் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மதித்து இந்த அஞ்சு லட்சத்தில் ஏன் அநாவசியமாய் இன்னொருவனுக்கு பங்கு கொடுக்கப் போகிறாய், அவனுக்குத்தான் பரிசு விழுந்தது தெரியவே தெரியாதே, அத்தனையும் அமுக்கிக் கொண்டு சத்தமில்லாமல் கிட!’ என்கிறாள்.

‘எந்த விதத்தில் நியாயம்?

நட்புக்குத் துரோகமில்லையா?

இந்த லாட்டரி டிக்கட் ஐடியாவை ரெண்டு வருஷங்களுக்கு முந்தி கொடுத்ததே இக்பால்தான். போன மாசம்வரை இந்தத் திட்டம் ஒழுங்காய்த்தான் நடந்து கொண்டிருந்திருக்கிறது’.

போன வருஷம் இக்பால் சென்னைக்கு வந்திருந்தபோது கேட்டேன்.”ஒரு பேச்சுக்குக் கேக்கறேன் இக்பால், தப்பித் தவறி நமக்கு ஒரு அஞ்சு லட்சமோ பத்து லட்சமோ, விழுந்துருச்சுன்னு வச்சுக்குவோம், நாம என்னடா பண்றது?”

நான் விளையாட்டுத்தனமாய்க் கேட்டு வைத்ததற்கு அவன் ரொம்ப ஸீரியஸ்ஸாய் பதில் சொன்னான், கண்களில் கனவுகளோடு.

“அதுக்கு நா ஒரு ப்ளான் வச்சிருக்கேன் மக்கா. நாம ஒரு சினிமா எடுக்கப் போறோம்.”

“சினிமாவா?”

எனக்கு சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“சினிமாவைப் பத்தி ஒனக்கும் எனக்கும் என்னடா தெரியும்? ஒரு வேளை நமக்கு ப்ரைஸ் விழுந்தா, நாம ஒண்ணு வேணா பண்ணலாம். ஆளுக்கொரு வி.ஸி.ஆர் வாங்கி தினமும் வீட்ல புதுசு புதுசா சினிமாப் போட்டுப் பாக்கலாம்.”

“புதுப் படமா? நோ. புதுப் படங்களுக்கு நா எதிரி. முக்கியமா இப்ப புதுப் படங்கள்ள வர்ற கண்றாவிப் பாட்டுக்களுக்கு நா பரம எதிரி. அதனாலதான் நாமளே ஒரு படம் எடுக்கணும்னு ஆசப்படறேன்.”

“நீ படம் எடுத்தா, புதுப்படம் எடுக்காம பழைய படம் எடுப்பியாக்கும்?”

“சிரிக்காத மக்கா. படம் புதுசுதான். டெக்னிக்ஸெல்லாம் இந்தக் காலத்து அட்வான்ஸ்டு டெக்னிக்ஸா இருக்கும். ஆனா பாட்டுக்கள் இந்தக் காலத்துப் பாட்டுக்கள் மாதிரி அருவருப்பா இருக்காது. பழைய பாட்டுக்கள் மாதிரி இனிமையாயிருக்கும், தேனா இனிக்கும், கேக்க சுகம்மாயிருக்கும், ஆளைக் கிறங்கடிக்கும். நம்ம படத்துக்கு மியூஸிக் யார் தெரியுமா?”

“ஜி.ராமநாதன்? டி.ஜி.லிங்கப்பா? மாஸ்டர் வேணு? எம்.பி.ஸ்ரீநிவாசன்? சலபதி ராவ்? ஆர்.சுதர்சனம்? வேதா? ஏ.எம்.ராஜா? எஸ்.எம்.சுப்பையா நாயுடு? டி.ஆர்.பாப்பா?”

“கிண்டல் பண்ற. பரவாயில்ல. ஆனாலும் நீ சொன்ன இவங்கள்ளாம் மியூஸிக் ஜீனியஸ்கள்தான். பட், நா சொல்ல வந்தது இவங்களுக்கும் ஒரு படி மேல. மெல்லிசை மந்திரவாதிகள் விஸ்வநாதன் ராமமூர்த்தி!”

“அவங்க பிரிஞ்சு போய்த்தான் முப்பது வருஷத்துக்கு மேலே ஆயிடுச்சே கண்ணா!”

“ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். அவங்க திரும்ப ஒண்ணு சேந்து மூணு வருஷம் ஆச்சு. டேட் வேணுமா? ஜூலை பதினாலு, 1994. ஆனா, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த இணைப்பு, சினிமா உலகத்திலயும் சரி அதுக்கு வெளியிலயும் சரி போதிய கவனிப்பைப் பெறாமப் போனது துரதிருஷ்டம். ஒனக்கே தெரியல பார். இட்ஸ் ஓக்கே. ஆனா மக்கா, நீ வேணா பாரு, நமக்கு லாட்டரி மட்டும் அடிக்கட்டும். நாம படம் எடுக்கத்தான் போறோம், நம்ம படத்துக்கு மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைக்கறாங்கன்னு அமர்க்களமா பப்ளிஸிட்டி தரத்தான் போறோம், விஸ்வநாதன் ராமமூர்த்தி மியூஸிக்ல டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா, பி.பி.ஸ்ரீநிவாஸ், எல்.ஆர்.ஈஸ்வரி எல்லாரும் பாடி தமிழ் ரசிகர்களத் திக்குமுக்காட வைக்கப் போறாங்க. நம்ம படப்பாட்டுகள் எல்லாம் ‘ஓஹோ’ன்னு ஹிட் ஆகப்போகுது. அம்பது அறுபது எழுபதுகள்ள இருந்த தமிழ் சினிமாப் பாட்டின் பொற்காலம் திரும்பவும் வரத்தான் போகுது, கள்ளத் தொண்டையில பாடற இந்தக் கற்காலம் காலாவதியாகத்தான் போகுது, சினிமா ரசிகர்களோட இசை ரசனைய நாமதான் மேம்படுத்தப்போறோம், தமிழ் சினிமாவுல ஒரு புது சஹாப்தம் தொடங்கத்தான் போகுது...”

மூச்சு விடாமல் அடுக்கிக்கொண்டே போனான். அவனுடைய குரலிலும் கண்களிலும் அபரிமிதமான தன்னம்பிக்கை தெரிந்தது. கனவுகளில் குழைந்த தன்னம்பிக்கை.

மூணு மாசங்களுக்கு முந்தி திடீரென்று ஒரு நாள் ஆஃபீஸுக்கு எஸ்.டி.டி அடித்தான்.

“மக்கா, ஆனந்த விகடன் ஆஃபீஸ்ல யாராவது தெரியுமா ஒனக்கு?”

“ஏன், தொடர் கதை எழுதலாம்னு இருக்கியா?”

“அதில்ல மக்கா, விகடன்ல நம்ம ஆள் எம்.எஸ்.வி தொடர் கட்டுரையொண்ணு எழுதிட்டிருந்தார் நாலு வருஷம் முந்தி. அற்புதமான கட்டுரை. பின்னாடி அது புஸ்தகமா வரும்னு நெனச்சேன், இதுவரைக்கும் வந்ததாத் தெரியல. அதனால அந்தக் கட்டுரை வந்த பழைய இஸ்யூஸ் எல்லாம் கெடைக்குமான்னு விசாரிக்கணும்.”

அப்புறம் ஒரு மாசம் கழித்து இன்னுமொரு எஸ்.டி.டி.

“மக்கா, மூணு வருஷத்துக்கு முந்தின குமுதம் ஒண்ணு தற்செயலாக் கண்ணுல பட்டுச்சு. அதுல ஒரு முக்கியமான விஷயம் பாத்தேன். அதச் சொல்லத்தான் ஃபோன் எடுத்தேன்.”

“என்னடா இது இக்பால், பழைய ஆனந்த விகடனுக்கு ஒரு எஸ்.டி.டி, பழைய குமுதத்துக்காக இன்னொரு எஸ்.டி.டி, என்னடா இது அதர்மம் பண்ற!”

“சொல்றதக் கேளு மக்கா, ஏப்ரல் பதினாலு 1994 குமுதம் இது. இதுல சினிமா பத்தி ஒரு ஆர்ட்டிக்கிள் வந்திருக்கு. அதுல போட்டிருக்கு, ஒரு படம் எடுக்கக் கொறஞ்சது நாப்பது லச்சம் வேணுமாம். அது அஞ்ச வருஷத்துக்கு முந்தி. இப்ப இன்னும் அதிகமா ஆகும்.”

“சரி, அதுக்கென்ன இப்ப?”

“விஷயம் இருக்கு மக்கா. இனிமே நீ டிக்கட் வாங்கறப்ப அஞ்சு லச்சம் பத்து லச்சமெல்லாம் வாங்காத. அம்பது லச்சத்துக்கு மேல இருக்கற சீட்டாப் பாத்து வாங்கு. சொல்றத காதுல வாங்கிக்கிட்டியா?”

“ம். வாங்கிக்கிட்டேன். அவ்வளவுதானா இன்னும் ஏதாவது சொல்லணுமா?”

“அப்பறம் இன்னொரு விஷயம். சினிமா பத்தி அறந்தை நாராயணன் ஒரு புக் எழுதியிருக்காராம். அருப்புக்கோட்டையில அலஞ்சு அலஞ்சு தேடினேன். கெடக்யல. அங்க மெட்ராஸ்ல தேடிப் பிடிச்சி வாங்கி அனுப்புறியா?”

‘... இவ்வளவு ஆர்வமாயிருக்கிற சிநேகிதனை அநியாயமாய்த் துரோகிக்க நிர்பந்திக்கிறாளே...’

தட்டு நிறைய ஸ்வீட்டோடும் காஃபியோடும் வந்தவள் முன்னால் கடைசி கடைசியாய் ஒரு கருணை மனுவை சமர்ப்பித்தேன்.

“ஏம்மா, கொஞ்சம் யோசிச்சுப் பாரு. நிதானமா யோசிச்சுப்பாரு, தர்மஞாயப்படி யோசிச்சுப் பாரு. இந்த லாட்டரி டிக்கட் ஐடியாவக் குடுத்ததே இக்பால்தான். ப்ரைஸ் விழும்னு அவன் ரொம்ப நம்பிக்கையோட இருந்தான். அம்பது லச்சம் எதிர்பார்த்தான், பரவாயில்ல, அஞ்சோட அக்கவுன்ட் ஆரம்பமாயிருக்கு. ப்ரைஸ் விழுந்தா நானும் அவனும் சேந்து சினிமா எடுக்கணும்னு ஆசப்பட்டான். விஸ்வநாதன் ராமமூர்த்தியோட டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா, பி.பி.ஸ்ரீநிவாஸ், எல்.ஆர்.ஈஸ்வரி எல்லாரையும் எங்க பானருக்குக் கீழ கொண்டு வரணும்னு கனவு கண்டுட்டிருந்தான்...”

“எதுக்கு, குரூப் ஃபோட்டோ எடுக்கவா? பெரிய மஹாத்மா! ரிட்டயர்டு கேஸ்ங்களுக்கெல்லாம் மறுவாழ்வு தந்து புண்ணியங் கட்டிக்கப் போறாராக்கும்! டிக்கட்டப் பாக்கெட்லதான வச்சிருக்கீங்க?”

உரிமையோடு சட்டைப்பைக்குள் கையைவிட்டு டிக்கட்டை எடுத்து மடித்து ஜாக்கெட்டுக்குள் பாதுகாத்துக் கொண்டாள்.

பணம் வந்தவுடன் வாஷிங்மெஷினும் வி.ஸி.ஆரும் வாங்க வேண்டுமென்றாள். ‘மாருதி ஒன்று, ஸெகண்ட் ஹார்ன்டாவது உடனடியாய் வாங்க வேண்டும்’ என்றாள். பட்டுப் புடவைகளுக்கு ஒரு பட்டியல் போட்டாள். ‘சாயங்காலம் பிளாக்கில் வாங்கியாவது ஒரு புதுப்படம் பார்த்துவிட வேண்டும்’ என்றாள். ‘அப்புறம் ராத்திரி ஆற அமர இன்னொரு விழா எடுக்க வேண்டும்’ என்று நாணத்துடன் சொன்னாள்.

“அதெல்லாம் செய்வோம், ஆனா சினிமாவுக்கு நாளக்கி ஒண்ணாந்தேதி சம்பளம் வாங்கிப் போய்க்குவமே...”

“ஆமா பெரிய சம்பளம்! சொளையா அஞ்ச லட்சம் கைக்கு வரப்போகுது, நீங்க இந்தப் பிசாத்து எட்டாயிரத்தப் பத்திப் பேசறீங்களே.”

‘ரொம்பப் பெரிசாய்த்தான் கோட்டை கட்டுகிறாள். ஆண்டவன் எந்த பீரங்கியை எங்கே ஒளித்து வைத்திருக்கிறானோ!’

தியேட்டரில் வைத்து என்னை ஒரு வழியாய் பிரெய்ன் வாஷ் செய்து முடித்துவிட்டாள். ஆட்டோவில் வீட்டுக்குத் திரும்புகிறபோது என் மூளை ரொம்ப சுத்தமாய், ரீகல் சொட்டு நீலம் போட்ட வெள்ளையாய்...

‘...படமெடுக்கக் குறைந்தது நாற்பது லட்சம் வேண்டுமென்றாயே நண்பா. நீ சொன்னபடி நான் ஐம்பது லட்சத்துக்கு டிக்கட் வாங்கினாலும் மூணாம் பரிசுதான் கிடைத்தது. இந்த அஞ்சு லட்சத்தை வைத்துக் கொண்டு இன்ட்டர்வல் வரை கூட படமெடுக்க முடியாதே... அதனாலே... அதனாலே என்னை மன்னித்துவிடு நண்பனே!...’

ராத்திரி, கிச்சனில் இவள் ஃபினிஷிங் டச்சஸ் கொடுத்துக் கொண்டிருந்த போது, உடை மாற்றிக் கொண்டு விட்டத்தைப் பார்த்தபடி கட்டிலில் கிடந்தேன். அன்றைக்குத் திங்கட்கிழமை என்று திடீரென்று உறைத்தது. முன்னொரு முறை இக்பால் சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது.

“மக்கா, திங்கக்கிழமை ராத்திரி பத்து ட்டு பதினொண்ணு மெட்ராஸ் ரேடியோல பாட்டுக் கேளு. எல்லாம் பழைய பாட்டு. ஒவ்வொண்ணும் சாகாவரம் பெற்ற பாட்டு. லைட்ட ஆஃப் பண்ணிட்டு கண்ண மூடிட்டு அந்தப் பாட்டுகளக் கேட்டுக்கிட்டிருந்தாலே போதும். சொர்க்கம்.”

டிரான்ஸிஸ்டரைத் தட்டிவிட்டேன். என் நேரத்துக்கு பதி பக்தி, பாவ மன்னிப்பு, பாசமலர், பாலும் பழமும், பார்த்தால் பசி தீரும், படித்தால் மட்டும் போதுமா? என்று பீம்சிங் - சிவாஜி காம்பினேஷனில் ஒரே விஸ்வநாதன் ராமமூர்த்தி மயம்.

குற்ற உணர்வு குறுகுறுத்தது.

காலையில் இவளிடம் டிக்கட்டைக் கேட்டேன்.

“எதுக்கு?”

“ஆஃபீஸ் போற வழியில அந்த லாட்டரிக் கடைக்காரன்ட்ட காட்டி எப்படி ப்ரைஸ் வாங்கறதுன்னு கேட்டுக்குவேன்ல?”

“டிக்கட்டெல்லாம் கையில் வச்சிக்கிட்டு அலையாதீங்க, எங்கயாவத மிஸ் பண்ணிருவீங்க, அப்புறம் கைக்கு எட்னது வாய்க்கு எட்டாமப் போகப் போகுது.”

ஒரு துண்டுப் பேப்பரில் நம்பரைக் குறித்துக் கொடுத்தாள்.

“ஆஃபீஸ்ல யார்ட்டயும் இந்த விஷயமா மூச்சு விடாதீங்க. இன்னிக்கி பூரா யார்ட்டயும் பேச்சுக் குடுக்காதீங்க.”

காலரை உயர்த்திவிட்டுக் கொண்டு பந்தாவாய் லாட்டரி டிக்கட் கடைக்குப் போனபோது, ஒரு வி.ஐ.பியை எதிர்கொள்ளுகிற எந்தவித விசேஷ உணர்ச்சியோ பரபரப்போ இல்லாமல் ஒரு ஜடமாய் கடைக்காரன் என்னைப் பார்த்தான்.

‘... நான் யாரென்று புரிகிற போது இப்படி உம்மணா மூஞ்சியாய் உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டாய் மகனே. இப்போது பார் வேடிக்கையை...’

“ப்ரைஸ் எப்பங்க கெடைக்கும்?”

“என்ன ப்ரைஸ்?”

“என்ன ப்ரைஸா? நேத்து ரிஸல்ட் வந்ததே அதுல அஞ்சு லட்சம் அடிச்சிருக்குல்ல?”

நம்பாமல், நம்பரை என்னிடம் பெற்றுப் பிரித்தான், பிறகு சிரித்தான்.

“சாரி சார். இது ஏ எக்ஸ் ஸீரீஸ். ப்ரைஸ் விழுந்தது ஏ இஸட்ங்க. கைக்கு எட்னது வாய்க்கு எட்டாமப் போயிருச்சே சார்!”

அதிர்ச்சி. ஏமாற்றம்.

அடுத்த கணமே, ‘சிநேகிதனுக்கு நான் செய்யவிருந்த அநீதிக்கு ஆண்டவன் புகட்டிய பாடம்’ என்று இதை நான் ஏற்றுக் கொண்டு பக்குவப்பட்டுவிட்டதால் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அவ்வளவாய் உறைக்கவில்லை.

‘அநியாயமாய் ஆசைகளை வளர்த்துக் கொண்டிருக்கிற என்னவளுக்குத்தான் இது ரொம்பப் பெரிய அதிர்ச்சியாயிருக்கும்’.

‘அதிரட்டும். அவளுக்கு இது தேவைதான். அவள் பேச்சைக் கேட்டு நானுமல்லவா குப்புற விழப் பார்த்தேன்!’

பளிச்சென்று ஒரு பொறி தட்டியது.

‘அட, இன்றைக்கு சம்பள நாளாச்சே!’

ஆஃபீஸுக்குள் பிரவேசிக்கிறபோது தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்திருந்தேன்.

சம்பளத்துக்குக் கையெழுத்துப் போட காஷியரிடம் போன போது, “என்ன சார் இது, என்னைக்கும் இல்லாத அதிசயமா மொத ஆளா வந்து நிக்கிறீங்க?’ என்று ஆச்சர்யப்பட்டார்.

ஒரு புன்னகையை அவருக்கு பதிலாய்த் தந்துவிட்டுக் கவரைப் பெற்றுக் கொண்டு முக்கால் மணி நேரப் பர்மிஷனில் பக்கத்து பாங்க்குக்குப் போனேன். நாலாயிரம் ரூபாய்க்கு இக்பால் பெயருக்கு ஒரு டிராஃப்ட்.

ஃபிஃப்ட்டி, ஃபிஃப்ட்டி.

டிராஃப்ட்டோடு நண்பனுக்கு ஒரு கடிதம்.

“...போன மாசம் வாங்கின டிக்கட்டுக்கு ஜெராக்ஸ் எடுத்து உனக்கு அனுப்ப முடியாமல் தள்ளிக் கொண்டே போய்விட்டது. நேற்று பேப்பரில் ரிஸல்ட்டைப் பார்த்தபோது ஓர் இன்ப அதிர்ச்சி. நமக்கு எட்டாயிரம் ரூபாய் விழுந்திருக்கிறது. உன் பங்கு நாலாயிரம் ரூபாய்க்கு ஒரு டி.டி எடுத்து இத்துடன் இணைத்திருக்கிறேன். ‘பரிசுத் தொகை அதற்குள் கைக்குக் கிடைத்துவிட்டதா?!’ என்று நீ அதிசயப்படுவாய். இன்னும் கிடைக்கவில்லைதான். ஆனாலும் இந்த நல்ல விஷயத்தை உன்னோடு முழுமையாய் உடனடியாய்ப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று ஒரு உந்துதல். கையில் கொஞ்சம் பணம் இருந்தது. உனக்கு அனுப்பிவிட்டேன். பரிசுத்தொகை லேட்டாய்த்தான் கைக்கு வரும். கமிஷன் கழிப்பான். அதையெல்லாம் அப்புறமாய்க் கணக்குப் பார்த்துக்கொள்ளலாம்.

இது ரொம்ப சின்னத் தொகைதான், உன்னுடையது ஐம்பது லட்சம் பட்ஜெட்டோடு ஒப்பிடுகிறபோது. பரவாயில்லை. இது ஆரம்பம்தான். இனி படிப்படியாய் ஆயிரமாயிரமாய் லட்சலட்சமாய் முன்னேறி உன்னுடைய லட்சியத்தை எட்டுவோம். கூடிய விரைவில் பல லட்சங்கள் பரிசு விழுந்து உன்னுடைய விஸ்வநாதன் ராமமூர்த்தி திரை இசைக் கனவுகள் நிஜமாக வேண்டுமென்று மனசார இறைவனைப் பிரார்த்திக்கிறேன்....”

கடிதத்தையும் டி.டி.யையும் தபாலில் சேர்த்துவிட்டு மனசு சமாதானமடைந்து என்னுடைய ஸீட்டில் வந்து உட்கார்ந்த அடுத்த நிமிஷமே இவளிடமிருந்து ஃபோன்.

“ஹலோ, நீங்கதான் பேசறீங்களா?”

குரலில் பிசிறடித்தது. பரிசு கைநழுவிப் போய்விட்ட விவரத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறாள்.

“நாந்தாம்மா, சொல்லு.”

“நா நம்ம பாங்குக்குப் போயிருந்தேங்க.”

“எதுக்கு?”

“நம்ம ஃப்ளாட்டுக்கு எதுத்த ஃப்ளாட்ல அஞ்சாம் நம்பர்ல இருக்காங்களே ஒரு மாமி, அவங்களுக்குப் போன வருஷம் ஒரு இருபதாயிரமோ என்னமோ விழுந்ததாச் சொன்ன ஞாபகம். அந்த மாமிகிட்ட காலைல சும்மாப் பேச்சுக் குடுத்துப் பாத்தேன். லாட்டரி டிக்கட்ட அப்படியே பாங்க் அக்கவுன்ட்ல டெபாஸிட் பண்ணிரலாம்னாங்க. நா ஒடனே நம்ம ஜாயின்ட் அக்கவுன்ட்ல போட்டுரலாம்னு அந்த டிக்கட்டயும் ரிஸல்ட் வந்த பேப்பரையும் எடுத்துக்கிட்டு நம்ம பாங்க்குக்கு ஓடினேன். அங்கே போய்ப் பாத்தா இது வேற ஸீரீஸ். எனக்கு ஷாக் ஒரு பக்கம், ஷேம் ஒரு பக்கம்.”

“ஷாக் சரி, ஷேம் எதுக்கு?”

“எதுக்கா? பாங்க்ல எல்லாரும் சிரிக்கிறாங்க. ரொம்ப அவமானமாப் போச்சுங்க. அப்பறம் வீட்டுக்கு வந்து மனசத் தேத்திக்கிட்டேன். பரவாயில்ல, எல்லாம் நல்லதுக்குத்தான். என்ன சொல்றீங்க.”

“என்ன சொல்லச் சொல்ற.”

“விரக்தியாப் பேசறீங்க. ரொம்ப அப்ஸெட் ஆயிருப்பீங்கல்ல? லாட்டரி டிக்கட் கடக்கிக் காலைல போயிருப்பீங்க. அவனும் சிரிச்சிருப்பான் இல்ல? எல்லாத்துக்கும் நாந்தாங்க காரணம். என்னோட கெட்ட புத்திக்கி இது ஒரு நல்ல பாடம். பாவம், ஒங்களையும் பிரெய்ன் வாஷ் பண்ணிக் கெடுத்துட்டேன். எம்மேல கோபமாயிருப்பீங்க. ஐம் ஸாரிங்க. ரொம்ப அசிங்கமா நடந்துக்கிட்டேன்ல? இதுக்கு நாம ஒரு ப்ராயச்சித்தம் செய்யணுங்க. எனக்கு ஒண்ணு தோணுது. சொன்னா நீங்க ஒத்துக்குவீங்களோ மாட்டீங்களோ...”

“சொல்லு.”

“சம்பளம் வாங்கிட்டீங்களா?”

“எது, இந்தப் பிசாத்து எட்டாயிரத்தக் கேக்கறியா?”

“ப்ளீஸ். நா திமிராப் பேசினது தப்புத்தான். வெந்த புண்ல வேலப் பாச்சாதீங்க. ஆமா, ஒங்க ஃப்ரண்ட் சினிமா எடுக்கறது பத்திப் புஸ்தகங்களெல்லாம் கேட்டிருந்தார்னு சொன்னீங்களே, வாங்கி அனுப்பிச்சீங்களா?”

“இதுக்குத்தான் சம்பளம் வாங்கிட்டீங்களான்னு கேட்டியா?”

“அதுக்கில்லீங்க. அந்த விஷயத்துக்கு வர்றேன். அதாவதுங்க, ஒங்களோட சம்பளப் பணத்துல ஒரு சின்னத் தொகைய எடுத்து ஒங்க ஃப்ரண்டுக்கு அனுப்பி வக்யலாமான்னு யோசிச்சேன்... என்னமோ ஒரு சின்ன லாட்டரி அடிச்ச மாதிரியும், அதுல பாதிய அவருக்கு அனுப்பிச்ச மாதிரியும். நம்மளோட... ஐ மீன், என்னோட சின்ன புத்திக்கி ஒரு

பனிஷ்மென்ட் மாதிரி, ஒரு அபராதம் கட்டின மாதிரி இருக்கும். என்னமோ எனக்குத் தோணிச்சு. முட்டாத்தனமான யோசனையாயிருந்தா மறந்துருங்க, மன்னிச்சிருங்க."

"மறக்கவாவது, மன்னிக்கவாவது? இதச் சொல்லவா நீ இவ்வளவு யோசிச்ச? இப்பத்தான் நீ என்ன மாதிரியே நெனைக்க ஆரம்பிச்சிருக்க, பேச ஆரம்பிச்சிருக்க. 'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டு'ம்னு சௌந்தரராஜனும் சுசீலாவும், விஸ்வநாதன் ராமமூர்த்தி மியூஸிக்ல பாடற மாதிரி."

உற்சாகமிகுதியால் குரலின் வால்யூமை என்னையுமறியாமல் அதிகரித்திருந்தவன், அக்கம்பக்கத்துக் கண்கள் என்னை நோக்கித் திரும்பியிருப்பதையுணர்ந்து குரலைத் தணித்து ஃபோனில் கொஞ்சினேன்:

"டார்லிங், இப்பத்தான் நீ எனக்கு என்னுயிர்த் தோழி. சக்கரக்கட்டி என் ராசாத்தி, ஐ லவ் யூ."

-1997 - பிரசுரமாகாதது.

# மத்தாப்புக் கொளுத்தும் வயசு

பெண்களோடு ஷாப்பிங் கிளம்புவதென்பது மஹா போரான காரியம். அதிலும், மனைவியோடு கிளம்பும்போது மஹா மஹா போர்.

தி.நகரில் நாலு துணிக்கடைகளில் ஏறி இறங்கிய பின் குழந்தைகளுக்கு மட்டும் ஜவுளி எடுத்தாகியது. இவளுக்குப் புடவை ஒன்றும் அமையவில்லை. ஐந்தாவது கடையில் அரை மணியையும் ஐந்நூறு ரூபாயையும் செலவு செய்த பின் ஒரு புடவை தெரிவு செய்யப்பட்டது. சுமந்து கொண்டிருந்த பார்ஸல்களை ஸ்கூட்டரின் காரியரில் வைத்துக் கட்டினேன்.

“பர்ச்சேஸெல்லாம் ஒரு வழியா முடிஞ்சதாம்மா? நேரா வீட்டுக்குத்தானே?”

“வீட்டுக்கா? அதுக்குள்ளயா? நேரா ஈவ்னிங் பஜாருக்குப் போங்க. எனக்குப் புடவை எடுக்கணும்.”

ஷாக் அடித்தது.

“புடவையா? இப்ப எடுத்தியே, அது என்ன?”

“அது எனக்குப் புடிக்கலீங்க.”

என்னடாயிது கஷ்ட காலம்!

“புடிக்கலன்னா ஏன் எடுத்த?”

“புடிக்கலங்கறதுக்காக ஒரு கடக்குள்ள நொழஞ்சுட்டு வெறுங்கையோட வெளியேறினா நல்லாயிருக்குமா, கடக்காரன் என்ன நெனச்சுக்குவான்! வந்ததுக்கு ஏதாவது வாங்கணுமேன்னு சீப்பா ஒரேயொரு புடவை எடுத்தேங்க.”

லாஜிக் புரியவில்லை.

“எத்தனையோ கடையில ஒண்ணும் வாங்காம வந்தியே. அந்தக் கடக்காரங்களெல்லாம் ஏதும் நெனச்சிக்க மாட்டாங்களா?”

“இந்தக் கடையில மட்டுந்தானேங்க கூல்ட்ரிங்க்ஸ் வாங்கிக் குடுத்தான்!”

புரிந்தது. இது தாண்டா லாஜிக்!

ஈவினிங் பஜார். டு வீலர் பார்க்கிங்கில் டிக்கட் கொடுக்கிற கார்ப்பரேஷன் பிரிதிநிதியைக் காணோம்.

“வரலை?” என்று அழைப்பு விடுத்தாள்.

“ஸ்கூட்டர்ல திங்ஸ் இருக்கே...” என்று தப்பித்தேன்.

“ஐயோ, புடவைகளை நானே சுமந்துட்டு வரணும்.” என்று அலுத்துக்கொண்டாள்.

“ஒடம்புல சுமக்கறப்ப இன்பமாயிருக்கு, கையில சுமக்கும் போது மட்டும் வலிக்குதாக்கும்? ஏய் இரு, இரு, என்ன சொன்ன. புடவைகளா? என்ன பன்மையில சொல்ற?”

“ஆமா, ஒரு புடவைன்னா ஒருமை, ஒண்ணுக்கு மேலேன்னா பன்மைதானேங்க?”

இலக்கணத்தை எனக்குப் போதித்துவிட்டு ஒரு ஆயிரம் ரூபாயோடு மாயமாய் மறைந்து விட்டாள். மெலிந்து போன பர்ஸோடு நிலையாமையை நினைத்தபடி ஸ்கூட்டரின் மேல் உட்கார்ந்திருந்தபோது பக்கத்தில் சன்னமாய் ஒரு குரல்.

“சார்.”

“......”

“சார்.”

அழுக்குச் சட்டையும் பரட்டைத் தலையுமாய் ஒரு சிறுவன். நம்ம மூத்த பையன் வயசு இருக்கும். போஷாக்குக் குறைவினால் சிறுத்துப் போய்ப் பரிதாபமாயிருந்தான். ஒரு இருபத்தைந்து காசு நாணயத்தை நீட்டினேன். மறுத்தான்.

“வண்டியத் தொடச்சிட்டு வாங்கிக்கிறேன் சார்.”

“வண்டி சுத்தமாத்தான் இருக்கு. நீ தொடைக்க வேண்டாம். இந்தா புடி.”

“சும்மா வேண்டாம் சார். தொடச்சிட்டு வாங்கிக்கிறேன் சார்.”

“அட என்னடாயிது எழவாப் போச்சு! தொடைக்க வேண்டாங்கறேன்ல? வேணும்னா காசப்புடி, இல்ல எடத்தக் காலி பண்ணு.”

பையன் விறைப்பாய்ப் பார்த்தான்.

“வேண்டாம் சார். நா பிச்சக்காரனில்ல.”

என் மூளையில் ஒரு சவுக்குச் சொடுக்கு. அவனை ஆழமாய்ப் பார்த்தேன். என் பார்வையைப் புறந்தள்ளிவிட்டு மெல்ல நகர முற்பட்டான்.

வித்யாசமான இவனை விட்டுவிடக்கூடாது.

“கொஞ்சம் இரு தம்பி. உன் ஆசைய ஏன் கெடுக்கணும். ஸ்கூட்டரைத் தொடை, காசு தரேன்.”

“ரொம்ப டாங்ஸ் சார்.”

இடது கால்சட்டைப் பையிலிருந்து பழுப்பேறிய மஞ்சள் துணியொன்றை உருவியெடுத்து ஒரு உதறு உதறிவிட்டுத் தொழிலை ஆரம்பித்தான். ஆறாவதோ, ஏழாவதோ வாசிக்க வேண்டிய வயசு. இந்தப் பிஞ்சு வயசில் எடுபிடி வேலை செய்து பிழைக்க வேண்டிய அவலத்திலிருந்து அதிர்ஷ்டக்கட்டையான சிறுவனைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

“பேர் என்ன தம்பி?”

“ஏன் சார், வண்டி ரொம்ப சுத்தமாயிருக்குன்னு பீத்திக்கிட்டீக, இங்ஙன பாருங்க பெட்ரோல் டாங்கச் சுத்தி எம்புட்டு எண்ணப்பிசுக்குன்னு!”

“அதுக்குத்தானேப்பா ஒன்னைத் தொடைக்க விட்டுருக்கேன், நல்லா அழுத்தித் தொடை.”

“ரொம்ப அழுக்கு சார். சார்ஜ் ஜாஸ்தியா ஆகும்.”

“நல்லா பேசறியே, ஸ்கூலுக்குப் போய்ப் படிச்சா என்ன.”

“இஸ்கூலுக்குப் போனா மதியம் ஒரு நேரந்தான் சோறு போடுவாக, மிச்ச நேரம் பசிக்குமே! அதான் சின்னப் புள்ளையிலேயே என்ன வேலக்கிச் சேத்து விட்டுட்டாக.”

“எது, இந்த வேலதானா?”

“சீ, இது சும்மா டெம்பரி வேல. நம்ம பெர்மனண்ட் வேல வேற சார். ஹ்ம்ம் எட்டு மாசம் போல ஆச்சு.”

“என்ன ஆச்சு?”

“பாக்டரில நெருப்புப் பத்திக்கிச்சு சார்.”

“என்ன ஃபாக்டரி?”

“சிவகாசி சார். தீப்பெட்டி பாக்டரி. எங்கய்யா, அம்மெ, அண்ணாச்சி, நானு, அல்லாருக்கும் அங்ஙனதான் வேல. சீசன்ல பட்டாசு. மிச்ச நேரம் தீப்பெட்டி. போன சீசன்ல நெருப்புப் பத்தி பாதி பாக்டரி எரிஞ்சு போச்சு. நுப்பது பேர் கருகிப் போனாக. அதுல ஐயாவும் அண்ணாச்சியும் போய்ட்டாக. அம்மயும், நானும் எங்க சின்னத்தங்கச்சியும் திருநவேலியில போய் கொஞ்ச நாள் இருந்தோம். பெறவு ரயிலேறி மெட்ராஸ்க்கு வந்துட்டோம். அம்மெ இங்ஙன வீடுகள்ல வேல செய்யுது. நா இப்படி சம்பாரிக்கேன். எரநூத்தி நுப்பது ரூவா சேத்து அம்மட்ட குடுத்து வச்சிருக்கேன். தங்கச்சி பெரிய மனுசி ஆனப்புறம் கட்டிக்குடுக்கணும்லா!”

ஸ்கூட்டரின் மறுபக்கம் மறைவாய்த் துடைத்துக் கொண்டிருந்தவனின் குரல்தான் கேட்டது, முகம் பார்க்கக் கிடைக்கவில்லை. பால்ய உழைப்பின் வேர்வையில் நமத்துப் போயிருந்த அந்தப் பிஞ்சுக்குரலில் தங்கச்சி பெரிய மனுஷி ஆனப்புறம் கட்டிக் கொடுக்கச் சம்பாதிக்கிற பெருமை விறைத்து நின்றது.

அந்தப் பையனிடம் லயித்துப் போன மனசு முதுகில் திடீரென்று விழுந்த அடியின் அதிர்வில் சிலிர்த்து விழித்துக் கொண்டது. அடித்த கைக்குரியவன் காதுக்கருகில் என் பெயரை விளிக்க, திரும்பிப் பார்த்தால் 'அட, பழனிசாமி!' பத்து வருஷங்களுக்கு முந்தி திருச்சி ஜமாலில் இணைபிரியா சிநேகிதனாயிருந்த பழனிசாமி!

"என்னடா, எத்தனை தரம் பேரச் சொல்லிக் கூப்படறது! நீதானா இல்ல வேற யாருமான்னு எனக்கே சந்தேகமாப் போச்சு. பக்கத்துல வந்து பாத்தப்பறந்தான் கன்ஃபம் ஆச்சு. எத்தன வருஷம் ஆச்சுடா ஒன்னப் பாத்து!"

அதே பழைய சிரிப்போடும் சிநேகத்தோடும் இருந்தான். அவன் தோளில் கை போட்டு இறுக்கிக் கொண்டேன்.

"அப்படியே இருக்கியேடா பால்! பத்து வருஷம் இருக்காது? என் கல்யாணத்துக்குக் கூட நீ வரலடா ராஸ்க்கல்! சொல்லு, எப்படியிருக்க, எங்கயிருக்க, இப்ப மெட்ராஸ்தானா?"

'ஆஹா, இத்தனை உரிமையோடு ஒருவனை டா போட்டுப் பேசுகிற நெருக்கத்தை சந்தோஷித்து எவ்வளவு காலமாச்சு கடவுளே!'

"அதே புதுக்கோட்டைதாண்டா. நைட், ராக்ஃபோர்ட்ல திருச்சிக்கிக் கிளம்பறேன். அதுக்கு முன்னால இங்க நாலஞ்சு பார்ட்டிய பாக்கணும். எல்லாம் பிஸினஸ்தான்."

"என்ன பிஸினஸ்டா பால்?"

"சொல்றேன். வாயேன், இப்படியே பேசிட்டே போய் ஒரு காஃபி சாப்ட்டுட்டுப் பிரியலாம்."

"வீட்டுக்கு வந்துட்டுப் போடா."

"டைமில்லடா. நெக்ஸ்ட் டைம் வர்றப்ப விருந்து சாப்ட்டுட்டுப் போறேன். இப்ப நட."

"கொஞ்சம் இருந்தியானா என் ஒய்ஃப் வந்துருவா. அவளையாவது நீ மீட் பண்ணலாம். ம்ம் சொன்னாக் கேக்க மாட்ட. சரி வா. தம்பி வண்டியப் பாத்துக்கப்பா, பத்து நிமிஷத்துல வந்திர்றேன்.

பேசிக்கொண்டே நடந்தோம். நடந்து கொண்டே பேசினோம். காஃபிக்குச் சொன்னான். "எனக்குக் கோக்டா." "ஓ, நீ டீ காஃபி சாப்ட மாட்டேல்ல? சேஞ்ச் ஆகவேயில்லடா."பானத்தில் ஒவ்வொரு மிடறு உள்ளே இறங்கவும் பழைய ஞாபகங்கள் கொப்பளித்து வெளியே வந்தன. அந்த, அந்த நாள் ஞாபகங்களைப் பற்றியெல்லாம் பிறிதொரு சமயம் இன்னொரு கதையில் எழுத வேண்டும்.

பழனிசாமி விடைபெற்றுக் கொண்டு போன பின்னால்தான் எனக்கு இந்தக் கதையில் வருகிற குழந்தை நட்சத்திரத்தின் ஞாபகம் வந்தது. 'பூட்டப்படாத ஸ்கூட்டர்? ஸ்கூட்டரின் காரியரில் பிணைக்கப்பட்டிருக்கிற ஜவுளி? ஓடு!'

அந்தப் பையனின் நாணயத்தின் மேலே உதித்த அநியாய சந்தேகங்கள் கால்களை இடற, அவசரமாய் ஒரு வாக்கிங் ரேஸ்.

‘சரோ வந்திருப்பாளோ?’

வந்திருந்தாள். ரெண்டு இருப்புகளிலும் கை வைத்துக் கொண்டு முறைப்போடு பார்த்தாள்.

“என்னங்க வேல இது? ஸ்கூட்டர் நெறைய சாமானை வச்சுட்டுத் தலைமறைவாய்ட்டீங்க! என்னமோ இந்தப் பையன் யோக்யனாயிருக்கப் போய் இங்கயே காவலுக்கு நின்னுட்டிருந்தான். வேறே எவனாவது இருந்தா சாமானோட கம்பி நீட்டியிருப்பான். ஸ்கூட்டர வேற லாக் பண்ணாமப் போயிருக்கீங்க?”

“ஸாரிம்மா, திடீர்னு பழனிசாமி ப்ரசன்னமானான். எனக்கு எதுவுமே ஓடல. பழனிசாமி தெரியுமில்ல, எம்.எஸ்.ஸில என்னோட பெஸ்ட் ஃப்ரண்ட்னு சொல்லியிருக்கேனே...”

“எந்த சாமின்னா என்னங்க, அதுக்கு இப்படியா பொறுப்பில்லாம எல்லாத்தையும் அம்போன்னு விட்டுட்டுப் போயிருவீங்க? இந்தப் பையன் மட்டும் இல்லன்னா நமக்கு எவ்வளவு நஷ்டமாயிருக்குமோ! இவன் கையில ஏதாவது குடுத்தனுப்புங்க.”

“சார்ஜ் எவ்வளவு ஆச்சு தம்பி?”

“ஒரு ரூவா குடுங்க சார்.”

“இந்தா ரெண்டு ரூபாயா வச்சுக்க.”

இவள் விலாவில் இடித்தாள்.

“சுத்தக் கஞ்சப் பிரபுவாயிருக்கீங்களே, ஒரு அஞ்சு ரூபா குடுங்க. இவன் மட்டும் இல்லன்னா இன்னிக்கி என்ன ஆயிருக்கும்! தம்பி, பேரென்னப்பா?”

“செதம்பரங்கம்மா. வேணாம் சார், ஒரு ரூவா போதும் சார்.”

“அட வச்சுக்க மகனே, அம்மாவே சொன்னப்புறம அப்பீலே இல்ல. தங்கச்சி கல்யாணத்துக்கு சேக்கணும்ல? இந்தா புடி. பாத்தியா இடது கைய நீட்றியே... இதான் ஸ்கூல்ல படிக்கிற பசங்களுக்கும் உனக்கும் வித்யாசம். காசை இடது கையிலயா வாங்குவாங்க?”

திடீரென்று அந்தப் பையனின் முகம் சிறுத்துப் போனது.

கண்கள் ஈரத்தில் மின்னின.

நீட்டிய கரம் நீட்டியபடியே இருந்தது.

அப்போதுதான் கவனித்தேன்.

வலது கை, சட்டைக்கு மட்டுமே இருந்தது.

சிதம்பரத்துக்கு இல்லை.

நாத்தழுதழுக்க, வார்த்தைகள் மெல்ல வழுக்கின.

"சொன்னேனே சார்... தீ விபத்துன்னு..."

அவனுடைய இடது கரத்தை அழுந்தப் பற்றி ஒரு பத்து ரூபாய்த் தாளை வைத்து மூடினேன்.

"ஐம் ஸாரி சிதம்பரம்."

மூணு வார்த்தைகள்தான் பேச முடிந்தது. அதற்கு மேல் அவனுக்கு என்ன வார்த்தைகளால் ஆறுதல் சொல்வது, 'ஒரு சின்ன அரும்பின் கரத்தைச் சிதைத்து அவனுடைய எதிர்காலத்தில் இருள் படரக் காரணமான இந்தச் சமுதாயத்தை என்ன வார்த்தைகளால் சபிப்பது?'

அவன் கேசத்தை என் ரெண்டு கைகளாலும் அளைந்து உலுப்பிவிட்டு அவனை அனுப்பி வைத்தேன்.

ஸ்கூட்டர் சீராய்ப் போய்க் கொண்டிருந்தது. வழக்கமாய் வழியெல்லாம் சளசளத்துக் கொண்டு வருகிற இவளும் வாய்மூடி மௌனியாயிருந்தாள். இவளின் மனசும் கூடக் கனத்துக் கிடந்திருக்க வேண்டும், என்னுடையதைப் போல.

-இதயம் பேசுகிறது, 1997.

# இது பொம்பளைங்க சமாசாரம்

“என்னங்க, நீங்க சொல்லப் போறீங்களா, இல்ல நா சொல்லவா?”

படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு கேட்டாள். கடந்த ஒரு வாரமாய் தினமும் ராத்திரி ராத்திரி இவள் கேட்டுக் கொண்டிருக்கிற கேள்விதான். ‘நாளைக்கு சொல்லி விடுகிறேன்’ என்பது என்னுடைய வழக்கமான பதிலாயிருக்கும். இப்போது கொஞ்சம் மாற்றிச் சொன்னேன்.

“நானே கேக்கறேம்மா. நாளக்கி ஒரேயொரு நாள் டைம் குடு. நாளக்கழிச்சிக் காலைல கேட்டுர்றேன்.”

“ஏன், நாளக்கி என்ன?”

“காலைல ஆறு மணிக்கி ஏர்ப்போர்ட்டுக்குப் போகணும், எம்.டியை ரிஸீவ் பண்ண. அப்புறம் ராத்திரி பாம்பேக்கி அவர ப்ளேன் ஏத்தி விட்டுட்டுத்தான் நா ஃப்ரீ ஆவேன்.”

“ஹ்ம்ம். நாளக்கி ராத்திரியும் இந்த அவஸ்தைய அனுபவிக்கணுமா.”

“இன்னும் ஒரேயொரு நைட்தானேம்மா, பொறுத்துக்க. கொழந்த எந்திரிக்கலியே?”

“பொரண்டு படுத்தான். இன்னும் ஒரேயொரு தடவை அந்த சத்தம் கேட்டுருந்தா எந்திரிச்சிருப்பான். அப்புறம் அவனத் தூங்கப் பண்றதுக்குள்ள ப்ராணன் போயிரும். இந்தா பாருங்க, நாளக்கி ஒரு நைட்தாங்க நா பொறுத்துக்க முடியும். அடுத்த நாள் நீங்க போய்ப் பேசி இதுக்கு ஒரு முடிவு கட்டலன்னா, நானே போய் ஒரு ரகளை பண்ணிட்டு வந்திருவேன், ஆமா.”

இவளுடைய கோபத்துக்கு மூல காரணம் எதிர்த்த ஃப்ளாட். அங்கே போனமாசம் புதுசாய்க் குடிவந்த வட இந்திய இளம் தம்பதி. அந்தக் கணவனின் புல்லட். அந்த புல்லட்டின் பதினோரு மணி ராத்திரியின் நிசப்தத்தைக் கிழிக்கும் ஹார்ன் அலறல்.

“அந்த மோட்டார் பைக் சத்தம் சும்மாவே காதச் செவுடாக்குது. ஸைரன் மாதிரி ஒரு ஹார்ன் வேற அடிக்கிறான் பாருங்க! தொரை வந்துட்டே இருக்கார்ன்னு பொண்டாட்டிக்கித் தெரிஞ்சாகணுமாக்கும்? மத்தவங்களுக்கு டிஸ்ட்டர்ப் ஆகுமேன்னு இவங்களுக்கெல்லாம் அக்கறையே இல்ல. என்ன மனுஷங்களோம்மா!”

பதினோரு மணிக்கு உறக்கம் கலைவதும் கால்களைக் கட்டிக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்தபடி இவள் எதிர் ஃப்ளாட் தம்பதியை அறம் பாடுவதும் வாடிக்கையாகிப் போனது.

இதில் ஒரேயொரு ப்ளஸ் பாய்ண்ட், கால்களைக் கட்டிக் கொண்டு ஜெயராஜ் கதாநாயகியைப் போல போஸ் கொடுத்தபடி இவள் உட்கார்ந்திருக்கிற ஒயிலை ரசிக்க எனக்குக் கிடைக்கிற சில நிமிஷங்கள். மங்கிய ஒளியில் உறக்கக் கிறக்கத்திலிருக்கிற கண்கள்... லேசாய்க் கலைந்து போன மலையாளக் கூந்தல்... அதில் இன்னும்

மிச்சமிருக்கிற மல்லிகையின் முதலிரவு மணம்... இந்த ப்ரத்யேகப் போஸில் இவளுடைய வசீகர வளைவுகள்.

“என்னங்க நாம் பாட்டுக்குப் புலம்பிட்டிருக்கேன். நீங்க என்னமோ காணாததக் கண்டுட்ட மாதிரி என்னயே பாத்துட்டு உக்காந்திருக்கீங்க?”

நான் இவளுடைய எழிலை ரசித்துக் கொண்டிருக்கிறேன் என்பது உறைத்ததும் இவள் மனசில் பரவுகிற குறுகுறுப்பு முகத்தில் தெரிகிறது. தூக்க மயக்கத்தை மீறிக் கண்களில் காந்தச்சிரிப்பு.

அப்புறம் என்ன? ‘ஏ’தான்.

காலையில் ஏர்ப்போர்ட்டுக்குப் போய் நாள் முழுக்க எம்.டியைக் கட்டிக் கொண்டு அழுது, மத்யானம் உட்லண்ட்ஸ் மாடியில் முக்கால் வயிற்று பிஸினஸ் லஞ்ச் சாப்பிட்டு, தன்னைக் குஷ்வந்த்சிங்கின் சகலையாய்ப் பாவித்துக்கொண்டு இந்த ஆள் துப்பின அசிங்கமான அடல்ஸ் ஜோக்குகளுக்கெல்லாம் சிரித்து வைத்து, ராத்திரி ஒரு வழியாய் விமானமேற்றிப் பறக்கவிட்டு வந்து களைத்துப் போய்க் கட்டிலில் விழுந்தபோது பத்தரை.

தூக்கக் கலக்கத்தோடு எனக்குக் கதவைத் திறந்து விட்டவள், “சாப்டீங்களா?” என்று சம்பிரதாயத்துக்குக் கேட்டுவிட்டு என் பதிலுக்கு அக்கறைப்படாமல் திரும்பவும் தூங்கிப் போனாள்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது ஓர் உலுக்கல்.

“என்னங்க, கொஞ்சம் எந்திரிங்களேன், டைம் என்ன ஆச்சு பாருங்களேன்.”

“என்னம்மா... அதுக்குள்ள விடிஞ்சிருச்சா?”

“இல்லீங்க மணி பதினொண்ணே முக்கால் ஆச்சுங்க!”

“பதினொண்ணே முக்கால்தான, அதுக்கு என்ன ஏன் எழுப்பற?”

“வந்து... எதுத்த ஃப்ளாட்ல ஏதாவது சொன்னீங்களா...”

“காலைலதான சொல்றேன்னு சொன்னேன், அதுக்குள்ள அனத்திட்டிருக்க. பேசாமத் தூங்கு.”

“அதில்லீங்க. இன்னும் பைக் சத்தம் கேக்கல.”

“நல்லதுதானே.”

“என்ன நல்லது தானங்கறீங்க. ஜன்னல்ல பாருங்க, அந்தப் பொண்ணு பால்கனில நிக்கிறா, தெருமுனையையே பாத்துக்கிட்டு.”

யெஸ். எதிர்த்த பால்கனியில் அந்தப் பெண் மங்கலாய்த் தெரிந்தாள். கவலையாயும்.

“ஷிப்ட் முடிஞ்சி அவன் பதினோரு மணிக்கெல்லாம் வந்துருவானே, ஏன் இன்னும் வரல?”

“எனக்கென்ன தெரியும்?”

“என்னங்க இப்படிப் பொறுப்பில்லாமப் பேசறிங்க? பாவம் அந்தப் பொண்ணு எப்படித் தவிச்சிட்டிருக்கா பாருங்க. இங்க வந்து அவனோட ஃபாக்டரிக்கு ஃபோன் பண்ணிக் கேட்டுக்கச் சொல்லுவோமா?”

“ம்.”

“போய்ச் சொல்லிட்டு வரவா, இல்ல இங்கயிருந்தே கத்தவா? அடக் கண்றாவியே, அவ பேர்கூட எனக்குத் தெரியாதே! நா ஒரு சரியான இவ.”

புறந்தலையில் ஒரு தட்டுத் தட்டிக் கொண்டாள். அந்தப் பெண்ணின் அவஸ்தையை இவள் மானசீகமாய்ப் பகிர்ந்து கொண்டிருப்பது முகத்தில் தெரிந்தது.

“என்னங்க, மணி பனிரண்டு ஆகப் போகுது... பேர் தெரியாட்டி பரவாயில்ல, நா இங்கயிருந்தே ‘ஹலோ’ன்னு கூப்புடட்டுமா? கொஞ்சம் எந்திரிச்சி லைட்டப் போடுங்களேன்.”

விளக்கைப் போட நான் எழுந்திருக்க, ஒரு ‘ஹலோ’வுக்கு இவள் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும்போது தெரு முனையில் டபடபவென கம்பீரமான புல்லட் சத்தம். தொடர்ந்து பிரபலமான அந்த ஹார்ன் இசை.

எதிர்த்த பால்கனியில் பிரகாசம். இங்கே என் இவளுடைய முகத்திலுந்தான். ‘அப்பாடா!’ என்கிறவொரு ஆழமான பெருமூச்சு. திருப்தியான சந்தோஷத்தோடு என்னைப் பார்த்தாள்.

“என்னங்க, காலைல முதல் வேலையா எதுத்த ஃப்ளாட்டுக்குப் போய்...”

“சொல்லிட்டு வந்துர்றேன்.”

“ம்ம்? என்ன சொல்லப் போறீங்களாம்?”

“அதான், நடு ராத்திரியில கன்னாபின்னான்னு ஹார்ன் அடிக்காதே. தெரு முனையிலேயே வண்டிய ஆஃப் பண்ணிட்டு நல்ல புள்ளையா உருட்டிட்டு வந்துரு ராஜான்னு...”

“போங்க நீங்க கிண்டல் பண்றீங்க. காலைல போய்ச் சொல்லுங்க, எப்ப வேணும்னாலும் நம்ம வீட்ல வந்து ஃபோன் பண்ணிக்கலாம்னு. அந்த பையன்ட்டயும் நம்ம ஃபோன் நம்பரக் குடுத்துருங்க. பாவம் அந்தப் பொண்ணு, அக்கம் பக்கத்துல யாரும் பழக்கமில்லபோல. அதுகிட்ட சொல்லுங்க தனியாயிருக்கும்போது பொழுது போகலன்னா இங்க வந்துரச் சொல்லுங்க. என்ன, நீங்க சொல்லப் போறீங்களா, இல்ல, நா சொல்லவா?”

“ஏன், நாம ரெண்டு பேரும் சேந்தே போவோமே?”

“ஹய், அது நல்ல ஐடியாவாச்சே! என் ஹஸ்பண்ட்னா என் ஹஸ்பண்ட்தான். யூ ஆர் ய டார்லிங் ஐ ஸே.”

கட்டிக் கொண்டாள்.

‘அட, இன்றைக்கும் ‘ஏ’யா?!

-குங்குமம், 11.04.1997.

# சரஸ்வதி காலம்

“ஹை! சார் மேக்கப் போடறீங்களாக்கும்? எந்த சினிமால நடிக்கப் போறீங்களோ?”

மனைவியின் கிண்டல்.

கிண்டலைக் கண்டுகொள்ளாமல் தொழிலில் மும்முரமாயிருந்தேன்.

இவள் சொல்கிற மாதிரி அப்படியொன்றும் அரிதாரம் பூசிக் கொண்டிருக்கவில்லை நான். காதோரம் நரைக்கத் தொடங்கிக் கடுப்படித்துக் கொண்டிருந்த கிருதாவுக்குக் கருப்படித்துக் கொண்டிருந்தேன். இவளுடைய கிண்டலுக்கெல்லாம் பயந்து கொண்டிருந்தால் முப்பத்தொன்பது வயசிலேயே முழுக்கிழமாகிவிட வேண்டியதுதான்.

“என்னங்க மேக்கப் முடிஞ்சதா?”

“ஏன் இப்ப என்ன ஒனக்கு அவசரம்?”

“எனக்கு அவசரமில்லை, ஸ்கூலுக்கு டயமாச்சு, சுமன் அப்பவே ரெடியாயிட்டான். நீங்கதான் லேட்.”

அரைகுரையாய் ஃபினிஷிங் டச் கொடுத்துவிட்டு அவசர அவசரமாய்க் கிளம்பினேன். வந்துதான் குளிக்க வேண்டும்.

ஸ்கூல் கேட்டில் பையனை இறக்கிவிட்டு டாட்டா காட்டி அனுப்பிவிட்டு ஸ்கூட்டரைக் கிளப்பிய போது, இங்கிதமில்லாமல் வழியை மறித்துக் கொண்டு வந்து நின்றது ஒரு ஃபியட்.

‘இந்த மாதிரிக் கத்துக்குட்டித்தனமாய்க் காரைப் பார்க் செய்யும் கலை தாய்க்குலத்துக்கு மட்டுமே கைவருவது’ என்கிற என்னுடைய கணிப்பை உறுதி செய்து கொள்ளக் காருக்குள் பார்வையைச் செலுத்தினேன்.

‘கரெக்ட். பெண்தான். அழகான, அம்சமான பெண்.

வெய்ட் எ மினிட். இந்தப் பேரழகை எங்கேயோ எப்போதோ பார்த்த மாதிரி இருக்கிறதே. எங்கே? எங்கே? எப்போது?’

எங்கே, எப்போது என்று புரிந்த போது உள்ளமெல்லாம் உயர்மின் அழுத்தம்.

சரஸ்வதி! இருபது வருஷங்களுக்கு முன்னால், இரவுபகலாய் என் மனசை அலைக்கழித்துக் கொண்டிருந்த எழிலரசி!

காரில் இடதுபக்கக் கதவைத் திறந்துகொண்டு, பதிமூணு பதினாலு வயசுப் பையன் ஒருவன் இறங்கினான். ‘சரஸ்வதிக்கு இவ்வளவு பெரிய மகனா?’ காலத்தின் மாற்றங்களின் மேல் அநியாயமாய் ஆத்திரம் வந்தது.

காரை ரிவர்ஸ் எடுப்பதற்காகக் கழுத்தை வலப்பக்கமாய் முறுக்கியவள், என் பார்வையை ஒரு விநாடி சந்தித்துவிட்டு பின் பக்கம் திரும்பினாள். பிறகு, பொறி தட்டியது மாதிரி திரும்பவும் என்னை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள். புருவங்களைச் சுருக்கினாள். தயங்கித் தயங்கி ஒரு புன்னகை பிறந்து மெல்ல மெல்லப் பிரகாசமடைந்தது.

என்னைக் கண்டு கொண்டாள்.

'ஓ, சரஸ்வதீ!'

ஸ்கூட்டரைத் தூக்கி நிறுத்திவிட்டுக் காரை சமீபித்தேன்.

"ஹல்லோ மிஸ்டர்... மிஸ்டர்..."

ரெண்டாவது மிஸ்டர் பாதி உயிராய்ப் போனது. பிரகாசம் லேசாய் மங்கியது. கீழுதட்டைக் கடித்துக்கொண்டாள். பெயரை மறந்துவிட்டாள். அதற்காக ரொம்ப சங்கடப்படுவது தெரிந்தது.

பெயரை நினைவுபடுத்தினேன்.

"ஓ யெஸ்... எப்படியோ மறந்து போச்சு. ஐம் ஸாரி. ஐம் ஸோ ஸாரி."இமைகளை லேசாய் மூடித்திறந்து ரொம்ப கவர்ச்சியாய் வருந்தினாள்.

"நோ நோ, பரவாயில்லம்மா, வருஷம் எத்தனையாச்சு. அதுவுமில்லாம, நீங்க காலேஜ் பியூட்டி க்வீனா இருந்தவங்க. காலேஜ் பூரா உங்களைத் தெரியும். நானோ பத்தோட பதினொண்ணு. நீங்க டான்ஸ் ஆடின காலேஜ் பங்ஷன்ல நானும் ஒரு பாட்டுப் பாடினேன்ங்கறதைத் தவிர எனக்குப் பிரபல்யம் ஒண்ணுங் கிடையாது. அதனால என் பெயர் உங்க மனசில பதியாமப் போனது ஒரு பெரிய விஷயமில்ல."

"ஓ, ஆமா, எனக்கு ஞாபகம் இருக்கு. 'பழமுதிர்சோலையிலே தோழீ பார்த்தவன் வந்தானடி' பாட்டுக்கு நான் ஆடினேன். நீங்க என்னப் பாட்டு பாடினீங்கன்னு ஞாபகம் இல்ல, ஆனா ரொம்ப நல்லாப் பாடினீங்க. அதுக்காக நான் உங்களைக் கங்ராஜுலேட் பண்ணினேன்ங்கறது ஞாபகம் இருக்கு. உங்களுக்கும் ஞாபகம் இருக்கும்னு நினைக்கிறேன்."

குறும்பாய்க் கண்களைச் சிமிட்டினாள். கொஞ்ச நேரத்தில் கண்களில் குறும்பு மறைந்து கொஞ்சம் வருத்தம் தெரிந்தது. வருத்தத்துக்கு நிறைய நியாயமும் இருந்தது. ஏனென்றால், அந்த விழா நடந்த அன்றைய தினம்தான் சரஸ்வதியுடைய கல்லூரி வாழ்க்கையின் கடைசி நாளாய் அமைந்து போனது.

நீலகிரி முழுக்க சல்லடை போட்டு அரித்தாலும் சரஸ்வதி போல ஒரு அழகி அப்போது காணக் கிடைத்திருக்க மாட்டாள். சரஸ்வதி படிக்கிற கல்லூரியில் அட்மிஷன் கிடைத்ததைப் பெறற்கரிய பெரும்பேறாய்க் கொண்டாடிப் புளகாங்கிதமடைந்த மாணவர் பலர்.

ஊட்டியின் குளிரைச் சாக்காக்கிக் கொண்டு, குளிர்காய்கிற பாவனையில், வகுப்புகள் தொடங்கும் முன் கல்லூரி வாசலின் பக்கம், பாதைக்கு ரெண்டு பக்கமும் மாணவர்கள் அணி வகுத்து நிற்க, மாணவிகள் பூமியைப் பார்த்தபடி நடந்து உள்ளே பிரவேசிப்பது அன்றாட நிகழ்ச்சி. அப்போது மாணவர்களிடையேயிருந்து கிளம்புகிற கிண்டல்களும் விமர்சனங்களும் மாணவிகளின் பார்வைகளை இன்னும் தாழ்த்தும். ஆனால், நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையாய்க் கல்லூரியை சமீபிக்கிற சரஸ்வதி தங்களைக் கடக்கிற கணத்தில் மட்டும் மாணவர்களிடையே அமைதியோ அமைதி. வார்த்தைகளை வெளிப்படுத்த நாக்கு எழாத நிலையில் எல்லாரும் வைத்த கண் வாங்காமல் அந்த எழிலுருவம் நகர்வதையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். தன்னுடைய பட்டுடலைத் துளைக்க முற்படுகிற பார்வையம்புகளைத் தூசி தட்டுகிற மாதிரி உதறிவிட்டு சரஸ்வதி நடந்து கொண்டிருப்பாள்.

மாணவர்கள் மட்டுமல்லாமல் பல இளம் விரிவுரையாளர்கள் கூட சரஸ்வதி மயக்கத்திலாழ்ந்து கோமாவில் கிடந்ததாய்க் கேள்வி.

நிலவரம் இப்படியிருக்க, கல்லூரியின் ஆண்டு விழா வந்தது. கல்லூரி விழா என்றால் சரஸ்வதியின் நடன நிகழ்ச்சி இல்லாமலிருக்காது. 'டி.எம்.சௌந்தரராஜன் மாதிரியே பாடுகிறவன்' என்றொரு கௌரவம் எனக்கு நண்பர்களிடையே உண்டு. நண்பர்கள் முயற்சியால் முதல்முறையாக அன்றைக்கு நானும் மேடையேற்றப்பட்டேன். விழாவின் இறுதியில், கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சரஸ்வதி, பரிசைப் பெற்றுக் கொண்டு மேடையின் ஓரத்தில் நிற்க, அடுத்து நான் பரிசை வாங்கிக் கொண்டு திரும்ப, கொஞ்சமும் எதிர்பாராதபடி சரஸ்வதி என்னிடம் வந்தாள். அவளுடைய அருகாமை தந்த போதை தலைக்கேறிக் கொண்டிருக்கும்போதே சட்டென்று என் கையைப் பிடித்துக் குலுக்கி, "ரொம்ப நல்லாப் பாடினீங்க. ரியலி ஸூப்பர்ப். இத்தனை நாள் எங்க ஒளிஞ்சிட்டிருந்தீங்க?" என்று புகழ்ச்சியாலும் புன்னகையாலும் என்னைத் திக்குமுக்காட வைத்தாள். ஒரே எவ்வில் நான் தொட்டபெட்டா சிகரத்துக்குத் தாவிவிட்டேன். திரும்ப நான் ஊட்டிக்கு இறங்கி, அவளுடைய பாராட்டுக்கு நன்றி தெரிவிக்க வாயைத் திறக்கும் முன் அவள் போய்விட்டிருந்தாள்.

சரஸ்வதி தந்த கிறக்கத்தில், உறக்கத்தைப் புறக்கணித்து நான் புரண்டு கொண்டிருந்த அந்த இரவில் பல பொறாமைகள் மும்முரமாய்ச் செயல்பட்டுக் கொண்டிருந்திருக்கின்றன என்பது விடிந்தபின் தெரிந்தது.

காலையில் பார்த்தால் கல்லூரி சுவர்களெங்கும் என்னையும், சரஸ்வதியையும் ஜோடி சேர்த்துக் 'கன்னாபின்னா'வென்று அகப்பொருள் வசனங்கள். போதும் போதாதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாய் கஜுராஹோத்தனமான வரைபடங்கள் வேறு.

'அன்றைக்குக் காணாமல் போன சரஸ்வதி, இருபது வருஷ இடைவெளிக்குப் பிறகு இதோ, இங்கே, எனக்கெதிரே, காருக்குள்ளே.'

"என்ன சார் முழிச்சுகிட்டே தூங்கறீங்களா?" என்று சிரித்தாள். அதே காந்தச்சிரிப்பு. காலம் இவளுடைய வசீகரத்தின் மேல் தாக்குதல் நடத்தியதில் மிகச் சொற்ப வெற்றியே பெற்றிருக்கிறது. நெற்றிக்கு மேலாய் ஒரு மயிர்க்கற்றை லேசாய் நரைக்கத் தொடங்கியிருப்பதை டை அடிக்காமல் திமிராய் விட்டிருந்தாள். "ஒண்ணுமில்லம்மா,

ஊட்டி வரைக்கும் கொஞ்சம் போய் வந்தேன்" என்று நான் சொன்னதற்குத் திரும்பவும் சிரித்தாள்.

"மெட்ராஸ்க்கு வந்து சேந்துட்டீங்கதானே?"

"ம்"

"அப்ப உள்ள வந்து உக்காருங்களேன், உங்ககிட்ட பேசணும் போல இருக்கு."

டிரைவர் ஸீட்டிலிருந்து எட்டி, இடது பக்கக் கதவைத் திறந்துவிட்டவள், உள்ளே புகுந்து கொள்ள நான் காட்டிய தயக்கத்தைப் புரிந்து கொண்டாள்.

"என்ன யோசிக்கிறீங்க, யாராவது பாத்தா தப்பா நெனப்பாங்கன்னு பயமா?"

திரும்பவும் சிரிப்பு.

"அட சும்மா வந்து உக்காருங்க மிஸ்டர். மத்தவங்க தப்பாப் பேசற வயசில்லை இப்ப நமக்கு. அந்த ஸ்டேஜை நாம கடந்து வந்துட்டோம். வி ஆர் நௌ மிடில் ஏஜ்ட், யூ நோ?"

அவளுடைய வார்த்தைகளிலிருந்த நிஜத்தின் கனம் என்னை உறுத்த, கல்லூரி வாழ்க்கையின் கடந்து போன வசந்த காலத்தை நினைத்துக் கொண்டே முன் ஸீட்டில் அவள் பக்கத்தில் அமர்ந்தேன். அவளும் அதே மன நிலையில்தான் இருந்திருக்க வேண்டும். ஸீட்டில் சரிந்து, நீளமான பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தினாள். கொஞ்சம் மௌனம். பிறகு, பக்கவாட்டில் முடிந்த மட்டும் உடம்பைத் திருப்பி என்னைப் பார்த்தமாதிரி இருந்து கொண்டு,"ம் சொல்லுங்க" என்றாள்.

காருக்குள் நிலவிய நறுமணத்தை ஒரு இழுப்பு இழுத்துவிட்டு ஒப்புக்கு ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"இப்ப இறங்கிப் போனது உங்க பையன்தானே?"

"யெஸ், மை ஸன். டெந்த் படிக்கிறான். வருஷங்கள் எவ்வளவு வேகமா ஓடிப் போயிருச்சு! அது சரி, உங்களுக்கு?"

"ஒரு பையன். எல்.கே.ஜி."

"எல்.கே.ஜி.?"

"ஆமா. நா கொஞ்சம் லேட் மேரேஜ்."

"ஏன் லேட்? காதல் தோல்வி ஏதாவது..."

"அப்படித்தான் வச்சுக்கோங்களேன்."

"வச்சுக்கிறது என்ன, ஒப்பனாத்தான் சொல்லுங்களேன்?"

“சொல்லலாந்தான், ஆனா நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாதே?”

“ஏன், அதுல நானும் சம்மந்தப்பட்டிருக்கேனா? தட் மேக்ஸ் இட் மோர் இன்ட்ரஸ்ட்டிங். சொல்லுங்களேன் ப்ளீஸ்.”

“சொல்றேன். அந்தக் காலேஜ் டே ஃபங்ஷனுக்கு அடுத்த நாள் சில அயோக்கியப் பசங்க காலேஜ் சுவர் எல்லாம் அசிங்கப்படுத்தி வச்சிருந்தாங்க இல்லையா?”

“மறக்க முடியுமா? உங்களையும் என்னையும் சேத்து வச்சு அசிங்க அசிங்கமா எழுதி வச்சிருந்தாங்க. அருவறுப்பா படம் வேற போட்டிருந்தாங்க பாவிங்க.”

“அதுக்கப்புறம் நீங்க காலேஜுக்கு வரவேயில்லை. சரஸ்வதி, எல்லாரையும் போல எனக்கும் உங்க பேர்ல ஒரு மயக்கம் இருந்தது உண்மைதான். ஆனா அந்த ஃபங்ஷன்ல உங்கள நேருக்கு நேர் மீட் பண்ணினதுக்கப்புறம் உங்க மேல பைத்தியமாவே ஆயிட்டேன். நீங்க காலேஜுக்கு வராததுனால உங்களப் பாக்க முடியாத சூழ்நிலை. உங்களப் பாக்காம எனக்கு வாழ்க்கையே ஸ்தம்பிச்சுப் போச்சு. உடனடியா எப்படியாவது உங்களப் பாத்தே ஆகணும்னு ஒரு வெறி. நீங்க ஊட்டியைவிட்டு மெட்ராஸ்க்குப் போய்ட்டீங்கன்னு சொன்னாங்க. நானும் காலேஜுக்கு மட்டம் போட்டுட்டு மெட்ராஸ்க்கு வந்தேன். இங்க எங்க அக்கா வீடு இருந்தது ரொம்ப வசதியாயிருந்தது. நீங்க எங்கேயாவது கண்ணுல தட்டுப்பட மாட்டீங்களான்னு மெட்ராஸ் முழுக்க ரோடுரோடா தெருத்தெருவா அலஞ்சேன். தாடி வளத்துக்கிட்டு அலஞ்சேன். மாசக்கணக்கில் அலஞ்சேன். அப்புறம் அப்பாவும் அண்ணாவும் ஊட்டியிலயிருந்து வந்து என்னை அடியடின்னு அடிச்சி இழுத்துட்டுப் போனாங்க.”

“ஹௌ இன்ட்ரஸ்ட்டிங்!”

“எது, நா அடி வாங்கினதா?”

“அதில்லீங்க, இந்த அளவுக்கு என் மேலே பைத்தியமா இருந்திருக்கீங்க, எனக்குத் தெரியாமப் போயிருக்கே!”

“எத்தனையோ பேர் உங்க மேல பைத்தியமா இருந்தாங்க. நா ஒரு ஸ்பெஷல் பைத்தியம்.”

“ம், மேல சொல்லுங்க.”

“மேல என்ன, அந்த வருஷப் படிப்பு போச்சு. திரும்ப அடுத்த வருஷம் ஸெகண்ட் இயர்ல பழையபடி சேந்தேன்.”

“அப்புறம்?”

“அப்புறம், வாழ்க்கை ரொம்ப டல்லா இருந்தது. விரக்தி அதிகமாகறப்ப உங்க ஃபோட்டோவை எடுத்துப் பாத்துக்குவேன்.”

“ஃபோட்டோவா? என்னோட ஃபோட்டோ எதையும் நா உங்களுக்குத் தந்ததா ஞாபகமில்லையே?”

“நீங்க தரலை. அந்த ஃபங்ஷன்ல படம் புடிச்ச ஃபோட்டோகிராஃபருக்கு ஸம்திங் தள்ளி உங்களோட க்லோஸ் அப் ஃபோட்டோ ஒண்ணு வாங்கி வச்சிருந்தேன். அந்த ஃபோட்டோ ஒண்ணுதான் எனக்கு குடுத்து வச்சிருந்தது. வேற எந்தப் பொண்ணுக்கும் என் வாழ்க்கையில இடங்குடுக்க மனசாகலை. ரொம்ப நாள் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கல்யாணப் பேச்சைத் தட்டிக் கழிச்சிக்கிட்டே வந்தேன். பெரியவங்களோட நச்சரிப்புத் தாங்காம கடைசில சம்மதிச்சேன். கல்யாணத்துக்கப்பறங்கூட உங்க ஃபோட்டோவை எப்பவும் நெஞ்சுக்குப் பக்கத்துல ஷர்ட் பாக்கெட்லயே வச்சிருந்தேன். ஐயையோ, நீங்க ஏன் அழறீங்க?”

“சே, அழலை. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். சொல்லுங்க.”

“ஒரு நாள் அந்த ஃபோட்டோ சரோ கண்ணுல பட்டுருச்சு.”

“சரோ?”

“என் ஒய்ஃப்”

“ஐயையோ, வசம்மா மாட்டிட்டிருப்பீங்க!”

“ரொம்ப வசம்மா. க்ராஸ் எக்ஸாமின் பண்ணினா. கொஞ்சம் கத்தினா. கொஞ்சம் அழுதா. அப்புறம் அந்த ஃபோட்டோவ சுக்குநூறாக் கிழிச்சுப் போட்டுட்டா. விலை மதிக்க முடியாத பொக்கிஷத்தை இழந்துட்ட மாதிரி எனக்கு பயங்கர வேதனையா இருந்துச்சு. பட், ‘இதுதான் நிஜம், இது தான் எனக்கு சாஸ்வதம், என் கனவுலகத்துலயிருந்து நான் மீண்டு வர்றதுக்கு அந்த ஃபோட்டோ கிழிப்பு ஒரு ஆரம்பம்’னு நான் மனசை சமாதானம் பண்ணிக்கிட்டேன். ஆனா, என்னோட கலைஞ்சு போன கனவு நிஜ உருவமா இன்னிக்கு என் கண் முன்னால தோணும்னு நான் நினைக்கவேயில்ல.”

கண்கள் பனித்து பார்வை மங்கியது. என்னைத் தேற்றுகிற மாதிரி, ஸீட்டின் மேலிருந்த என் வலதுகையைத் தன்னுடைய இடதுகையால் ஒரு அழுத்து அழுத்தினாள். இருபது வருஷங்களுக்கு முந்தி அவள் என் கையைப்பற்றிக் குலுக்கியபோது ஏற்பட்ட சிலிர்ப்பு திரும்பவும் இப்போது எனக்குள்.

சில நிமிஷ மௌன இடைவெளிக்குப் பின் விடைபெற்றுக் கொண்டேன். காரின் கதவைச் சாத்திவிட்டு ஜன்னலில் குனிந்து சரஸ்வதியிடம் கேட்டேன்.

“உங்க பையனை ட்ராப் பண்றதுக்கு வழக்கமா நீங்கதான் வருவீங்களா? இத்தனை நாள் கண்ணுல படவேயில்லையே?”

“இல்லீங்க, எப்பவும் டிரைவர் வருவார். இன்னிக்கி டிரைவர் லீவ். என் ஹஸ்பெண்டும் ஊர்ல இல்லை. ஸோ நான் வந்தேன்.” என்றவள் சிறிது தாமதித்து,”இனி அடிக்கடி வருவேன்.” என்று தணிந்த குரலில் ஒரு ரகசியம் போலச் சொல்லிச் சிரித்தபடி காரைக் கிளப்பினாள்.

சரஸ்வதியுடைய கார், பார்வையிலிருந்து மறைகிறவரை பார்த்துக் கொண்டிருந்தேன்.

'நாம அந்த ஸ்டேஜைக் கடந்து வந்துட்டோம். இப்ப நாம நடுத்தர வயது தெரியுமோ?' என்கிற மாதிரி சரஸ்வதி சொன்னது திரும்பவும் நினைவுக்கு வந்து மனசை அழுத்த, நான் ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் கன்னத்தைத் தடவிக் கொண்டேன்.

காதோரக் கிருதாவில் விரல்கள் பட்டுப் பிசுபிசுத்தன.

விரல் நுனியெல்லாம் கருப்புக் கருப்பாய் என் இளமையின் எச்சங்கள்.

-ஆனந்த விகடன், 20.04.1997.

# திருப்பம்

விமானப் பிரயாணம் எப்படியிருக்குமென்று வாசுதேவனுக்குத் தெரியாது. ஆனால், ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட விசாலமான பென்ஸ் காரில், விலா அளவு முங்குகிற சொகுசு இருக்கையிலமர்ந்துப் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மிதப்பது விமானப் பிரயாணத்தை விட ஒன்றும் குறைந்ததாயிருக்காது என்று மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது. கார் முழுக்க முழுக்க மனசைக் கிறங்கடிக்கும் நறுமணம். இந்த நறுமணத்தின் உற்பத்தி ஸ்தலமான புவனா அவனருகே. எல்லாம் ஒரு இனிய கனவு மாதிரி.

“என்ன ஒண்ணும் பேசாம வர்றீங்க.”மென்மையாய்ப் புவனா இடுப்பில் இடித்தாள்.

“இன்னும் கனவு கண்டு முடியலையா? கண் முழிங்க, உங்க கனவுதான் நெஜமாயிருச்சே!”

“எந்த கனவைச் சொல்ற?”

“என்னை மாதிரி ஒரு அழகான பொண்ணக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கனவு கண்டிருப்பீங்க, எங்க டாடி மாதிரி ஒரு கோடீஸ்வரருக்கு மருமகனா ஆகணும்னு கனவு கண்டிருப்பீங்க, ஃபைவ் ஸ்டார் ஹோட்ட்ல் மாதிரி வசதியான அரண்மனையில குடியிருக்கணும்னு கனவு கண்டிருப்பீங்க, கப்பல் மாதிரிக் கார்ல ஒடம்பு நோகாம ஊர் சுத்தணும்னு கனவு கண்டிருப்பீங்க, வேறே என்ன?”

புவனா சொன்னதெல்லாம் வாசுவைப் பொறுத்தமட்டில் வாஸ்தவந்தானென்றாலும், அவள் அப்பட்டமாய்ச் சொல்லிக் காட்டினவிதம் அவனுடைய தன்மானத்தைத் தொட்டது. மிச்சமிருந்த கனவுகளை விழிகளிலிருந்து பிடுங்கியெறிந்துவிட்டு ஒப்புக்கு ஒரு சிரிப்பை உமிழ்ந்து வைத்தான்.

ஜெமினி மேம்பாலத்தின் அடிவாரத்தில் கார் ஊர்ந்தது.

“வாசு, வழில சோழாக்குள்ள கொஞ்சம் போகச் சொல்லுங்க, என்னமோ ஆர்ட் எக்ஸிபிஷன் நடக்குதாம். எட்டிப் பாத்துட்டுப் போவோம்.”

“சரி சொல்றேன். இவர் பேரென்ன?”

“எவர் பேர்?”

“டிரைவர் பேர். ஷ்... கொஞ்சம் மெல்லப்பேசு.”

“டிரைவர் பேர் டிரைவர்தான்.”

“ஏன், இவருக்குன்னு பேர் ஒண்ணும் இல்லியா”

“இருக்கலாம். அதப்பத்தி நமக்கென்ன? நமக்கு இவன் டிரைவர்தான்.”

“என்ன புவனா, அவன் இவன்னு பேசற? அவர் வயசென்ன, உன் வயசென்ன!”

“இந்தா பாருங்க வாசு, எங்க வீட்ல எத்தனையோ வேலக்காரங்க இருக்காங்க, ஒவ்வொருத்தரோட பேரு, வயசு, அட்ரஸ், பூர்வீகம் எல்லாம் தெரிஞ்சு வச்சிக்கிறது என் வேலையில்ல. அது ஒங்க வேலயுமில்ல. நீங்க படிக்க வேண்டியது நெறைய இருக்கு வாசு. புது சூழ்நிலைக்கு ஏத்த மாதிரி நீங்க ஒங்களையும் ஒங்க ஐடியாஸையும் சேஞ்ச் பண்ணிக்கனும்.”புவனாவின் குரல் தணிவாய் இருந்தாலும் தணலாய் எரிந்தது.

ஆர்ட் எக்ஸிபிஷன் தலைகால் புரியவில்லை. ஃப்ரேம்கள் ரொம்ப நேர்த்தியாய் இருப்பதாய்ப்பட்டது வாசுவுக்கு. புவனா ஒவ்வொரு ஓவியத்தையும் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டு வந்ததைப் பார்த்து அவனுக்கு ஆச்சர்யம்.

“இதெல்லாம் ஒனக்கு நெஜம்மாவே புரியுதா புவனா?”

“புரிஞ்சுக்க ட்ரை பண்றதுல என்ன தப்பு?”

“ட்ரை பண்றது தப்பில்லதான், நாம மஹாபலிபுரத்துக்குப் போக வேண்டாமா, லேட் ஆகுதே?”

“ஒங்களுக்கு இன்ட்ரஸ்ட் இல்லன்னா நீங்க போங்க. போய்க் கார்ல வெய்ட் பண்ணுங்க, நா முழுசையும் பாத்துட்டு வர்றேன்.”

வாசு விடுதலையாகி வெளியேறினான். காரை நெருங்கின போது டிரைவர் அவசரமாய் பீடி நெருப்பைக் காலில் போட்டுக் கசக்கிவிட்டு டயரில் காற்றழுத்தம் பார்க்கிற சாக்கில் கீழே குனிந்து புகையை வெளியேற்றிவிட்டு நிமிர்ந்தார்.

“ஒங்க பாதி பீடி வேஸ்ட் ஆக நா காரணமாய்டேன்ல... ஸாரிங்க.”

“வாசு சிநேகபூர்வமாய் சிரித்தான். அவர் பணிவாய்ப் புன்னகைத்துப் பின்கதவை இவனுக்குத் திறந்துவிட்டார். திறந்த கதவை மூடிவிட்டு இவன் முன்கதவைத் திறந்து கொண்டு உட்கார்ந்தான்.

“நீங்களும் உள்ள வந்து உக்காருங்க. புவனா வர டைமாகும்.”

“ஐயையோ வேண்டாங்கய்யா, நா இப்படியே நிக்கிறேன்.”

“அட வாங்க சார், எவ்ளோ நேரந்தான் நின்னுட்டிருப்பீங்க. எனக்குப் பேச்சுத் துணையா இருப்பீங்கள்ள?”

பக்கவாட்டில் சரிந்து மறுபக்கக் கதவைத் திறந்துவிட்டான். அவர் இப்போதுதான் முதன் முதலாய் இந்தக் காருக்குள் ஏறுகிற மாதிரி தயக்கத்துடனும் கூச்சத்துடனும் இவன் பக்கத்தில் உட்கார்ந்தார். வாசு, ஒரு காலை மடக்கி, அவரைப் பார்க்கிற மாதிரி இருந்து கொண்டான்.

“பை த வே, ஒங்க பேர் எனக்குத் தெரியாதே?”

“பேர் எதுக்கு சார், டிரைவர்னே கூப்புடுங்க.”

“டிரைவர்னு தெரியாமலா இருக்கு, பேரச் சொல்லுங்க ஸார்.”

“வேண்டாம் சின்ன முதலாளி. பெரியவருக்குப் புடிக்காது.”

“அட பேரச் சொல்றதுக்கு இவ்வளோ பிகு பண்றீங்களே? சரி ஒங்களுக்குக் கிட்டத்தட்ட எங்க அப்பா வயசு இருக்கும். ஸோ, சித்தப்பான்னு கூப்புடறேன். இல்ல, மாமான்னு கூப்புடவா?”

“ஐயையோ, ஐயையோ, அதெல்லாம் வேண்டாம் சின்ன முதலாளி. பேரச் சொல்லியே கூப்புடுங்க.”

“அப்ப பேரச் சொல்லுங்க.”

“வந்து... சுந்தரம்ங்க. ஆனா அது வேண்டாம் சின்ன முதலாளி. பெரியவர் மாதிரி, பாப்பா மாதிரி நீங்களும் டிரைவர்னே கூப்புடுங்க. சுந்தரம் வேண்டாம். அப்புறம், ஒங்கள நெருங்கி வரப் பாக்கறேன்னு பெரியவர் கோச்சுக்குவார்ங்க. பெரியவர்கிட்ட எனக்கு இப்ப ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கு...”

“சொல்லுங்க.”

“நம்ம பாப்பா வயசுல நமக்கொரு பொண்ணு இருக்குங்க ஐயா. கல்யாணத்துக்கு நிக்கிது. பெரியவர்கிட்டதான் உதவி கேக்கணும்”

“அப்ப சீக்கிரத்துல ஒரு கல்யாண விருந்து இருக்குன்னு சொல்லுங்க.”

வாசு சிரித்தான். சுந்தரம் அடக்கி வாசித்தார்.

“என்ன சின்ன முதலாளி நீங்க அப்படிக் கேக்கறீங்க... விருந்து ஒங்க வீட்டு விருந்து. பரிமார்றவன்தான் நான்... ஒங்க காரை நா ஓட்டற மாதிரி... கார் ஒங்களோடது, கௌரவம் என்னோடது... அதுல ரெண்டு விசேஷ கௌரவத்தை என்னால மறக்கவே முடியாது சின்ன முதலாளி...”

வாசு இடைமறித்தான்.

“வார்த்தைக்கு வார்த்தை ‘சின்ன முதலாளி சின்ன முதலாளி’ன்னு தூக்கி வைக்காதிங்க சுந்தரம். நா ரொம்பச் சின்னவன். நீங்க பேரச் சொல்லியே கூப்புடலாம். அது சங்கடமாயிருந்தா சினிமால கூப்புடற மாதிரி ‘தம்பி’ன்னு கூப்புடுங்களேன்.”

ஏதோ அபசாரத்தைக் கேட்டுவிட்ட மாதிரி சுந்தரம் ரெண்டு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

“ஐயையோ, தப்புங்க சின்ன முதலாளி. பெரியவருக்குத் தெரிஞ்சா போச்சு. அவர் ரொம்ப அந்தஸ்துப் பாக்கறவர்ங்க.”

“மாமா இப்ப என்ன பாத்துட்டா இருக்கார்?”

“அவர் பாக்காதப்ப ‘தம்பீ’ம்பேன், அப்புறம் அதுவே பழக்கமாயிரும். பெரியவர் காதுல விழுந்தா என் பொழப்புல மண்ணு விழுந்திரும் சின்ன முதலாளி.”

சுந்தரத்தின் பதற்றம் வாசுவுக்கு அநாவசியமாய்ப் பட்டது.

“பயப்படாதீங்க சுந்தரம். ஒங்க பொழைப்புக் கெட நிச்சயமா நா காரணமாக மாட்டேன். சரி அத விடுங்க. என்னமோ ரெண்டு விசேஷ கௌரவம்னீங்களே, அதச் சொல்லுங்க.”

“அதத்தான் சொல்ல வந்தேன் சின்ன முதலாளி. ஒண்ணு வந்து ஒங்க கல்யாண ஊர்வலத்துல நான் காரோட்டினது. இன்னொன்னு பதினெட்டு வருஷத்துக்கு முந்தி.”

இவ்விடத்தில் ஒரு கமா வைத்துவிட்டுக் கோமாவில் ஆழ்ந்த மாதிரி சுந்தரம் மெய் மறந்தார். இடைவெளி அதிகமாகவே, வாசு அடியெடுத்துக் கொடுத்தான்.

“பதினெட்டு வருஷத்துக்கு முந்தி?”

“நம்ம பாப்பா மொத மொதலா பள்ளிக்கூடத்ல சேர்ற நாள். அப்ப பெரியவர்ட்ட ஒரு ஹெரால்டு இருந்தது. அத டாப்பக் கழட்டி விட்டிட்டு ஒரு செட்டப்பா அலங்காரம் பண்ணி பூச்சோடனையெல்லாம் பண்ணேன் பாருங்க, பெரியவர் அசந்தே போயிட்டார். மெட்ராஸ் ஸிட்டிய ஒரு ஃபுல்ரவுண்ட் அடிச்சுச் சர்ச் பார்க்ல கொண்டு போய் எறக்கி விட்டேன். பாப்பாக்கு ஒரே சந்தோஷம்.”

காருக்குள்ளே சந்தோஷமாய் உரையாடிக் கொண்டிருந்தவர்கள், வெளியே உருவான புயலைக் கவனிக்கவில்லை. அது மேலும் தீவிரமடைந்து மூர்க்கமாய்த் தாக்கியது.

“வாட் இஸ் திஸ் வாசு? டிரைவருக்கு சமமா உக்காந்து கதை பேசிட்டிருக்கீங்களே, ஒங்க ஸ்டேட்டஸ் என்ன, அவன் ஸ்டேட்டஸ் என்ன? யாராவது பாத்தா அசிங்கமா நெனக்க மாட்டாங்க?”

சுந்தரம் பதறி இறங்கி காரைச் சுற்றியொரு அரைவட்டம் ஓடி புவனாவுக்குக் கதவைத் திறந்து கொண்டு பதைபதைப்புடன் நின்றார்.

அவரைப் பஸ்பமாக்குகிற மாதிரி முறைத்தபடிப் புவனா ஸீட்டில் விழுந்தாள். பிறகு, ஆவி பறக்க ஒரு ஆணை பிறந்தது.

“வாசு, பின்னாடி வாங்க.”

அவளுடைய கட்டளைக்கு வாசு அசரவில்லை.

“பரவாயில்ல, இதுவே வசதியாயிருக்கு. மிஸ்டர் சுந்தரம், நீங்க வண்டிய எடுங்க.”

“வந்து… மஹாபலிபுரந்தானே அம்மா?”

“மஹாபலிபுரம், மண்ணாங்கட்டி. பேசாம வீட்டுக்குப் போ.”

கார் மௌனமாய் வந்த வழியே ஊர்ந்தது.

உள்ளே ஒரே இறுக்கம்.

ஏ.ஸிக்குள்ளேயும் உஷ்ணம்.

ஹார்ன் இசையைத் தவிர வேறு ஓசையில்லை. அண்ணா நகரை சமீபித்ததும்தான் முதல் குரல் ஒலித்தது.

“டிரைவர், வண்டிய ஓரமா நிறுத்து.”

ஏன் எதற்கு என்று கேட்காமல் கார் கீழ்ப்படிந்தது.

“வாசு, எறங்கிப் பின்னாடி வாங்க.”

‘பரவாயில்லை’யென்று ஆரம்பிக்க வாயெடுத்து, முதல் மூன்று எழுத்துக்களை அவன் உச்சரித்து முடிப்பதற்குள் வெடித்தாள் புவனா.

“போதும் ஒங்க சமத்துவம், சகோதரத்துவம் எல்லாம் வாசு. ப்ளீஸ் பின்னாடி வாங்க. இந்தப் புரட்சி கண்றாவியெல்லாம் டாடிக்குப் புடிக்காது.”

“சின்ன முதலாளி நல்லாயிருப்பீங்க, எனக்காகப் பின்னாடி போயிருங்க. ப்ளீஸ்.”

சுந்தரம் பரிதாபமாய்க் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சவும், வாசு அடிபணிய வேண்டியதாயிற்று.

“நா சொன்னாக் கேக்கமாட்டீங்க, டிரைவர் சொன்னாத்தான் கேப்பீங்களாக்கும்?”

அடுத்த நாள் காலை. வாசுதேவனுக்குக் காரோட்டும் பயிற்சி.

போர்ட்டிகோவில் வந்து நின்ற அம்பாசடரில் ஏறிக் கொண்டபோது டிரைவர் ஸீட்டில் வெள்ளை யூனிபாஃமில் சுந்தரமல்லாத வேறொரு நபர்.

அண்ணா நகரில் நெரிசல்களைக் கடந்து புதிய ஆவடி சாலையின் விசாலத்தில் ஸ்டீரிங்கைப் பற்றியபடி பேச்சுக் கொடுத்தான்.

“புது அப்பாயின்ட்மென்ட்டா நீங்க?”

“இல்லீங்க சார், ரெண்டு வருஷமா இருக்கேன்.”

“கண்லயே படல?”

“சின்ன முதலாளியக் கல்யாணத்தன்னிக்கிப் பாத்ததுங்க. அதுக்கப்புறம் இன்னிக்கித் தான் சமயம் வாச்சிருக்கு.”

“சுந்தரம் எங்க, பென்ஸ் எடுத்துட்டுப் போயிருக்காரா?”

“இந்த ஸ்பீடுக்குட் டாப் கியர்ல போக்கூடாது சார். வண்டி இடிக்கும். கியர மாத்துங்க.”

“தேர்ட் கியர் மேலதானே? சரி, மிஸ்டர் சுந்தரத்தக் கேட்டேனே...”

“க்ளச்ச இப்படி சடன்னா ரிலீஸ் பண்ணக் கூடாது சின்ன முதலாளி, இஞ்சின் ஆஃப் ஆயிரும். மெல்ல பூப்போல விடுங்க.”

“ம். இப்ப ஓக்கேயா? ஆமா, சுந்தரம்...”

“பின்னாடி வண்டி வருது சார், லெஃப்ட்ல ஒடிங்க.”

வாசுதேவன் தயவு தாட்சண்யமில்லாமல் ப்ரேக் பெடலை ஏறி மிதித்து நடுச்சாலையில் வண்டியை நிறுத்தினான். பின்னால், அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்த கான்ட்டெஸ்ஸா க்றீச்சிட்டு வலதுபுறம் விலகி, ‘எல்’ போர்டை ஏசிவிட்டுப் பறந்தது.

வெலவெலத்துப் போன புது டிரைவருக்கு எல்லா அவயங்களிலும் வேர்வை.

“என்ன சார் இப்படி அநியாயம் பண்ணிட்டீங்க!”

வாசுவிடமிருந்து சாவகாசமாய் பதில் வந்தது.

“அப்புறம் என்ன, நா ‘சுந்தரம் சுந்தரம்’ங்கறேன், நீங்க என்னடான்னா க்ளட்ச மிதி. கியர மாத்துன்னு பேச்ச மாத்தறீங்களே.”

டிரைவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கை கூப்பினான்.

“சார் நம்மளையும் வம்புல மாட்டி விட்றாதீங்க சார். தனிக்கட்டையாயிருந்தா பரவாயில்ல, குடும்பஸ்தன் சார். இருவத்திரெண்டு வருஷ சர்வீஸ்காரர்ங்க சுந்தரம், அவரையே தூக்கியெறிஞ்சிட்டாங்க. நா எம்மாத்திரம்.”

வாசு கொஞ்சம் அதிர்ந்தான்.

“சுந்தரத்தை ஏன் நிறுத்திட்டாங்க சார்?”

“நீங்க என்ன சின்ன முதலாளி என்னப் போய் சார் போட்டுப் பேசிக்கிட்டு.”

“ஒங்க பேர் எனக்குத் தெரியாதில்ல, அதான்.”

“ஐயையோ, பேர் மட்டும் வேண்டாம் சார்.”

“அதுக்கு ஏங்க இப்படிப் பதர்றீங்க?”

டிரைவர் ஒண்ணும் பேசவில்லை. வண்டி மூணாவது கியரில் வேகந்தணிந்து வெட்டி வெட்டி இழுத்தது. அந்த அவஸ்தை டிரைவரை வாயைத் திறக்க வைத்தது.

“கியரை மாத்துங்க சார்.”

“பெயரைச் சொன்னாத் தான் கியரை மாத்த சாத்தியப்படும்னு தோணுது.”

வாசு திடீரென்று டி.ராஜேந்தர் அவதாரம் எடுத்ததைப் பார்த்து டிரைவர் நெகிழ்ந்தான்.

“என் பேர் டிரைவர்தான் சார்.”

“அப்பா அம்மா ஒங்களுக்குப் பேர்ன்னு ஏதும் வக்கிலியா?”

“வச்சாங்களே.”

“என்னான்னு வச்சாங்க?”

“அதான். டிரைவர்.”

வாசு லேசாய்ச் சிரித்துக் கொண்டான்.

“டிரைவர்ங்கறது ஒரு தொழில்னுதான் எனக்குத் தெரியும். பெத்தவங்க கொழந்தக்கி டிரைவர்னு பேர் வப்பாங்கன்னு இப்பத்தான் கேள்விப்படறேன்.”

“ஏன் சார், பைலட்னு பேர் இருக்கும்போது டிரைவர்னு இருக்கக்கூடாதா? மெர்ச்சன்ட், இஞ்சினியர்னு எல்லாம் கூடப் பேர் இருக்கே!”

வாசு தாடையைத் தடவிக் கொண்டான்.

“புத்திசாலித்தனமாத்தான் பேசறீங்க, ஆனாலும் கொஞ்சம் கோட்டை விட்டுட்டீங்க. பைலட், மெர்ச்சன்ட், இஞ்சினியர்னு மொட்டையா யாரும் பேர் வைக்க மாட்டாங்க. ராஜேஷ் பைலட், விஜய் மெர்ச்சன்ட், ஃபருக் இஞ்சினியர் மாதிரி டபுள் டபுளாத்தான் வரும். ஸோ, டிரைவர்ங்கறது பாதிப்பேர்தான், ஒங்க முழுப் பேரையும் சொல்லுங்க. நீங்க என்ன டிரைவர்னு சொல்லுங்க.”

‘வசம்மா மாட்டிக்கிட்டியா?’ என்கிற மாதிரி வாசு ஓரக்கண்ணால் பார்த்தான்.

சில வினாடிகள் யோசனைக்குப் பின்னால் தீர்மானமாய் பதில் வந்தது.

“கார் டிரைவர்.”

சுந்தரத்தைக் குறித்து மன வருத்தத்தையும் மீறி வாசுவுக்குச் சிரிப்பு. சிரிப்பில் பின்னிப் பின்னிச் சொற்கள் வெளிவந்தன. “உண்மையிலேயே நீங்க புத்திசாலிதான் கார் டிரைவர் சார். இவ்வளவு புத்திசாலியாயிருக்கீங்க, இப்படி பயந்து சாகறீங்களே நாம ரெண்டு பேர்தான இருக்கோம் இந்தக் கார்ல?”

“சின்ன முதலாளி ஒங்க பேர்ல எனக்கு ரொம்ப மரியாதை இருக்கு. என் பேரை நீங்க தெரிஞ்சிக்கறதனால நா ஒண்ணும் கொறஞ்சிரப் போறதில்ல. நீங்களும் எனக்கு பாஸ்தான். ஒங்க உத்திரவுக்குக் கீழ்ப்படிய வேண்டியவன்தான் நான். ஆனா... சொன்னா நீங்க வருத்தப்படுவீங்க.”

“பட மாட்டேன். சொல்லுங்க.”

“சின்ன முதலாளி, இந்தப் பணக்கார ஆடம்பரம் ஒங்களுக்குப் புதுசு, இந்த புது நாகரீகம் ஒங்களுக்குப் பழக்கமாகி, ஒங்களுக்கு ஒரு அதிகாரத் தோரணை வர்ற வரைக்கும் ஒங்ககிட்ட ஒரு லிமிட்டாத்தான் நடந்துக்கணும்னு எங்களுக்கெல்லாம் உத்தரவு இருக்குங்க. வேலக்காரங்க பேரெல்லாம் சின்ன முதலாளிக்கி இப்ப தெரிய வேண்டிய அவசியமில்லன்னு சொல்லியிருக்காங்க. தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நெருக்கம் பேர் சொல்லிக் கூப்புடறதுலதான் ஆரம்பிக்குங்கறது பெரியவரோட கணிப்பு. மஞ்சள் கோட்டைத் தாண்டவே கூடாதுன்னு கண்டிப்பான உத்தரவு சார். ஆனாலும் இப்ப நா தாண்டறேன். நீங்க ஒரேயொரு வாக்குறுதி எனக்குக் குடுக்கணும் சார்.”

“சொல்லுங்க.”

“என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ, எப்படியாவது சுந்தரத்துக்குத் திரும்ப வேலை கிடைக்க நீங்க ஏற்பாடு செய்யணும் சார். அவர் போறப்ப எங்கையப் புடிச்சிட்டு விக்கி விக்கி அழுதார் சார். ரொம்பப் பரிதாபம் சார்.”

அவனுடைய கண்கள் பனித்தன.

“நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும் அதை நா செய்யத்தாங்க போறேன்.”

வாசுவின் குரலில் உறுதி தெரிந்தது.

“சுந்தரம் அட்ரஸ் ஒங்களுக்குத் தெரியுமா?”

வாசுவிடம் டிரைவர் விலாசத்தைச் சொல்லி முடிக்கவும் அவர்களை முந்திக் கொண்டு போன பென்ஸ் கார் பாதையை மறித்துக் கொண்டு நிற்கவும் சரியாய் இருந்தது. முன் கதவைத் திறந்து இறங்கிய புவனா, சிரித்தபடி வந்தாள்.

“என்ன, இளவரசருக்குக் குதிரையேற்றப் பயிற்சி எந்த லெவல்ல இருக்கு?”

“என்ன புவனா, தனியா காரெடுத்துட்டு எங்க கிளம்பிட்ட?”

ஒண்ணுமில்ல வாசு, நாம ரெண்டு பேர் மட்டும் பென்ஸையெடுத்துக்கிட்டு ஜாலியா மஹாபலிபுரம் போயிட்டு வரலாமேன்னு திடீர்னு தோணுச்சு. நேத்துதான் நீங்க என்னை மூட் அவுட் பண்ணிட்டீங்க. இப்ப போய்ட்டு வருவோமே வாசு, ப்ளீஸ். டிரைவர், நீ வண்டிய வீட்டுக்குக் கொண்டு போயிருப்பா.”

அம்பாஸிடர் வந்த வழியே திருப்ப, பென்ஸ் அதை முந்திக் கொண்டு பறந்தது. புன்னகையோடு புவனா மெல்லச் சீண்டினாள்.

“என்ன தலைவரே ஒண்ணும் பேசாம வர்றீங்க. இன்னிக்கி என்ன புரட்சி பண்ணலாம்னு யோசனையோ?”

“பெரிய யோசனையொண்ணுமில்ல புவனா, அந்த அம்பாஸடர்ல பின் ஸீட்ல ஒரு ஸ்டீரிங் வீல், க்ளட்ச், கியர், பிரேக், ஆக்ஸலரேட்டர் எல்லாம் ஏன் வைக்காம விட்டீங்கன்னு யோசிச்சேன்.”

“பின் ஸீட்ல ஸ்டீரிங்கா, ஏன்?”

“பின்ன என்ன, நா அந்த டிரைவருக்கு சமமா முன் ஸீட்ல ஒக்காந்துல்ல டிரைவிங் கத்துக்க வேண்டியதாயிருக்கு; என் ஸ்டேட்டஸ் என்ன, அவன் ஸ்டேட்டஸ் என்ன? யாரும் பாத்தா அசிங்கமா நெனைக்கமாட்டாங்க?”

“கிண்டல் பண்றீங்க. ஒங்களுக்கு இப்ப எல்லாம் கிண்டலாத்தான் இருக்கும் வாசு. பணக்கார ரத்தம் ஒங்க ஒடம்புல ஊற ஊற நீங்களும் எங்க லெவலுக்கு வந்துருவீங்க.”

“பணக்கார ரத்தமா, அது என்ன கலர்ம்மா?”

“கலர் எல்லாம் சிகப்புதான். ஆனா ஏழை ரத்தம் வேர்வை கலந்து டைல்யூட்டா இருக்கும். பணக்கார ரத்தம் கலப்படமில்லாதது. கான்ஸன்ட்ரேட்டட். ரெண்டும் ஒண்ணாக முடியாது.”

“அப்படிப் பாத்தா, உன் ரத்தமும் என் ரத்தமும் கூட ஒட்ட முடியாது புவனா. நீ கோடீஸ்வரர் வீட்டுப் பொண்ணு. நா சாதாரண ஹெட் க்ளார்க்கோட மகன். தட்டுத்தடுமாறி எம்.எஸ்.சி ஸெகண்ட் க்ளாஸ்ல பாஸ் பண்ணின பிறகு சிபாரிசு இல்லாம சம்திங் தள்ளாம எனக்குக் கெடைச்சதும் ஒரு க்ளார்க் வேலைதான். என்னமோ எங்கம்மா ஒங்கப்பாவுக்கு தங்கச்சிங்கறதனாலயும், தன்னோட பொக்கிஷங்களை முகந்தெரியாத எவனோ ஒருத்தன் வந்து அனுபவிச்சிட்டுப் போயிரக் கூடாதேங்கறதனாலயும், known devil is better than unknown angel ங்கற ஃபார்முலாப்படி என் மேல திடீர்ப்பாசம் வந்து ஒங்கப்பா எங்கம்மாவுக்குக் கொக்கி போட்டு இந்தக் கல்யாணத்தை முடிச்சிட்டார்.”

“அப்ப ஒங்களுக்கு எம்மேல பிரியமே இல்ல.”

“பிரியமென்ன, ஒங்கிட்ட எனக்கொரு போதையே இருந்தது புவனா. நம்ம உறவுக்காரங்க வீட்டு விசேஷங்கள்ளயெல்லாம் ஒன்னைப் பாத்துப் பாத்து மயங்கியிருக்கேன். எட்டாத கனி’ன்னு ஏங்கியிருக்கேன். ஆனா ஏழை ரத்தம், பணக்கார ரத்தம்னு பிரிச்சுப் பாக்கற பிரிவினைவாதி நீன்னு முந்தியே தெரிஞ்சிருந்தா நா மயங்கியிருக்கவும் மாட்டேன், ஏங்கியிருக்கவும் மாட்டேன். ஒங்க வீட்டு டிரைவரோட பேரைத் தெரிஞ்சு வச்சிக்கிறது கூடக் கௌரவக் கொறச்சல்னு நெனக்கிற நீ, அப்படிப் பேரச் சொல்லிக் கூப்பிட்டா ஒரு அந்நியோன்யம் ஏற்பட்டுப் போகும், தொழிலாளி முதலாளி இடைவெளி கொறஞ்சு போகும், நம்மோட ஸ்டேட்டஸ்க்கு இழுக்காப் போகும், கௌரவம் அழுக்காப் போகும்னு பயப்படற நீ, அதே நிலையில் ஒன்னோட ஹஸ்பண்டை அதாவது என்னை வச்சு நெனைச்சுப் பாரேன். கல்யாணத்துக்கு முந்தி ஒரு க்ளார்க்கா இருந்தவன் நான். எனக்கு மேலே ஒரு மானேஜர், எத்தனையோ ஆஃபீஸர்ஸ். எக்ஸிக்யூட்டிவ்ஸ். மானேஜர், அல்லது ஒரு எக்ஸிக்யூட்டிவ் என்னை ‘இந்தாப்பா

க்ளார்க்'னு கூப்புடலாம், அல்லது 'மிஸ்டர் வாசுதேவன்'னும் கூப்பிடலாம், இந்த ரெண்டில் எது எனக்கு சந்தோஷத்தை தரும்னு நெனைக்கிற?"

"அதாவது, டிரைவரை 'டிரைவர்னு'ம் கூப்பிடலாம். 'மிஸ்டர் சுந்தரம்'னும் கூப்பிடலாம். 'டிரைவர்னு சொல்லாம பேரச் சொல்லிக் கூப்பிட்டா அவனுக்கு சந்தோஷமாயிருக்கும்'னு சொல்றீங்க. என்ன ஒங்க ஆர்க்யூமெண்ட்! அவனை சந்தோஷப்படுத்தறதுக்கா நாம வேலக்கி வச்சிருக்கோம்? நம்ம சௌகரியத்துக்காக வச்சிருக்கோம். அவன் சம்பளத்துக்கு வேலை செய்யறவனேயொழிய சந்தோஷத்துக்கு வேலை செய்யறவனில்ல."

"இருக்கட்டுமே. ஒரு சின்ன சந்தோஷத்தை அவருக்குத் தர்றதனால ஒன்னோட எந்த சந்தோஷம் கொறஞ்சிடப் போகுது. பாக்யராஜ் சொல்ற மாதிரி சந்தோஷத்துல பெரிய சந்தோஷமே அடுத்தவுங்களை சந்தோஷப்படுத்திப் பாக்கறதுதானே! மத்தவங்களுக்கு வாரி வாரிக் குடுத்தாலும் நம்மகிட்ட ஸ்டாக் குறையாம கூடறது சந்தோஷமும், கல்வியும்தான். ஒன்னோட கல்விக் கட்டடத்துக்கு ஒரு செங்கல்லாயிருந்தவருக்கு ஒரு சின்ன சந்தோஷத்தக் கூட நீ மூர்க்கத்தனமா மறுக்கறது ரொம்ப வேதனையான விஷயம் புவனா."

"என்னங்க அது, கட்டடம், செங்கல்?"

புவனாவின் குரல் ஆறிப்போக ஆரம்பித்திருந்தது. வாசுவுக்கு நம்பிக்கை துளிர்விட்டது.

"நீ முதல் முதலா ஸ்கூலுக்குப் போன நாள் ஞாபகம் இருக்கா புவனா?"

"கொஞ்சம் கொஞ்சம் ஞாபகம் இருக்கு. ஒரு கனவு மாதிரி. ஏன்?"

"ஒன்ன ஸ்கூல்ல சேத்த அன்னக்கி காரை அலங்காரம் பண்ணி, ஊரெல்லாம் ரவுண்ட் அடிச்சி ஸ்கூல்ல கொண்டு போய் விட்டது சுந்தரம்தானாமே?"

"சொன்னாரா?"

"ஆமா, சொன்னார். ரொம்பப் பெருமையா சொன்னார். ரொம்ப கர்வமா சொன்னார்."

"எஸ் வாசு, இப்ப மெல்ல மெல்ல ஞாபகத்துக்கு வருது. அப்ப நாங்க மைலாப்பூர்ல இருந்தோம். அந்த டிரைவருக்கு... சுந்தரத்துக்கு என் வயசுல ஒரு பொண்ணு கூட இருந்தா. லீவ் நாள்ல சில சமயம் சுந்தரம் அவளையும் கூட்டிட்டு வருவார். நாங்க ரெண்டு பேரும் விளையாடிட்டிருப்போம். அவங்க வீடு ராயப்பேட்டைல இருந்தது."

"இப்பவும் ராயப்பேட்டைதான்."

"இவ என்ன பண்ணுவா, சில நாள் ராயப்பேட்டைலயிருந்து மைலாப்பூருக்கு தன்னந்தனியா நடந்தே வந்துருவா. ஒரு நாள் டாடி 'அவ கூடல்லாம் சேரக்கூடாது'ன்னு

திட்டினார். சுந்தரத்தையும் புடிச்சுக் ‘கன்னாபின்னா’ன்னு திட்டினார் டாடி. அதுக்கப்புறம் அவளை நா பாக்கவேயில்ல. அவ பேர் கூட... ‘வசந்தா’ன்னு ஞாபகம்.”

“ஒனக்கு ஒங்க டாடி கல்யாணம் பண்ணி வச்ச மாதிரி வசந்தாவுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டிய கடமையும், ஆசையும் சுந்தரத்துக்கு இருக்கு. கல்யாணத்துக்கு மாமாட்டதான் உதவி கேக்கணும்னு நேத்து சொல்லிட்டிருந்தார். இப்ப என்னடான்னா எங்கூட சகஜமாப் பேசிட்டிருந்த ஒரே பாவத்துக்காக அவருக்கு உள்ள வேலையும் போய் நடுத்தெருவுல நிக்கிறார், குடும்பத்தோட. இது ஒனக்கு சந்தோஷந்தானா புவனா?”

புவனாவுக்கு நெஞ்சில் ஏதோ தைத்ததை முகம் காட்டியது. அவள் குரல் மெலிந்து வெளிவந்தது.

“நா டாடிட்ட சுந்தரத்தப் பத்திக் கோள் சொன்னது தப்புதான் வாசு. ஆனா டாடி சட்டுன்னு அவரை டிஸ்மிஸ் பண்ணிருவார்னு எதிர்பாக்கல.”

மியூஸிக் அகடமி சிக்னலில் வண்டி இடது பக்கம் திரும்பியது. வாசுவுக்குக் குழப்பம்.

“ரைட்ல திரும்பணும் புவனா. மஹாபலிபுரத்துக்கு அடையார் ரூட்தானே?”

“யெஸ், இங்க ராயப்பேட்டைக்குப் போய்ட்டுப் போலாம் வாசு.”

அவனைப் பார்த்துப் புவனா விசேஷமாய்ச் சிரித்தாள்.

வாசு தன்னுடைய நேசத்தையும் சந்தோஷத்தையும் அவளுக்கு வெளிப்படுத்தினான், ஸ்டீரிங் வீலோடு அவளுடைய கையை அழுத்திப் பற்றி.

-குமுதம் ஸ்பெஷல், ஜூன், 1997.

# தீர்த்த யாத்திரை

மணி பத்தரையைத் தாண்டிவிட்டது. தூக்கம் சொக்குகிற கண்களுடன் சந்திரா வாசலில் உட்கார்ந்திருந்தாள். இன்றைக்கும் உதை உண்டு. ராத்திரிக்கு ராத்திரி இதே கதைதான். வீராசாமி வருகிறபோது இவள் விழித்துக் கொண்டிருந்தால் உதையின் வேகம் கொஞ்சம் குறைவாயிருக்கும். அசதியில் லேசாய்க் கண்ணயர்ந்து விட்டாலோ, ஆவேசமாய் அடி விழும்.

முன்பு சாராயக் கடைகள் வெளிப்படையாய்த் திறந்திருந்த காலத்தில் நல்ல சரக்கைக் குடித்துவிட்டு வந்து உதைத்துக் கொண்டிருந்தான். இப்போது கள்ளச்சாராயத்தை ஊத்திக் கொண்டு வந்து உதைக்கிறான். கள்ளச்சாராயம் குடித்துச் சுருண்டு விழுந்து செத்தவர்களைப் பற்றித் தினத்தந்தியில் வந்து கொண்டிருக்கிற பரபரப்புச் செய்திகள் சந்திராவைக் கலவரப்படுத்தின. புருஷன் குடித்துக் கெட்டுப் போவதைப் பற்றி மரத்துப் போய்விட்டவள், அவன் குடித்துச் செத்துப் போகக் கூடாதே என்று வருத்தப்பட ஆரம்பித்தாள். 'இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டுமே' என்று யோசித்த போது பலவேசத்தின் நினைவு வந்தது.

வீராசாமிக்கு சிநேகிதன் என்றால் பலவேசம் ஒருத்தன்தான். ரெண்டு பேரும் தச்சநல்லூரில் வேறு வேறு மில்களில் வேலை செய்கிறவர்களானாலும் சைக்கிளில் சேர்ந்து போய் சேர்ந்தே வருவது வழக்கமாயிருந்தது. பலவேசத்தின் பேச்சு வீராசாமியிடம் நன்றாய் எடுபடும். பலவேசத்திடம் விஷயத்தைச் சொன்னால் அவன் வீராசாமிக்குப் புத்திமதி சொல்லக்கூடும் அல்லது அவனைத் திருத்துவதற்கு உபாயம் ஏதாவது சொன்னாலும் சொல்லுவான். இப்படியாய், விடிவுகாலத்தை நினைத்து ஏங்கிக் கொண்டே தூங்கிப் போனவளை, வீராசாமி மூஞ்சியில் விட்ட காட்டுத்தனமான குத்து அதிர்ந்து எழச் செய்தது. வழக்கமான சாத்தல்களுக்குப் பிறகு சோர்ந்து படுத்துவிட்ட புருஷனின் லுங்கியைச் சரிசெய்துவிட்டு ஒழுங்காய்ப் படுக்க வைத்தாள்.

அதிகாலையில் விழிப்புத் தட்டியதும் நேரே மாடசாமிக் கோனார் காம்பவுண்டுக்குத்தான் ஓடினாள். அங்கேதான் பலவேசம் வீடு. வீராசாமி எழுந்திருக்க ஏழு ஏழரையாகும்; அதற்கு முன்னால் பலவேசத்தைப் பார்த்துப் பேசிவிட்டு வந்து விட வேண்டும். முற்றத்தில் பல்லு விளக்கிக் கொண்டிருந்த பலவேசம் இவளைப் பார்த்தவுடன், வாயெல்லாம் பல்பொடியாய் 'வாம்மா தங்கச்சீ!'யென்று வரவேற்றான். அவனிடம் தன்னுடைய அவலத்தை அவசரமாய்ச் சொல்லிப் பரிகாரம் கேட்டாள். பலமான யோசனைக்குப் பின்னால் பலவேசம்,"ஒரு ரூட் இருக்கு தங்கச்சி. யோசிச்சி நாளக்கி சொல்றேனே." என்றான்.

விடிவுகாலம் ஒருநாள் தள்ளிப் போகிறதே என்று சந்திராவுக்குக் கொஞ்சம் வருத்தமிருந்தாலும், இன்னும் ஒரே நாளில் தன்னுடைய கஷ்ட காலத்துக்குப் பலவேசம் தீர்வுகண்டு விடப்போகிறான் என்று மனதார நம்பினாள். அந்த நம்பிக்கையில், இந்தப் பலவேசம் தன்னுடைய கணவனுக்கு வெறும் சிநேகிதனல்ல, எல்லா விஷயங்களிலும் கம்பெனி கொடுக்கிற விசேஷமான சிநேகிதனாவான் என்கிற உண்மையை வசதியாய் ஒதுக்கி விட்டாள்.

வாக்களித்த மாதிரியே அடுத்த நாள் காலையில் பலவேசம் சந்திராவுக்கு ஒரு வழி சொன்னான்.

“நமக்குத் தெரிஞ்ச சாமியார் ஒருத்தர் வீராவரத்துல இருக்காரு தங்கச்சி, இந்த மாதிரித் தண்ணிக் கேஸ்களை கொணப்படுத்தறது அவருக்குத் தண்ணிபட்டபாடு. அவரப் பாத்துப் பேசிட்டு வாறதுக்குத்தான் ஒன்ட்ட ஒரு நா அவகாசம் கேட்டேன். சாமியார் மந்திரிச்சுத் தாயத்துக் குடுப்பாரு...”

“மந்திரிக்க அவுக ஒத்துக்கணுமே...”

“அதக் கேக்கத்தானே நா சாமியார்ட்ட போனேன்! வீராசாமி இருக்கத் தேவையில்லியாம். அவனோட ஒரு சோடி வேட்டி சட்டைய மட்டும் தனியா எடுத்து வச்சிரு போதும்... ஆனா செலவுதா...”

“செலவு என்ன ஆனாலும் பரவாயில்ல அண்ணாச்சி, அவுக நல்லா ஆனாப் போதும்.”

“சாமியார் முன்னூறு ரூவா கேக்காரே...”

முன்னூறு ரூபாயின் கனம் சந்திராவை லேசாய் நிலைகுலையச் செய்தது. கொஞ்ச நேரம் அவள் ஏதும் பேசாமலிருக்கவும் பலவேசமே திரும்பவும் பேசினான்.

“நகை நட்டு ஏதாச்சும் இருந்தா...”

“நகை நட்டு ஏதண்ணாச்சி, அல்லாத்தெயுந்தா மவராசன் வித்துக் குடிச்சிப்புட்டாகளே” என்று இழுத்தவள், பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாய்த் தீர்க்கமாய்ச் சொன்னாள்.

“சரிண்ணாச்சி நா எப்பபடியாச்சும் சமாளிக்கிறேன். நீங்க மட்டும் செரமம் பாக்காம நாளக்கே சாமியாரக் கூட்டியாந்திருங்க.”

பலவேசம் ரொம்ப சந்தோஷமாய் சம்மதம் சொன்னான்.

மறுநாள் காலையில் புருஷனுக்குச் சோறு கட்டிக் கொடுத்து வேலைக்கு அனுப்பிவிட்டு, ‘எதிர்த்த வீட்டுக் கடிகாரத்தில் எப்போது ஒம்போது அடிக்கும்?’ என்று நிம்மதியில்லாமல் காத்திருந்தாள். ஒன்பது மணிக்கு மேலேதான் வடக்கு பஜாரில் கடைகள் எல்லாம் திறக்கும். ஒன்பது அடிக்கிற சத்தங் கேட்டதும் நேரே சேட்டு கடைக்கு நடந்தாள். பதினொரு மணிக்கு சாமியார் வருவாரென்று பலவேசம் ராத்திரி வந்து வீராசாமிக்குத் தெரியாமல் சொல்லிவிட்டுப் போயிருந்தான். அதற்கு முன்னால் எல்லா ஏற்பாடுகளும் செய்தாக வேண்டும். சேட்டு கடையிலிருந்து அப்படியே மார்க்கெட்டுக்குள் நுழைந்து, சாம்பிராணி, ஊதுபத்தி, வெற்றிலை பாக்கு, இத்யாதியெல்லாம் வாங்கிக் கொண்டு திரும்பியதும் டீ போட்டு வைத்துவிட்டு, சட்டி பானைகளை ஒழுங்குபடுத்தி, பாய் விரித்து, சாமி படத்துக்கு ஊதுவத்தி கொளுத்திக் கொண்டிருந்தபோது, “வீராசாமி வீடு இதுதானா?” என்று வாசலில் ஒரு வயோதிகக் குரல்.

“வாருங்க சாமி, வாருங்க வாருங்க. பலவேச அண்ணாச்சி கூட வரும்னு இருந்துட்டேன், இல்லாட்டி நானே வந்து தெருவுல நிண்டுருப்பேனே...”

கைகளைக் கூப்பியபடி பவ்யமாய் வரவேற்றவள், இன்னும் ஒரு படி மேலே போய் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டபோது சாமியார் சங்கடமாய் நெளிந்தார்.

“எனக்குத் தெரியாமப் போச்சுங்களே சாமி; ஐயோ, வூட்டக் கண்டுபிடிக்கச் செரமப்பட்டிருப்பீகளே...”

“இதென்ன பெரிய செரமம் கொழந்தே, பாளையங்கோட்ட என்ன திருநவேலி மாதிரி பெரிய ஊரா? பலவேசம் அடையாளஞ் சொன்னான், சுளுவாக் கண்டு புடிச்சுட்டேன்.”

“தேத்தண்ணி பெசலாப் போட்டு வச்சிர்க்கேஞ்சாமி, சாப்புடுவீயானோ மாட்டீயனோ...”

“ஆஹா அதுக்கென்ன சாப்ட்டாப் போச்சு.”

ஸ்பெஷல் டீயை ஒரு பெரிய டம்ளர் நிறைய ருசித்துக் குடித்துவிட்டு சாமியார் சம்மணங்கட்டி உட்கார்ந்து மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார். வீடெங்கும் சாம்பிராணிப்புகை. புகைமூட்டம் அதிகமாக அதிகமாக சாமியாருக்கு சாமி வந்தது. உட்கார்ந்த நிலையிலேயே கொஞ்சநேரம் ஆட்டம் போட்ட பின் சாமி நிதானத்துக்கு வந்தது. இவள் பயபக்தியுடன் கூப்பிய கரங்களோடு சுவரையொட்டி நின்றிருந்தாள்.

சாமி லேசாய்க் கண்களைத் திறக்கிற மாதிரி தெரிந்ததும், தன்னுடைய குறைகளை முறையிடத் தருணம் வந்துவிட்டது என்று ஆயத்தமானாள். சாமி பேச ஆரம்பித்தது. இவளுடைய சரித்திரத்தையும். தரித்திரத்தையும் சாமி புட்டுப்புட்டு வைத்தபோது சந்திரா ரொம்ப ஆச்சர்யப்பட்டுப் போனாள். பலவேசம் இவளைப் பற்றி சாமியாரிடம் சொல்லியிருப்பான்தான். ஆனால் திட உருவமில்லாத இந்த சாமிக்கு, சாமியாரிடமிருந்து தகவல் எப்படிப் போனது? ஆஹா, இதுதான் தெய்வீகம்! சந்திராவுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. சாமி ஜிப்பா பாக்கெட்டுக்குள் கைவிட்டு ஒரு தாயத்தை எடுத்து ஏதோ மந்திரங்கள் ஜபித்தபடி இவளிடம் நீட்டியது. இவள் அதைப் பணிவோடு பெற்று, கண்களில் ஒற்றிக் கொண்டு கொஞ்சநேரம் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். தன்னுடைய சங்கடங்களெல்லாம் இன்றோடு தீர்ந்தன என்ற நம்பிக்கையில், பலவேசம், சாமியார், இந்தப் பெரியசாமி எல்லோருக்கும் மானசீகமாய் நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள். மீண்டும் கண் விழித்துப் பார்த்தபோது எதிரே, சாமியைப் பரலோகம் அனுப்பிவிட்டு பழைய சாமியாரே திரும்பவும் பிரசன்னமாயிருப்பது புலப்பட்டது.

“என்ன கொழந்தே, பெரியசாமி என்ன சொல்லுச்சு?”

“சாமி தாயத்துக் குடுத்துச்சுங்க சாமி. ஆனா, இத எப்படி அவுக கையில கட்டிவுடறதுன்னுதாந்தெரியல.”

“அதப்பத்தி ஒண்ணுங் கவலப்படாத கொழந்தே, இந்தத் தாயத்தெல்லாம் சும்மா சம்பரதாயத்துக்குத்தான். இங்க பாளையங்கோட்டையில சாமி மந்தரம் ஓதினப்பவே அங்க தச்சநல்லூர்ல ஒம் புருசனுக்குத் தாக்கல் போயிருக்கும். இதுக்குள்ள அவன் மனசு

மாறியிருக்கும் பாரேன். சாயங்காலம் மில் விட்டவுடனே சைக்கிள் இங்க அங்க ரூட் மாறாம நேரா வூட்டு வாசல்ல வந்து நிக்கலேன்னா பாரு. இனிமே வீராசாமி கள்ளச்சாராயப் பக்கம் தல வச்சுப் படுக்க மாட்டான். அதுக்கு நா கியாரண்டி. அப்படி ஏதாச்சும் எக்குத்தப்பா நடந்துச்சுன்னா 'நீயெல்லாம் என்னடா சாமியார்?'னு என்னக் கேளு ஆமா."

"ஐயையோ, பெரிய பெரிய வார்த்தையெல்லாஞ் சொல்லாதீக சாமி. எனக்கு நம்பிக்கையிருக்கு. இப்பத்தான் எம்மனசு குளுந்துருக்கு. நீங்க நல்லாயிருப்பீய சாமி."

"அப்ப நா வரட்டுமா தங்கச்சி. அடச்சீ தங்கச்சீன்னு வாயில வருது பார்... நா வரட்டா கொழந்தே?"

"சாமி, காணிக்க?"

"பலவேசம் சொல்லியிருப்பானே?"

"அண்ணாச்சி முன்னூறு ரூவா சொல்லிச்சி."

மூணு நூறு ரூபாய்த்தாளையும் ஒரு தட்டில் வைத்து, பழம், வெற்றிலை பாக்கோடு சாமியாருக்கு சமர்ப்பித்தாள்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட போதுதான் அவளுடைய மூளிக்கழுத்து சாமியாரின் கண்களை உறுத்தியது.

சாயங்காலம் அசோக் டாக்கீஸ் முக்கில் வீராசாமிக்காகக் காத்திருந்தான் பலவேசம். பொழுது சாயும் நேரம் வீராசாமி வந்து சேர்ந்தான். பலவேசத்தைப் பார்த்ததும் அவனுக்கு ஒரே புளகாங்கிதம். சைக்கிளிலிருந்து இறங்குகிறபோதே சிரிப்புத்தான்.

"என்னவேய் பலவேசம், ஒம்ம நாடகம் எப்படி இன்னிக்கி?"

"அட போரும்வேய், எனக்கு மனசே வுட்டுப் போச்சு. இந்தாரும் ஒம்ம பொஞ்சாதி குடுத்த முன்னூறு ரூவா."

"ஒரே நாள்ல சொளையா முன்னூறு ரூவா சம்பாரிச்சிருக்கோம், ஜாலியா அதக் கொண்டாடலாம்னா ஒரு உஜாரில்லாம இருக்கீரே வேய்; வாரும் போகலாம்."

"எங்க?"

"எங்கயா? கடக்கித்தான். நீர்தானே சொன்னீரு இன்னிக்கி சீமச்சரக்கு சாப்புடணும்னு."

"ஆமா, நேத்து சொன்னேன். நீருத்தாஞ் சொன்னீர், ஒம்ம சம்சாரம் ஒமக்குத் தெரியாம எங்கயோ சீட்டுக்கட்டுது, அந்தப் பணத்தை எடுத்துக் குடுக்கும்னு."

"ஆமா, அதுக்கென்ன?"

“சீட்டுப் பணம் இல்ல வேய் இது, தாலிய அடமானம் வச்சித் தங்கச்சி ரூவா வாங்கியாந்திருக்கு.”

வீராசாமி கொஞ்சம் துணுக்குற்றாலும் சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

“சரி, இருக்கட்டுமே, புருசன் சந்தோசத்துக்கு ஒதவாத தாலி பொண்டாட்டி கழுத்துல இருந்துதான் என்ன பிரயோசனம் பலவேசம்? இந்தா பாரும், யோசனை சொன்னதே நீர்தான். இப்ப டமான்னு பல்டியடிக்கீரே, இது ஞாயமா? இதுக்குத்தானா ஒரு நா லீவப் போட்டுட்டு சாமியார் வேசம் போட்டீர்?”

“யோசனை சொன்னது, லீவப் போட்டது, வேசங்கட்டனது எல்லாம் வாஸ்தவந்தான், ஒப்புக்கறேன். இப்ப எனக்கு மனசு கேக்கல. தாலிய வச்ச காசுல தண்ணியடிக்கிறது சரியில்ல வீராசாமி, வாணாம். வாரும் இந்தப் பணத்துல தாலிய மீட்டுக்கலாம்.”

“அடக் கோட்டிக்கார மனுஷா, நாம என்ன கள்ளச் சாராயமா அடிக்கப் போறோம்? சீமச் சரக்குதானே வேய்! அதுல தப்பு ஒண்ணுமில்ல. தாலி எங்க போய்ரப் போகுது, சேட்டு கிட்ட பத்தரமாயிருக்கும், மொள்ளமா மீட்டுக்கலாம். எனக்கு சீமத்தண்ணி ஆசையக் காட்டிவுட்டுட்டு இப்பக் காலை வாரி விடுதீரே வேய், வாரும் அப்படியே தெக்குப் பஜார்ப் பக்கம் போய் கமுக்கமா சாப்ட்டுட்டு வந்துருவோம். இங்கன்னா நாலு பயபுள்ள பாத்து கண்ணு போட்டுரும். வாரும் தெக்கு பஜார்ப் பக்கம் போய்ட்டு வந்துருவோம்.”

“வாணாம் வீராசாமி.”

“அட, வெட்டிப்பேச்சு பேசிட்டு நிக்காதீரும் வேய், வாரும் நேரமாகுது.”

வீராசாமி ஒரு கையால் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு, மறுகையைப் பலவேசத்தின் கழுத்தைச் சுற்றிப் போட்டு இறுக்கித் தள்ளிக் கொண்டு போனான். பலவேசம் கொஞ்சம் திமிறிப் பார்த்தான். பிறகு, வீராசாமியின் அணைப்பில் அரைமனதோடு நடந்தான்.

மணி பத்தரையைத் தாண்டி விட்டது.

தூக்கம் சொக்குகிற கண்களுடன் சந்திரா வாசலில் உட்கார்ந்திருந்தாள்.

-புதிய பார்வை, 16-30 ஜூன் 1997.

# எங்க ஊர் மக்கள்

லட்சுமிக்கு ராத்திரி பூராத் தூக்கமே இல்லை. தூத்துக்குடியிலிருந்து அவர்கள் வருவதாகக் காய்தம் போட்டிருந்த கடந்த ஒரு வார காலமாகவே லட்சுமிக்கு சிவராத்திரி தான்.

இன்றைக்கு அவளுடைய வாழ்க்கையில் ரொம்ப விசேஷமான நாள். அவளுடைய அவனை முதல்முறையாய்ப் பார்க்கப் போகிற நாள்.

தச்சநல்லூர் மில்லில் அஞ்சு மணிச் சங்கு ஊத ஆரம்பித்ததுமே இவளுக்கு மனசு படபடக்க ஆரம்பித்துவிட்டது. இதோ விடிந்துவிட்டது இவளுடைய நாள்! எழுந்து, பாயைச் சுருட்டிப் பரணில் போட்டாள்.

வீட்டில், வேற யாரும் எழுந்திருக்கவில்லை. மென்மையாய் வெளிக்கதவைத் திறந்து, சத்தமில்லாமல் சாத்திவிட்டுத் தெருக் குழாய்க்கு வந்ததும் படக்கென்றது மனசு. குழாயிலிருந்து முழுவேகத்தில் தண்ணி வெளியேறிக் கொண்டிருந்தது. தார் ரோடெல்லாம் தண்ணி. ராத்திரி தண்ணி வராத நேரத்தில் சின்னப் பிள்ளைகள் யாரோ திறந்து, மூடிவிட அக்கறையில்லாமல் விட்டுப் போயிருக்கிறார்கள். அவசரமாய்ப் போய்க் குழாயை மூடினாள். அப்புறம் யோசித்ததில், தான் வந்திருக்கிறதே குழாயைத் திறப்பதற்குத்தானே, பின்னே திறந்திருக்கிறதை எதுக்காக மூட வேண்டும் என்று ஒரு சின்னத் தடுமாற்றம். பிறகு, யாரோ செய்துவிட்ட ஒரு தப்புக்குத் தான் பிராயச்சித்தம் செய்து விட்ட திருப்தி ஏற்பட்டது. இந்த நல்ல நாள் ஒரு நல்ல காரியத்தோடு துவங்கியிருப்பதில் மனசுக்குள் தென்றலடித்தது.

பல் துலக்கி முகங்கழுவிக் கொண்டு வாளியில் தண்ணி பிடித்துக்கொண்டு வந்து வாசல் தெளித்துக் கோலம் போட்டாள். வாளியில் கொஞ்சூண்டு தண்ணி மிச்சமிருந்தது, முன் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்த பிறகு லேசாய்க் கடுப்பு: அப்பாசாமி இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான். எவ்வளவு விசேஷமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியிருக்கிற நாள் இது! இவள் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த, இவளுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகிற இந்த தினத்தின் மகத்துவத்தை மதிக்காமல் இந்தப் பையன் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறானே. அவனுடைய மூஞ்சிக்கு நேரே பக்கெட்டை கவிழ்த்தாள். அப்பாசாமி சிலிர்த்து எழுந்து மலங்க மலங்க விழித்த போது இவளுக்குச் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவளுடைய சிரிப்பு அவனுக்கு வெறுப்பேற்றியது.

“என்னக்கா இது, ஞாயித்துக்கெழமையிலயும் நிம்மதியா ஒறங்க வுடமாட்டியா…!”

“ஞாயித்துக் கெழமையா? மத்த ஞாயித்துக்கெழமை மாதிரியில்லடா. ஏல, இன்னிக்கி அவுக வாறாகல்லா?”

“எவுக?”

“அவுகதான், தூக்குடிக்காரவுக. தெரியாத மாதிரி கேப்பான்.”

“ஆமா, பொல்லாத தூத்துக்குடிக்காரவுக. நீ அதையே சொல்லி அனத்திட்டிரு. அவுக பத்து மணிக்கி மேலதா வருவாக. ஓம்மோதரக்கி என்ன எழுப்பி வுடு.”

முகத்தின் ஈரத்தைப் போர்வை விளிம்பில் துடைத்துவிட்டு, பாதாதி கேசம் போர்த்திக் கொண்டு நித்திரையைத் தொடர்ந்தான்.

ஆனால் அந்த ரெண்டாம் கட்டத் தூக்கம் பூரணத்துவம் பெறவில்லை. எட்டு மணிக்கே எழுப்பிவிட்டுவிட்டார் அப்பா. அவருக்குப் பின்னாலேயே அழுக்குப்பையைத் தூக்கிக் கொண்டு காகறி மார்க்கெட்டுக்கு ஓட வேண்டியிருந்தது. அடுப்பாங்கரையில் ஒரு சுளவு எடுத்து பையைக் காலி பண்ணிவிட்டு. அப்பா வாசலிலேயே நின்று கொண்டார், நாலாம் நம்பர் பஸ் வருகிறதா என்று பார்த்துக் கொண்டு. இவன் அம்மயிடம் சொளவு தரக் கேட்டுக் கொண்டிருந்த போதே வாசலிலிருந்து அப்பாவின் குரல் ஓங்கிக் கேட்டது.

“ஏல, என்னல அங்ஙன வெட்டி வெள்ளாவி வச்சிட்டிருக்க? பஸ்ஸு வந்துரும் ஓடியால!”காய்கறியைத் தரையில் கொட்டிவிட்டு இவன் ஓடவும் வாசலுக்கு நேராய் டவுன்பஸ் வரவும் சரியாய் இருந்தது. ரசாக் பாய்தான் டிரைவர். வாசலிலேயே கை காட்டி நிறுத்தி ரெண்டு பேரும் ஏறிக் கொண்டார்கள். டிரைவருக்கு இடப்புறத்து நீளவாக்கிலான ஸீட். ரசாக் பாய் வண்டியெடுக்கிறபோது அப்பா அந்த ஸைடு ஸீட்டில்தான் உட்காருவார். தச்ச நல்லூரிலிருந்தே கிளம்புற பஸ் ஆகையால் கூட்டமிருக்காது.

இவர்கள் உட்கார்ந்து கொண்டதும் ரசாக் பாய் பக்கவாட்டில் முகத்தைத் திருப்பி கியரை மாற்றியபடியே சிநேகிதமாய்ச் சிரித்தார்.

“என்ன தேவரே, தூரமா?”

“சும்மா மார்க்கெட் வரக்யும்.”

“பாளையங்கோட்ட மார்க்கெட்டா? என்ன சமாச்சாரம்?”

“மட்டன் எடுக்கத்தான். காசி கடையில சொல்லி வச்சிருந்தேன். இன்னிக்கி நம்ம மூத்தவளப் பாக்க தூத்துக்குடிலேந்து வாராகள்ளா?”

“அடிச்சக்க, அப்ப மதியம் விருந்துதான்! நோம்புக் காலமாப் போச்சு தேவரே, இல்லாட்டி வண்டிய ஓரமா வுட்டுட்டு சாப்பாட்டுக்கு ஒம்ம வூட்டுக்கு வந்துருவேன்.”

“நீரும் நோம்பா? நாப்பூராப் பட்னி கெடந்துட்டு எப்படி வேய் வண்டி ஓட்டுதிய? தண்ணி கூட குடிக்காம எப்படித்தான் இருக்கீயளோய்யா!”

“அப்படிப் பாத்தா முடியுமா? ரம்ஜான் மாசம்ண்டா, எல்லாரும் நோம்பு வச்சுத்தானே ஆவணும்!”

நாலாம் நம்பர் பஸ்ஸில் ஏறினதற்கான காரணம் புரிந்த போது அப்பாசாமிக்கு எரிச்சல்.

"... ஆமா, தச்சநல்லூரில் கறிக்கடையே கெடையாது. மட்டன் எடுக்கப் பாளையங்கோட்டக்கித்தான் போவணுமாக்கும்..."

பஸ் சத்தத்தில் அப்பாவின் காதில் விழாது என்கிற தெம்பில் அவன் செய்த உரத்த சிந்தனை அவருடைய காதில் விழுந்து தொலைத்துவிட்டது போல. பக்கவாட்டில் கழுத்தைத் திருப்பி அவர் ஒரு பார்வை பார்க்கவும் அவன் பம்மித் தலை குனிந்து கொண்டான்.

மார்க்கெட்டிலிருந்து திரும்புகிற போது பஸ்ஸில் ஏக நெரிசல். திருநெல்வேலி ஜங்ஷன் வரை ஸ்டாண்டிங்கில் நெருக்கிக் கொண்டுதான் நிற்க வேண்டியிருந்தது. வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது ஒம்பதே முக்கால். மட்டனை அம்மயிடம் கொடுத்துவிட்டுத் திரும்பவும் அப்பாவுடன் ஓட வேண்டியிருந்தது பஸ் ஸ்டாப்புக்கு.

'ஒரு ரம்மியமான ஞாயிற்றுக்கிழமை இப்படி அநியாயத்துக்குப் பாழாகிறதே!' என்று மனப்புழுக்கம் அப்பாசாமிக்கு. மாரியப்பன் வீட்டில் போய்க் கேபிள் டி.வி பார்க்கிறது இன்றைக்குக் கெட்டுப்போச்சு.

ஆனால் இந்தப் புழுக்கம் கொஞ்ச நேரந்தான். பெற்றவர்களைத் தொடர்ந்து பஸ்ஸிலிருந்து இறங்கின மாப்பிள்ளையைப் பார்த்தபோது பரவசத்தில் வாய் பிளந்தது. 'அக்கா குடுத்து வச்சவதான்...'

பஸ்ஸிலிருந்து இறங்கினவர்களை அப்பா வரவேற்றார்.

"வாங்க, வாங்க, இப்பத்தான் நாங்களும் வந்து நிக்கிறோம். நீங்களும் வந்து எறங்குதீக. ஆமா, என்ன நீங்க மூணு பேர்தா வந்திர்க்கீக?"

"இங்ஙன பாளையங்கோட்டயிலேந்து எங்க கோமதியக்காவும் அக்கா புருசனும் வருவாக. ஒங்க விலாசம் அவியட்ட இருக்கு வந்துருவாக. ரோட்டு மேல உள்ள வூடுதான?"

அப்பாசாமிக்கு மாப்பிள்ளையைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல, அவர் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போய் அக்கா முன்னால் நிறுத்தி அவளைப் பிரமிக்கச் செய்ய வேண்டும் போல ஆசை ஆசையாய் வந்தது. அதையும் அப்பா கெடுத்தார்.

"ஏல வெரசாப் போயி அவிய வந்துட்டாகன்னு அம்மட்ட சொல்லுல" என்று இவன் காதில் அப்பா ஓதவும், எல்லாருக்கும் முந்தி ஓட வேண்டியிருந்தது வீட்டுக்கு.

வீட்டில், வாசலில் நின்று மாப்பிள்ளையை எதிர்கொண்டபோதும் அவர் கால் அலம்ப சொம்பில் தண்ணி கொண்டு ஊத்தின போதும் "இவந்தாம் மாப்ள ஒங்க சின்ன மச்சினன், ஒரே மச்சினன்" என்று அறிமுகப்படுத்தப்பட்ட போதும் ஒரே சிரிப்பாயிருந்தான்.

"சம்முகம், மச்சினனக் கைக்குள்ள போட்டு வச்சிக்க டேய், பொறவாட்டி அவந்தயவு தேவப்படும்" என்று பையனின் அப்பா சொன்ன போது, எல்லாரும் சிரிக்க, அப்பாசாமிக்குப் பெருமையாயிருந்தது.

லட்சுமியை, வந்தவர்களுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. சண்முகத்துக்கு ரொம்ப ரொம்ப.

அப்பாசாமியிடம் குனிந்து," எந்தப் பள்ளிக்கூடத்துல டேய் படிக்கே" என்றான் சண்முகம்.

அலங்காரம் பண்ணிக் கொண்டு எதிரில் அக்கா உட்கார்ந்திருக்கிற போது, 'இப்ப எதுக்கு இந்த சம்மந்தமில்லாத கேள்வி?' என்று அப்பாசாமி யோசித்தாலும் பதில் சொல்லி வைத்தான்.

"சாஃப்ட்டர் ஸ்கூல், ஸெவந்த் ஸி."

"ஸ்கூல் அட்ரஸ்க்கு ஒனக்கு லெட்டர் போட்டா, அக்காட்ட குடுத்துருவேல்லா?"

அப்பாசாமிக்கு வெக்கமாயிருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு தலையாட்டினான்.

மதிய விருந்து ஏக அமர்க்களம். காசிக்கடை மட்டனுக்குத் தனி ருசிதான். 'அப்பாகூட அம்புட்டுத் தூரம் பஸ்ல போய் வேங்கியாந்தது சும்மாயில்ல...'

சண்முகத்துக்கு ரொம்பப் பிடித்துப் போனது லட்சுமி வச்ச மிளகு ரசம்தான். சங்கோஜப்படாமல் அவன் தம்ளரில் வாங்கி வாங்கி குடித்ததை அவள் கதவுக்குப் பின்னாலிருந்து ரசித்தாள்.

ஊருக்குப் போய், ரத்தினசாமி நாடார்க் கல்யாண மண்டபம் காலியாயிருக்கிற நாளை விசாரித்துக் காய்தம் போடுவதாய்ச் சொன்னார் சண்முகத்தின் தகப்பனார்.

பெண்ணைப் பெத்தவருக்கு ஒரு சந்தேகம்.

"நாடாக்கமார் மண்டபம்ங்கீயளே, நம்ம ஆக்களுக்குக் குடுப்பாகளா?"

"அட நீரு என்ன சம்மந்தி வெவரமில்லாத ஆளா இருக்கீரு, நம்ம முக்குலத்தோர் சங்கக் கூட்டமே மாசாமாசம் அங்னதானங்கேன் நடக்கு... சரி, அப்ப நாங்க கௌம்பட்டுமா? மருமவளே, வறேம்மா..."

அவர்கள் எவ்வளவோ வேண்டாமென்றாலும் இந்த அப்பனும் மகனும் 'ஜங்ஷன் வரை வந்து தூத்துக்குடிக்கு பஸ் ஏற்றிவிட்டுத்தான் திரும்புவோம்' என்று பிடிவாதமாய் கூடவே டவுன் பஸ் ஏறிவிட்டார்கள். இந்த முறை பஸ்ஸில் போவது அப்பாசாமிக்கு சந்தோஷமாயிருந்தது. பெரிசுகளையெல்லாம் தனியாய் வெட்டி விட்டுவிட்டு, சண்முகமும் அப்பாசாமியும் ஒரு ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். இப்போ அப்பாசாமியால் இயல்பாய் பேச முடிந்தது. வாய் மூடாமல் சளசளத்துக் கொண்டே வந்தான், போன வாரம் கேபிள் டி.வியில் பார்த்த சினிமா பற்றி, தச்சநல்லூர் வயக்காடுகளில் வானத்திலிருந்து தாழப் பறந்து மருந்து தெளித்த விமானத்தின் ஆகாச சாகசங்கள் பற்றி, பள்ளிக்கூடத்து ஃபுட் பாலில் ஸேம் ஸைடுகோல் போட்டு எல்லாரிடமும் வாங்கிக் கட்டிக் கொண்டது பற்றி, மோட்டார் சைக்கிளில் ரெண்டு பேர் உட்கார வேண்டிய நீளமான

ஸீட்டில் ஒரே ஆளாய் ஆரோகணித்துப் போகிற சாப்ட்டர் ஸ்கூல் ஹெட்மாஸ்டரின் அட்டகாசத் தோற்றம் பற்றி...

திருநெல்வேலி ஜங்ஷனில் தூத்துக்குடி பஸ்ஸுக்குப் பதினைந்து நிமிஷம் இருந்தது. அப்பா இவனைக் கமுக்கமாய்த் தள்ளிக் கொண்டு போய் கையில் ரெண்டு இருவது ரூபாய்த் தாள்களைத் திணித்தார்.

"ஓட்டமாப் போயி சாந்தி சுவீட்ல ஒரு அரக்கிலோ அல்வா வேங்கிட்டு ஓடியால."

அவன் ஓடுகிறதைப் பார்த்த சண்முகம் விஷயத்தை ஊகித்துக் கொண்டு, "எதுக்கு மாமா செரமம்" என்றதற்கு வருங்கால மாமனார் சமாதானஞ் சொன்னார்.

"செரமமாவது ஒண்ணாவது! திருநெல்வேலிக்கி வந்துட்டு யாரும் கையில அல்வாப் பொட்ணம் இல்லாமப் போவாகளா மாப்ள?"

அல்வாப் பொட்டலத்தப் பெற்றுக் கொண்ட சண்முகம், அப்பாசாமியின் கையில் ஒரு பத்து ரூபாத் தாளை வைத்துப் பொத்தினான். அவன் அரை மனதோடு மறுத்த போது, சிநேகபூர்வமாய் மிரட்டினான்.

"இந்தா, குடுத்தா பேசாம வேங்கிக்க, மக்கர் பண்ணா, பெறவு ஒங்க அக்காள நாங்கட்டிக்க முடியாதுன்னுருவேன்."

கையசைத்து விடை கொடுத்து பஸ் நகர்ந்த பின்னாலும் அந்தச் சின்னப் பையனின் குழந்தை முகம் கண்ணுக்குள்ளேயே நின்றது. அவனுடைய அக்காவை மறுக்கப் போகிறதாய் இவன் மிரட்டின போது ஒரு கணம் கலவரமடைந்து பிறகு இவனுடைய சிரிப்பைப் பார்த்து சமாதானமடைந்து பதிலுக்குச் சிரித்ததை நினைத்துப் பார்த்து சண்முகம் புன்னகைத்துக் கொண்டான். பிறகு அந்த முகத்தை ஓரங்கட்டிவிட்டு இவனுடைய லட்சுமியின் அழகு முகத்தை வரவழைத்துக் கண்களில் நிறுத்திப் பார்த்து ரசித்தான். அப்படி ரசிக்கிற போது தன்னையறியாமல் சிரிப்பு வருமென்றோ, அருகிலே உட்கார்ந்திருக்கிற அம்மா அதை அவதானிக்கக் கூடுமென்றோ எட்டாமல் போச்சு.

"என்னய்யா ஒம் பாட்டுக்கு சிரிக்க! பொண்டாட்டிய நெனச்சுப் பாக்கியோ?"

அம்மாவிடம் கையுங்களவுமாய்ப் பிடிபட்டுவிட்ட வெட்கத்தில் மறு பக்கம் முகத்தைத் திருப்பி ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தினான். வலப்பக்கத்து ஜன்னலோரத்தில் உட்கார்ந்திருப்பதில் இப்படியொரு வசதி.

பஸ் வண்ணார்ப்பேட்டையைத் தாண்டி போய்க்கொண்டிருந்தது.

இதோ செல்வம் தியேட்டர், எத்தனை தரம் சிநேகிதர்களோடு சினிமா பார்த்திருக்கிறான் இங்கே!- ஆறு வருஷம் பாளையங்கோட்டையில் பெரியம்மா வீட்டிலிருந்து கொண்டு சேவியர்ஸ் ஸ்கூலில் படித்த போது...

பெரியம்மா?

பெரியம்மா வரவேயில்லையே! அம்மா பக்கம் கழுத்தைத் திருப்பினான்.

“பெரியம்மா என்னம்மா இப்படி செஞ்சிட்டாக!”

“அதான் தெரியலய்யா! அக்கா எப்படி வராம இருப்பா!? என்னமோ ஏதோ தெரியலியே! இங்ஙன பாளையங்கோட்டயில எறங்கிப் பாத்துட்டு அடுத்த பஸ்ஸுக்குப் போயிருவமா?”

பார்த்து விட்டுப் போகலாம்தான். ஆனால் துறைமுகத்தில் ஆறு மணி ஷிஃப்ட்டுக்குப் போயாக வேண்டுமே... ஆறு வருஷம் இங்கே இவனைப் படிக்க வைத்து இன்னொரு தாயாய் இருந்து வளர்த்து ஆளாக்கின பெரியம்மா... என்ன அசம்பாவிதமோ தெரியவில்லையே...

“அம்மா, காலைல ஷிஃப்ட்டு முடிஞ்சதும் மொதோ பஸ் புடிச்சி பாளையங்கோட்டக்கி வந்திருதேன். வந்து பெரியம்மாவப் பாத்துட்டு வாறேன்.”

ஒரு முடிவுக்கு வந்தவுடன் மனசு சமாதானமடைந்தது.

அசோக் டாக்கிஸ் முக்கு வந்த போது வலதுபுறம் சங்கரம்பிள்ளைக் கடையைப் பாசத்தோடு பார்த்தான். பள்ளிக்கூட நாட்களில் சாலையோரத்தில் நின்றபடியே எல்லாப் பத்திரிகைகளையும் ஓசியிலேயே படித்து முடித்து விடுகிற சங்கரம்பிள்ளைக் கடை. ஸ்கூலுக்குத் தேவையான நோட்டு, பென்ஸில், பேனா எல்லாம் இங்கேதான். நாட்டுப்பழம் வாங்கித் தின்றுகொண்டு சிநேகிதர்களோடு அரட்டையடித்துக் கொண்டு நிற்பதும் இதே முக்குதான். அன்றைய பிரதான சிநேகிதனான ஹில்பர்ட் இப்போது இதே பாளையங்கோட்டையில்தான் எஸ்.ஐ.யாக இருப்பதாய்க் கேள்வி. அந்தப் பள்ளிக்கூட நாட்கள் எவ்வளவு இனிமையானவை! அந்த இனிமைக்கு ஒரேயொரு களங்கம் பரீட்சைகள். வாழ்க்கையை ரீவைண்ட் செய்கிற வசதியிருந்தால், பள்ளி நாட்களை இன்னுமொருமுறை வாழ்ந்து பார்க்கலாம். பரீட்சை வருகிறபோது மட்டும் ஃபாஸ்ட் ஃபார்வர்ட்!

மலரும் நினைவுகளில் மனசு லயித்திருந்தபோது பாளையங்கோட்டை மார்க்கெட் ஸ்டாப்பில் பஸ் நின்றது.

“தூத்துக்குடி த்ரூ டிக்கட் மட்டும் ஏறுங்க. எடவழி டிக்கட் ஏறாதீங்க, பஸ் நிக்காது.”

கண்டக்டர் கண்டிப்பாயிருந்தாலும் பஸ் நிரம்பித்தான் விட்டது. மத்தியில் வரிசையாய் ஸ்டாண்டிங் பயணிகள்.

வெளியே கசமுசாவுக்கிடையே சண்முகத்துக்குப் பரிச்சயமான குரலொன்று கெஞ்சிக் கொண்டிருந்தது.

“யய்யா கண்டரக்டர், ஒரு சாவுக்குப் போறோம்யா. எட வழி டிக்கட்ன்னுட்டே ரெண்டு பஸ்ல ஏத்தாமப் போய்ட்டாக. நேதேரம் ஆய்ட்டிருக்கு. தெயச்சிலாபுரத்துல எறங்கிக்கிருதோம்யா, நாங்க ரெண்டே ரெண்டு பேர்தாம்யா.”

அந்தக் குரலைப் பொருட்படுத்தாமல் பஸ் வடக்கு பஜார் நெரிசலில் நகரத் தொடங்கியது.

‘பெரியம்மா குரல் மாதிரித் தெரிகிறதே!’ என்று வேகமாய் இவன் எழுந்து அம்மாவையும் அரைத்தூக்கத்திலிருந்த அப்பாவையும் தாண்டி ஸ்டாண்டிங் பயணிகளை விலக்கிக் கொண்டு வெளியே நோக்கினான். பெரியம்மாவேதான், ஜன நெருக்கமிருந்த நடைபாதையில் நீந்தி, பின் வாசலில் நின்றிருந்த கண்டக்டரை அடைந்தான்.

“அண்ணாச்சி, அங்க ஸ்டாப்ல நிக்கிறவுக எங்களச் சேந்தவுகதான் அண்ணாச்சி. எங்க பெரியம்மாவும் பெரியப்பாவும். என்னமோ சாவுக்காக, என்னான்னு தெரியல. ஏத்திக்குங்க அண்ணாச்சி, கொஞ்சம் தயவு பண்ணுங்க.”

உடனே விஸில் கொடுக்கப்பட்டு பஸ் நின்றது.

“டிக்கட் போடுத மாதிரி வண்டிய நிப்பாட்டிக்கிருதேன் தம்பி, நீங்க எறங்கிப் போயி பொறத்தியாருக்குத் தெரியாம அந்த ரெண்டு பேத்தையும் கூட்டிட்டு வந்துருங்க. கூட்டஞ் சேராமப் பாத்துக்கிருங்க தம்பி.”

“ரொம்ப தாங்ஸ் அண்ணாச்சி.”

பஸ்ஸிலிருந்து குதித்து ஸ்டாப்புக்கு விரைந்தான். இவனைப் பார்த்ததும் பெரியம்மாவுக்கு உடம்பெல்லாம் சந்தோஷம். எல்லா சந்தோஷத்தையும் முகத்தில் தேக்கிப் பரவசமானாள்.

“எம்மவனே, என்னெப் பெத்த ராசா, பொண்ணு பாக்கப் போனீகளாய்யா, எம்மனசெல்லாம் தச்சநல்லூர்லதாம்யா கெடந்துச்சு. இங்ஙன ஒரு சாவாப் போச்சு, ஒங்க பெரியய்யாவோட…”

“பெரியம்மா, பஸ்ல பேசிட்டே போலாம். பெரியப்பா, வெரசா வாங்க பஸ் நிக்கி.”

அவர்களை வழி நடத்தி வந்து பஸ்ஸில் ஏற்றினான். அப்பாவை எழுப்பி ஜன்னலோரமாய் ஒதுக்கிவிட்டு, அம்மாவுக்குப் பக்கத்து விளிம்பு சீட்டில் பெரியம்மாவை உட்கார்த்தி வைத்தான். பெரியப்பாவுக்கு ஸீட் இல்லை. நட்டமாய் நிற்க வேண்டியதாயிற்று.

அம்மாவுக்கு ஆச்சர்யம் ஒரு பக்கம், குதூகலம் ஒரு பக்கம்.

“அடியாத்தி இது யாரு! கோமதியக்காவா? நீங்க என்னமா இங்ஙன வந்து சேந்தீக?” என்று சந்தோஷத்தை வெளிப்படுத்தின அம்மா, இருந்திருந்தாற்போல குரலைத் தணித்தாள்.

“ஆமா, என்னக்கா நீ இப்பிடிப் பண்ணிட்ட! ஒன்ட்ட கேட்டுத்தான் அவியட்ட ஞாயித்துக்கெளம வாறதாச் சொன்னோம்?”

“நீ என்ன தாயி, இப்பிடிக் கேக்க! எம்மவன் விசேஷத்துக்கு நா வாராம இருப்பேனா? இங்ஙன ஒரு சாவு வுளுந்திருச்சில்லா!”

“சாவா! ஆரு போய்ட்டாக?”

“நம்ம அர்ச்சுனன் இருக்காம்லா இவுகளுக்கு கடேசித் தம்பி, அவுக மாமனார் தெயச்சிலாயுரத்துல கெடந்தாகள்ளா வயசாளி, அவுக போய்ச் சேந்துட்டாகளாம். வெள்ளன தாக்கல் சொல்லிவுட்டாக. இப்ப அங்ஙனத்தாம் பொறப்பட்டோம்.”

சகோதரிகள் ரெண்டு பேரும் நடந்து போன சாவைப் பற்றியும் நடக்கப் போகிற கல்யாணத்தைப் பற்றியும் சுவாரஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருக்க, பக்கத்தில் கோமதியம்மாவின் புருஷன் ஸீட்டின் கம்பியைப் பிடித்துக் கொண்டு நிற்க மாட்டாமல் நின்று கொண்டிருந்தார்.

கண்டக்டரின் வேண்டுகோளின்படி சண்முகம் நகர்ந்து நகர்ந்து பஸ்ஸின் முன் பகுதிக்குப் போய்விட்டிருந்தான்.

சாவகாசமாய் சாலையைக் கடந்து கொண்டிருந்த ஓர் எருமை மாட்டு ஊர்வலத்துக்கு மரியாதை செய்ய பஸ் ஓர் அதிரடி பிரேக் போட்டுக் குலுங்கினபோது, பிடிதளர்ந்து சரியப் போன புருஷனை சட்டென்று எழுந்து தாங்கிப் பிடித்துக் கொண்டாள் கோமதியம்மா.

“அடியம்மாடி, இவ்ளோ தேரம் இவுகள மறந்துட்டேனே! நீ லேசா தள்ளியிருந்துக்க தாயி, இவுக இங்ஙன இருந்துக்கட்டும். நாங் கொஞ்சதேரத்துக்கு எம்மவம் பக்கத்துல போய் நின்னுக்கிருதேன்.”

கோமதியம்மா இடிபாடுகளுக்கிடையே நகர்ந்து முன்னேறி முன்னால் போய், முதுகைக் காட்டி நின்றிருந்த சண்முகத்தின் புஜத்தைப் பற்றினாள்.

“என்ன பெரியம்மா எந்திரிச்சிட்டீக? அம்மா பக்கத்துல இருக்க வேண்டியதுதான?”

“ஒங்க பெரியய்யாவுக்கு நிக்க முடியலய்யா. பார்வயும் பத்தல. அவுகள ஒக்காத்தி வச்சிட்டேன். நா ஒன்ட்ட பேசணும்னுட்டுத்தான் வந்தேன். யய்யா, பெரியம்மா தச்சநல்லூர்க்கு வரலியேன்னுட்டு வருத்தப்பட்டுக்கறாத ராசா. எம்புள்ள நீ; புள்ள விசேஷத்துக்குப் போக முடியாத பாவியாய்ட்டேனேய்யா…”

அவனுடைய மோவாயை வருடியபடி வருந்தினாள்.

அந்தப் பாசக்கரத்தை அழுந்தப் பற்றிக் கொண்டான் சண்முகம்.

“என்ன பெரியம்மா நீங்க, பெரிய பெரிய வார்த்தயெல்லாம் சொல்லிக்கிட்டு. கல்யாணத்தையே நீங்கதான பெரியம்மா நடத்தி வக்யப் போறிக!”

கோமதியம்மாவின் கண்களில் நீர் தளும்பி விட்டது.

உணர்ச்சிகரமான அந்த சூழ்நிலையில் கண்டக்டர் உள்ளே புகுந்தார்.

“பெரியம்மா, தெயச்சிலாபுரம் வந்துருச்சு. வண்டி நிக்யப் போகுது, நீங்க பொறத்தால போய் பெரியவுகளப் பாத்து எறக்கிக்கிருங்க.”

“சரிய்யா நாங்க எறங்கிக்கிருதோம். மவராசன் நீ மட்டும் பஸ்ஸ நிப்பாட்டாட்டி இன்னும் எவ்வளோ தேரம் பாளையங்கோட்டயிலேயே நின்னுட்டுருந்திருப்போமோ? ரொம்ப புண்ணியம்யா ஒனக்கு.”

“இதுல என்ன இருக்கு பெரியம்மா... பாத்து, பையப் போங்க. அண்ணாச்சி, கொஞ்சம் வெலகி வழிவுடுங்க பெரியம்மாக்கு.”

கோமதியம்மா புருஷனைக் கிளப்பிக் கொண்டு தங்கச்சியிடமும், தங்கச்சி புருஷனிடமும், சண்முகத்திடமும், கண்டக்டரிடமும் சொல்லிக் கொண்டு இறங்குகிற தருணத்தில் தங்கச்சி இடைமறித்தாள்.

“யக்கா, மறந்தே போயிட்டேனே! அங்ஙன தச்சநல்லூர்ல முறுக்கு அதிரசமெல்லாம் குடுத்து வுட்டாகளே, அதுல பேர்வாதி எடுத்துக் குடுக்கேன், கொண்டுட்டு பொயிரு.”

“நீ ஒருத்தி கோட்டிக்காரி. சும்மா இரு தாயி, அதெல்லாம் வாணாம்”

மறுத்துவிட்டு, புருஷனை கைத்தாங்கலாய்ப் படிக்குக் கூட்டிப்போய் தானும் இறங்கி அவரையும் இறக்கிக் கொண்டிருந்த போதும் தங்கச்சியின் அரற்றல் அடங்கவில்லை.

“...இவ்வளத்தையும் திங்கறதுக்கு அங்ஙன ஆர் இருக்காக, கொஞ்சம் கொண்டுட்டுப் போன்னா வாணாண்டுட்டுப் போறியேக்கா...”

கோமதியம்மாவுக்கு மனசு கேட்கவில்லை. இவர்கள் தரையில் கால் பதித்ததும் விஸில் கொடுக்கத் தயாராய்க் காத்திருந்த கண்டக்டரைப் பின்புறம் திரும்பிப் பார்த்து, “யய்யா, ஒரு நிமிசம் நிப்பாட்டு ராசா” என்று ஒரு வேண்டுகோளை வைத்துவிட்டு, “கொஞ்சம் இப்படி நின்னுக்கிருங்க இந்தா வந்திருதேன்” என்று புருஷங்காரனை நிறுத்தி வைத்துவிட்டு பஸ்ஸைப் பின்புறமாய்ச் சுற்றி வலதுபக்கம் விரைந்தாள். கணவனையடுத்து நடுஸீட்டில் உட்கார்ந்திருந்த தங்கச்சியை விளித்தாள்.

“ஏ தாயி, வருத்தப்பட்டுக்கிராதம்மா. சாவு வூட்டுக்குப் போறோம் பண்டமெல்லாம் கொண்டுட்டுப் போவப்படாது தாயி, கல்யாணத்துக்குத்தா எல்லாரும் ஒண்ணாயிருந்து பண்டமாத் திங்கப் போறோமே.”

பஸ் கிளம்பிப் போன பின்னால் ரோட்டைத் தாண்டி புருஷங்காரனிடம் வந்தாள். துணிப்பையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, ஒரு கையால் அவரைப் பிடித்துக் கொண்டு ரெண்டு எட்டு எடுத்து வைத்தவள், திடீரென்று யோசனையானாள்.

‘தெய்வச்செயல்புரம் விலக்கிலிருந்து ரொம்பத் தெலைவு நடக்க வேண்டுமே இவரால் இயலுமா?’

“தெக்காம ஒரு அர மைல் தொலவு நடக்கணுமே நடப்பீயளா, இல்ல மாட்டு வண்டி எதாச்சும் வருதான்னு பாப்பமா?”

“வண்டி எப்ப வந்து நாம எப்பப் போய்ச் சேர. மொள்ளமா நடந்துரலாம் வா.”

கரடுமுரடான ஒத்தையடிப் பாதையில் கோமதியம்மா முன்னால் நடக்க அவளுடைய புஜத்தைப் பற்றிக் கொண்டு அவர் நடந்தார்.

சாவு வீடு நெருங்க நெருங்க மரணத்தின் அவலம் கோமதியம்மாவுக்கு உறைக்க ஆரம்பித்தது.

‘...செத்துப்போன கடம்பவனத் தேவருக்கு இவுக வயசுதா இருக்கும். அவுக பொஞ்சாதிக்கு என் வயசு. அவ இன்னிக்கித் தாலியறுத்துட்டா. எனக்கு எப்பவோ! இவுகளும் ஆள் ஒஞ்சுட்டாக. நடமாட்டம் கொறஞ்சு போச்சு... பார்வையும் மங்கிட்டே போவுது. இன்னும் எத்தன நாள் தாக்குப்புடிக்க ஏலுமோ...?’

கோமதியம்மாவுக்கு மனசு கனத்துக் கொண்டே வந்தது.

இதோ சாவு வீடு வந்துவிட்டது.

அழுகைச் சத்தத்தைக் காணோம்.

எல்லாரும் ஒப்பாரி வைத்து ஓய்ந்து போயிருப்பார்கள் போல. புதுசாய் யாராவது வந்தால் தான் ஒப்பாரி விட்ட இடத்திலிருந்து தொடரும்.

வாசலில் சின்னதாய்ப் பந்தல் போட்டிருந்தது.

பாடை கட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரெண்டு பெஞ்சு போட்டு ஆம்பளைகள் உட்கார்ந்து ஆட்சியை விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த புருஷன் பெஞ்சாதி வருகிறதைப் பார்த்ததும் உரையாடல்கள் விடைபெற்றுக் கொண்டன.

பெஞ்சிலிருந்தவர்கள் ஒதுங்கியிருந்து பெரியவர் உட்கார இடம் பண்ணிக் கொடுத்தார்கள். அவரை உட்காரச் செய்துவிட்டு துணிப்பையையும் அவர் மடியில் வைத்து விட்டு கோமதியம்மா உள்ளே போனாள்.

உள்ளறையில் உடலைக் கிடத்தியிருந்தார்கள். அருகில் சுவரில் சரிந்து உட்கார்ந்திருந்த வெள்ளைச் சீலை உடுத்தியிருந்த பொம்பளையிடம் போய் கோமதியம்மா முட்டாங்கால் போட்டுக் கட்டிக் கொண்டாள். ‘இந்த நிலை தனக்கு வருவதற்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?’ என்று நினைத்துப் பார்த்த போது மனசு சிதறியது. ‘இந்த இவளுக்காவது ஒரு மகளும், ரெண்டு ஆண் மக்களும் இருக்கிறார்கள். தனக்கு யார் இருக்கிறார்கள்? கொள்ளி போடுவதற்கு ஒரு தங்கச்சி மகன் மட்டும் இருந்தால் போதுமா?’

நெஞ்சின் கனம் கூடிக் கொண்டே போனது. ரெண்டு பேரும் கட்டிக் கொண்டு குரலெடுத்து அழ ஆரம்பித்தார்கள். சுற்றியிருந்த பொம்பளைகளும் குரல் கொடுக்க, மெல்ல மெல்ல ஒப்பாரி உச்சக்கட்டத்தையடைந்தது.

-கணையாழி, ஜூலை-1997.

# இன்சுலின்

அக்கா அழுவதைப் பார்க்கப் பார்க்கப் பார்த்திபனுக்கு உடம்பில் உஷ்ணமேறியது. அம்மாவும் கூடச் சேர்ந்து அழுதாள். அப்பாவோ, குத்துக்கல்லாட்டம் அலுங்காமல் இருந்தார். அதைப் பார்க்க பார்த்திபனுகக்கு மேலும் கோபம். இருந்தாலும், அப்பாவிடம் உரத்துப் பேசியறியாதவனாகையால், பொருமலுடன் தம் பிடித்துக் கொண்டிருந்தான்.

பிறகு, ஸ்கூட்டரில் அக்காவை ஏற்றிக் கொண்டு போனபோதும் கொஞ்ச தூரத்துக்கு வாயைத் திறக்கவில்லை. சாந்தி காலனியில் மரங்களடர்ந்த சாலையில் போய்க் கொண்டிருந்த போது இருந்திருந்தாற் போல ஓரங்கட்டினான்.

“அக்கா, கொஞ்சம் இறங்கு.”

“ஏண்டா பெட்ரோல் இல்லியா?”

விறைப்பாய் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான்.

“உங்கிட்ட கொஞ்சம் பேசணும்.”

“அப்படி என்ன தம்பி பேசப் போற நடு ரோட்ல வச்சு?”

“பின்ன எங்க வச்சு பேசச் சொல்ற! நம்ம வீட்ல அப்பாவை மீறி எதுவுஞ் சொல்ல முடியல, உன் வீட்லயோ கேக்கவே வேண்டாம். உன் மாமனார் காண்டாமிருகமும், மாமியார் கொரங்கும் உர்ர்ன்னு பார்த்துகிட்டேயிருக்கு. நடுரோடுதான் நமக்கு வசதி. சொல்லு.”

“என்ன சொல்ல?”

“அம்மாட்ட சொல்லி அழுதியே, அவ்வளவுதானா, கதை இன்னும் இருக்கா?”

“இன்னும் எவ்வளவோ இருக்கு. ஒவ்வொண்ணையும் நான் சொல்லிக்கிட்டேயிருந்தா மத்தவங்களுக்குத்தான் மனக் கஷ்டம்.”

“இந்த அளவுக்கு அக்கிரமங்களைத் தாங்கிட்டு எப்படிக்கா நீ உயிரோட இருக்கே?”

“செத்துப் போயிருங்கறியா?”

“அதுக்கு சொல்லலக்கா, நீ படிப்பறிவில்லாத ஜடமில்ல. நீ ஒரு டாக்டர். சும்மா டிஸ்டில்டு வாட்டர் ஏத்தி விட்டுட்டு பம்மாத்து வேலை காட்ற டாக்டரில்ல, சௌதியிலே போய் செமத்தியா சம்பாதிக்கிற டாக்டர். ஒம்போது லட்சத்துக்கு இந்த காண்டாமிருகம் ஒரு வீடு வாங்கியிருக்கே அதுல பாதிக்கு பாதி உன்னோட வேர்வை. அந்த ரெண்டு கிழமும் மூணு வேளையும் மூக்கு முட்ட திங்கிதே, அதுல பாதி உன்னோட ரத்தம், அரேபியால அத்தான் சம்பாதிக்கிற அளவு நீயும் சம்பாதிக்கிற. சம்பாதிக்கிற

அத்தனையும் இந்த சனியன்களுக்குத்தான் அழற, அப்படியிருந்தும் இதுங்கிட்ட தினமும் திட்டு வாங்கிக்கிட்டு அழுதுட்டுருக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்தா?"

"தலையெழுத்துதாண்டா பார்த்தி, ஏன்தான் வெகேஷனுக்கு இந்தியாவுக்கு வந்தோமுன்னு இருக்கு. நின்னா குத்தம், உக்காந்தா குத்தம்னு காலையிலிருந்து ராத்திரி வரைக்கும் ஒரே சத்தம் சத்தம்தான். நேத்து பாரு, வழக்கம் போல எட்டு மணிக்கி இந்த ரெண்டு பேரும் படுக்கப் போயிட்டாங்க. ஒம்போது மணி போல ஃபோன் வந்தது. மாடியில குடியிருக்காங்களே, அவங்களுக்கு. 'எமர்ஜென்ஸி'ன்னு சொன்னாங்க. நான் மேலே போய் அவங்ககிட்ட சொன்னேன். அவங்களும் வந்து பேசிட்டு 'தாங்ஸ்' சொல்லிட்டுப் போனாங்க. அவங்களை அனுப்பிச்சிட்டு நான் கதவை சாத்தினதுதான் தெரியும். இந்தப் பக்கம் ரூம் கதவை திறந்துக்கிட்டு இந்த ஆள் வந்தார் பார், ஏச்சுன்னா ஏச்சு. காது கொடுத்து கேக்க முடியாத அப்படியொரு ஏச்சு. 'ஏண்டி, நடு ராத்திரியிலே கண்டவங்களை வீட்ல சேத்துக்கிட்டு ப்ராத்தலாடி நடத்தறே?'ன்னு அசிங்க அசிங்கமாக் கத்தறார்டா."

"அயோக்கிய ராஸ்கல் அவ்வளவு அசிங்கமாவாத் திட்டறான்?"

"இன்னும் எவ்வளவோ கன்றாவியெல்லாம் இருக்குடா. அம்மாவைப் பத்தி அப்பாவைப் பத்தியெல்லாம் ரொம்ப மோசமாப் பேசுவார். அப்பா சீர் நிறைய செய்யல, இவர் கேட்ட அளவு வரதட்சணை குடுக்கலைன்னு அர்ச்சனை பண்ணிக்கிட்டேயிருப்பார்."

"வரதட்சணைன்னு வாயைத் திறக்கிறது சட்டப்படி குற்றம்னு இந்த ஆளுக்குத் தெரியாது போல. நான் வந்து சொல்லித் தரட்டுமா?"

"இந்த மாதிரி உணர்ச்சிவசப்படுவேன்னுதான் இதெல்லாம் உன் காதுல விழ வேண்டாம்ன்னு அப்பா சொல்றார். இளரத்தம், பின் விளைவுகளைப் பத்திக் கவலைப்படாத வயசு, ஏண்டா?"

"என் கவலையை விடுக்கா. உன் பிரச்சனையைப் பத்திப் பேசு. யாருமே தட்டிக் கேக்காமத்தான் இந்த அளவுக்கு வளந்துருச்சு. ஆரம்பத்திலேயே அந்த ஆளை தலையிலே தட்டி உக்காத்தியிருக்கணும். ஆமா, அந்தக் கொரங்கு என்ன சொல்லுது?"

"எந்தக் கொரங்கு?"

"ஆ, யாரைச் சொல்றேன்னு தெரியாதாக்கும்? இவ்வளவுக்கப்புறமும் விட்டுக் கொடுக்க மாட்டேங்கறியே. உன் மாமியார்க்காரியத்தான்."

"அது பெரிய ஊமைக் குசும்புடா. அப்பப்ப மாமனாரைத் தூண்டிவிடறது, தூபம் போடறது எல்லாம் மாமியார்தான்."

"அவர் ஸப்போர்ட் இருந்தாத்தான் பிரச்சினையே இல்லையே. அவர் அப்பாவுக்கு அடங்கின பிள்ளை. போன வருஷம் வெக்கேஷனுக்கு நாங்க ரெண்டு பேரும் சேந்து வந்திருந்தப்ப கூட இதே கதைதானே? அவர் முன்னால வச்சே என்னைத் திட்டு திட்டுன்னு திட்டுவார் மாமனார். இவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை வெளியே விடணுமே, மூச்! 'கம்'ன்னு கண்டுக்காம இருந்துருவார். ஒரு தடவை,"இந்த மூதேவியை

எங்கயாவது போய்த் தலை முழுகிட்டு வாயேண்டா?"ன்னு அவர்ட்ட கத்தினார், அதுக்கும் ஒரு வார்த்தை பேசாம தலையை குனிஞ்சிதான் நிக்கிறார் உங்க அத்தான். அன்னிக்கி ராத்திரிதான் அவர்கிட்ட அழுதேன். அதுக்கு என்ன சொல்றார் தெரியுமா? "எங்கப்பாவை நீ ஸீரிஸாக எடுத்துக்காதே சரோ, அவர் டயபிடிஸ் பேஷண்ட், ப்ரஷர் வேறே இருக்கு. இன்னும் என்ன என்னமோ இருக்கு. அப்படித்தான் அவர் கத்துவார். நீ கண்டுக்காதம்மா"ன்னு ரொம்ப காஷுவலா சொல்றார். அதுக்கப்புறம் என் கஷ்டங்களை அவர்ட்ட நான் சொல்றதேயில்லை. நானே கடிச்சி முழுங்கிக்கிறேன்."

"அதுவும் ஒரு முதுகெலும்பில்லாத ஆத்மாவாத்தான் இருக்கும் போல."

"என்ன செய்யறது, என் தலைவிதி."

"சரி சௌதிக்கு கிளம்பற வரைக்கும் நீ வந்து நம்ம வீட்டுல இருந்துக்க வேண்டியதுதானே? ரெஸ்ட் எடுக்க லீவ்ல வந்தவ இந்த எழவு வீட்ல மாட்டிக்கிட்டு ஏன் கஷ்டப்படணும்?"

"அவ்வளவுதான், அதாண்டா சாக்குன்னு அப்புறம் என்னை வீட்லேயே சேக்க மாட்டாங்க. உங்க அத்தானை ஃபோன்லயே ப்ரய்ன்வாஷ் பண்ணி என்னை டிவோர்ஸ் பண்ணவே வச்சிருவார் இந்த ஆள்."

"என்னக் கேட்டா, அப்படி ஏதாவது நடந்தா அதுவே பெட்டர்ம்பேன். இதென்ன வாழ்க்கை, கழுத்தில தாலியையும், நெஞ்சு முழுக்க ரணங்களையும் சுமந்துகிட்டு."

"பேசறது ரொம்ப ஈஸிடா தம்பி, நீ சின்னப் பையன். அப்பா சொன்ன மாதிரி, இள ரத்தம், எப்படியும் பேசுவே. எதுவும் செய்வே... சரி ஸ்டார்ட் பண்ணு நேரமாச்சு."

"ஏன், சீக்கிரமாப் போய்த் திட்டு வாங்கணுமாக்கும்? கொஞ்சம் சாவகாசமாகத்தான் போயேன். அம்மா வீட்டுக்கு போறேன்னு சொல்லிட்டுத்தானே வந்தே?"

"நீ ஒண்ணு! அப்புறம் வேறே வினையே வேண்டாம். மாமனார் வெளியே கிளம்பினார். இதான் சமயம்ன்னு வீட்ல இன்சுலின் தீர்ந்து போச்சே, மெடிக்கல் ஷாப்பில போய் வாங்கிட்டு வந்திர்றேன்னு மாமியார்ட்ட ரீல் விட்டுட்டு வந்திருக்கேன். பக்கத்துல மெடிக்கல் ஷாப் ஏதும் கிடையாதுல்ல. அதான் லேட்டாகுதுன்னு நினைச்சுக்குவாங்க. ஆனாலும் ரொம்ப லேட்டாயிருச்சு. அந்த ஆள் வந்துட்டாரோ என்னமோ? கிளம்புடா ப்ளீஸ்."

கிளப்பினான்.

போகிற போக்கில் பக்கவாட்டில் கழுத்தைத் திருப்பிக் கேட்டான்," எதுக்குக்கா இன்சுலின்?"

"அதான் சொன்னேன்ல மாமனார் ஒரு டயபடிக்ன்னு. தினமும் டாக்டர்ட்ட போய் இன்சுலின் போட்டுக்கணும். இப்ப நான் வந்த பிறகு வேறே டாக்டர்ட்ட போறதில்ல. டெய்லி நான் அவருக்கு இன்சுலின் போடணும். அவர் வசதிப்பட்ட நேரத்தில் போடச்

சொல்வார், போடணும். அதுக்காக எப்பவும் ரெடியாயிருக்கணும். வெளியே எங்கேயும் போயிரக்கூடாது. அம்மா வீட்டுக்குக் கூடப் போகக் கூடாது."

"சுருக்கமா சொல்லப்போனா அது ஒரு ஜெயில்."

"அப்படித்தான் வச்சுக்கோயேன்."

"ஒரே ஒரு வித்தியாசம்தான். ஜெயில்ல கைதிகளுக்கு அப்பப்ப அடி உதை கிடைக்கும். உனக்கு இன்னும் அந்த ஸ்டேஜ் வரல."

கொஞ்ச நேரத்துக்கு, பின் ஸீட்டிலிருந்து பேச்சு ஏதும் கேட்காமற் போக, பார்த்திபன் திரும்பவும் பக்கவாட்டில் கழுத்தை ஒடித்தான்.

"என்னக்கா, சத்தத்தையே காணல, ஏதாவது சொல்லேன்."

அப்போதும் அக்காவின் குரல் கேட்காமற் போகவே சிரமத்துடன் கொஞ்சம் விரிகோணத்தில் கழுத்தை முறுக்க, அக்கா புடவைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"ஏங்க்கா, அழுவுறியா?"

"பின்னே என்னடா செய்யச் சொல்ற பார்த்தி, நீ இப்ப சொன்னியே அந்த ஸ்டேஜும் வந்தாச்சுடா."

'க்றீச்'சென்று ஒரு குலை நடுங்கும் பிரேக். பின் ஸீட்டிலிருந்து அவள் நிலை தடுமாறி தம்பி மேல் மோதி, விழுந்து விடாமலிருக்க அவனைப் பற்றிக் கொண்டாள்.

"என்னக்கா சொன்னே? அந்த பாஸ்ட்டர்ட் உன்னை அடிச்சானா? நிஜம்மாவா சொல்றே?"

பார்த்திபன் குரலில் பயங்கர வெக்கை.

அவள் பதறிப் போய் இறங்கிக் கொண்டாள்.

பின்புறமிருந்து பொறுமையிழந்த ஹார்ன்கள்.

"ஐயையோ, இதென்னடா நடுரோட்ல காலை ஊனிட்டு நிக்கிற, கொஞ்சம் ஓரமாவாவது வாடா."

"வேண்டாம் நீ ஏறு. இப்படியே நேராப் போய் அந்த பாவியை குண்டுகட்டா தூக்கிட்டு வந்து தெருவுல போட்டு, இந்த ஸ்கூட்டரை ஏத்தியேத்தியே அவனக் கொன்னுர்றேன். நா தூக்குல தொங்கினாலும் பரவாயில்லை. நீ ஏறுக்கா."

இவர்களைத் தவிர்த்து ரெண்டு பக்கமும் சீறிக் கொண்டு பாய்கிற வாகனங்களிலிருந்து பலவிதமான பார்வைகள்.

தம்பியை சமாளித்து சமாதானப்படுத்துவதற்குள் அக்காவுக்குப் படு சங்கடமாய்ப் போயிற்று. ஒரு வழியாய் சமாதானமாகி, ஸ்கூட்டரை அணைத்து நிறுத்தினான்.

கண்களில் ரத்தச் சிகப்பு. கன்னங்களில் கோபச் சிலிர்ப்பு. கொஞ்ச நேரம் பேச்சு வரவில்லை. அந்த மௌனம் மேலும் இறுக்கத்தை வளர்த்தது. அதை தளர்த்துகிற மாதிரி, தம்பியின் புஜங்களைப் பற்றிக் குலுக்கினாள், ரெண்டு கைகளாலும்.

“பார்த்தி, காம் டௌன் பார்த்தி. நீ என்னடா இவ்வளவு எக்ஸைட் ஆகறே?”

அவளுடைய கைகளை விலக்கிவிட்டுப் பாக்கெட்டிலிருந்து கர்ச்சிஃபை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டதும் பார்த்திபன் கொஞ்சம் நிதானத்துக்கு வந்தான். வார்த்தைகள் ஆறிப் போயிருந்தன.

“அப்பா அம்மாட்ட இதச் சொன்னியா?”

“எப்படிடா சொல்லுவேன்? துடிச்சிப் போயிறமாட்டாங்களா? வெளியே சொல்லவே கூடாதுன்னுதான் இருந்தேன். நீ சொல்ல வச்சுட்ட. உங்கிட்ட சொன்னது கூட தப்போன்னு தோணுது. சரி போகட்டும். ஸ்டார்ட் பண்ணுடா ப்ளிஸ், ரொம்ப லேட்டாயிருச்சுடா”

ஸ்கூட்டர் போய்க் கொண்டிருந்தது. உரையாடல் திரும்பவும் தொடங்கியது.

“இந்த சித்ரவதைக்கி எப்பதான் முடிவு அக்கா, எப்ப உனக்கு விடிவு காலம்?”

பெரிசாய் ஒரு பெருமூச்சு கிளம்பியது அக்காவிடமிருந்து. பிறகு மெல்லிய குரலில், “அந்த ஆள் மண்டையப் போட்டாத்தான் எனக்கு விடிவுகாலம்” என்று விரக்தியுடன் சொன்னாள். உடனே தோன்றியது, ‘அப்படி சொல்லியிருக்கக் கூடாதோ?’ என்று. ‘பரவாயில்லை. உரக்க சொல்லவில்லையே... ட்ராஃபிக் இரைச்சல் வேறு. தம்பியின் காதில் விழுந்திருக்காது’.

“என்னதுக்கா?” என்றான். பார்த்திபன், முகத்தைச் சரித்து.

“ஒண்ணுமில்ல.”

“என்னமோ மண்டை கிண்டைன்னு காதுல விழுந்ததே?”

‘அட அநியாயமே, இவன் காதில் ஏதோ விழுந்து தொலைத்திருக்கிறதே...’

“ஒண்ணுமில்லடா” என்று மழுப்பினாள்.

ஒரு சின்ன இடைவெளிக்குப் பிறகு பார்த்திபன் கேட்டான்.

“ஆமா, உன் மாமனுக்கு இன்சுலின் போடறேன்னியே, எவ்வளவு ஏத்துவே?”

“ஒரு டோஸ். ஏன்?”

“ஒரு டோஸ்ன்னா?”

“ஒரு டோஸ்ன்னா முப்பது ஸி.ஸி.”

“அறுபது ஸி.ஸி ஏத்தினா என்னாகும்?”

“எதுக்குக் கேக்கறே?”

“சும்மா க்யூரியாஸிட்டிதான். சொல்லேன்.”

“அறுபது ஏத்தினா மயக்கம் வரும்.”

“தொண்ணூறு ஏத்தினா?”

“தொண்ணூறெல்லாம் ஏத்தவே கூடாது.”

“ஏன், ஆள் அவுட்டாயிருவானா?”

“உனக்கெதுக்குடா அதெல்லாம்? ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு.”

கேட்டில் இறங்கிக் கொண்டு தம்பிக்கு டாட்டா காட்டினாள். பார்த்திபன் அவளுடைய வழி அனுப்புதலைக் கண்டு கொள்ளாமல் ஸ்கூட்டரை ஓரமாய் நிறுத்தியதைப் பார்க்க அவளுக்குச் சுறுக்கென்றது.

“என்னடாது, போகலை?”

“ஏன், நான் உள்ளே வரக் கூடாதா?”

“வேண்டாண்டா. நீ வந்தா தெரிஞ்சிரும். நான் நம்ம வீட்டுக்குத்தான் போயிட்டு வந்தேன்னு. மாமனார் வேறே வந்திருப்பார். என்ன மூட்ல இருக்காரோ, ப்ளீஸ், நீ போயிருடா தம்பி.”

பதற்றத்துடன் கெஞ்சிவிட்டு, தம்பியின் பதிலுக்கு நிற்காமலேயே கேட்டை தாளிட்டுக் கொண்டு ஓடினாள். வெராண்டாவில், படபடப்புடன் அவள் பஸ்ஸரை அழுத்துவதும், பிறகு கதவு திறக்கப்பட்டு உள்ளே நுழைவதும் தெரிந்தது.

பார்த்திபன் நிதானமாய் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தான்.

ஹாலிலிருந்து இரைச்சல் ஜன்னல் வழியே வெளியேறிய இவனுடைய செவிப்பறைகளைத் தாக்கியது. ஜன்னலை சமீபித்து, மெல்ல உள்ளே பார்வையை செலுத்தினான்.

அழுத கண்களோடு தலை கவிழ்ந்து அக்கா நின்றிருப்பதும், மாமனார் அவளைக் கடுஞ்சொற்களால் குதறிக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

“... என்ன திமிர் இருந்தா எனக்கு ஊசி போடற நேரத்துக்கு ஊர் சுத்தப் போவேடி நீ? புருஷன்தான் ஊர்ல இல்லியே, வெளியே போய் நல்லா மேஞ்சிட்டு வரலாம்னுதானே போனே, சின்ன ஜாதிக் கழுத.”

“ஐயையோ மாமா, அப்படியெல்லாம் அபாண்டமா பேசாதீங்க. நான் அம்மா வீட்டுக்குதான் போனேன். வேறே எங்கேயும் போகல.”

“எதுத்தாடி பேசற சனியனே, அவ்வளவு வாய்க்கொழுப்பா உனக்கு” என்று இரைந்தபடி அவளுடைய கூந்தலை ரெண்டு கைகளாலும் முரட்டுத்தனமாய்ப் பற்றிக் குலுக்கினார்.

“எவன்ட்ட கேட்டுடீ போனே உங்க அம்மா வீட்டுக்கு? உங்கப்பன் வரதட்சணையிலே மிச்சம் வச்சதப் போய் வாங்கிட்டு வரலாம்ன்னு போனீயா, மூதேவி?”

அந்த ஆள் உச்சஸ்தாயில் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கும்போது பக்கத்தில் ஒரு பக்க வாத்தியம்

“நாங்கூட சொன்னேங்க, மாமா வீட்ல இல்லாத நேரம் வெளியே போகாதேடீன்னு. ‘ஓடிப்போய் மருந்து வாங்கிகிட்டு இதோ வந்திர்றேன் மாமி’ன்னு பொய் சொல்லிட்டு திருட்டுத்தனமால்ல போய்ட்டு வந்திருக்கா, ஓடுகாலி! பொம்மனாட்டிக்கு இந்த வினயம் ஆகுமா? பால் குடிக்கிற பாப்பா, அம்மாவை மனசு அப்படித் தேடுதோ?”

அக்காவின் கண்கள் இறுக்கமாய் மூடியிருந்தன. கன்னங்கள் முழுவதும் கண்ணீர். மூர்க்கத்தனமாய்த் தலை மயிரைப் பற்றியிருந்த மாமனாரின் கைகளை வலி பொறுக்காமல் இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

“இந்தா பாருடி, ‘அம்மா வீட்டுக்குப் போனேன், ஆத்தா வீட்டுக்குப் போனேன்’னு கேட்டைத் தாண்டுனியோ, தொலைச்சிடுவேன் தொலைச்சி. திருட்டுத்தனமா போயிட்டு வந்ததும் இல்லாம, திமிர்த்தனமா பதிலா சொல்ற நீ?”

தலையை ஓர் உலுக்கு உலுக்கி ஓங்கித் தள்ளிவிட்டதில், ஸோஃபாவில் பாதியும், கார்ப்பெட்டில் பாதியும் நிலைகுலைந்து விழுந்தாள்.

ஜன்னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபனுக்கு உடம்பெல்லாம் ரத்த ஓட்டம் வெகு துரிதமடைந்தது. ‘அப்படியே ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே பாய்ந்து அந்த கொடுங்கோலனின் முகத்திலும், தொப்பையிலும் சராமாரியாய்க் குத்துக்கள் விட்டு, பெல்ட்டைக் கழற்றி வெறியடங்கும் வரை அவனை ‘விளாசு விளாசு’ என்று விளாசி, பிறகு அதே பெல்ட்டை கழுத்தைச் சுற்றிப் போட்டு இறுக்கி, இன்னும் இறுக்கி, இன்னும் இறுக்கி, கண்கள் பிதுங்கி வழிய, நாக்கு தொங்கிப் போக, கை கால்கள் வெட்டி வெட்டி இழுக்க, பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் சகலமும் அடங்கிப் போக...’

வெறிக்கற்பனைக்கு பிரேக் போட்டுவிட்டு பார்த்தி கொஞ்ச நேரம் கண்களை இறுக மூடிக் கொண்டு நின்றான். மனசும், உடம்பும் சிறிது சமாதானப்பட்டன. கண்களைத் திரும்பவும் திறந்த போது உள்ளே அக்கா அதே நிலையில் சலனமின்றி கிடப்பது தெரிந்தது. மயக்கமாயிருக்கலாம்.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் முன் கதவை அணுகி பஸ்ஸரை அழுத்தினான். “யாரது?” என்ற உரத்த குரலுடன் கதவு திறந்தது.

இவனைப் பார்த்ததும் அந்த முகத்தில் திகைப்பு. பிறகு, அந்தத் திகைப்பை மறைக்க முயலுகிற ஒரு செயற்கைப் புன்னகை.

“அடடே, பார்த்தி! சிவகாமி, யார் வந்திருக்கா பார், நம்ம பார்த்தி, வாடாப்பா, நல்ல சமயத்துல வந்தே. இங்கே பார், உங்க அக்கா இப்பதான் வெயில்ல எங்கேயோ போயிட்டு வந்தா. வந்ததும் வராததுமா டயர்டா இருக்குன்னு... அப்படியே சாஞ்சுட்டா. மயக்கமோ என்னமோ தெரியல. நீ கொஞ்சம் பாக்கிறியா.”

அக்காவுக்குப் பக்கத்தில் போனான். முகம் அமைதியாயிருந்தது. கன்னத்தில் ஈரம் காய்ந்தும் காயாமலும். மூச்சு சீராய் வந்து கொண்டிருந்தது. ‘அதிர்ச்சியில் ஏற்பட்ட சின்ன மயக்கமாயிருக்கும். தானாய்ச் சரியாய்ப் போகும். கொஞ்ச நேரத்துக்கு அக்கா மயக்கமாயிருப்பது கூட ஓர் அனுகூலந்தான்’.

“என்னடாப்பா பாத்துக்கிட்டே நிக்கிறே. டாக்டருக்கு ஃபோன் பண்றியா, இல்ல ஒரு டாக்ஸி வச்சி உங்க வீட்டுக்கு கொண்டு போறியா...”

பார்த்திபன் நிதானமாய் மாமனாரின் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

“அக்கா எங்க வீட்டிலேந்துதான் இப்ப வந்தா.”

“நான்தாண்டா பார்த்தி உங்க அக்காவை அனுப்பி வச்சேன், பெத்தவங்களைப் பாத்து ரொம்ப நாளாச்சே, போய்ப் பார்த்துட்டு வாயேண்டீன்னு.”

“அக்கா சொன்னா மாமி. மாமாவுக்கு இன்சுலின் போடணுமாமே, டைம் ஆச்சுன்னு அவசர அவசரமா அங்கேயிருந்து ஓடி வந்தா.”

“மாமனாருன்னா அவளுக்கு உசிருடா பார்த்தி. ஊசி போடுற நேரமாச்சேன்னு அடிச்சுப் புடிச்சுட்டு ஓடி வந்திருக்கா, படபடப்புல மயக்கமாயிட்டா. மூஞ்சியில கொஞ்சம் தண்ணி தெளிச்சிப் பாரேண்டா பார்த்தி.”

“வேண்டாம் மாமி சாதாரண மயக்கந்தான். கொஞ்ச நேரத்துல சரியாயிடும். பதினொரு மணிக்கு மாமாவுக்கு இன்ஜக்ஷன் போடணும்னு அக்கா சொன்னாளே, ஐயையோ இன்னும் ரெண்டு நிமிஷந்தான் இருக்கு.”

“சரி அதுக்கென்ன செய்ய முடியும். இன்னிக்கி ஒரு நாளக்கி ஸ்கிப் பண்ணிட வேண்டியதுதான்.”

“ஐயையோ நீங்க ஒண்ணு மாமா. இன்சுலின்னெல்லாம் டெய்லி போடணும். அதுவும் அந்த டைமுக்குப் போடணும். இல்லாட்டி கெடுதலாப் போயிடும்.”

“எத்தனையோ நாள் நான் போடாம இருந்திருக்கேனே?”

“அது முந்தி மாமா. இப்ப அக்கா வந்த பிறகு இருபது நாளா நீங்க தொடர்ந்து போட்டுகிட்டு வர்றீங்களே, அதுல ஒரு நாள் மிஸ் ஆனாக் கூட உடம்பை ரொம்ப

பாதிக்கும்ன்னு அக்கா சொன்னாளே... இன்னிக்கு உங்களுக்கு நான் போட்டுவிடுறேன் மாமா இன்சுலின்."

"நீயா?"

"என்ன நீயாங்கிறிங்க! கல்யாணத்துக்கு முந்தி அக்கா க்ளினிக் வச்சிருந்தப்ப நான்தானே பேஷன்ட்களுக்கு ஊசி போடுவேன்!"

"அது சரிப்பா, இப்ப எதுக்கு ரிஸ்க்? அப்புறமா நான் டாக்டர்கிட்ட போய்ப் போட்டுக்கிறனே."

"நீங்க என்னை இன்சல்ட் பண்றீங்க மாமா. நம்ம வேலையப் பாத்துட்டு அப்புறம் சொல்லுங்க. மாமி, மாமாவை ரெடி பண்ணுங்கோ, இதோ வந்துட்டேன்."

செய்வதறியாமல் மாமாவும், மாமியும் பார்த்துக் கொண்டிருக்க, பார்த்திபன் அக்காவினுடைய மருந்துப் பையை எடுத்து மருந்தை ஸிரிஞ்சில் உறிஞ்சினான். ஸி.ஸி அளவு இருபது, முப்பது என்று ஏறி அறுபது, எழுபதைக் கடந்து தொண்ணூறைத் தாண்டி நிறைவு பெற்றது.

மாமா பரிதாபமாய் விழித்தார்.

"டேய் பார்த்தி, கட்டாயமா ஊசி போட்டுத்தான் ஆகணுமாடா?"

"என்ன மாமா இப்படிக் கேக்கறீங்க, எங்க அக்காவுக்கு நீங்க எவ்வளவோ செஞ்சிருக்கீங்க, உங்களுக்கு நான் இது கூட செய்யாட்டி எப்படி மாமா? மாமி, அழுத்திப் புடிச்சிக்குங்க, மாமா அழப்போறார்."

"டோஸ் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கும் போலயிருக்கேப்பா..."

"கொஞ்சம் கூடுதலாகத்தான் ஏத்தியிருக்கேன் மாமா, இனிமே போட வேண்டிய அவசியம் இருக்காது பாருங்க!"

"?"

"அதாவது மாமா, டோஸ் கூடுதலா வச்சா டெய்லி போட வேண்டிய அவஸ்தை இருக்காதில்லையா!"

"நிஜமாத்தான் சொல்றியாடா."

"சத்தியமா மாமா, நீங்க வேணா யார்ட்ட வேணுமானாலும் கேட்டுப் பாருங்க."

"இப்ப யார்ட்ட போய்க் கேக்கச் சொல்ற... சரி குத்து. வலிக்காமக் குத்துவியாப்பா?"

"ஐயே, வலிக்கவே வலிக்காது மாமா. உங்களுக்கு பெரிய ரிலீஃப் கிடைக்கும் பாருங்க. மாமி, நல்லா கெட்டியாப் புடிச்சிக்குங்கோ."

மாமி அழுத்தமாய்ப் புஜத்தைப் பிடித்திருக்க, மாமா கண்கள் இறுக மூடி பற்களைக் கடித்துக் கொண்டு காத்திருக்க, பார்த்திபன் இன்சுலின் நிரம்பிய சிரிஞ்சுடன் குத்துவதற்குக் குறி பார்த்தான்.

மயக்கமாயிருந்த அக்கா மெல்ல மெல்லத் தெளிந்த போது, கண்களுக்கெதிரே ஒரு விபரீதம் நிகழ்ந்து கொண்டிருப்பது மங்கலாய்த் தெரிந்தது.

-வாசுகி, 1-15 ஆகஸ்ட் 1997

(சூரசம்ஹாரம்)

# ஜாதி இரண்டொழிய வேறில்லை

களைத்துப் போய் வீட்டுக்கு வந்து உடுப்புகளைக் களைந்தபோது, காக்கிச் சட்டையை இவனிடமிருந்து பெற்று ஹாங்கருக்கு அணிவித்தபடியே நிர்மலா சொன்னாள்,

“பெரியவர்ட்டயிருந்து ஆள் வந்திருந்தான்ங்க. ஒங்கள வரச் சொன்னாராம்.”

“யாரு ஏ.ஸியா?”

“இல்லங்க. ஒங்க பெரிய பண்ணையார்.”

இவன் மனஞ் சுளித்தான். அது முகத்தில் தெரிந்தது.

“மணி பத்தரையாச்சே, காலைல போனா சரிதானா?”

“நைட் எந்நேரமானாலும் வெய்ட் பண்றேன்னு சொன்னாராம்.”

கழட்டின பெல்ட்டைத் திரும்ப மாட்டிக்கொண்டு சலிப்போடு ஒரு ஸ்லாக்கை எடுத்து அணிந்து கொண்டான்.

“கௌம்பிட்டீங்களா, சாப்ட்டுட்டுப் போகலாம்ல? எடுத்து வச்சிர்க்கேன் வாங்க.”

“இல்ல நிம்மி, போய் எட்டிப் பாத்துட்டு வந்துர்றேன். ரொம்ப லேட்டானா சொல்லிக்காட்டுவார் அந்த ஆளு.”

புல்லட், பங்களாவை சமீபிப்பதற்கு முன்னாலேயே அணைத்துவிட்டு, கேட் முன்னால் வண்டியை சத்தமில்லாமல் நிறுத்தினான். கேட்டின் கொண்டியை ரெண்டு முறை தட்டி ஒலியெழுப்பினதும், அல்சேஷன் ஒன்று ஆக்ரோஷமாய்க் குரைத்தபடி பாய்ந்து வந்தது. பதினொரு மணி ராத்திரியின் அமைதியை மானபங்கப்படுத்துகிற ராட்சசக் குரைப்பு.

சில நிமிஷங்களுக்குப் பிறகு இருட்டில் ஒரு மனிதக்குரல் கேட்டுக்கு வந்தது.

“எஸ்.ஐ ஸார்ங்களா? ஐயா இந்நேரம் ஒங்களுக்காகக் காத்திருந்துட்டு, இப்பத்தான் படுக்கப் போனாக. நீங்க இதுக்கு மேல எங்க வரப்போறியன்னு நாந்தான் நாய அவுத்து விட்டேன். கொஞ்சம் இருங்க இத அடச்சுப் போட்டுட்டு வாறேன்.”

நாயை அதட்டிக் கூட்டிக்கொண்டு போனான். பிறகு, சாவகாசமாய் வந்து கேட்டைத் திறந்து விட்டான். க்ரோட்டன்ஸ்களையும், போர்ட்டிகோவையும் தாண்டி வெராண்டாவில் கிடந்த நாற்காலிகளில் ஒன்றை இவனுக்குக் காட்டினான்.

“இங்ஙன இருங்க, ஐயா ஒறங்கிட்டாவளா, முளிச்சிட்டிருக்காவளான்னு பாத்துப்புட்டு வந்துருதேன்.”

உட்காராமல் இவன், கைகளைக் கட்டியபடி வெளியில் இருளை வெறித்துக் கொண்டு நின்றிருந்தான். சில நிமிஷங்களுக்குப் பிறகு, பின்னால் காலடிச் சத்தம் கேட்கவும் வாசல் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

“வாடேய், எம்ப் போலீஸ்காரா! நாய் கொலக்கிற சத்தங் கேட்டப்பவே தெரிஞ்சிக்கிட்டேன தொர நீங்க வந்துட்டீயன்னு.”

கிண்டலும் இளக்காரமும் இவனுடைய சுய கௌரவத்தைத் தொட்டன. ஆனாலும் ‘இந்த ஆளிடம் இது ஒண்ணும் புதுசில்லையே!’ என்று தேற்றிக் கொண்டு அடுத்த தாக்குதலுக்குக் காத்திருந்தான்.

பண்ணையார் ஒரு நாற்காலியில் வசதியாய் உட்கார்ந்து, சவுகரியமாய்ச் சரிந்து, தோரணையாய்க் கால் மேல் கால் போட்டுக்கொண்டு திரும்பவும் திருவாய் மலர்ந்தருளினார்.

“எலேய் முருகேசு, சனியன் ஏம்ல அது இவனப் பாத்து இந்தக் கொல கொலக்கிது? இவுக போலீசு, சத்தம் போட்டா சுட்டுப்புடுவாகன்னு அதுகிட்ட சொல்லி வக்யப்படாது?”

தன்னுடைய ஹாஸ்யத்தை மெச்சி பண்ணையின் பெரிதாய்க் குரலெடுத்துச் சிரித்தார், நாய்க்குரைப்பே தேவலை போல.

“என்ன பெரிய பண்ண, நடு ராத்திரியில என்ன நாட்டாம பண்ணிட்டிருக்கீய?”

வாசலில் இன்னொரு குரல். பண்ணையார் பார்வையை அந்தப் பக்கம் திருப்பினார்.

“என்ன வேய் சதாசிவம், ஒறங்கலியா இன்னும்?”

“என்னத்த ஒறங்க, இப்பத்தா லேசா அசத்துச்சு, அதுக்குள்ள நாய்ச்சத்தம் கேட்டு முழிப்புத் தட்டிரிச்சி. தம்பி யாரு?”

“தம்பியா, தம்பி பெரிய ஐப்பியெஸ் அதிகாரி வேய்! இங்ஙன மெட்ராஸ்ல ஐ.ஜியா இருக்காக.”

பண்ணையார் வழக்கம்போல முத்துக்களை உதிர்த்துவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்.

சதாசிவத்துக்குப் பொறுமையில்லை.

“யார்ன்னு கேட்டா சொல்லுமே பண்ண, சும்மா சிரிப்பாணியா இருக்கீக, தெரியாமத்தான் கேக்கேன்.”

பண்ணையின் சிரிப்பு தணிந்தது.

“சொல்லுதேன் வேய். ஒரு ஜோக்கு சொன்னாப் புரிஞ்சிக்க மாட்டக்கீரே. ‘மாடசாமி மாடசாமி’ன்னு நம்ம சேர்மாதேவி பண்ணையில கெடந்தானே, நீர் பாத்திருப்பீரே? என்னவே முளிக்கீரு, நீர் வந்தப்ப எளனி பறிச்சிப் போடல மாடசாமின்னு ஒரு

மொட்டயன்? அவம் மவந்தா இவன். எப்படியோ ஒரு அதிர்ஷ்டம் அடிச்சி இவன ஒரு தூக்கு தூக்கி விட்டுருச்சி. போலீஸ்ல சேந்து இங்க எஸ்.ஐயா இருக்கான். டிபார்ட்மென்ட்ல நல்ல பேர்னு சொல்லிக்கிருதாக. அப்படித்தானடேய்? மெட்ராஸ்ல யாராச்சும் கவனிக்கணும்னாச் சொல்லும். இவன்ட்ட சொல்லி செமத்தியா கவனிச்சிருவோம்."

"ஆமா, நாந் திருநவேலிக்காரன், மெட்ராஸ்ல வந்துதான் கவனிக்கப் போறேனாக்கும்? இவனப் பாத்துதான் நாய் இந்தக் கொல கொலச்சிதா? நா என்னமோ ஏதோன்னு நெனச்சேன். உடுப்புப் போட்டுட்டு வந்திருந்தா நாய் பயந்து வாலச் சுருட்டிட்டிருந்திருக்கும். இவன் மப்ட்டிலல்லா வந்திருக்கான்!"

"அட நீரு ஒண்ணு. காக்கிச் சட்ட போட்டவன மனுஷனே இந்தக் காலத்துல மதிக்க மாட்டக்கான், நாயா மதிக்கப் போவுது!"

இந்த முறை பண்ணையாரின் சிரிப்பில் சதாசிவமும் சேர்ந்து கொண்டார்.

அவர்கள் எதிர்பாராதபடி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு இவன் உட்கார்ந்து கொண்டதும்தான் அவர்களுக்கு சிரிப்பு அடங்கியது. அதிருப்தியாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கொஞ்சம் அமைதி. பிறகு சதாசிவம் இவனைப் பார்த்தார்.

"தம்பி பேரென்ன?"

"பழனிசாமிங்க."

"பெரிய பண்ண, இது ஒங்க தகப்பனார் பேரில்ல?"

"ஆமா, இவன் அப்பன் எங்க உப்பத் தின்ன விஸ்வாசத்துக்குத் தம்புள்ளக்கி எங்க அப்பா பேர வச்சிருக்கான். நம்ம பண்ணையில நாய் மாறி கெடந்தான். அவனும் போய்ச் சேந்துட்டான். அந்த விஸ்வாசம், மருவாதி எல்லாம் இந்தத் தலமொறையில பாக்க ஏலாது சதாசிவம்!"

"நீங்க ஒண்ணு பண்ண, மேல ஏறி மிறிக்காம இருந்தாப் போறாது? தம்பி, கல்யாணம் ஆயிருச்சில்ல?"

இவன் வாயைத் திறக்குமுன் பண்ணையார் இடைமறித்தார்,

"அந்தக் கதைய நாஞ் சொல்லுதேன் கேளும். பாளையங்கோட்ட சேவியர்ஸ் காலேஜுல நாந்தாஞ் சொல்லி இவனுக்கு ஸீட் வாங்கிக் குடுத்தேன். அப்பவே இவன் அப்பன் 'சேர்மாதேவில சொந்தத்துலயே ஒரு புள்ள இருக்கு, நீங்கதா எசமா கல்யாணத்த நடத்திக் குடுக்கோணும்'னுட்டு ஒரு நா வந்து நின்னான். 'சரிலே'ன்னேன். ஊடால இந்தப் பய என்ன பண்ணான்னு கேளு, பரிச்ச எளுதினானோ இல்லியோ சொல்லாமக் கொள்ளாம மெட்ராஸ்க்கு ரயிலேறிட்டான். பெறவுதான் தாக்கல் வந்துச்சு போலீஸ் ட்ரெய்னிங்ல சேந்துட்டான்னு. மெட்ராஸ்ல ஒரு புள்ளயப் பாத்து லவ்வு மாரேஜ்

பண்ணிட்டானாம். இங்க ஒரு நா கூட்டியாந்தானே, புள்ள நல்லாத்தான் இருக்கு. பேரு என்னடேய்?”

“நிர்மலா.”

“கொளந்த இருக்கா தம்பி?”

“ஒரு பையன்ங்க.”

“பேரு என்ன வச்சிருக்க?”

“சோமன்.”

சதாசிவம் பண்ணையாரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் கொண்டார். இவனிடம் பிறகு தன் சந்தேகத்தைக் கேட்டார்.

“மலையாளப் பேர் மாறி இருக்கு?”

“மலயாளப் பேர்தாங்க. கேரளால கண்ணனூர் ஜில்லால சோமன்னு ஒரு எஸ்.ஐ இருந்தாரு. நேர்மையான, நாணயமான அதிகாரி. எம்பத்தொண்ணுல அநியாயமா அவரக் கொன்னு போட்டாங்க.”

“போலீஸ் வேலயில இருந்துக்கிட்டு நேர்ம நாணயம்ங்கியே, எங்க நீ பொழக்யப் போற! ஆமாண்டேய், பம்பாய்ல என்னமோ போன வருசம் எஸ்.ஐங்கள மாறி கான்ஸ்டபிள் ஆக்கிட்டாகளாமே நெசந்தானா?”

“நீங்க என்ன பெரிய பண்ண, கான்ஸ்டபிள்தா எஸ்.ஐ. ஆவான். எஸ்.ஐ எங்ஙனயாச்சும் மாறி கான்ஸ்டபிள் ஆனானா?”

“அட நீரு ஒண்ணு சதாசிவம், நாஞ் சும்மாவா சொல்லுதேன்? பம்பாய்லயிருந்து நம்ம மூத்தவனுக்கு ‘ஸண்டே டைம்ஸ்’ன்னு ஒரு பேப்பர் வருது, அதுல போட்டுருந்துச்சுன்னு அவந்தான் படிச்சிச் சொன்னான், அதான் இவங்கிட்ட கேக்கேன். நெசந்தானா டேய்?”

‘நிஜந்தான். ஆனால் போன வருஷம் அல்ல. 94 - ல் தீபாவளிக்கு முன்பு’. இந்த அநீதி நிகழ்ந்ததைக் கேள்விப்பட்டதுமே இவன் மனவேதனையடைந்து நிம்மியிடம் சொன்னான், தீபாவளிக்கு விசேஷமாய் ஏதும் செய்ய வேண்டாமென்று. அந்தப் பரிதாபத்துக்குரிய பம்பாய்ப் போலீஸ்காரர்களின் சோகத்தை இவன் மானசீகமாய்ப் பகிர்ந்து கொண்டதை இவர்களிடம் சொன்னால் இன்னுங் கொஞ்சம் சிரிப்பார்கள். வேண்டாம்.

“தெரியலிங்க.”

“என்ன டேய் சுத்தக் கோட்டிக்காரனா இருக்க? போலீஸ்காரன் சங்கதி தெரியலங்கியே! கள்ளனப் புடிக்கிற வேலயயாச்சும் ஒழுங்காச் செய்வியா?”

பண்ணையார் நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தபோது, தான் பொறுமையிழந்து கொண்டிருப்பதை இவன் உணர்ந்தான்.

“ஐயா எதுக்குக் கூப்புட்டனுப்பிச்சிங்க, லேட்டாச்சு, நிர்மலா தனியா இருக்கா.”

“சோமன் இருக்கான்ல பாத்துக்க மாட்டான்?”

“அவன் கைக் கொழந்தங்க.”

“சரிதான் டேய், போலீஸ்காரம் பொண்டாட்டிய எவன் என்ன செஞ்சிரப் போறான்? போலீஸ்காரந்தான் அடுத்தவம் பொண்டாட்டிய...”

பண்ணையார் முடிக்குமுன், இவன் முகத்தில் படர்ந்த வெறுப்பை இனங்கண்டு கொண்டு சதாசிவம் பண்ணையாரை வெட்டினார்.

“வெட்டிப் பேச்ச விடுங்க பண்ண, விஷயத்துக்கு வாரும். நேரமாகுதுன்னு சொல்றான்ல.”

பண்ணையார் வேலையாளுக்குக் குரல் கொடுத்தார்.

“எலேய் முருகேசு...!”

இடுப்பில் துண்டைச் சுற்றியிருந்த முருகேசு, ஓட்டமாய் வந்து கைகளைக் கட்டிக் கொண்டு பணிவாய் நிற்க, உத்தரவு வந்தது.

“அந்தக் கழுத முளிச்சிட்டிக்காளா பாருல, ஒறங்கிட்டிருந்தா, சனியம் மூஞ்சில தண்ணிய அடிச்சி எளுப்பிட்டு வா. எஸ்.ஐ ஐயாவுக்கு நேரமாகுதாம்.”

அடுத்த நாலாவது நிமிஷம், முருகேசுவின் முரட்டுப் பிடியில் ஒரு பத்து வயதுச் சிறுமி, பீதி நிறைந்த கண்களோடும், கன்னங்களில் கண்ணீர்க் கோடுகளோடும்.

அந்தச் சிறுமி மேல் ஓர் அசுரப் பார்வை வீசிவிட்டுக் கொஞ்சம் பெரிசாய்க் குரலெடுத்துச் சொன்னார் பண்ணையார்.

“ஐயா இன்ஸ்பெட்டர் ஐயா, இந்தப் புள்ள மூணு மாசமா இங்ஙன வேலக்கி இருக்கு. இன்னிக்கி இது தன்னோட வேலயக் காட்டிருச்சி. இவரு எங்க விருந்தாளிங்க. சதாசிவம்னு பேரு. நேத்துதான் திருநெல்வேலியிருந்து வந்தார். ரூம்புல பெட்டிய மறந்து மூடாம வச்சிட்டாரு. இவ ரூம்புல பெருக்கப் போனவ பெட்டியத் தொறந்து மேலாப்பல இருந்த ரெண்டு நூறு ரூவாத்தாள அபேஸ் பண்ணிட்டா. நாங்க எப்படியெல்லாமோ அடிச்சிக் கேட்டுப் பாத்துட்டோம். ‘இல்லவே இல்ல’ன்னு சாதிக்கா. நீங்க போலீஸ் ஸ்டேசனுக்குக் கூட்டிக்கிட்டு போய் நாலு சாத்து சாத்திக் கேளுங்க. கள்ள மூதேவி, போட்டி, இன்ஸ்பெட்டர் கூடப்போ. நெசத்தச் சொன்னாத்தான் விடுவாக.”

அந்தச் சிறுமி மேலும் கலவரமடைந்து மிதமிஞ்சிய பயத்தோடு இவனைப் பார்த்தாள். அந்த பயத்தை மேலும் வளரவிடாமல் இவன் எழுந்து அவளை அழைத்தான்.

“எங்கூட வர்றியாம்மா?”

அச்சத்தில் அவளுடைய கால்கள் உறைந்து செயலற்றுப் போயிருந்தன. முருகேசு அவளை இழுத்துக் கொண்டு கேட்டுக்குப் போனான், அடி மாடு போல.

பண்ணைகளிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய இவனிடம் பெரிய பண்ணையார் ஒரு கண் சிமிட்டலோடு சொன்னார்.

“ஸ்டேசன்ல வச்சு எக்குத்தப்பா ஏதும் பண்ணிப்புடாதீக டேய், சமையாத புள்ள அது.”

அந்த அசிங்கம் பிடித்த மூஞ்சியில் காறி உமிழ வேண்டும் போலிருந்தது இவனுக்கு. இந்த ஈனப் பிறவிக்காகத் தன்னுடைய உமிழ்நீரை விரயம் செய்ய வேண்டாமென்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

முருகேசு கேட்டைப் பூட்டிக் கொண்டு நகர்ந்ததும் அந்தச் சிறுமி தடாலெனக் கீழே விழுந்து இவன் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

“அண்ணாச்சி, சார், என்ன ஒண்ணுஞ் செஞ்சிராதிய சார். போலீஸ் டேசனுக்கு வேணாஞ் சார். நா களவாங்கல சார். அவுக பொய் சொல்லுதாக சார். என்ன வுட்ருங்க சார். இப்படியே ஓட்டமாப் போயிருதேஞ் சார்.”

இவன் அவளைப் பற்றித் தூக்கி நிறுத்தினான்.

“எந்திரிம்மா. நா ஒன்ன ஒண்ணுஞ் செய்ய மாட்டேன், பயப்படாதே. எந்த ஊர் ஒனக்கு?”

“பாளையங்கோட்டங்க சார். அசோக் டாக்கீஸ்க்குப் பொறத்தால.”

“பாளையங்கோட்டக்கி நீ இங்கயிருந்து ஓடிப்போய் சேர்றதுக்குப் பத்து நாள் ஆகும்மா. நா ரயிலேத்தி அனுப்பி வக்கிறேன். எங்கூட வா.”

அவனுடைய கனிவான குரல் அவளுடைய பயத்தைக் குறைத்தாலும், சந்தேகம் தீரவில்லை.

“ரயில் டேசனுக்கா, போலீஸ் டேசனுக்கா சார்?”

“பயப்படாம வாம்மா, எந்த ஸ்டேஷனுக்குமில்ல.”

பைக்கை ஸ்டார்ட் செய்து அவளைக் கைத்தாங்கலாய்ப் பின்னால் ஏற்றிவிட்டான். தயக்கத்துடன் அவனுடைய சட்டையைப் பற்றிக் கொண்டாள்.

“நல்லா புடிச்சிக்க. விழுந்துரப் போற.”

அவளுடைய கையைப் பிடித்துத் தன்னுடைய வயிற்றைச் சுற்றி வளைத்துவிட்டான். புல்லட்டின் டபடபவுக்கு ஊடே அவளுடைய விசும்பலும் கேட்டுக் கொண்டிருந்தது.

பைக் வீட்டை அடைந்தபோது வாசலில் நிர்மலா.

“ஏங்க இவ்வளோ நேரம்? யார்ங்க இது?”

“ம்? பண்ணையாரோட லேட்டஸ்ட் விக்ட்டிம். எறங்கும்மா, அக்காவோட உள்ள போ. இன்னும் ஏன் அழுவுற, ஒன்ன யாரும் ஒண்ணுஞ் செய்ய மாட்டாங்க, பயப்படாமப் போ.”

அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போன நிர்மலா, பின்னால் இவன் வந்ததும் பார்வையால் கேட்டாள், என்ன விஷயமென்று.

“பண்ணையார் வீட்ல வேலக்கி இருந்த பொண்ணு. என்னமோ ரூவா எடுத்துட்டான்னு கம்ப்ளெய்ன்ட்.”

“இல்லீங்க சார், சாமி சத்தியமா நா எடுக்கலிங்க சார். பொய்யி சார்.”

“சரி சரி, நீ எடுக்கல. திரும்பவும் அழ ஆரம்பிச்சிராத. நிம்மி இதுக்கு சாப்பாடு குடும்மா. அங்க ஏதாவது சாப்ட்டியாம்மா?”

“இல்லீங்க சார். மத்யானத்துலயிருந்து சாப்புடல. ஆளாளுக்குப் போட்டு அடி அடின்னு அடிச்சாக. மேலெல்லாம் வலிக்கி. ரொம்பப் பசிக்கி. இருட்டுத வரக்யும் தூண்ல கட்டி வச்சிருந்தாக.”

வேதனையையெல்லாம் கொட்டிக் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள்.

“சரி சரி, அழாதம்மா. கை கால் கழுவிட்டு போய்ச் சாப்புடு. நிம்மி நீ கொஞ்சம் இத சமாதானப்படுத்தேன். அட ஒனக்கு என்ன ஆச்சு! இதென்ன கண்ணீர்!”

“ஒண்ணுமில்லீங்க. பாக்கப் பாவமாயிருக்கு. இவ பேர் என்ன?”

“கேக்கலியே. ஒம் பேர் என்னம்மா?”

“லெச்சுமி.”

“லக்ஷ்மி, அந்தப்பக்கம் பாத்ரூம் இருக்கு பார்மா, பாத்ரூம் போய்ட்டு முகங்கழுவிட்டு சீக்கிரம் வா, சாப்பாடு தர்றேன்.”

அவள் நகர்ந்ததும் நிர்மலா குரலைத் தணித்தாள்.

“வந்து… ஒங்களுக்குங்க? ஒங்க ஒரு ஆளுக்குத்தான் எடுத்து வச்சிர்ந்தேன்…”

“எனக்குப் பசியில்லம்மா. ஈவ்னிங் டி∴பன் பண்ணினேன்.”

“சும்மா சொல்றீங்க.”

“இப்ப என்ன நீ, நடுராத்திரியில ஒலை வைக்கப் போறியா? எனக்குக் கடுமையா தூக்கம் வருதும்மா, நா படுக்கப் போறேன். இந்தப் பொண்ண ஒம்பக்கத்துல படுக்கப்

போட்டுக்க, ரொம்ப பயந்திருக்கா பாவம். கொஞ்ச நாளக்கி இவ நம்ம கூடவே இருக்கட்டும், கொழந்தயப் பாத்துக்குவா, என்ன சொல்ற."

"பாக்க லட்சணமா இருக்காங்க. இந்த மாதிரிப் பொண்ணுங்க இந்தச் சின்ன வயசுல ஸ்கூலுக்குப் போக முடியாம வீட்டு வேலக்கிப் போக வேண்டியிருக்கறது பெரிய கொடுமைங்க... வந்துட்டியா லக்ஷ்மி, சாப்பிடறியா?"

"சரிங்கம்மா."

"அக்கான்னு கூப்புடு. ஸ்கூலுக்குப் போயிருக்கியா?"

"எங்க ஊர்ல மேரி ஆடன் இஸ்கூல்ல நாலாப்பு வரக்யும் படிச்சிருக்கேங்க்கா."

"இங்க ஸ்கூல்ல போட்டா நல்லாப் படிப்பியா?"

எதிர்பாராத இந்த அழைப்பை எதிர்கொள்ள முடியாமல் முதலில் முழித்தவள் பிறகு சுதாரித்துக் கொண்டு சரியென்று பலமாய்த் தலையசைத்தாள்.

"இந்தா நிம்மி, அவளுக்கு மொதல்ல சாப்பாடு போடு. ஹையர் எஜுகேஷன் பத்தி அப்புறம் பேசலாம்."

இவன் சிரித்தபடி சொல்லிவிட்டு தொட்டிலில் அமைதியாய்த் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையிடம் குனிந்தான்.

"தூங்கிட்டிருக்கிற கொழந்தக்கி முத்தங் குடுக்கக் கூடாதுன்னு எத்தன தடவைங்க சொல்றது!"

"அதுக்காக? அவன எழுப்பச் சொல்றியா இப்ப? அட நீ கிச்சனுக்குப் போம்மா."

நிம்மியும் லட்சுமியும் கிச்சனுக்குள் போன பின்னால் இவன் கண்கள் சொருக உறங்கப் போறான்.

விடியலில் விழிப்புத் தட்டியபோது, கட்டிலுக்குப் பக்கத்தில் பாய் விரித்துப் படுத்திருந்த நிம்மியையும் லட்சுமியையும் பெட்ரூம் விளக்கில் மங்கலாய்ப் பார்த்தான்.

நிம்மியின் ஒரு கை அந்த சிறுமியின் மேல் பாதுகாப்பாய்ப் படர்ந்திருந்ததைப் பார்க்க ரொம்ப சந்தோஷமாயிருந்தது.

-கணையாழி, ஆகஸ்ட் 1997.

# புதிய பயணம்

"எல்லாம் ஒன்னால வந்தது. 'ஒரே கொழந்த, ஒரே கொழந்த'ன்னு செல்லங் குடுத்துக் கெடுத்து நாசமாக்கிட்ட. இப்ப நா நாலு பேர் முன்னால தல நிமிந்து நடக்க முடியாமப் பண்ணிட்டாளே! இப்படி ஒரு தீராத அவமானத்துல கொண்டு வந்துட்டாளே இந்த சண்டாளி."

அப்பாவின் ஆவேசத்துக்கு அம்மா ஓரளவுக்கு ஈடு கொடுத்தாள்.

"நாங்குடுத்த செல்லமில்லீங்க. ஒங்க கஞ்சத்தனம்தான் இதுக்கெல்லாம் காரணம். கப்பல் மாதிரிக் காரை ஷெட்ல போட்டுப் பூட்டி வச்சுக்கிட்டு பொண்ணை ஆட்டோல காலேஜ்க்கு அனுப்புவீங்களா? இவங்க ரெண்டு பேரும் நெருங்கிப் பழகனதுக்குக் காரணமே நீங்கதான். ஒங்க கஞ்சத்தனந்தான்."

"சரிதான் நிறுத்துடி. இந்தப் பய வேல கேட்டு வந்தப்ப, ஆட்டோ வாங்கறதுக்கு ஐடியா குடுத்ததே நீதானேடி.? ஒம் பேச்சைக் கேட்டு, நமக்கும் நாலு காசு சில்லறை வருமானம் வருமேன்னு ஆட்டோ வாங்கி விட்டேன். 'என் ஒருத்திக்காக அநாவசியமாக் கார் எதுக்குப்பா, நா ஆட்டோலயே போய்க்கிறேனேப்பா'ன்னா. 'சரிம்மா'ன்னேன் இப்படி அசிங்கமாப்போகும்னு கண்டேனா? என்ன பெரிய கஞ்சத்தனத்தக் கண்டுட்ட நீ?"

"சரிங்க, நீங்க பெரிய தர்ம மஹா ப்ரபுதான். இப்ப ஆக வேண்டியதப் பாருங்க. 'அவனத்தான் கட்டிக்குவேன்'னு இவ ஒத்தக்கால்ல நிக்கிறா. என்னதான் இருந்தாலும் நம்ம பொண்ணு. நீங்கதாங் கொஞ்சம் மனசிறங்கி வந்து..."

"மனசெல்லாம் எறங்க முடியாது. மாடியிலிருந்து வேணா எறங்கி வர்றேன். அது ரெண்டும் ஹால்லதானே நிக்கிது? 'எக்கேடும் கெட்டுப் போங்க'ன்னு ரெண்டு பேரையும் அனுப்பி வக்கிறேன்."

"ஐயே, இப்படியே அபசகுனமாப் பேசாதீங்க. சரோவுக்கு இன்னிக்கிப் பொறந்த நாள்."

"அடடே, அப்படியா சங்கதி! எல்லாம் திட்டம் போட்டுத்தான் செஞ்சிருக்கான் இந்தப் பய. எப்படா இருவத்தொண்ணு ஆகும் இழுத்துட்டு ஓடலாம்னு காத்துக்கிட்ருந்தாம் போல. ஏண்டா ராஸ்க்கல்?"

படிகளில் இறங்கிக் கொண்டே உறுமினார் அவனைப் பார்த்து.

அப்பா ஆத்திரத்தில் என்னதான் தரக்குறைவாய்ப் போசினாலும் முரட்டுத்தனமாய் பதில் ஏதும் சொல்லிவிடக் கூடாது என்பது பரமசிவனுக்கு இவளுடைய காதல் கட்டளை. இவன் அவரை சிவந்த விழிகளால் ஏறெடுத்துப் பார்த்ததோடு பிரேக் போட்டுக் கொண்டான். ஆனால் அவர் விடுவதாயில்லை.

“என்னடா மொறக்கிறே? ‘ஒரே பொண்ணு, எப்படியாவது செட்டப் பண்ணித் தள்ளிக்கிட்டுப் போய்ட்டோம்னா இந்த சொத்தையெல்லாம் ஒரு சுருட்டு சுருட்டிக் கக்கத்துல வச்சுக்கலாம்’னுதானே திட்டம் போட்டே? நடக்காது தம்பி. ஒரு பைசா பேறாது. எல்லாம் ஒழச்சு சம்பாதிச்சதுடா, ஒன்ன மாதிரி உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணி சம்பாதிச்சதில்ல.”

இத்தனை நேரம் சகித்துக் கொண்டிருந்த சரோ அப்பாவை எதிர்கொண்டாள்.

“அப்பா, ப்ளீஸ் அசிங்கமாப் பேசாதீங்க. ஒங்க சொத்துல ஒரு பைசா எங்களுக்கு வேண்டாம். கட்டின புடவையோடதான் நான் அவரோட போகப்போறேன். இப்ப இவர் ஒங்ககிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கற வெறும் ஆட்டோ டிரைவர் இல்லப்பா. இன்னிலிருந்து இவர் ஒங்க மாப்பிள்ளை.”

எம்.ஆர்.ராதா பாணியில் அப்பா வஞ்சப் புகழ்ச்சி அணியை உமிழ்ந்தார்.

“அடி சக்கை! சபாஷ் மாப்ளே! ஒங்கள மாதிரி ஒரு டபுள் கிராஜுவேட், ஃபாரின் ரிட்டன், கரன்ஸியில புரள்ற கோடிஸ்வரனுக்காகத்தான் இத்தன நாளா நா பொண்ணப் பெத்து வச்சுக்கிட்டுக் காத்திருந்தேன் மாப்ள. அடச்சீ, அனாதைப் பயலுக்கு ஆதரவு குடுத்ததுக்கு எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்டா.”

பரமசிவனுக்கு உள்ளே கனன்று கொண்டிருந்த எரிமலை, சரோவின் கட்டுப்பாட்டையும் மீறி வெடித்துவிடும் போல இருந்தது. அவன் கையைப் பற்றி அழுத்தி அவள் வெக்கையைத் தணித்தாள்.

‘இதற்கு மேலும் இங்குத் தாமதித்து, தன்னவனை அவமானப்படுத்த வேண்டாம். விடை கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இருபத்தோரு வருஷ வியர்வையில்லா வாழ்க்கைக்கு.

நாக்கு திகட்டிப் போகிற அறுசுவை உணவிற்கு. ஊட்டியையும் கொடைக்கானலையும் வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டி வைத்திருக்கும் ஏ.ஸி பெட்ரூமுக்கு’.

அம்மாவைப் பிரிகிற ஞாபகம் கண்களை நிறைத்தது.

இன்னும் கொஞ்ச நேரம் இங்கே இருந்தால் வெடித்து அழுதுவிடுவாள் போல உணர்ந்தாள். ‘கூடாது. இந்த நேரத்தில் குலைந்து போகக் கூடாது’. மனசைத் திடப்படுத்திக் கொண்டு அம்மாவிடம் விடை பெற்றாள்.

“அம்மா, போய்ட்டு வறேம்மா. அட்ரஸ் தெரியுமில்ல? அப்பா நார்மலானப்புறம் வாங்க. அடிக்கடி வாங்கம்மா. அப்பா, வர்றேம்ப்பா. சாயங்காலம் நாலு மணிக்கி வடபழனி கோவில்ல கல்யாணம். மனசிருந்தா வாங்க.”

மகளின் பிரிவு இப்போதுதான் உறைக்க ஆரம்பித்த மாதிரி அம்மா அரற்ற ஆரம்பித்தாள்.

அப்பா பாறையாயிருந்தார்.

அம்மா உடைந்தாள்.

“இப்படியொரு கல்மனசா ஒங்களுக்கு! ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு சீராட்டி வளத்த மகள விடவா ஒங்களுக்கு வரட்டுக் கௌரவம் பெரிசாப் போச்சு! சே, என்ன மனுஷர் நீங்க.”

அவர் அசையவில்லை. அவரை அசைக்க முயன்று தோற்றுப்போன அம்மா கடைசியாய் ஒரு கருணை மனுவை முன் வைத்தாள்.

“சரி, நீங்க ஒசரத்துலயே நில்லுங்க. ஆனா, பெத்த பெண்ணுக்கு ஒரே ஒரு உபகாரம் மட்டும் பண்ணுங்க. அந்த ஆட்டோவ அவங்க கொண்டு போகட்டும். அத வச்சு நாம என்ன பண்ணப் போறோம். அது அவங்களுக்குப் பெரிய புண்ணியமாயிருக்கும். மாப்பிள்ளக்கி ஆட்டோவ விட்டா வேற தொழில் தெரியாது. அத வச்சுத்தான் அவர் நம்ம பொண்ணக் காப்பாத்தணும். இதுக்காவது நீங்க சம்மதிச்சுத்தான் ஆகணும்.”

அப்பா கொஞ்சம் யோசித்தார். பிறகு ‘ம்ம்ம்’மென்று அரைகுறை சம்மதமாய்க் கனைத்து விட்டு மாடிப்படி ஏறினார்.

அது போதும் அம்மாவுக்கு. மகளைப் பேரைச் சொல்லிக் கூவிக் கொண்டே வாசலைத் தாண்டி ஓடினாள். கேட்டில் வெளியேறப் போனவர்களைத் தடுத்துக் கண்ணீரோடு மகளிடம் மூச்சிரைத்தாள்.

“சரோ, அப்பா சொன்னார், ஆட்டோவ நீங்க எடுத்துட்டுப் போவீங்களாம். மாப்ள கிட்ட சொல்லு. மாப்ள பேருக்கு ரிஜிஸ்ட்ரேஷன் மாத்திரச் சொல்றேன். ஆட்டோல போங்கம்மா.”

சரோ அவளுடையவனைப் பார்த்தாள். பரமசிவனுக்கு அது சரி என்றே பட்டது.

மூணு வருஷம் இவனுக்கு சாப்பாடு போட்ட அட்சயப் பாத்திரம்.

இவனுடைய ரெண்டாவது காதலி.

இந்த ஆட்டோ இல்லாமல் வேறு தொழில் என்ன செய்வது என்பது அறிவுக்கு எட்டாத சங்கதி. இந்த ஆட்டோதான் இவன் முன்னேற்றத்துக்குக் கை கொடுக்கப் போகிறது. அவன் சரோவை சம்மதமாய்ப் பார்த்தான். அவள் அம்மாவிடம் தீர்மானமாய்ச் சொன்னாள்.

“சரிம்மா, ஆட்டோவக் கொண்டு போறோம். ஆனா, கல்யாணப் பரிசாயில்லை. கடனாத்தான். இன்னும் ஒரு வருஷத்துல கடன அடச்சிருவோம். அதுக்கப்புறம் ரிஜிஸ்ட்ரேஷன் இவர் பேருக்கு மாத்தினாப் போதும். அப்பாக்கு தாங்ஸ் சொல்லிருங்கம்மா.”

சாயங்காலம் கோவிலுக்கு எப்படியாவது அம்மா வந்து பிரசன்னமாகிவிடுவாள் என்று சரோ ஆசையோடும் ஏக்கத்தோடும் எதிர்பார்த்தாள். ம்ஹூம், அம்மா வரவேயில்லை. வீட்டுக்காவல் பலமாய் இருக்கும் போல. கழுத்தில் தாலி ஏறியபோது நெஞ்சத்தில் நிறைவோடு கொஞ்சம் கனமும் இருந்தது.

இன்றைய திருப்பங்களையும், சில்லறை அவமானங்களையும், ஏமாற்றங்களையும், முதலிரவின் புனிதமான நெருக்கத்தில் ரெண்டு பேரும் மறந்திருந்தார்கள்.

பொழுது புதிதாய் விடிந்தது.

உப்புமா கிளறுவது எப்படி என்று தன் புதுப் பெண்டாட்டிக்கு சொல்லித் தந்தான் பரமசிவன். கடுகு, கறிவேப்பிலை, ரவை இத்யாதியோடு சிரிப்பையும் அந்நியோன்யத்தையும் ஒன்றாய்ப் போட்டு ரெண்டு பேரும் கிளறிக் கொண்டிருந்தார்கள். பிறகு, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட போது, தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டிய வேறு முக்கியமான விஷயங்களைப் பற்றியும் யோசித்துக் கொண்டார்கள்.

“ஒரு வருஷத்துல நாம இந்த ஆட்டோக் கடன அடைக்கணும் ப்ரேம். அம்மாட்ட நா சவுடாலாச் சொல்லிட்டேன். அதச் செயல்படுத்துறது ஒங்க கையிலதான் இருக்கு.”

“கவலையை விடு சரோ. இனி ஓயாம உழைப்புதான். ஒரு வருஷம் மூச்சைப் புடிச்சிக்கிட்டு வண்டிய ஓட்டணும். மொதல்ல, பிரசவத்துக்கு இலவசம்னு எழுதியிருக்கறத அழிக்கணும்.”

“ஐயைய, இதென்ன ஆரம்பமே பிசிறடிக்குதே!”

“என்ன பிசிறடிக்குதுண்ற? நாம தர்மத்துக்கு ஆட்டோ ஓட்டிக்கிட்டிருந்தா என்னிக்கி சம்பாரிக்கிறது, என்னிக்கி கடன அடைக்கிறது?”

“ப்ரேம், நீங்க மத்தவங்களுக்கு முன்னுதாரணமாயிருக்கணும்னு நா கனவு கண்டுட்டிருக்கேன். நீங்க சொல்றது என்னன்னா மொதலுக்கே மோசமாயிருக்கே! நம்ம கஷ்டம் தீர்றதுக்கும், லட்சியம் நிறைவேர்றதுக்கும் பணம் மட்டும் போதாது ப்ரேம், நல்லவங்களோட சந்தோஷங்களும், வாழ்த்துகளும் கூட வேணும். மூணு மாசத்துக்கு முந்தி நடந்த ஒரு சம்பவத்த நீங்க எங்கிட்ட சொன்னீங்க ஞாபகம் இருக்கா?”

“என்ன சொன்னேன்.?”

“பந்த் அன்னிக்கி ஒரு பிரசவக் கேஸை வண்டியில ஏத்திக்கிட்டுப் போறப்ப, நடு வழியில் பெட்ரோல் தீந்து போச்சு. என்ன செய்யறதுன்னு தெரியாம நீங்க நடு ரோட்ல தவிச்சுட்டிருக்கீங்க. அப்ப ஸ்கூட்டர்ல வந்த ஒரு புண்ணியவான், தன்னோட ஸ்கூட்டர்லயிருந்து பெட்ரோல் எடுத்துக் குடுத்தார். அதுக்குக் காசு கூட வாங்கிக்க மாட்டேன்ட்டார்னு சொன்னீங்க. அப்புறம் ஒரு நாள் நடு ராத்திரியில அதே ஸ்கூட்டர் ஆள் டயர் பங்ஞ்சராகி, வீல் மாத்தறதுக்கு ஸ்பானர் இல்லாம முழிச்சிட்டிருந்தப்ப அந்த வழியா வந்த நீங்க அவருக்கு ஸ்டெப்னி மாத்திக் குடுத்ததா சொன்னீங்க. இதெல்லாம் தெய்வாதீனமா நடக்கிற நிகழ்ச்சிகள் ப்ரேம். கஷ்டத்துல இருக்கறவங்களுக்கு நல்ல

மனசோட நாம் உதவி செய்யறதுல நமக்கு நஷ்டமே கிடையாது. 'பிரசவத்துக்கு இலவசம்'ங்கிற வாக்கியத்துல இருக்கற ஒவ்வொரு எழுத்தும் ஒங்களுக்கு ஒவ்வொரு கேடயம், அந்தப் பாதுகாப்பை நீங்க இழந்துடக் கூடாது. சரி வேறென்ன ப்ளான், சொல்லுங்க."

"அதிக வருமானத்துக்கு ஒரு ஈஸியான வழி இருக்கு சரோ. தனி ஆள் வண்டில ஏறினா, வழியில இருக்கற பஸ் ஸ்டாப்ல ஸ்லோ பண்ணி அதே ரூட்ல போற ஒண்ணு ரெண்டு பேர கொறஞ்ச ரேட்டுக்கு ஏத்திக்கணும், சிங்கப்பூர்ல இந்த மாதிரி செய்வாங்கன்னு நீதானே சொல்லியிருக்க?"

"சிங்கப்பூர் ஸிஸ்டம் வேறங்க. ட்ராஃபிக் நெரிசலக் கட்டுப்படுத்தறதுக்கும், பெட்ரோல் மிச்சப்படுத்தறதுக்கும், ஒரு சில முக்கியமான ரோட்கள்ல கவர்ன்மென்ட்டே இந்த முறைய அமுல்ப்படுத்துது. ப்ரைவேட் கார்ல கூட நாலு பேருக்குக் கம்மியா போகக்கூடாதுன்னு ரூல்ஸ் இருக்கு. ஆள் பற்றாக்குறைக்காக வழியில ஏத்திட்டுப் போறவங்கட்ட அவங்க காசு வாங்கிறதில்ல. நீங்க சொல்ற மாதிரி செய்யறது குறுக்கு வழிச் சம்பாத்யம். டிரைவரோட பணத்தாசையினால, காசு குடுத்து ஆட்டோல ஏர்ற பாசஞ்சருக்கு வசதிக் குறைவும் நேர விரயமும் ஏற்படுது. சிலர் நேரடியாத் திட்டுவாங்க. சிலர் மனசுக்குள்ள கரிச்சிக் கொட்டுவாங்க. நியாயம்தானே? என்னக் கேட்டா, பாஸஞ்சர உள்ள ஒக்காத்தி வச்சிட்டு பெட்ரோல் பங்க்குல போய் நிக்கிறது கூடத் தப்பும்பேன்."

"அதுவும் கூடாதா, சரி. மீட்டருக்கு மேல காசு வாங்கறது கூட தம்பும்பியே?"

"பின்னே? மீட்டருக்கு மேல காசு வாங்கறத யாராவது ஞாயம்பாங்களா? அது ரொம்பத் தப்பு."

"மீட்டருக்கு மேலே அஞ்சோ பத்தோ எல்லாரும் வாங்கறதுதானே சரோ?"

"நியாயமான கூலிக்கு மேலே அடிச்சுப் புடுங்கறது எல்லாமே கொள்ளைதான் ப்ரேம், என்னப் பொறுத்தவரைக்கும் நீங்க ஒரு வித்தியாசமான மனிதர். அதை மத்தவங்களும் உணரணும்னு நா ஆசைப்படறேன் ப்ரேம். நேர்மையான முன்னேற்றத்துக்கு உழைப்பு மட்டும் போறாது ப்ரேம். நேர்மையான நாணயமான உழைப்பு வேணும். ஒரு வருஷத்துல இந்தக் கடன அடைக்கிறது பெரிய விஷயமில்ல. ஆனா அதுக்கு மேலயும் நமக்கு வாழ்க்கை இருக்கு. அதுக்கு நேர்மையையும் நாணயத்தையும் கொண்டு அஸ்திவாரம் போடுங்க. அதுக்கு மேலே ஒங்க உழைப்பைக் கொண்டு கட்டிடம் எழுப்புங்க. சரி இப்ப எழும்புங்க, கிளம்புங்க நேரமாச்சு."

மனைவியின் நீதிபோதனைகள் தனக்குள் மனமாற்றத்தை விளைவித்துக் கொண்டிருப்பதைப் பரமசிவன் உணர்ந்தான். ஆட்டோவில் ஆட்களை ஏற்றிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். இன்றிலிருந்து லட்சியங்களையும் ஏற்றிக் கொண்டு போகவிருப்பது புரிந்தது.

இன்னும் சில மாதங்களில் தனக்கே தனக்கென்று ஆகிவிடப் போகிற தன்னுடைய செல்ல ஆட்டோவைக் கழுவிச் சுத்தம் செய்தான். சரோ வாசலுக்கு வந்தாள் குங்குமத் தட்டோடு. நெற்றியில் திலகமிட்டாள், அவனுக்கும் அவனுடைய ஆட்டோவுக்கும்.

-மங்கை, அக்டோபர் 1997

(பயணம்)

# பரிணாம வளர்ச்சி

கடந்த ஒரு மாசமாகவே காலையில் கண் விழிக்கிறபோது, 'இன்றைய பொழுது ஏன்தான் விடிந்ததோ, இன்றைக்கு யார் யார் வாயில் புகுந்து புறப்படப் போகிறோமோ?' என்று வெறுப்பாயிருக்கிறது குணசீலனுக்கு. இன்னைக்கும் அப்படித்தான் விடிந்தது. ஆனால் அடையாறிலிருந்து வந்த ஃபோன் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தது. மகாதேவன் வந்து விட்டான். அவனை உடனே போய்ப் பார்த்துத் தன்னுடைய மனக் குமுறலையெல்லாம் கொட்டித்தீர்க்க வேண்டுமென்று கிளம்பினார்.

'நாலுநாள் தாடியை மழித்துவிட்டுக் குளிக்கலாமா?' என்று யோசித்தார். வேண்டாம். அதற்குக் கூடுதலாயொரு பத்து நிமிஷம் ஆகும். மகாதேவனைப் பார்க்கத் தாமதப்படுத்தக் கூடாது. அவன் எங்கேயாவது கிளம்பிவிட்டால் அடையார் வரைக்கும் போனது வீணாய்ப் போய்விடும். மனப்பாரத்தை இறக்கி வைக்க இன்றைக்கு முடியாமலும் போகும்.

நல்ல வேளை பாத்ரூம் காலியாயிருந்தது. உள்ளே புகுந்து ஷவரில் உடம்பை நனைத்துக் கொண்டு உடை மாற்றிக் கொண்டார். "காலங்காத்தால ஐயா எங்க கௌம்பிட்டாரு?!" என்று முதுகுக்குப் பின்னால் கிசுகிசுக்கப்படும் என்று தெரியும். டோன்ட் கேர். தான் வருகிறதை மகாதேவனுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிவிடலாமா? நோ. இந்த ஃபோனை உபயோகிப்பதில்லை என்கிற வைராக்கியம் என்னாவது! வழியில் ஏதாவது பப்ளிக் பூத்தில் பண்ணிக் கொள்ளலாம். சரி, அதைப் பற்றி அப்புறம் யோசி. முதலில் இங்கே கிசுகிசுப்புகள் ஒலி வடிவம் பெறுமுன் வீட்டை விட்டு வெளியேறு.

"என்னங்க, காலைலயே எங்க கௌம்பிட்டீங்க. டிஃபன் சாப்பிடல?"

"உன் டிஃபனை நீயே சாப்பிடு."

மூஞ்சியிலடித்த மாதிரி மனைவியிடம் சொல்லிவிட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு வெளியேறினார். அந்த முகத்திலடிக்கிற பதிலில் திருப்திப்பட்டுக் கொண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

'நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ஆட்டோவில் போய் விடலாமா?' என்று யோசித்து, பர்ஸைத் திறந்து சோதித்துப் பார்த்த போது பதிமூணு ரூபாய் அறுபது பைசாதான் தேறியது. 'மகாதேவன் எங்கேயும் போய்விடாமல் வீட்டில் இருந்து தொலைக்க வேண்டுமே!' என்று வேண்டிக் கொண்டு நாப்பத்தேழாம் நம்பரில் ஏறினார்.

'குழந்தைகளினதும் வயோதிகர்களினதும் வேண்டுதல்களை ஆண்டவன் நிராகரிப்பதில்லை" என்று மகாதேவன் சொல்லியிருக்கிறான். தான் வயோதிகன் என்பதில் குணசீலனுக்கு உடன்பாடு இல்லையென்றாலும், ரிட்டயர்டு ஆசாமி என்கிற லூப் ஹோலில் புகுந்து வேண்டுதலை முன் வைத்தார் என்று கொள்ளப்பட்டது. மகாதேவன் வீட்டில்தான் இருந்தார்.

குணசீலனைப் பார்த்ததும் மகாதேவனுக்கு ஏக ஆச்சர்யம்.

“என்னா குணா, காலைல ஃபோன் பண்ணப்ப நீ வர்றேன்னு சொல்லவேயில்லியே! நல்ல வேளை ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டா வந்திருந்தா என்ன மிஸ் பண்ணியிருப்ப; நா டாக்டர் வீட்டுக்குப் போயிட்டுருப்பேன். பையன் ஆட்டோ பிடிக்கப் போயிருக்கான். நளினி, இங்க யார் வந்திருக்கான்னு பாரு!”

கிச்சனில் வேலையாயிருந்த நளினி மாவுக் கையோடு ஹாலுக்கு வந்து, குணசீலனைப் பார்த்ததும் சிரித்தபடி விரல்கள் ஒட்டாமல் நாசூக்காய் கரம் குவித்து நமஸ்காரம் செய்தாள்.

“ஆறு மணிக்குத்தான் நாங்க வந்து இறங்கினோம். எட்டு மணிக்கி நீங்க வந்து நின்னுட்டீங்க! உங்க ஃப்ரெண்டப் பாக்காம ரெண்டு மாசம் எப்படி இருந்தீங்க? பூரி செய்யறேன், டிஃபன் பண்ணிட்டுப் போங்க.”

குணசீலனுக்கு உண்மையிலேயே அகோரப் பசி. டிஃபன் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி வீட்டில் சுலோசனா சொன்னபோது, “நீயே சாப்பிடு” என்று வீராப்பாய் மறுத்துவிட்டு வந்து விட்டாரேயொழிய, பசி குடலைக் குடைந்து கொண்டிருந்தது. ‘இங்கே பூரி! இப்படியொரு குருட்டு அதிர்ஷ்டமா! தொட்டுக் கொள்ளக் கிழங்கோ இல்ல வெறும் சாம்பார்தானோ. எதானாலும் ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான். மகாதேவன் மனைவி சமையல் கலையில் கில்லாடி.

நளனுக்குப் பெண்பால் நளினியோ?’

குணசீலனின் சாப்பாட்டுச் சிந்தனைகளை மகாதேவனின் குரல் கலைத்தது.

“என்னப்பா குணா ஒண்ணும் பேச மாட்டேங்கறியே, விஷயத்தச் சொல்லு. காலங்காத்தால அண்ணா நகர்லயிருந்து அடையார் வரைக்கும் வந்திருக்கேன்னா விஷயம் இல்லாமயிருக்காது, சொல்லு.”

“மகாதேவா, நீ ரிட்டயர் ஆகி எத்தனை நாள் ஆச்சு?”

“ரெண்டு வருஷம் ஆச்சு. ஏன்?”

“ரெண்டு வருஷமா நீ எப்படிப்பா உயிரோட இருக்க? ஒரு மாசம் காலந்தள்ளறதே பெரும்பாடா இருக்கே!”

“அட, சொன்னாப்பல நீ ரிட்டயர் ஆயிட்டேயில்ல? கங்ராட்ஸ்!”

“மண்ணாங்கட்டி கங்ராட்ஸ். நா ஒவ்வொரு நாளும் அவமானத்துல செத்துக்கிட்டிருக்கேன். இதுல கங்ராட்ஸ் என்ன வாழுது.”

“என்னப்பா இது, ஜஸ்ட் மாரீட் மாதிரி ஜஸ்ட் ரிட்டயர்டு நீ. ஹாயா லைஃபை எஞ்ஜாய் பண்ணறதை விட்டுட்டு இப்படி சலிச்சிக்கிறியே!”

“ஆமா, எஞ்ஜாய் பண்ணிக் கிழிச்சாச்சு. மகாதேவா ஒன்னோட கொஞ்சம் மனசு விட்டுப் பேசணும்னுதான் வந்திருக்கேன்.”

“தாராளமாப் பேசலாமே! வா, என்னோட ரூமுக்கு போயிருவோம். டிஸ்டர்பன்ஸ் இல்லாம இருக்கும்.”

ஸோஃபாவிலிருந்து எழுந்து மகாதேவன் திரும்பவும் மனைவிக்குக் குரல் கொடுத்தார்.

“நளினி, நாங்க ரூம்க்குள்ள இருக்கோம். இந்தப் பய ஆட்டோ கூப்ட்டு வருவான். வந்தா, ஒரு ரூபா குடுத்துத் திருப்பியனுப்பிரு. டாக்டர்ட்ட சாயங்காலந்தான் போகணும்.”

“டாக்டர்ட்ட எதுக்கு மகாதேவா, ஒடம்புக்கு என்ன?”

“சொல்றேன், உள்ள வா. குணா, பென்ஷனர்ஸ் ஹெல்த் ஃபார்முலான்னு நா ஒண்ணு ஆராய்ச்சி பண்ணிக் கண்டுபிடிச்சிருக்கேன் தெரியுமோ? அதாவது, டாட்டர்ஸ்ஸோட கண்காணிப்புல இருந்தா டாக்டர்ஸ்ட்ட போகத் தேவையில்ல. ரெண்டு மாசம் ரெண்டு பொண்ணுங்க வீட்லயும் போய்த் தங்கிட்டு வந்தேனா, ஒடம்புக்கு ஒண்ணுமே வரல. இன்னிக்கிக் காத்தால மெட்ராஸ்க்கு வந்து இறங்கினதுமே கை வலி, கால் வலி, முதுகு வலி எல்லா வலியும் ஆஜர்.”

“ம், நீ குடுத்து வச்சவன். டாக்டர்ட்ட போக வேண்டாத அளவுக்கு அக்கறையாய் பாத்துக்கற டாட்டர்ஸைப் பெத்து வச்சிருக்க. நானும் ஒண்ணு பெத்து வச்சிருக்கேனே, பிசாசு!”

“அடப்பாவி, கொழந்தைய ஏம்ப்பா இப்படிக் கரிச்சிக் கொட்ற?”

“கொழந்தையா அது? உஷா மட்டுமில்ல மகாதேவா, என் பொண்டாட்டி, மூத்தவன், சின்னவன், மருமக எல்லாரும் சேந்து எனக்கெதிராக் கூட்டுச் சதி பண்றாங்கப்பா.”

“ஓஹோ, அது ஒண்ணுமில்ல குணா, நா நெனக்கிறேன், உனக்கு பென்ஷனர்ஸ் காம்ப்ளக்ஸ் வந்திருக்கு. புதுசா ரிட்டயர் ஆறவுங்கள்ள பத்துல ஒருத்தருக்கு இந்த வியாதி வரும்.”

“எனக்கு ஒரு காம்ப்ளக்ஸுமில்ல. ஒன்னோட வெட்டி ஆராய்ச்சிய விட்டுட்டு விஷயத்தக் கேளு.”

“சொல்லு.”

குணசீலன் விவரமாய்ச் சொல்ல ஆரம்பித்தார்.

ரிட்டயர்டு ஆகி, வீட்டில் உட்கார்ந்த மூணாவது நாளே அவர் முதல் அவமானத்தை சந்திக்க நேர்ந்துவிட்டது.

வழக்கம் போல ஏழரை மணிக்கு டிஃபன் சாப்பிட டைனிங் டேபிளில் உட்கார்ந்தார். இவருக்குப் பிறகு வந்து உட்கார்ந்த ரமேஷ்க்கும், உஷாவுக்கும் தட்டில் சுடச்சுடத் தோசைகள் வந்து விழுந்த வண்ணமிருந்தன. அவர்கள் அரக்கப் பரக்கத் தின்று கொண்டிருந்தார்கள். இவர் காலித் தட்டை வைத்துக் கொண்டு உட்கார்ந்தே இருக்கிறார்.

பிறகு பொறுமையிழந்து மனைவியை முறைக்கிறார். 'என்ன நெனச்சுட்டிருக்க மனசுல?' என்கிற மாதிரி.

"கோவிச்சுக்காதீங்க, அவன் ஆஃபீஸ்க்குப் போறான். அவ காலேஜுக்குப் போறா. சீக்கிரம் தின்னுட்டுப் போயிரட்டும். நீங்க வீட்லதானே இருக்கீங்க. சாவகாசமா சாப்புடலாமில்ல?"

இந்த மாதிரி உதாசீன வார்த்தைகளைத் தன் மனைவி வாயில் கேட்டறியாத குணசீலனுக்கு, தான் இப்படி ஓரங்கட்டப்பட்டது பெரிய அவமானமாய்ப் போனது. ப்ளேட்டை ணங்ங்கென்று மேஜைமேல் மோதிக் கவிழ்த்து வைத்துவிட்டுத் தன்னுடைய அறையில் போய்ப் படுத்துக் கொண்டார். அப்புறம் சுலோசனா எவ்வளவோ வற்புறுத்தியும் கெஞ்சியும் பார்த்தாலும் அவர் டிஃபனுக்கு எழுந்திரிக்கவே இல்லை.

ரிட்டயர் ஆன பிறகு அரசாங்க டெலிஃபோனை டிஸ்கனெக்ட் பண்ணிவிட்டார்கள். மூத்தவன் சிவராமனுடைய கம்பெனி டெலிஃபோன் மட்டும் இருந்தது. பொழுது போகாத சமயங்களில் குணசீலன் இவருடைய பழைய நண்பர்களோடு பேசிக் கொண்டிருப்பது உண்டு. அன்றைக்கு சாயங்காலம் சிவராமன் ஆஃபீஸிலிருந்து வந்து தன் மனைவியிடம் கத்திக் கொண்டிருந்தது இவர் காதில் விழுந்தது.

"ஏன் விநோ, காலைல பதினொரு மணிக்கி ஃபோன் பண்றேன் பண்றேன் எங்கேஜ்டாவே இருக்கு. ஏதோ, பேசினோம் வச்சோம்னு இல்லாம இப்படியா மணிக்கணக்கா ஃபோன்ல பேசிட்டுருப்ப? அப்படி யார் கூடப் பேசிட்டிருந்த?"

"நா இல்லீங்க, மாமாதான். ரொம்ப நேரமா யார்ட்டயோ பேசிட்டிருந்தாங்க. டெய்லி பேசறதுதானே?"

"என்னத்த டெய்லி பேசறது, எடுத்த ரிஸீவரக் கீழ வைக்காம இப்படியா பேசுவாங்க? ஒரு ஆத்திர அவசரத்துக்கு யாரும் வீட்டுக்கு ஃபோன் பண்ண முடியாது போல இருக்கு. ஆஃபீஸ்ல ஒரு ஃபைலக் காணல. முந்தா நாள் வீட்டுக்கு எடுத்துட்டு வந்த ஃபைல்கள்ள இது திரும்ப எடுத்துட்டுப் போக மிஸ் ஆயிருச்சான்னு ஒங்கிட்ட சொல்லித் தேடிப் பாக்கச் சொல்லலாம்னா, ஃபோனே கெடைக்கல. கம்பெனி ஃபோன் இது; ஆஃபீஸ்ல என்ன நெனைப்பாங்க?"

"ஏன் என்ட்ட சொல்றீங்க! எல்லாத்தையும் ஒங்கப்பாட்ட சொல்லுங்க."

அப்போதே குணசீலன் முடிவெடுத்துவிட்டார், அந்த ஃபோனை இனித் தொடுவதில்லை என்று; இவருக்கு இன்கமிங் கால்ஸ் ஏதாவது வந்தால் கூட ஆமா இல்லை என்று ஒரு சில வார்த்தைகளிலேயே முடித்து விடுவது என்று.

மூணாவது தாக்குதல் இளையவன் ரமேஷிடமிருந்து, நியூஸ் பேப்பர் ரூபத்தில். குணசீலனுக்குக் காலையில் காஃபி குடிக்கிற போது கையில் நியூஸ் பேப்பர் வேண்டும். சர்க்கரை இல்லாத டயாபடீஸ் காஃபி அது. செய்தித்தாளை மேய்ந்து கொண்டே அந்தக் காஃபியை உறிஞ்சினால் சர்க்கரையில்லாத குறை தெரியாது.

ஆனால், இப்போது கொஞ்ச நாட்களாய்க் காஃபி கசக்கிறது. தொட்டுக் கொள்ள நியூஸ் பேப்பர் இல்லை. இவர் காஃபி குடிக்கிற நேரத்தில் ரமேஷ் பாத்ரூம்க்குள் போய்விடுகிறான், கையில் பேப்பருடன்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து குணசீலன் சீறியே விட்டார் சின்னவனிடம், "ஏண்டா அறிவிருக்கா ஒனக்கு? காஃபி குடிக்கும் போது நா பேப்பர் படிப்பேன்னு தெரியாது? பெரிய இவனாட்டம் பேப்பரக் கையில எடுத்துக்கிட்டு உள்ள போய் ஒக்காந்துக்கறியே, யோசிக்க வேணாம்?"

ரமேஷ் தன் தாயிடம் போய்ப் புலம்பினான். "பாருங்கம்மா, காலங்காத்தால திட்டி மூட் அவுட் ஆக்கறாரு அப்பா. நா ஜர்னலிஸ்ட். காலைல பேப்பர் பாக்க வேண்டியது முக்கியம். பாத்ரூம் போக வேண்டியதும் முக்கியம். ரெண்டையும் கம்பைன் பண்ணிக்கிறேன். எவ்வளவு டைம் ஸேவ் ஆகுது! ஒரே கல்ல ரெண்டு மாங்கா அடிக்கிறது தப்பா? அதுக்கு அப்பா இப்படிப் பொலம்பறாரு. இருக்கிறது ஒரு பேப்பர். ஒவ்வொருத்தராத்தானே படிக்கணும்!"

அம்மாவிடம் அவன் முறையிட்டது இவர் காதில் விழுந்து தொலைக்க, அங்கேயொரு மினி வாக்குவாதம்.

"இருக்கிறது ஒரே பேப்பர்னு சலிச்சிக்கிற? ஒரு வீட்ல ஒரு பேப்பர் இல்லாம ஒம்பது பேப்பரா இருக்கும்?"

"ஒங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். போன மாசம் வரைக்கும் நம்ம வீட்டுக்கு ரெண்டு பேப்பர் வந்துக்கிட்டிருந்தது."

"ரெண்டு பேப்பரா?"

"ஆமா, நீங்க காஃபியை உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிற வரைக்கும் பேப்பர்ல ஒரு எழுத்து விடாமப் படிச்சிட்டுருப்பீங்க. அதுவரைக்கும் நா பாத்ரூம் போக வேண்டாமா? அதனால ரெண்டு பேப்பர் வாங்கிட்டிருந்தோம். உங்களுக்கொண்ணு, எனக்கொண்ணு. இப்ப நீங்க ரிட்டயர் ஆனதுக்கப்புறம் ஒரு பேப்பரை நிறுத்திட்டோம்."

"எந்தப் பேப்பரையப்பா நிறுத்தின? உன் பேப்பரையா, என் பேப்பரையா?"

ரமேஷ் இந்த அடாவடிக் கேள்வியை எதிர்பார்க்கவில்லையாதலால் கொஞ்சம் தடுமாறினான். பிறகு சமாளித்துக் கொண்டு முணுமுணுத்தான்.

"...ஏதோ ஒண்ணை நிறுத்தினேன். அதுக்கு என்ன இப்ப... நா ஆஃபீஸ் போனப்புறம் நீங்கதான் நாள் முழுக்க உக்காந்து பேப்பர் படிக்கலாமே..."

அன்றிலிருந்து குணசீலன் பேப்பர் வாசிக்கிறதை நிறுத்திவிட்டார்.

இந்தக் கதைகளைக் கேட்டுவிட்டு மகாதேவன் தனக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

“அப்புறம், உஷாவை என்னவோ பிசாசுன்னு கரிச்சுக் கொட்னியே அது என்ன கதை?”

“அந்த அநியாயத்தக் கேளு. ரெண்டு பாத்ரூம்ல ஒண்ணு ரிப்பேர். வீட்ல இப்ப இருக்கிறது ஒரே பாத்ரூம். ஆஃபீஸ் போறவங்க, காலேஜுக்குப் போற இவ, எல்லாரும் பாத்ரூமை யூஸ் பண்ணி முடிச்சு கிளம்பிப் போனதுக்குப் பின்னாலதான் நான் உள்ளே நுழையணுமாம். நீ வீட்டோடதானே இருக்கே, உனக்கென்ன அவசரம்னு ஒரு இளக்காரம் மகாதேவா. வீட்டோட இருக்கறவன்னா அவனுக்குக் காலையில பாத்ரூம் வராதா? காலையில குளிக்கக் கூடாதா? அதுக்கு அவ, நேத்து மொளச்சவ சொல்றா, ‘அப்பாவ யாரு ஆறு மணிக்கே எந்திரிச்சி ஒக்காந்துக்கச் சொன்னா, வீட்லதானே இருக்கப் போறாரு. நல்லா படுத்துத் தூங்கிட்டு சாவகாசமா எட்டு எட்டரக்கி எந்திரிக்கலாமில்ல?’ன்னு என் காதுபடவே சொல்றாப்பான்னா. நா எந்திரிக்காம ஒரேடியாப் படுத்துட்டேன்னா இதுகளுக்கெல்லாம் கொண்டாட்டமாயிருக்கும் போல. இதுகள் எல்லாம் சேந்து என்னைக் கேவலப்படுத்துதுகள். ரிட்டயர்டு பெர்ஸன்னா அவ்வளவு கேவலமா மகாதேவா? ஒரு மாசத்திலேயே இந்தப் பாடுன்னா, மிச்ச லைஃபை இப்படியே ஓட்ட எனக்கு பயம்மா இருக்கு மகாதேவா. அதனால நா ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.”

“பாவி, அசட்டுத்தனமா ஏதாவது விபரீதமாப் பண்ணிராதே.”

“தற்கொல கிற்கொலை செஞ்சுக்குவேன்னு பயப்படறியா? சீ, அதெல்லாம் செய்ய மாட்டேன். இன்னும் ஒரு மாசம் டைம் குடுப்பேன். அதுக்குள்ளே இந்த ஜென்மங்கள் திருந்தலைன்னா, யார்ட்டயும் சொல்லிக்காம அப்படியே இமயமலைப்பக்கம் போயிரலாம்னு இருக்கேன்.”

“அதான் என்ட்ட சொல்லிட்டியே, நீ திடீர்னு காணாப்போனா நேரா இமயமலக்கி வந்திர்றேன்.”

“கிண்டல் பண்ணாதப்பா, நா ஸீரியஸ்ஸா இருக்கேன். அப்புறம் இன்னொரு விஷயம். நம்ம பென்ஷன், பாங்க்ல க்ரெடிட் ஆகுதே, அதுக்கு வருஷா வருஷம் லைஃப் ஸர்ட்டிபிகேட்ன்னு ஒண்ணு குடுக்கணுமாமே?”

“ஆமா, நாம உயிரோடத்தான் இருக்கோம்ங்கறதுக்கு ஒரு ஸர்ட்டிஃபிகேட் வருஷத்துக்கு ஒரு தரம் குடுக்கணும். ஸர்ட்டிஃபிகேட் தரலைன்னா அந்த ஆள் அவுட்ன்னு முடிவு பண்ணிப் பென்ஷனை நிறுத்திருவாங்க.”

“நா லைஃப் ஸர்ட்டிஃபிகேட் குடுக்கறதில்லன்னு முடிவு பண்ணிட்டேன்.”

“ஐயையோ, ஏம்ப்பா?”

“அதான் சொன்னேனே இமயமலக்கிப் போகப் போறேன்னு. நா திரும்பி வரப்போறதுமில்ல, பென்ஷனை ட்ரா பண்ணப் போறதுமில்ல. நா எங்கேயாவது செத்துப் போய், என் பாடி இவங்க கைக்குக் கெடச்சா, என்னோட காரியத்துக்கு வச்சிக்கோங்கடான்னு ஒரு பிளாங்க் செக் மட்டும் எங்கேயிருந்தாவது அனுப்பிச்சிருவேன்.”

“ரொம்ப அப்செட் ஆயிருக்க குணா. அநாவசியமா மனசைப் போட்டுக் குழப்பிக்காத. எல்லாம் போகப் போக சரியாப் போகும்.”

“போகப் போகப் பழகிப் போகுங்கற. நெவர். நா காம்ப்ரமைஸ் பண்ணிக்கிற ஆள் இல்ல. எனக்கு சேர வேண்டிய மரியாதைய எனக்குக் குடுத்தாதான் இவங்களோட உறவு. இந்த லட்சணத்துல மூத்தவனோட குழந்தைங்க வேற ஸ்கூல் விட்டு லீவ்ல வருது.”

“யார், ட்வின்ஸா?”

“ஆமா, சிவராமன். பந்தாவா அந்த ட்வின்ஸை லாரன்ஸ் ஸ்கூல்ல போட்டிருக்கான்ல? அவன் சம்பளத்துல பாதிய லவ்டேலுக்குத்தான் அனுப்பிச்சிட்டிருக்கான். அந்தக் குழந்தைங்க வேற வந்து என்னை என்ன ஹிம்சை பண்ணப் போகுதோ!”

மனசிலிருந்த பாரத்தையெல்லாம் சிநேகிதன் முன் இறக்கி வைத்துவிட்டதில், பெருமளவு எடை குறைந்து விட்ட மாதிரி இருந்தது. அந்த எடைக்குறைவை ஈடு செய்கிற மாதிரி ஒரு எட்டு பூரிகளை உள்ளே தள்ளினார். தொட்டுக் கொள்ள, ஆஹா, கிழங்கு!

மறுநாள் காலை, எட்டு மணியான பின்னாலும் குணசீலன் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. முழிப்புத் தட்டிவிட்டாலும், ‘எழுந்து என்ன கிழிக்கப் போகிறோம்?’ என்று கட்டிலிலேயே கிடந்தார். அறைக்கு வெளியே குழந்தைகளின் குதூகலம் கேட்டது.

சஞ்சயும், கீதாவும் வந்து விட்டார்கள்.

“தாத்தா எங்க மம்மி?” என்று கீதா கேட்க, அவளுடைய தாய் ஜாடையாய் இவருடைய அறையைக் காட்டுவதை இவரால் ஊகிக்க முடிந்தது. அடுத்த விநாடி குழந்தைகள் ரெண்டு பேரும் இவருடைய கட்டிலில்.

“தாத்தா எந்திரிங்க, டைம் எய்ட் தேட்டி ஆயிடுச்சு, ஆஃபிஸ்க்குப் போக வேண்டாமா?”

“தாத்தாவுக்கு ஆஃபிஸ் இல்ல கீதா, தாத்தா ரிட்டயர்டு ஆயிட்டார்னு டாடி சொன்னாங்க.”

“ரிட்டயர்டுன்னா?”

“நமக்கு ஸ்கூல்ல வெகேஷன் விட்ட மாதிரி தாத்தாவுக்கு ஆஃபிஸ்ல வெகேஷன்.”

“ஹை ஜாலியில்ல?”

ரெண்டு குழந்தைகளும் இவருடைய ரெண்டு கைகளைப் பிடித்து இழுத்து தூக்கி “எந்திரிங்க தாத்தா” என்று கட்டிலில் உட்கார வைத்தன.

“ஏன் தாத்தா நீங்க எங்களை ரிஸீவ் பண்ண ஸ்டேஷனுக்கு வரல? நா உங்க கூட டு.”

“தாத்தாக்கு உடம்பு சரியில்ல கீதா, ஷேவ் பண்ணிக்கவே இல்ல பாரு!”

“நிஜம்மாவா தாத்தா? ஃபீவரா, அதான் தாடி வளக்கறீங்களா? தாத்தா, தாத்தா, நா பெரியவளாகி டாக்டராகப் போறேன் தாத்தா. அப்ப ஒங்களுக்கு ஃபீவர் வந்தா நாந்தான் இஞ்ஜக்ஷன் போடுவேன், என்ன?”

“சஞ்சய், கீதா, வாங்க டிஃபன் சாப்பிட. தாத்தாவை விடுங்க, அவர் குளிச்சிட்டு வரட்டும்.”

“வேண்டாம். நாங்க தாத்தா கூட சேந்துதான் சாப்பிடுவோம். தாத்தா, தாத்தா, நீங்க சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க தாத்தா, பசிக்குது.”

குணசீலன் பாத்ரூமுக்குள் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டு, கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார். ‘இன்றைக்கு நாள் என்னமோ வித்யாசமாய் விடிந்திருக்கிற மாதிரி இருக்கிறதே’ என்று அஞ்சு நாள் ஷேவ் செய்யப்படாத தாடையைத் தடவிப் பார்த்துக் கொண்டார்.

‘எனக்கு ஃபீவரா?

நோ. ஐ ஆம் ஸோ ஹெல்தி’.

ஷேவ் செய்து கொண்டு குளித்தார்.

ஷவரின் குளிர்ச்சி உடம்புக்கும் மனசுக்கும் இதமாய் இருந்தது.

பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த போது, வெளியே சுலோசனா, கையில் காய்கறி வாங்குகிற பாஸ்கெட்டோடு.

“என்னங்க, கொஞ்சம் மார்க்கெட்டுக்குப் போய்ட்டு வந்திர்றீங்களா, காய்கறி வண்டிக்காரன் இன்னிக்கி வரலை. குழந்தைங்களுக்கு மத்யானம் வெஜிட்டபிள் பிரியாணி வேணுமாம், ஒரு அரக்கிலோ காரட், ஒரு காலிஃப்ளவர், பீன்ஸ், பச்சை மிளகா...”

லிஸ்ட்டை முடிக்குமுன்பே, இவர் முறைத்த முறைப்பில் அவள் ஆஃப் ஆகி விட்டாள்.

‘...சே... மூட் கொஞ்சம் ரிப்பேராகிக் கொண்டு வரும்போது வந்து கெடுத்து விட்டாளே... மார்க்கெட்டுக்குப் போய்வர வேண்டிய எடுபிடியா நான்? நேற்று வரை என் ப்யூன் போய் வந்து கொண்டிருந்தான். ப்யூன் செய்த வேலைய நான் இப்போது செய்ய வேண்டுமாம். வீட்டில் ரெண்டு தடிப்பசங்க இருக்கிறார்களே. அவர்களில் எவனையாவது அனுப்பியிருக்க வேண்டியதுதானே? ஆஃபீசுக்கு ஒரு அரை மணி லேட்டாய்ப் போனால் என்ன குடியா முழுகி விடும்...?’

அவர் மனைவியை மனசுக்குள் சபித்துக் கொண்டே சட்டையணிந்து கொண்டிருந்தபோது குழந்தைகள் ரெண்டு பேரும் ஓடி வந்தார்கள். பாட்டியின் கையில் ஷாப்பிங் பாஸ்கெட்டைப் பார்த்ததும் அதுகளுக்கு ஏக சந்தோஷம்.

“பாட்டி, தாத்தா ஷாப்பிங் போறாங்களா, நாங்களும் போறோம் பாட்டி. தாத்தா, நாங்களும் வறோமே, நாங்க ரெண்டு பேரும்.”

“இரு கீதா, தாத்தா இன்னும் டிஃபன் சாப்பிடல.”

“நாமளுந்தான் சாப்பிடல, பசிக்கலியே… மார்க்கெட்டுக்குப் போய்ட்டு வந்து சாப்புடுவோம், என்ன தாத்தா?”

குழந்தைகள் ரெண்டும், குணசீலனின் ரெண்டு கைகளையும் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே போக, பிடறிக்குப் பின்னால் சுலோசனா சிரிப்பதாய்ப்பட்டது இவருக்கு.

மார்க்கெட்டில், காய்கறியெல்லாம் வாங்கி முடித்த பின்னால் சஞ்சய், தாத்தாவைத் தாஜா செய்தான்.

“தாத்தா, தாத்தா, எனக்குக் காட்பரிஸ். எனக்கு ஒண்ணு, கீதாவுக்கு ஒண்ணு.”

“யேய் சஞ்சய் ஃபூல்! கத்திரிக்காய்க் கடையா காட்பரீஸ் இருக்கும்?”

“ஃபூலா! அண்ணனை அப்படியெல்லாம் சொல்லக்கூடாதும்மா கீதா”

“அவன் எனக்கு அண்ணனில்ல தாத்தா, நாங்க ரெண்டு பேரும் ட்வின்ஸ். நாங்க ரெண்டு பேரும் ஒரே டேட்ல பிறந்தோம், தாத்தா, எந்த டேட் சொல்லுங்க பாப்போம்?”

நினைவிலிருந்து அந்தத் தேதியைப் பொறுக்கியெடுத்து குணசீலன் ரொம்ப பெருமையாய்ச் சொன்னார்.

“தாத்தா… அது… நாளக்கித்தான்!”

ரெண்டு குழந்தைகளும் ஒரே குரலில் ராகம் பாடின.

ஆமாம், நாளைக்குத்தான்.

“நாளக்கி எங்களுக்கு ஹாப்பி பர்த் டே!”

ஆமாம், நாளைக்கு இந்தப் பிஞ்சுகளுக்குப் பிறந்த நாள்.

“தாத்தா எங்களுக்கு என்ன ப்ரஸன்ட் வாங்கிக் குடுக்கப் போறீங்க?”

“யேய் ஃபூல்… ஸாரி ஸாரி… ஃபூல் இல்ல. தாத்தா இனிமேயா ப்ரஸன்ட் வாங்குவார்? எல்லாம் ரெடியா வாங்கி ஒளிச்சி வச்சிர்ப்பார். நாளக்கித்தான் குடுப்பார். என்ன தாத்தா?”

“கேக் ஆடர் பண்ணிட்டீங்கிளா தாத்தா? கேண்டில், பலூன், ஸ்வீட்ஸ்…”

“தாத்தா எங்கிட்ட ஹாப்பி பர்த்டே காஸெட் இருக்கே!”

“நல்ல வேளை நம்ம பர்த்டே ஹாலிடேஸ்ல வந்திருக்கு, இல்ல கீதா, இல்லாட்டி தாத்தா நம்ம ப்ரஸன்ட்ஸ், ட்ரஸ்ஸஸ் எல்லாம் லவ் டேலுக்கு அனுப்பணும்.”

குழந்தைகளை ஒரு மாதிரி சமாளித்து வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த பிறகு குணசீலன் ஆசுவாசப் பெருமூச்சுவிட்டார்.

இப்போ து அவருக்கு முன்னால் ஏகப்பட்ட வேலை கிடந்தது.

கேக் ஆர்டர் செய்ய வேண்டும். பலூன், பேப்பர் தோரணங்கள் வாங்க வேண்டும். இந்தத் தெருவின் குழந்தைகளையெல்லாம் நாளை பார்ட்டிக்குக் கூப்பிட வேண்டும். ரெண்டு பேருக்கும் புது உடைகள் வாங்க வேண்டும். உடைகள் அப்பன்காரன் வாங்கி வைத்திருப்பானே. பரவாயில்லை, அது ஒரு பக்கம் இருக்கட்டும். தாத்தா வாங்கிக் கொடுக்கிறதைத்தான் குழந்தைகள் விரும்பி அணிந்து கொள்ளும்.

பார்ட்டிக்கான ஏற்பாடுகளைக் கூடத் தான் செய்வதற்கு சிவராமன் திட்டம் வைத்திருப்பான். பரவாயில்லை. அவனை, எல்லாரையும் ஒதுங்கியிருக்கச் சொல்லிவிட்டு இந்த ஏற்பாடுகளை நாம் செய்து காட்டுவோம். இத்தனை நாள் உத்தியோகத்திலிருந்த போதுதான் பேரக் குழந்தைகளோடு சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ள நேரமிருந்ததில்லை. இப்போது ஓய்வுதானே... பேரக் குழந்தைகளின் பிறந்த நாள் விழாவுக்கான நேரமும், உழைப்பும், செலவும் தனதாகவே இருக்கட்டும்.

பாங்க் பாஸ் புக்கையும் செக் புக்கையும் எடுத்துக் கொண்டு குழந்தைகளின் கண்களுக்கு மறைந்து, ஓசைப்படாமல் பாங்க்குக்கு ஓடினார் குணசீலன்.

ரிட்டயர்மெண்ட்டுக்கு ஒரு புதிய பரிமாணம், உண்மையான பரிமாணம் கிடைத்த மாதிரி இருந்தது.

அடுத்த நாள் அதிகாலை, வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த மகாதேவன், ஆட்டோவிலிருந்து இறங்கிய ஆளைப் பார்த்து வாயைப் பிளந்தார்.

‘நேற்று முன்தினம், அழுது வடிந்த மூஞ்சியோடு ஐயோ பாவம் என்றிருந்த இந்த ஆளை நேர்த்தியாய்ச் செதுக்கி, ட்ரிம் பண்ணிவிட்டது யார்?’

“என்னப்பா குணா, விடிஞ்சும் விடியாமலும் இருக்கும் போதே பொசுக்னு வந்து நிக்கிற, இன்னிக்கி என்ன விஷயம்?”

“விஷயம் இல்ல மகாதேவா, விசேஷம். என் பேரக் குழந்தைகளுக்கு இன்னிக்கி பர்த்டே, குடும்பத்தோட வந்திரு. லேட் பண்ணிராத. நீதான் மொதல்ல ஆசீர்வாதம் பண்ணனும். அதுங்க எந்திரிச்சிட்டா என்னை விடாதுங்க. அதான் அது ரெண்டும் எந்திரிக்கிறதுக்கு முந்தியே ஆட்டோ புடிச்சிக்கிட்டு வந்துட்டேன். வரட்டுமா, எனக்கு டைம் இல்ல. இப்ப நா ரொம்ப பிஸி தெரியுமோ?”

குணசீலனின் மாற்றங்களை வைத்த கண் வாங்காமல் பார்த்து அதிசயித்துக் கொண்டிருந்த மகாதேவனைப் பார்த்துக் கண்ணடித்தார் குணசீலன்.

“என்ன மகாதேவா அப்படிப்பாக்கிற, திருஷ்டி போட்றாத. மகாதேவா, ஒனக்கு விஷயம் தெரியுமோ? திடீர்னு நான் தாத்தா ஆய்ட்டேன்.”

வாய்விட்டுச் சிரித்த குணசீலனின் கையை எட்டிப் பற்றிக் கொண்டார் மகாதேவன். “என்னுடைய ஆராய்ச்சிப்படி இந்த பரவச நிலைக்கு என்ன பேர் தெரியுமோ குணா? இதுக்குப் பென்ஷனர்ஸ் டிலைட்ன்னு பேரு.”

ரெண்டு பேரும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டார்கள்.

பிறகு கேட்டார் குணசீலன்.

“பென்ஷன்னவுடனே ஞாபகம் வருது மகாதேவா, பாங்க்ல லைஃப் ஸர்ட்டிஃபிகேட் குடுக்கப் போக வேண்டியது எந்த மாசம்? நீ போறப்ப மறக்காம எனக்கு ரிமைண்ட் பண்றியா?”

-கணையாழி, அக்டோபர் 1998.

# மழை மறைவுப் பிரதேசம்

"போர்டு மீட்டீங் ஏதாவது இருக்கா ஸார் இன்னிக்கி?"

வசந்தி லேசான பதற்றத்துடன் கேட்டாள்.

அஞ்சு நாள் லீவில் போய்விட்டு நேற்றுதான் பணியில் சேர்ந்திருந்தாள். தான் லீவில் இருந்த காலத்தில் அவசரக்கூட்டம் ஏதாவது ஏற்பாடாகியிருந்து, நேற்றே பணியில் சேர்ந்தும் கூட அதைப்பற்றி அறிந்து கொள்ளத் தவறிவிட்டோமோ என்கிற குற்றவுணர்ச்சி.

நான் அவளை நோக்கிப் பொறுமையாய்ப் புன்னகைத்ததும் சமாதானமடைந்து என்னுடைய பதிலுக்காய்க் காத்திருந்தாள்.

ரொம்பவும் புன்னகைத்து அவளுடைய பொறுமைக்கு சோதனை வைக்காமல் நான் வாயைத் திறந்தேன்.

"என்னோட மோஸ்ட் பர்ஸனல், பர்ஸனல் ஸெக்ரட்டரிக்குத் தெரியாம இந்தக் கம்பெனில போர்டு மீட்டிங்கா?"

சிரித்தேன்.

பதிலுக்கு வசந்தியும் ஆறுதலாய்ச் சிரித்தாள், ஆனாலும், என்னுடைய பதில் அவளுக்கு முழு திருப்தியளிக்கவில்லையென்பது அவளுடைய அடுத்த கேள்வியில் வெளிப்பட்டது.

"ரோட்டரி கான்ஃப்ரன்ஸ் ஏதாவது இருக்கா ஸார் இன்னிக்கி?"

"நோ."

"ஈவ்னிங் பார்ட்டி ஏதாவது?"

"ம்ஹூம்."

"போரடிக்கிறீங்க ஸார். சரி நேராவே கேக்கறேன். ஃபுல் ஸூட்ல வந்திருக்கிங்களே, என்ன விசேஷம்?"

"ம்? சும்மாத்தான்."

"என்ட்ட சும்மாத்தான்னுட்டீங்க, வீட்ல மேடம் தொளைச்செடுத்திருப்பாங்களே, எப்டி சமாளிச்சீங்களாம்?"

"அவ நம்பறாளோ நம்பலியோ, இருவத்தி மூணு வருஷமா டெய்லி அவகிட்ட பொய் பொய்யா சொல்லி சமாளிச்சிட்டுத்தானிருக்கேன். இன்னிக்யும் ஒண்ணை அவுத்துவிட்டேன்னு வச்சுக்கோயேன்."

திரும்பவும் சிரித்தேன்.

இந்த முறை என்னுடைய சிரிப்பை வசந்தி பகிர்ந்து கொள்ளவில்லை. மாறாக, கூர்மையாய் என்னை சில விநாடிகள் அவதானித்தாள். பிறகு சாவகாசமாய் சிரித்தாள்.

“முடிய டை பண்ணியிருக்கீங்க, மீசைய ட்ரிம் பண்ணியிருக்கிங்க, விசேஷமா பர்ஃப்யூம் போட்டிருக்கிங்க, ஃபுல் ஸூட் வித் ய பிராண்ட் ந்யூ ட்டை. நிச்சயமா என்னமோ விசேஷம் இருக்கு” என்று சந்தேகமாய்ச் சிரித்துவிட்டு, அவளுடைய சந்தேகத்துக்கோ சிரிப்புக்கோ என்னிடமிருந்து பதில் வராத ஏமாற்றத்தைத் திரும்பவும் ஒரு மெல்லிய சிரிப்பால் மூடி மறைத்தபடி அரைமனசோடு அங்கிருந்து அகன்றவள், கதவைப் பாதி திறந்து கொண்டு நாற்பத்தஞ்சு டிகிரி முகத்தைத் திருப்பி என்னைப் பார்த்துச் சொன்னாள்:

“யூ லுக் வெரி ஹான்ஸம் டு டே”

கையை உயர்த்தி, திரும்பவும் அவளை அருகில் அழைத்தேன்.

இவ்வளவு பெரிய பனிப் பாறையைத் தூக்கி என் தலை மேலே வைத்தவளை அதிருப்திப்படுத்தலாமா !?

“ஒன்ட்ட சொல்றதுக்கென்ன வசந்தி, இன்னிக்கி என்னப் பாக்க ஒரு வி.ஐ.பி வர்றா.”

“வர்றா? பெண்பால். ஸோ அது ஜஸ்ட் வி.ஐ.பி இல்ல. வி.வி.ஐ.பி!”

“ரைட். வி.வி.ஐ.பியே தான். அவளுக்காகத்தான் இந்த ஃபுல் ஸூட், புது ட்டை, ஹேர் டை, பர்ஃப்யூம் எல்லாம்.”

“அது யார் பாஸ் எனக்குத் தெரியாத பெண் வி.வி.ஐ.பி?”

“பொறாமைப்படறே பெண்ணே, பொறுமையாயிரு. பதினொண்ணு வரக்யும் பொறுமையா இரு. பதினொரு மணிக்கி வருவா. பாத்தா நீயே புரிஞ்சுக்குவ. அனாவசியமாக் கேள்வி கேட்டு மடக்காம அவள உள்ள அனுப்பு. ஓக்கே?”

புதிராய்ப் புன்னகைத்துவிட்டு வசந்தி வெளியேறிக் கதவை மூடினாள்.

பிறகு, சரியாய்ப் பதினொரு மணிக்கு இன்ட்டர்காமில் அழைத்தாள்.

“ஸார், ஒங்க வி.வி.ஐ.பி வந்தாச்சு. இன்னும் ரெண்டு வி கூட சேத்துக்கலாம் பாஸ், ஷி இஸ் ஸிம்ப்லி ஸூப்பர்ப்!”

“ச்சீ... ஒளராத. அவள உள்ள அனுப்பு. யேய், இரு இரு, ஒரு ரெண்டு நிமிஷம் கழிச்சி அனுப்பு.”

“ட்டைய அட்ஜஸ்ட் பண்ணிக்க ட்டு மினிட்ஸா? ட்டு மச் பாஸ்.”

“ஷ்ஷ்ஷட் அப் வசந்தி.”

வசந்தியிடம் நான் கோபத்தை வெளிப்படுத்தினேனா அல்லது படபடப்பில் சும்மா குரலை உயர்த்தினேனா என்று புரியவில்லை.

மொத்தத்தில் நான் நிதானத்திலில்லை என்பது மட்டும் புரிந்தது.

கைக்குட்டையை எடுத்து முகத்தில் ஒற்றினேன். காலரிடுக்கில் கைக்குட்டையை விட்டுக் கழுத்தைத் துடைத்துக் கொண்டேன். தளர்ந்திருந்த ட்டையை இறுக்கிக் கொண்டேன். தலை முடியைக் கோதிவிட்டு சரி செய்து கொண்டேன். எல்லா ஆயத்தங்களும் செய்து முடிக்கவும் கதவு தட்டப்படவும் சரியாயிருந்தது.

“கமின்” என்று அழைத்தேன்.

வந்தாள்.

முதன்முதலாய்ப் பார்க்கிற முகமானாலும் அந்த வனப்பும் வசீகரமும் முன்னமேயே, ரொம்ப நாளைக்கு முன்னமேயே பரிச்சயமான மாதிரி ஓர் அந்நியோன்னிய உணர்வு.

என்னுடைய மேஜையை நெருங்கி அவள் தயங்கித் தயங்கி “குட்மார்னிங் ஸார்” என்ற போதுதான் நான் வைத்த கண் வாங்காமல் அவளையே வெறித்துக் கொண்டிருந்தது உறைத்தது.

பார்வையை அவளுடைய முகத்திலிருந்து பிடுங்கி விலக்கிவிட்டு “ஒக்காரும்மா” என்ற அவளுக்கு இருக்கையை காட்டினேன்.

பணிவான புன்னகையோடு எனக்கெதிரே உட்கார்ந்தாள்.

“மம்மி முந்தா நாள் ஃபோன் பண்ணாங்களாம். நீங்க இன்னிக்கி இன்ட்டர்வ்யூக்கு வரச் சொன்னீங்களாம்.”

“யெஸ்மா, ரொம்ப ரொம்ப வருஷத்துக்கப்புறம் ஸர்ப்ரைஸிங்கா ஒங்கம்மாட்டயிருந்து முந்தா நாள் ஃபோன் வந்தது. ஒங்கப்பா இறந்து போனது கூட முந்தா நாள் ஒங்கம்மா, ஐ மீன் ஒங்க மம்மி சொல்லித்தான் எனக்குத் தெரியும். பத்து வருஷமா தன்னந்தனியா ஒங்க மம்மி எவ்வளவு கஷ்டப்பட்டிருக்காங்க... அப்புறம் ஒன்றப்பத்திப் பேச்சு வந்தது. நீ இஞ்ஜினிரிங் முடிச்சிட்டு வேல தேடிட்டிருக்கேன்னு ஒங்க மம்மி சொன்னாங்க. என்ட்ட அனுப்பி வைங்களேன்னேன். ஸோ, யூ ஆர் ஹியர்.”

அவள் நன்றியோடு என்னைப் பார்த்தாள். பிறகு, கையோடு கொண்டு வந்திருந்த ஃபைலைத் திறந்து சில கம்ப்யூட்டர் காகிதங்களை உருவி என்னிடம் நீட்டினாள்.

“ஸார், என்னோட ஸர்ட்டிஃபிகேட்ஸ். இது ஒரிஜினல், இது ஸெராக்ஸ்.”

அசல்களை மறுத்துவிட்டு நகல்களை மட்டும் பெற்று டிராயருக்குள் பத்திரப்படுத்தினேன்.

“நீங்க பேப்பர்ஸப் பாக்கவேயில்லயே ஸார்” என்று யோசித்தாள்.

“அவசியமேயில்லம்மா” என்று சிரித்தேன்.

“வேல குடுத்தே தீர்றதுன்னு முடிவு பண்ணப்புறம் ஸர்ட்டிஃபிக்கேட்ஸப் பார்த்தா என்ன பாக்காட்டி என்ன!”

அவள் பரவசமடைந்து எழுந்து நின்று கண்கள் பனிக்கக் கை கூப்பினாள்.

“தாங்க்யூ ஸார், தாங்க்யூ ஸோ மச்! மம்மி சொன்னாங்க, ‘நம்ம ஃபாமிலிக்காக அவர் என்ன வேணும்னாலும் செய்வார்ம்மா’ன்னாங்க. ‘இம்மிடியட்டா ஒனக்கு அப்பாய்ன்ட்மெண்ட் குடுத்துருவார்ம்மா’ன்னாங்க. நா நம்பவேயில்ல. ஓ! யூ ஆர் கிரேட் ஸார். டாடிக்கும் ஒங்களுக்குமிருந்த ஃப்ரண்ட்ஷிப்போட ஆழம் புரியுது. ஒங்களுக்காக நா ஸின்ஸியரா வேல செய்வேன் ஸார். ஒங்க நம்பிக்கக்கிப் பாத்திரமா இருப்பேன்.”

“இட்ஸ் ஓக்கே, ப்ளீஸ் ஸிட் டவுன்மா” என்று அவளை அமர்த்தினேன்.

“கண்ணத் தொடச்சிக்கம்மா, டக்னு உணர்ச்சிவசப்பட்டுட்டியே! சரி மெட்ராஸ்ல எங்க ஸ்டே பண்ணப் போறே? ரிலேட்டிவ்ஸ் யாரும் இருக்காங்களா இங்க?”

“மம்மியோட அந்தக் காலத்து க்ளாஸ்மேட் பாக்யலக்ஷ்மி ஆன்ட்டின்னு இருக்காங்க இங்க. காலைல ஸ்டேஷனுக்கு வந்திருந்தாங்க. ஆன்ட்டி வீட்லதான் வாஷ் பண்ணிட்டு பிரேக் ஃபாஸ்ட் சாப்ட்டேன். ஆனா அங்க பெர்மனன்னட்டா தங்க முடியாது. பெரிய ஆம்பளப் பசங்க இருக்காங்க, எங்கயாவது ஒர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல் இருந்தாப் பாக்கணும்” என்று சொல்லிக்கொண்டே போனவள் கொஞ்சம் தயங்கித் தயங்கி சொன்னாள்:

“மம்மி சொன்னாங்க... நீங்களே கூட... ஏதாவது ஏற்பாடு...”

“கரெக்ட்மா, நாஞ் செய்யாம ஒனக்கு யார்மா செய்வா? ஒங்க மம்மி எம்மேல வச்சிருக்கிற நம்பிக்கையப் பாக்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கு! ஒனக்கு ஒரு நல்ல வாழ்க்கைய அமச்சுத் தர்றதுல ஒங்க மம்மிக்கித் தோள் குடுக்க வேண்டியது என்னோட கடமையில்லயா...?”

கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டதையுணர்ந்து சுதாரித்துக் கொண்டு நேரடியாக விஷயத்துக்கு வந்தேன்.

“நீ உள்ள வரும்போது என்னோட பர்ஸனல் ஸெக்ரட்டரிய மீட் பண்ணியிருப்பியே? வசந்தி. ரொம்ப நல்ல பொண்ணு. திருநெல்வேலிக்காரி. இங்க தனியா இருக்கா. ஹாஸ்டல்லதான் இருக்கா. அவகிட்ட சொல்லி அவளோட ஹாஸ்டல்லியே ஏற்பாடு பண்ணச் சொல்றேன். நோ ப்ராப்ளம்!”

“ரொம்ப தாங்க்ஸ் ஸார், அப்ப நா ஆன்ட்டி வீட்டுக்குப் போய்ட்டு நைட் ராக் ஃபோர்ட்ல ஊருக்கு கெளம்பறேன். மம்மிட்ட சொல்லிட்டு திங்ஸ் எல்லாம் பாக் பண்ணிட்டு மண்டே வந்து ஜாய்ன் பண்ணட்டுமா ஸார்?”

அவள் எழுந்து கொண்டாள்.

“அப்ப நாங் கெளம்பறேன் ஸார்.”

“அவ்வளவுதானா?” என்று நான் என்னுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்தினேன்.

“எங்கூட லஞ்ச் சாப்ட்டுட்டுக் கெளம்பலாமே! வா, ஏதாவது நல்ல ஹோட்டல்ல போய் பு∴பே வெட்டிட்டு வருவோம்.”

எழுந்து நின்றிருந்தவள் திரும்பவும் உட்கார்ந்து கொண்டாள்.

“ஹோட்டல் ஏன் ஸார்? லஞ்ச்க்கு வீட்டுக்கு போறதில்லியா? இல்ல, வீட்லயிருந்து சாப்பாடு வராதா?”

“வரும், வரும்.” என்று ஆழமாய் ஒரு பெருமூச்சு விட்டேன்.

“ஒரு நாளக்கி ஒரு வேளையாவது நல்ல சாப்பாடு சாப்புடுவோமேன்னு வீட்லயிருந்து வர்ற சாப்பாட்ட ப்யூனுக்குக் குடுத்துட்டு ஹோட்டல்லயிருந்து வரவழச்சு வாய்க்கி ருசியா சாப்புடுவேன். டாப் ஸீக்ரட். வசந்திக்கி மட்டுந்தான் தெரியும். பொண்டாட்டிக்கி தெரிஞ்சா, மூணு நேரமும் ஹோட்டல்லயே முழுங்கிக்கிருங்கன்னு வெரட்டி விட்ருவா. அவ கெடக்கா விடு. இன்னிக்கிக் கம்ப்பெனி குடுக்க நீ இருக்க. ஹோட்டலுக்கே போய் சாப்ட்டா என்னன்னு ஆச. ஒனக்கு ஒண்ணும் ஆட்சேபணயில்லியே?”

“எனக்கு என்ன ஸார் ஆட்சேபண? ஆனா, நா ஒங்களுக்கு கீழ வேல செய்றவ... வேல செய்யப் போறவ. மத்த எம்ப்ளாயீஸ் பாத்தா தப்பா நெனக்ய மாட்டாங்க?”

“மத்த எம்ப்ளாயிஸா! என்னோட ஒய்∴ப்பே பாத்தாக் கூட இன்னிக்கி எனக்கு பயமில்ல. நா எதுக்கும் துணிஞ்சிட்டேன்.”

புரட்சிகரமாய்ச் சிரித்தேன். அவள் ஆச்சர்யத்தோடும் புன்னகையோடும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அறையைவிட்டு வெளியேறியபோது எதிர்ப்பட்ட வசந்தியைப் பார்த்து நாசூக்காய்க் கண்ணடித்துவிட்டு வெளியே வந்து போர்ட்டிகோவில் இவளுக்குக் கார்க்கதவைத் திறந்தேன்.

மெல்லிய கூச்சத்தோடு முன்னே ஏறிக் கொண்டாள். டிரைவர் விவரமாய் விலகிக் கொண்டான்.

கருப்புக் கண்ணாடிகளெல்லாம் ஏற்றப்பட்ட தனிமையிலும் ஏ.ஸியின் ரம்யமான குளிரிலும் இவளோடு காரில் போகிற விசேஷத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன், அமைதியாக.

மௌனத்தைக் கலைத்து உரையாடலை இவளே ஆரம்பித்து வைத்தாள்.

“ஏன் ஸார், இன்னிக்கி ஒய்∴புக்குக் கூட பயப்பட மாட்டேன்னிங்களே, அப்ப உண்மையில ஒய்∴ப்னா ஒங்களுக்கு பயமா?”

பதில் சொல்லாமல் பக்கவாட்டில் முகத்தைத் திருப்பி அவளைப் பார்த்தேன்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

“ஸாரி ஸார், நா எல்லயத்தாண்டிட்டேன் போல. ஒங்க பர்ஸனல் லைஃபப் பத்தி அதிகப்பிரசிங்கித்தனமாக் கேட்டிருக்கக் கூடாது...”

“தப்பே இல்லம்மா. நீ கேட்டதுதான் உண்மை. கசப்பான உண்மை. வருஷக்கணக்கா இந்தக் கசப்பு என் தொண்டையிலேயே நிக்கிது.”

இன்னும் ஏதாவது சொல்வேனென்று அவள் என்னையே பார்த்துக் கொண்டிருக்க, நானோ என்னுடைய துரதிருஷ்டமான இல்லற வாழ்க்கையின் அவலங்கள் நினைவுக்கு வருவதைக் கட்டுப்படுத்துகிற முயற்சியில் வார்த்தைகள் வெளியே வராமலிருந்தேன்.

சங்கடமான மௌனத்தை முறியடிக்க அவளே பேச வேண்டிய நிர்பந்தம்.

“ஸார் ஒங்களுக்குக் கொழந்தைங்க.”

நான் விரக்தியாய்ச் சிரித்தேன்.

“கொழந்தைங்களா! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லம்மா. கொழந்தைங்கன்னு இருந்திருந்தா, வாழ்க்கையில ஒரு சில கணங்களாவது சந்தோஷமாயிருந்திருக்கேன்னு அர்த்தமாயிருமே” என்று ஓர் இடைவெளி விட்டேன்.

அந்த இடைவெளிக்குள் இவள் புகுந்து கொண்டாள்.

“ஸார், ஒங்க பர்ஸனல் லைஃபப் பத்தி நாங் கேக்கறது தப்புல்லன்னு சொன்னதுனால ஒரு அந்தரங்கமான கேள்வி கேக்கறேன், தப்பாயிருந்தா மன்னிச்சிருங்க.”

‘என்ன கேட்கப் போகிறாள்?’ என்று ஒருவாறு ஊகித்துக் கொண்டே, “கேளும்மா’ என்று தைரியம் தந்தேன்.

“நீங்க யாரையோ லவ் பண்ணியிருக்கீங்க... காதல் தோல்வி கேஸ்... காதல் கை கூடாமப் போனப்புறம் ஒப்புக்கு ஒரு கல்யாணம். சரிதானா?”

அவள் கேட்டு வாயை மூடும் முன் என் கண்கள் பனித்துப் பொங்கிவிட்டதை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை.

பதறிவிட்டாள்.

“ஸார், ஸார் ஐம் ஸாரி ஸார். நாங்கேட்டிருக்கக் கூடாது. ஒங்க மனசப் புண்படுத்திட்டேன். அகெய்ன் ஐம் ஸாரி ஸார்.”

கொஞ்சம் முந்தி ஆஃபீஸ் அறையில் நான் அவளுக்குச் சொன்ன வார்த்தைகளை அவள் இப்போது என் மீது பிரயோகித்தாள்.

“கண்ணத் தொடச்சிக்குங்க ஸார், டக்குனு உணர்ச்சிவசப்பட்டுட்டீங்களே!”

துடைத்துக் கொண்டேன்.

துடைத்தபடியே சொன்னேன்.

“எல்லாக் காதலும் ஸக்ஸஸ் ஆறது இல்லம்மா. விரும்பின மாதிரியே சந்தோஷமான வாழ்க்கை எல்லாருக்கும் அமஞ்சிர்றதில்ல.”

பிறகு, குரலைக் கொஞ்சம் தணித்துக் கொண்டு சொன்னேன்,

“அற்புதமான மனைவியும் அருமையான வாழ்க்கையும் மிஸ்டர் ராதாகிருஷ்ணனுக்கு அமஞ்ச மாதிரி எல்லாருக்கும் அமஞ்சிருமா என்ன!”

புருவங்களை இடுக்கி அவள் புதிராய் என்னைப் பார்த்தாள்.

“மிஸ்டர் ராதாகிருஷ்ணன்? யார் ஸார் அது மிஸ்டர் ராதாகிருஷ்ணன்?”

“ஏன், ஒங்கப்பாவைத்தான் சொல்றேன்.”

“டாடிக்கி நீங்கதான் ரொம்ப க்லோஸஸ்ட் ஃப்ரண்ட்ன்னு மம்மி பெருமையாச் சொன்னாங்க, நீங்க என்னடான்னா டாடி இறந்தவொடன அவரோட பேரக்கூட மறந்துட்டீங்களே ஸார்! ராதாகிருஷ்ணனில்ல, டாடியோட பேர் பாலகிருஷ்ணன்.”

அவள் சிரிக்கவும் எனக்கு ‘சுருக்’கென்றது.

“ஓ, ஐம் ஸாரிம்மா. டச் விட்டுப் போச்சா, ரொம்ப வருஷமாச்சில்ல, ஏதோ ஞாபகத்துல பேர மாத்திட்டேன்” என்று சொல்லி சமாளிப்பதற்குள் முகம் பல கோணல்களாகிவிட்டதை உணர்ந்தேன்.

என்னுடைய சங்கடத்தைத் தளர்த்துவதற்காக, ஏதோ பேச வேண்டுமென்பதற்காகக் கேட்கிற மாதிரி அவள் கேட்டு வைத்தாள்:

“நாம இப்ப எந்த ஹோட்டலுக்குப் போறோம் ஸார்?”

அவளுடைய கேள்வி என்னுடைய தப்பித்தலுக்கு ரொம்ப உறுதுணையாயிருந்தது. சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டேன்.

“அடடே, அத அப்பவே ஒன்ட்ட கேட்டிருக்கணும். சொல்லு, எங்க போலாம்?”

“எனக்கு மெட்ராஸ்ல ஹோட்டல் எதுவும் தெரியாது ஸார். நீங்க எங்க கூட்டிட்டுப் போனாலும் சரிதான் ஸார். என்ன ஸார், வண்டிய டமால்னு ஓரங்கட்டிட்டீங்க, ஹோட்டல் எதயுங் காணல?”

ஸ்ட்டீரிங்கை விட்டுவிட்டு நான் முழுமையாய் அவளை நோக்கித் திரும்பினேன்.

“பொறுமையிழந்த தாம்மா நா வண்டிய ஆஃப் பண்ணிட்டேன். ஆமா, வார்த்தக்கி வார்த்த என்ன நீ ‘ஸார், ஸார்’னு கூப்புட வேண்டியது அவசியந்தானா?”

அவள் கொஞ்சம் யோசித்துவிட்டு சொன்னாள்.

“பின்ன எப்டி ஸார் கூப்புடச் சொல்றீங்க? நீங்க பாஸ், நா எம்ப்ளாயி... டாடியோட ஃப்ரண்ட்ங்கறத பயன்படுத்திக்கிட்டு உரிமையோட அங்க்கிள்னு கூப்புடலாம், ஆனா அது நல்லாயிருக்குமா...?”

நான் அவளை ஆழமாய்ப் பார்த்தேன். அந்தக் கணத்தில் மனசில் ஜனித்த வார்த்தைகளைத் தங்கு தடையில்லாமல் வெளியேற அனுமதித்தேன்.

“உரிமையோட அங்கிள்னு கூப்புட யோசனையாயிருந்தா, அதவிட அதிக உரிமையோட அப்பான்னு கூப்புடேம்மா...”

இதை அவள் எதிர்பார்க்கவேயில்லையென்பது அவளுடைய வதனத்தில் வெளிப்பட்ட திகைப்பில் தெரிந்தது.

“ஸார்?” என்றொரு அழுத்தமான கேள்விக்குறியாய் என்னை ஊடுருவினாள்.

ஒன்றும் பேச இயலாதவனாய் நான் அவளுடைய பார்வையைத் தவிர்த்து ஸ்ட்டீரிங்கைப் பற்றினேன்.

‘இவளுடைய கேள்விக்குறியை எவ்வாறு என்னால், நிமிர்த்த முடியும்?

எப்படி நான் சொல்ல முடியும் இவளிடம், மகளே உன்னைப் பெற்றெடுத்த புண்ணியவதியைத்தானம்மா முன்னொரு காலத்தில் நான் உயிருக்குயிராய்க் காதலித்தேன் என்று!’

-இதயம் பேசுகிறது, 18.10.1998.

# உறவுக்கு என்றும் இரண்டு பக்கம்

"என்னங்க ஸண்டேயும் அதுவுமா காலங்காத்தால எங்க கெளம்பிட்டீங்க?"

"நீயும் வர்றியா?"

"எங்க?"

"நேத்து சொன்னேன்ல? எக்மோர்க்குத்தான்."

படுக்கையில், கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த விநோதினி, அவன் எக்மோருக்கு என்றதும் 'படக்'கென்று படுத்துக்கொண்டாள்.

படுத்துக் கொண்டவள் அவனுடைய காதுகளில் விழுந்தால் விழட்டும், விழாவிட்டால் தொலையட்டும் என்று முணுமுணுத்து வைத்தாள்:

"…. அந்த வேலக்காரியையும் அவ குடும்பத்தையும் ரிஸீவ் பண்றதுக்கு நீங்க போறதே அசிங்கம். இதுல நா வேற வரணுமாக்கும்…"

"என்ன முணுமுணுக்கற?" என்று அவளை நோக்கிக் குனிந்தான் ப்ரேம்.

"ஒண்ணுமில்ல, வர்றவங்க பெரிய்ய வி.ஐ.பி. அவங்களை வரவேற்க எனக்குத் தகுதியில்ல. நீங்களே போய்க் கூட்டிக்கிட்டு வாங்கன்னு சொன்னேன்."

அவளை நோக்கி உதட்டைப் பிதுக்கிவிட்டு அங்கிருந்து அகலப்போன ப்ரேமை, விநோதினி திரும்பவும் பிடித்திழுத்தாள்.

"இந்தாங்க, ஒரு நிமிஷம்."

"என்ன?"

"இந்நேரத்துக்குக் கடைங்க தெறந்திருக்குமா?"

"எதுக்கு"

"எதுக்கா? பெரிய மனுஷங்களை வரவேற்க வெறுங்கையோடயா போவீங்க? மாலையோ பொக்கேயோ வாங்கிட்டுப் போக வேண்டாமா?"

ப்ரேம் அவளை வேதனையோடு பார்த்தான்.

"ஒன்னத் திருத்தவே முடியாது விநோ."

அவன் அங்கேயிருந்து போன பின்னால், விநோதினி திரும்பவும் புகுந்து கொண்டாள், மென்மையான போர்வைக்குள், இனிமையான நித்திரைக்குள்ளும்.

விநோதினியுடைய சுகமான உறக்கத்தை ரொம்ப நேரம் நீடிக்கவிடாமல் ஹாலில் ‘கசமுசா’வென்று பேச்சுச் சத்தம்.

சாத்தியிருந்த பெட்ரூம் கதவைத் தள்ளிக்கொண்டு ப்ரேம் உள்ளே நுழைந்தபோது சத்தம் இன்னும் அதிகமாய்க் கேட்டது.

தன்னுடைய உறக்கம் கலைந்து போன எரிச்சலை விநோதினி ப்ரேமிடம் வெளிப்படுத்தினாள்.

“என்னங்க அநியாயம் இது? இன்னிக்கு ஸண்டே, ஒங்கள ஆஃபீஸ்க்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசரம் இல்லை, நிம்மதியா ஒரு ஒன்அவர் எக்ஸ்ட்ரா தூக்கம் போடலாம்னா என்ன டிஸ்டர்பன்ஸ்?”

“போதும், போதும் இளவரசியாரே தாங்கள் துயில் கண்டது. எந்திரி எந்திரி... கெஸ்ட்ஸ் வந்திருக்காங்கள்ள?”

சோம்பல் முறித்தபடி விநோதினி சலித்துக் கொண்டாள்.

“ஆமா, பெரிய்ய கெஸ்ட்ஸ்! சரிங்க; ஒங்க கெஸ்ட்ஸ் எத்தன நாளக்கி இங்க டேரா போடப் போறாங்களாம்?”

“கொழந்தைங்களுக்கு லீவ்தான. ஒரு வாரம், பத்து நாள் இருப்பாங்க. ஏன், ஒனக்கு எங்க வலிக்குது?”

“ஹையோ, பத்து நாளா?!” என்று வாயைப் பிளந்த விநோதினி, திடீரென்று என்னவோ ஞாபகத்துக்கு வந்த மாதிரி குரலைத் தணித்துக் கொண்டு சொன்னாள்:

“ம்ம். அதுவுங்கூட ஒரு விதத்துல நல்லதுதான்.”

மனைவியிடம் ஏதோ அபூர்வ மனமாற்றம் தெரிகிற மாதிரியிருக்கிறதே என்கிற சந்தோஷங்கலந்த சந்தேகத்தோடு, ப்ரேம் அவளுடைய முகத்தை ஆராய்ந்தான்.

“நம்ம குப்பம்மா ரொம்ப நாளாவே நச்சரிச்சிட்டிருக்கா ஒரு வாரம் லீவ் வேணும்னு. நாந்தான் ‘இல்ல, இல்ல’ன்னு தட்டிக் கழிச்சிட்டிருக்கேன். இப்ப அவகிட்ட சொல்லிரலாம், ‘ஒரு டெம்பரரி வேலக்காரி வந்திருக்கா. நீ வேணா ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்துட்டு வா’ன்னு.”

கடுப்போடு ஏதோ சொல்ல முனைந்த ப்ரேம் வாயைத் திறக்குமுன் அவனை முந்திக் கொண்டு விநோதினி திரும்பவும் பேசினாள்.

“என்ன, என்ன? என்ன சொல்லப்போறீங்க? ஒன்னத் திருத்தவே முடியாதுங்கப் போறீங்க. பரவாயில்ல, நீங்க சோஷலிஸ சமதர்ம சமூக நீதிக் காவலரா இருங்க, நா இப்படியே திருந்தாத ஜென்மமாவே இருந்துட்டுப் போறேன். எனக்கு இதான் புடிச்சிருக்கு. சரி, எங்க திரும்பவும் கௌம்பிட்டீங்க? கோவிச்சிட்டு வீட்டவிட்டுப் போறீங்களா?”

“ஔராத விநோ. சொன்னேன்ல இன்னிக்கு ஃபுல்டே ரோட்டரி கான்ஃபரன்ஸ் இருக்குன்னு. ராத்திரிதான் வருவேன். டின்னர் சாப்பிட்டுட்டே வந்துருவேன். எனக்காக வெய்ட் பண்ணாத. பை த பை, நா இல்லாத சமயத்துல ஏதாவது திமிர்த்தனமா பேசி ரஸியா மனச நோடிச்சிராத. ஒன்னாண்ட நெறய பேச வேண்டியிருக்கு; ராத்திரி வந்து பேசிக்கிறேன்.”

ராத்திரி ப்ரேம் வீடு திரும்பியபோது, என்றைக்குமில்லாத விசேஷமாய் விநோதினி படுக்கையில் கட்டிலில் சம்மணமிட்டு உட்கார்ந்து, சாப்பாட்டுத் தட்டைப் படுக்கையில் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து மெல்ல அவளைச் சீண்டினான்.

“என்ன இது இளவரசியாரே, சயன மண்டபத்தை சாப்பாட்டுக் கூடமாக மாற்றி விட்டீர்கள்! மஹாராணியோடு மனக் கசப்போ, சேடிப் பெண்கள் சேவையில் குறைவைத்தார்களோ...?”

அவனுடைய கேள்விக்கு விநோதினி அவனுடைய பாணியிலேயே பதில் சொன்னாள்.

“உணவுக் கொட்டடியை எதிரிப்படை ஆக்கிரமித்துக் கொண்டது ப்ரபோ!. ஆகையால் நான் இன்றியமையாத உணவுப் பொருட்களோடு சுரங்கப்பாதை வழியாய் அந்தப்புரத்துக்கு தப்பி வந்துவிட்டேன்.”

விநோதினியுடைய சமயோஜிதமான பதிலில் மெய்சிலிர்த்துப் போன ப்ரேம், அவளுடைய கன்னங்களிரண்டையும் கைகளில் ஏந்திக் கொண்டான்.

“எனக்கு ஈடு கொடுத்து அழகாப் பேசறியே விநோ, அப்பப்ப திமிர்ப் பேச்சுதான் ஒன்னக் கெடுக்குது! இப்ப கூடப்பார், எதிரிப்படைங்கற. ரஸியாவும் அவ கொழந்தைங்களும் என்ன நமக்கு எதிரிப்படையா?”

“இல்லாம என்ன, நீங்க சொன்னீங்களே சேடிப் பெண்! ஒங்க ஆஸ்தான சேடிப்பெண்! பச்சையா சொல்லப்போனா வேலைக்காரி. ஒங்கம்மாவும் அப்பாவும் அவள உபசரிக்கிற உபசரிப்பும், அந்த கொரங்குக் குட்டிகளைக் கொஞ்சற கொஞ்சலும் பாக்க சகிக்கல!”

“அசிங்கமாப் பேசாத விநோ, அந்தக் கொழந்தைங்க ரெண்டும் எவ்வளவு க்யூட்டா இருக்கு! அப்பா அம்மா அவங்களோட பேரக் கொழந்தைங்களைக் கொஞ்சறாங்க. ஒனக்கு ஏன் பத்திட்டு வருது? நீயும் வேணா ஒண்ணு பெத்துக் குடு. அதையும் கொஞ்சிட்டுப் போறாங்க!”

“அதுவும் நல்ல ஐடியாதான், இருங்க வர்றேன்” என்று காலித் தட்டை எடுத்துக் கொண்டு சமையலறைக்குப் போனவள், அங்கே சில்லறை வேலைகளை முடித்துவிட்டு வேகமாய்த் திரும்பி வந்து படுக்கையறைக் கதவைச் சாத்தி உட்புறம் தாழிட்டுவிட்டு புருஷனைப் பார்த்தாள்.

“வாங்க.”

“எங்க?”

“ம்? கொழந்த பெத்துக்கத்தான்.”

“சீச்சீ... என்ன கொடுமையிது ஈசனே! பெண்ணுக்குரிய நான்கு வகை குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இதெல்லாம் கிஞ்சித்தும் இல்லாமல், ஓர் ஆடவனை ஒரு பருவப்பெண் படு பகிரங்கமாக படுக்கைக்கு அழைக்கிற கலிகாலக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது!”

“நீங்க இப்படி வெட்டி வசனம் பேசிட்டிருந்தீங்கன்னா நா டு விட்டுட்டு பேசாம தூங்கப் போயிருவேன்... அப்புறம் ஒங்களுக்குத்தான் கைக்கு எட்னது வாய்க்கு எட்டாமப் போகும். ‘டக்’னு சொல்லுங்க, வேணுமா, வேண்டாமா?”

“பொறுமை. பொறுமை. அவசரப்பட்டு எந்த விபரீத முடிவுக்கும் வந்துராதே. எந்த மடையனாவது வேண்டாம்னு சொல்வானா? ஒரு நாலே நாலு நிமிஷம் அவகாசங்குடு. சேஞ்ச் பண்ணிட்டு வந்துர்றேன்.”

உற்சாகமாய் விசிலிசைத்தபடியே ப்ரேம் உடை மாற்றினான்.

“... இன்றைக்கு அதிர்ஷ்ட ராத்திரிதான். யப்பாடி எத்தனை நாளாச்சு!”

இனிய நினைவுகளுக்குள்ளே இழையோடியபடி இன்றைக்கு ராத்திரி இவளிடம் பேச வேண்டுமென்று நினைத்திருந்த ஸீரியஸ்ஸான விஷயமும் நினைவுக்கு வந்தது.

ரஸியாவைப் பற்றி இவள் மனசிலிருக்கிற கீழ்த்தனமான எண்ணத்தை மாற்ற முயற்சிக்க வேண்டுமென்றும், இவளுக்கு அறிவுரை சொல்லி நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் நினைத்திருந்தான். அதை இப்போது காம்ப்ரமைஸ் செய்வதா... கூடாது... இவள் நல்ல மூடில் இருக்கிற இந்த அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொண்டு இவளுடைய மனப்போக்கை மாற்ற முதலில் முயற்சி செய்யலாமே...”

“ரொம்ப லேட் பண்றீங்க. அப்புறம் நா நெஜம்மாலே தூங்கிடுவேன்.” என்று விநோதினி துரிதப்படுத்தினாள்.

படுக்கையின் நெருக்கத்தில் விநோதினி முதல் காயை நகர்த்தும்முன் இவன் முந்திக்கொண்டான்.

“விநோ, அதுக்கு முன்னால ஒங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணுமே...”

விநோதினி அவனிடமிருந்து ‘சட்’டென்று விலகினாள்.

“என்னங்க இது... நா மூட்ல இருக்கும்போது என்னமோ சம்பந்தா சம்பந்தமில்லாமப் பேசி எல்லாத்தையும் ஸ்பாய்ல் பண்றீங்களே! இத விட என்ன முக்கியமான விஷயம் இப்ப?”

“இருக்கு. சொல்றேன். நீ நிஜம்மாலே என்ன லவ் பண்றேன்னா நா சொல்லப்போறத ஸீரியஸ்ஸாக் கேக்கணும், என்ன?”

மார்புக்குக் குறுக்காய்க் கைகளைக் கட்டிய நிலையில் கூரையைப் பார்த்தபடி விநோதினி படுத்திருந்தாள்.

“ம். க்ளாஸ் எடுங்க. நா ரெடி.”

“க்ளாஸா!”

“அப்புறம் என்ன? எனக்கு உபதேசம் செய்யப் போறிங்க. பள்ளியறைய பள்ளிக்கூட அறையா மாத்தப் போறிங்க. இன்பமான இந்த ராத்திரிய வேஸ்ட் பண்ணப் போறீங்க. ம்... சொல்லுங்க கேட்டுக்கறேன்.”

“சரி, ஒனக்குப் புடிக்குதோ புடிக்கலியோ, நல்ல நினைப்பை ஒம் மனசுல விதைக்க வேண்டியது என்னோட கடமை. ஒன்னோட குறுகிய மனப்பான்மையை மாத்த முயற்சி பண்ண வேண்டியது என்னோட பொறுப்பு. என்னோட மனைவிய என்ன மாதிரியே, இந்தக் குடும்பத்துல உள்ள மத்தவங்க மாதிரியே பரந்த மனப்பான்மை...”

“ஐயையய்ய... வளவளன்னு வளத்தாம விஷயத்துக்கு வாங்க...”

“சரி; எனக்கென்ன, செவுடங்காதுல சங்க ஊதறேன்... பலன் இருந்தா என் அதிர்ஷ்டம்.”

“செவுடி காதுல.”

“திருத்தத்துக்கு ரொம்ப நன்றிங்க மேடம்! கிண்டல் பண்ணாம நா சொல்லப் போறத கவனி.”

“கவனிக்கிறேன், சொல்லுங்க சார்.”

“இங்க பார் விநோ, ஒங்கப்பா அநியாயத்துக்குப் பணக்காரர்தான், ஆனா ஒங்கப்பாட்ட இல்லாத பணத்திமிர், நானறிஞ்சு ஒங்க குடும்பத்துல எல்லாரையும் விட அதிகமான பணத்திமிர் ஒனக்கு இருக்கு. ஒன்னோட பணத்திமிர ஏழைங்க மேல நீ பிரயோகிக்கிறப்ப எனக்கு ரொம்ப மனக்கஷ்டமா இருக்கும்மா... இந்த ரஸியா பத்து வருஷமா எங்க வீட்ல வளர்ந்த பொண்ணு.”

“ஸ்டாப், ஸ்டாப். அதென்னங்க வீட்ல வளர்ந்த பொண்ணு? அவ முஸ்லீம் பொண்ணு. நீங்க ஹிண்டு. அதெப்படி ஒரு முஸ்லீம் பொண்ணை நீங்க பத்து வருஷமா வளத்தீங்களாம்? பத்து வருஷம் ஒங்க வீட்ல வேலக்கி வச்சிருந்தீங்கன்னு உண்மையைச் சொல்லுங்களேன், அதென்ன பூசி மெழுகல்?”

“நா பூசவுமில்ல, மெழுகவுமில்ல. சரி; நீ சொல்றபடியே வச்சிக்குவோம்.”

“ம். அப்படி வாங்க வழிக்கி. ஒங்க வீட்ல ஒரு காலத்துல வேலைக்கு இருந்தவ அவ. பழைய எஜமாங்களப் பார்த்துட்டுப் போவோம், ஏதாவது குடுத்தா வாங்கிட்டுப் போவோம்னு வந்திருக்கா. அதுக்கு என்னமோ வராத விருந்தாளி வந்துட்ட மாதிரி நீங்களே காரெடுத்துட்டுப் போய் ரிஸீவ் பண்றதும், இந்த வீட்டுப் பொண்ணு மாதிரி அவ

இங்க பொழங்குறதும், அந்த "க்யூட் கொழந்தைங்க"ரெண்டும் கும்மாளம் போடறதும், ஒங்கம்மாவும் அப்பாவும் அதுங்களக் கொஞ்சறதும்... ஐயே, அசிங்கம்! அது அதுங்கள வக்ய வேண்டிய எடத்துல வச்சாத்தாங்க நமக்கு மரியாத!

இன்னிக்கு என்ன ஆச்சு தெரியுமா? நீங்க ரோட்டரி கான்ஃபரன்ஸ்ன்னு போய்ட்டீங்க. நா பசியோட மத்யானம் லஞ்ச் சாப்புட டைனிங் ரூமுக்குப் போனா டேபிள அடச்சிக்கிட்டு இதுங்கள்லாம் ஒக்காந்து தின்னிட்டிருக்குங்க! வேலைக்காரி குடும்பத்த எங்கயாவது டைனிங் டேபிள்ல ஒக்காத்தி வச்சு சாப்பாடு போடுவாங்களா! கிச்சன்ல ஒரு ஓரமா ஒக்காத்தி வச்சுப் போட வேண்டியதுதான? எல்லாம் ஒங்கம்மா பண்ற அநியாயங்க. எனக்கு மத்யானம் சாப்பிடவே புடிக்கல. ராத்திரியும் அதே கதிதான். மத்யானம் வேற சரியா சாப்புடலியா, எனக்குப் பயங்கரப் பசி, அதான் ப்ளேட்டத் தூக்கிட்டு பெட்ரூம்க்கு வந்துட்டேன். நீங்கதாம் பாக்கறீங்களே, இன்னும் எத்தன நாளக்கி இந்த அவஸ்தையோ?"

விநோதினிக்குக் கோபம் ஒரு பக்கம், அழுகை ஒரு பக்கம்.

விநோதினிக்கு வேகமாய்ப் பேசியதால் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. அவளுடைய சுவாசம் சமனப்படும் வரை அவகாசம் தந்தான் ப்ரேம். பிறகு,

"நார்மலாய்ட்டியா? சரி, இப்ப நாஞ் சொல்றதக் கொஞ்சம் ஈடுபாட்டோட கேளு. ஒங்க குடும்பத்தப் போல 'ஓஹோ'ன்னு அமோக வசதியான குடும்பம் இல்லன்னாலும் எங்க குடும்பம் கூட வசதியான குடும்பம்தான். அப்பா ஒரு ரிட்டயர்டு ஐ.ஏ.எஸ்ங்கறது ஒனக்குத் தெரியும். மதுரையில அப்பா கலெக்டரா இருந்தப்ப இந்த ரஸியா பத்து வயசுப் பொண்ணா வந்து சேந்தா. அப்பா அம்மா இல்லாத பொண்ணு. அவங்க மாமான்னு ஒரு ஆள் கொண்டு வந்து விட்டுட்டுப் போனார். விட்டுட்டுப் போனதோட சரி; அதுக்கப்புறம் அந்த ஆள் வந்து எட்டியே பாக்கல. ஒளிவு மறைவு எதுக்கு, வீட்டு வேலக்கின்னுதான் அந்த ஆள் கூட்டிட்டு வந்தார். ஆனா ரஸியாவ நாங்க யாருமே ஒரு வேலக்காரப் பொண்ணாப் பாக்கல, அப்படி ட்ரீட் பண்ணவுமில்ல.

இந்த எடத்துல இன்னொண்ணையும் நா ஒனக்குச் சொல்லியாகணும். அப்பா ஸர்வீஸ்ல இருந்தப்ப எங்க வீட்ல ஏகப்பட்ட ஆட்கள் வேல செய்வாங்க. சமையல்காரங்க, ப்யூன்ஸ், டிரைவர்ஸ், தோட்டக்காரங்க. ஆனா அவங்க எல்லாருமே எங்களுக்கு சித்தப்பா, மாமா, அண்ணாச்சிதான். யாரையுமே நாங்க 'பட்லர்'னோ, 'ப்யூன்'னோ, 'டிரைவர்'ன்னோ கூப்பிட மாட்டோம். பிள்ளைங்கள அப்படிப் பண்படுத்தி வச்சிருந்தாங்க எங்க அம்மா அப்பா. எல்லாருமே 'வாங்க, போங்க'தான்.

இப்ப ரஸியா விஷயத்துக்கு வருவோம். நாங்க அவள எங்க குடும்பத்துல ஒருத்தியாத்தான் பாவிச்சோம். அப்பா அம்மா அவள ஆரம்பத்துலயிருந்தே தங்களோட மகள்கள்ல ஒருத்தியாத்தான் வளத்தாங்க. எங்களோட டைனிங் டேபிள்ல ஒக்காந்துதான் சாப்புடுவா. நாங்க சினிமாவுக்கு, எக்ஸிபிஷனுக்குப் போறபோது அவளையும் கூட்டிக்கிட்டுத்தான் போவோம். அவளையும் சேத்துக்கிட்டுத்தான் தங்கச்சிமார் விளையாடுவாங்க.

அப்பா ரஸியாவ ஸ்கூல்ல கூடப் போட்டார், மதுரைல நிர்மலா ஸ்கூல். ரெண்டு வருஷம் ஸ்கூலுக்குப் போனா. அப்புறம் மெச்யூர் ஆனவொடனே சின்ன க்ளாஸ்க்குப் போறதுக்குக் கூச்சப்பட்டுக்கிட்டுப் போக மாட்டேன்ட்டா. அப்பவும் அப்பா ஒரு

மௌலானாவ ஏற்பாடு பண்ணி ரஸியாவுக்கு வீட்லேயே அராபிக், 'குர்ஆன்' எல்லாம் சொல்லித்தர ஏற்பாடு பண்ணினார்.

அப்புறம் அதே மௌலானா மூலமா ஒரு நல்ல முஸ்லீம் பையனப் பாத்துப் பேசி முடிச்சி, நாங்கதான் அவளுக்கு 'நிக்காஹ்' பண்ணி வச்சோம். எல்லா மகள்களையும் போல முதல் பிரசவத்துக்கு ரஸியாவையும் வீட்டுக்குக் கூப்பிட்டு, சகல வசதியோட அம்மாதான் பிரசவ ஏற்பாடு செஞ்சாங்க. ரெண்டாவது பிரசவ சமயத்துல நாங்க மெட்ராஸ்க்கு வந்துட்டோம். ஆனா அம்மா மதுரைக்குப் போய் அவகூட ஒரு மாசம் இருந்து ஒத்தாச பண்ணிட்டு வந்தாங்க.

இன்னொண்ணு சொல்ல விட்டுப்போச்சே, ரஸியா கல்யாணமாகிப் போனப்ப் அவளைக் கட்டிக்கிட்டு அம்மா அழுத அழுகயப் பாக்கணுமே! அம்மா ஒரு பக்கம், தங்கச்சிங்க ரெண்டு பேரும் ஒரு பக்கம், கல்யாணப் பொண்ணு ஒரு பக்கம்... கல்யாணத்துக்கு வந்தவங்க எல்லாம் கண் கலங்கி பாத்துக்கிட்டு நின்னாங்க.

பாசம் விநோ. வேஷமில்லாத பாசம். கலப்படமில்லாத பாசம். பாரபட்சமில்லாத பாசம்! இதயெல்லாம் ஏன் சொல்றேன்னா ரஸியாவுக்கும் இந்தக் குடும்பத்துக்குமுள்ள பந்தத்தோட தூய்மை கொஞ்சமாவது ஒனக்கு ஒறைக்கட்டுமேன்னுதான். ஒறைக்கும்னு எனக்கு நம்பிக்கையிருக்கு விநோ.

ரஸியா வந்ததுலயிருந்து நீ அவ கூட முகங்குடுத்துக்கூட பேசலன்னு தெரியுது. ஏன், அவ முகத்த நீ பாக்கக்கூட இல்லன்னு நெனக்கிறேன். இவ்வளவு நேரம் நாஞ் சொன்னது கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது ஒங்கிட்ட ஒரு மன மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தா காலைல அவகிட்ட பேசு. அவள ஒன்னோட நாத்தனாரா நெனச்சுக்க. ஒன்னோட வரட்டுக் கவுரவத்த மூட்ட கட்டி வச்சுட்டு அவகூட சகஜமாப் பழகு. அந்த அழகான கொழந்தைங்கள நேசி. கொழந்தைங்கள அநியாயமா நீ வெறுத்தா கடவுள் நமக்கு வெகுமதி குடுக்காமப் போனாலும் போகலாம். என்ன விநோ நா சொல்றது சரியாப்படுதா? உன் மனச மாத்திக்கிட்டு காலைல அவகிட்டப் பேசறியா?"

நீளமான பிரசங்கத்தை முடித்துவிட்டு ப்ரேம் மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தாள். சில விநாடிகளில் மெல்லிய குறட்டையொலி அவளிடமிருந்து வெளிப்பட்டது.

அடுத்த நாள் சாயங்காலம் ஆஃபீஸிலிருந்து ப்ரேம் திரும்பிய போது ஒரு ப்ளாஸ்டிக் பை நிறைய சாக்லேட்களைத் திணித்துக் கொண்டு வந்ததைப் பார்த்துப் பதறிப்போன விநோதினி, அவனை அவசர அவசரமாய்ப் படுக்கையறைக்குள் தள்ளிக் கொண்டு போனாள்.

"யாருக்குங்க இவ்ளோ சாக்லேட்டும்?"

"ஏன் ஒனக்குத்தான். ஆசையப் பாரு! எல்லாம் அந்தக் குழந்தைங்களுக்குத்தான்."

"நீங்க செய்வீங்கன்னு தெரியும். என்ட்ட குடுங்க அந்தப் பைய. ஃப்ரிஜ்ல வச்சுப் பூட்டி பத்திரமா வக்கிறேன்."

பையை அவனிடமிருந்து கைப்பற்றப் போராடியவளை லாவகமாய்ச் சமாளித்து ப்ரேம் வெற்றி கொண்டான். பையை மார்போடு அணைத்தபடி பெட்ரூமிலிருந்து வெளியேறப் போனவனை விநோதினி தடுத்தாள்.

“கொஞ்சம் இருங்க. நா என்ன சொல்றேன்னு கேட்டுட்டுப் போங்க.”

“ம். சொல்லு.”

விநோதினி பெட்ரூமுக்கும் ஹாலுக்குமிடையே இருக்கிற இரட்டைக் கதவில் ஒன்றைத் திறந்து வைத்தாள், இங்கிருந்து பார்த்தால் ஹால் தெரிகிற மாதிரி.

“அங்க பாருங்க.”

“எதப்பாக்கச் சொல்ற? ஹால் தெரியுது, ஸோஃபா தெரியுது, ஸோஃபால கொழந்தைங்க ஒக்காந்திருக்கிறது தெரியுது.”

“அந்த ரெண்டும் ஸோஃபால ஒக்காந்து டி.வி பார்த்துட்டிருக்குங்க.”

“சரி, அதுக்கென்ன இப்ப?”

“என்ன இப்பவா, ஏன் தரையில ஒக்காந்து பாத்தா டி.வி தெரியாதா?”

“நீ என்ன சொல்ற?”

“காலையிலயிருந்து நைட் வரைக்கும் அது ரெண்டும் டி.வி முன்னாலதான் ஒக்காந்திருக்கு.”

“ஒக்காந்துட்டுப் போட்டும். வேற என்ன ரிக்ரியேஷன் இருக்கு இங்க! வர்ற ஸண்டேதான் எம்.ஜி.எம்க்கோ கிஷ்கிந்தாவுக்கோ கூட்டிட்டுப் போகலாம்னு இருக்கேன்.”

“நீங்க எங்கயாவது கூட்டிட்டுப் போய்த் தொலைங்க. நா என்ன சொல்ல வந்தேன்னா, அந்த ரெண்டும் என் ஸோஃபாவ அழுக்காக்கி நாசமாக்குது. இப்ப நீங்க சாக்லேட் வேற குடுங்க. தின்னுட்டு ஸோஃபாலயே தொடச்சிக்கிரட்டும். எங்க வீட்லயிருந்து நா கொண்டு வந்த காஸ்ட்லி ஸோஃபாங்க அது. அதுங்களுக்குத்தான் விவரந் தெரியல, இந்த அம்மாக்காரி குறுக்கால நெடுக்கால போய்ட்டு வந்துக்கிட்டுத்தான் இருக்கா, அவளாவது அதுங்களக் கௌப்பி கீழ ஒக்கார வக்யலாம்ல? ஸோஃபால ஒக்காந்து பாத்தாத்தான் படம் தெரியுதாக்கும்.”

படபடவென்று பொரிந்த விநோதினி, அப்போது படுக்கையறையிலிருந்து கூப்பிடு தூரத்தில் ரஸியா நடந்து கொண்டிருப்பதை அவதானித்துக் கடைசி ரெண்டு வாக்கியங்களில் வால்யூமைக் கொஞ்சம் கூட்டினாள்.

ப்ரேம், மனைவியின் கையைப் பிடித்துச் சுண்டியிழுத்தான்.

“ஸ்ஸ். விநோ மெதுவாப் பேசு. ரஸியா காதுல விழுந்தா வருத்தப்படுவா. கொஞ்சங்கூட இங்கிதமில்லாமக் கத்தறியே விநோ?”

“அவ காதுல விழட்டும்னுதாங்க சொல்றேன்; அப்பவாவது புத்தி வருதா பாக்கலாம்.”

விநோதினியின் புலம்பலுக்குப் பலன் இருந்தது. ஸோஃபாவில் சுதந்திரமாய் உட்கார்ந்திருந்த குழந்தைகளை நோக்கிப் போன ரஸியா, அவர்களை வலுக்கட்டாயமாக இடப்பெயர்ச்சி செய்து, ஸோஃபாவுக்கு முன்புறம் தரையில் உட்கார்த்தி வைத்தாள். முரண்டு பிடித்த சின்னவளுக்கு ரெண்டு உதையும் கிடைத்தது. முதுகைத் தடவிக் கொண்டு அதுவும் பெரியவனும் தரையில் உட்கார்ந்து அண்ணாந்து டி.வியைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்க்க ப்ரேமுக்குப் பரிதாபமாயிருந்தது.

“எவ்வளவு பெரிய கொடுமைக்காரியா இருக்க நீ விநோ?” என்று மனைவியை அவன் கடிந்து கொண்டிருந்தபோது ஹாலில் அப்பாவின் குரல் பெரிதாய்க் கேட்டது.

“என்ன கொழந்தைங்களா, கீழ ஒக்காந்துட்டீங்க! தரையில் ஒக்காந்து பாத்தாத்தான் படம் நல்லாத் தெரியுதா?”

கள்ளங்கபடமறியாத அந்தப் பிஞ்சுகள் ரெண்டும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. பிறகு எழுந்து நின்று அவரிடம் முறையிட்டன.

“அதில்ல தாத்தா, நாங்க ஸோஃபால ஒக்காரக் கூடாதாம்.”

பெரியவருடைய குரல் உயர்ந்தது.

“யார் சொன்னது அப்படி?”

சடக்கென்று அவர் இவர்களுடைய பெட்ரூம் பக்கம் பார்வையைத் திருப்பவும், ப்ரேமும் விநோதினியும் கதவுக்குப் பின்னால் மறைந்து கொண்டார்கள்.

“உம்மாதான் சொன்னாங்க தாத்தா!” என்று பெரியவன் சொல்லவும், பெரியவர் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு ரஸியாவுக்குக் குரல் கொடுத்தார்.

ரஸியா அவர் முன்னால் பிரசன்னமாகி அமைதியாய்த் தலை குனிந்து நின்றாள்.

“கொழந்தைங்க ஸோஃபால ஒக்காரக் கூடாதுன்னு சொன்னியாம்மா?”

அவளிடமிருந்து பதிலேதும் இல்லை. குனிந்த தலை நிமிரவுமில்லை.

“ஏம்மா அப்படிச் சொன்ன? இங்க யாராவது ஏதாவது சொன்னாங்களாம்மா?”

திரும்பவும் அவருடைய பார்வை பெட்ரூமை நோக்கித் திரும்பியது.

ரஸியா மௌனமாகவே இருந்தாள். பிறகு, பெரியவர் குழந்தைகளை நோக்கிப் பார்வையைத் தாழ்த்தினார்.

“ஒங்கம்மா சொன்னது சரிதான், கொழந்தைங்களா... நீங்க ரெண்டு பேரும் இனிமோ ஸோஃபால ஒக்காரக்கூடாது.”

குழந்தைகள் முகங்களையுயர்த்தி தாத்தாவை அவநம்பிக்கையாய்ப் பார்த்தன.

ரஸியாவும்.

இங்கே விநோதினிக்கு எக்கச்சக்கமாய் சந்தோஷம். உற்சாக மிகுதியில் முழங்கையை மடக்கி ஓர் இடி இடித்தாள் ப்ரேமின் விலாப்புறத்தில். "பரவாயில்லையே, ஒங்கப்பாக்கு இருந்திருந்தாப்ல புத்தி தெளிஞ்சிருச்சு போலயிருக்கே! ஒங்கம்மாவுக்கும், ஒங்களுக்கும் எப்பத் தெளியப்போகுதோ...?"

சுவாரஸ்யமில்லாமல் ஹாலுக்குள் பார்வையைச் செலுத்திய ப்ரேம், அடுத்த சில விநாடிகளில் முகம் மலர்ந்தான்.

பெரியவர் ஸோஃபாவில் வசதியாய் உட்கார்ந்து, அந்தச் சின்னக் குழந்தைகள் இரண்டையும் இழுத்துத் தன்னுடைய மடியில் இருத்தி அழுத்தமாய் அணைத்துக் கொண்டார்.

"இனி ஒங்க ரெண்டு பேருக்கும் இங்கதான் எடம்!"

குழந்தைகள் ரெண்டும் குதூகலித்து, தாத்தாவைக் கெட்டியாய்க் கட்டிக்கொள்ள, கண்கள் பனிக்க ரஸியா அவரை நன்றியோடும், பாசத்தோடும் பார்த்தபடி நின்றாள்.

விநோதினியின் முகத்தில் பூத்திருந்த சிரிப்பு, ஏமாற்றத்துக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டது.

உதட்டைப் பிதுக்கியபடி அவள் ப்ரேமிடம் அலுத்துக் கொண்டாள்.

"நாந்தான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன். ஒங்க குடும்பத்தத் திருத்தவே முடியாதுங்க."

ப்ரேம் அவளைப் பார்த்துப் பெருமையாய்ச் சிரித்தான்.

-இதயம் பேசுகிறது, 6.12.1998, 13.12.1998

# கோடைப் பனி

திருவனந்தபுரம் சென்ட்ரலில் படபடக்கிற இதயத்தோடு ரிஸர்வேஷன் சார்ட்டில் தன்னுடைய பெயரைத் தேடினான்.

ரெண்டாம் வகுப்பில் பெயர் இல்லை.

இன்னும் அதிகப் படபடப்புடன் ஸெகண்ட் ஏ.ஸி பட்டியலைப் பார்த்தான்.

படபடப்பு நின்று போயிற்று.

இவனுடைய பெயர் கொட்டை எழுத்தில். போச். எண்ணூறு ரூபாய் பழுத்துவிட்டது. ஒண்ணரை மணிக்கு சென்னை மெயில். மணி ஒண்ணு பதினஞ்சு ஆச்சு.

ரெண்டாவது ப்ளாட்ஃபார்மை அடைந்து ஏ ஒன் பெட்டியைத் தேடி ஏறிக் கொண்டான். ஏ.ஸியின் ஐஸ் காற்று குப்பென்று மூஞ்சியில் அடித்தது. அதே சமயம் இந்தக் குளிரின் விலை மனசை உறுத்தியது.

எண்ணூறு ரூபாய்!

நல்ல பசி. ஆனால் சாப்பிட மனசில்லை.

எஞ்ஜினிலிருந்து மூணாவது பெட்டி. அட, இன்னும் எஞ்ஜினைக் கோர்க்கவேயில்லை. அப்புறம் எங்கிருந்து எஞ்ஜினிலிருந்து மூணாவது!

முதல் பெட்டியிலிருந்து ரெண்டாவது பெட்டி.

மெட்ராஸிலிருந்து வருகிற, பனிரண்டு மணிக்கு வந்து சேர வேண்டிய திருவனந்தபுரம் மெயில் இன்னும் வந்து சேரவில்லை. அது வந்த பிறகுதான் அந்த எஞ்ஜின் கழண்டு கொண்டு இந்த ரெயிலுக்குத் தலைமையேற்குமென்று தெரியவந்தது.

மெல்ல நடந்து, கிட்டத்தட்டப் பத்துப் பெட்டிகளுக்கு அப்பாலிருந்த ப்ளாட்ஃபார்ம் கான்ட்டீனை சமீபித்தான். நின்றபடியே சிலர் தின்று கொண்டிருந்தார்கள்.

பரோட்டா... இடியாப்பம்... முட்டைக்கறி...

பாவ்லாவின் நாய்க்கு மணியடித்ததும் நாக்கில் நீர் சொட்டின மாதிரி, முட்டைக்கறியை சுவாசித்ததும் இவனுக்கு நீர் ஊறியது. விழுங்கிக் கொண்டான்.

நோ. காசை விரயம் பண்ணக் கூடாது.

இன்னுங் கொஞ்ச நேரத்தில் எண்ணூறு ரூபாயைத் தண்டம் பண்ணப் போகிறவனுக்கு முட்டைக்கறியா கேட்கிறது!

கேரளத்து முத்திரையைத் தாங்கிய ஏத்தம்பழ பஜ்ஜி மட்டும் மூணே மூணு பொட்டலங் கட்டிக் கொண்டு திரும்ப ஏ ஒன்னுக்கு நடந்தான்.

ப்ளாட்ஃபார்மெங்கும் கலகலவென்று வியாபித்திருந்த சேர நன்னாட்டிளம் பெண்களிடங் கூட மனசு லயிக்க மறுத்தது.

எண்ணூறு ரூபாய்!

இந்தக் கோடை விடுமுறைக் காலத்தில் இப்படியொரு பிரயாணத்தை மேற்கொண்டதே தப்பு. அக்காவுக்கு ரெண்டாவது குழந்தை பிறந்து நாலு மாசமாச்சு. அம்மாவும் அப்பாவும் திருவனந்தபுரம் வந்து அக்காவோடும் குழந்தைகளோடும் ரெண்டு மாசம் வாழ்ந்து விட்டு மெட்ராஸுக்குத் திரும்பியதற்கு அடுத்த நாளிலிருந்து அம்மாவின் நச்சரிப்பு ஆரம்பம். அது உச்சக்கட்டத்தையடைந்தபோது, மேலும் தாக்குப் பிடிக்க த்ராணியில்லாமல் போன ஞாயிற்றுக்கிழமை சென்ட்ரலுக்குப் போய் ஏர்கண்டிஷன் க்யூவில் நின்று டிக்கட் வாங்கிக் கொண்டு வந்துவிட்டான்.

திருவனந்தபுரத்துக்குப் போவதற்கு கிடைத்துவிட்டது. ரிட்டன் டிக்கட் கன்ஃபம் ஆகாமல் வெய்ட்டிங் லிஸ்ட்டில் இருந்தது. எழுபத்தாறு. சந்தேகமேயில்லை. கன்ஃபம் ஆக வாய்ப்பே இல்லையென்று சொன்னார்கள்.

அன்ரிஸர்வ்ட் நெருக்கடியிலும் புழுக்கத்திலும் திருவனந்தபுரத்திலிருந்து மெட்ராஸ் வரை பிரயாணம் செய்ய இயலவே இயலாது.

எப்படியும் கன்ஃபம் ஆகியே ஆக வேண்டும்.

எம்.எல்.ஏயிடம் போனான்.

தேர்தலில் அவருக்காக ராப்பகல் உழைத்துக் கிட்டத்தட்ட ரெண்டாயிரம் ஓட்டு சம்பாதித்துக் கொடுத்த நன்றிக்கு இது கூடவா செய்ய மாட்டார்!

“சார் எமர்ஜென்ஸி கோட்டா ரிலீஸ் பண்றதுக்கு ஒங்க லெட்டர் ஹெட்ல ஒரு ரிக்வஸிஷன் எழுதிக் குடுத்தீங்கன்னா...”

“ட்ரிவேன்ட்ரம் தான?”

“இல்ல சார், ரிட்டன் டிக்கட். ட்ரிவேண்ட்ரம் ட்டு மெட்ராஸ்.”

“எந்த க்ளாஸ்”

“இதென்ன சார் கேள்வி! ஸெகண்ட் க்ளாஸ் தான்.”

எம்.எல்.ஏ நிமிர்ந்து பார்த்தார். பிறகு ஒண்ணும் பேசாமல் லெட்டர் பாடை எடுத்து வைத்துக் கொண்டு இவனிடம் டிக்கட்டுக்குக் கை நீட்டினார். இவன் தந்த டிக்கட்டிலிருந்த விவரங்களைப் பதிந்து கொண்டு திருப்பிக் கொடுத்தார்.

பிறகு, தாடையைத் தடவியபடி இவனைப் பார்த்தார்.

“ட்ரிவேன்ட்ரம் ட்டு மெட்ராஸ் ஸ்ரெய்ட் பஸ் கூட இருக்கே.”

“இருக்கு சார். அவ்வளவு தூரம் பஸ்ல ட்ராவல் பண்ண முடியாது. எனக்கு அடிக்கடி பாத்ரூம் போகணும்.”

“அப்ப நீ நம்ம ஜாதி! அதான பாத்தேன். நீ எக்குத்தப்பாப் பேசினாலும் ஒம்மேல கோவமே வரலியேன்னு! நம்ம ரெண்டு பேருக்கும் என்னமோ ஒரு ஒத்துமை இருக்குன்னு எனக்குத் தோணிக்கிட்டேயிருந்துச்சு! சரி, நீ என்ன பண்ற, ட்ரிவேன்ட்ரம் போய் எறங்கின வொடனே ரயில்வே கமர்ஷியல் ஆ஀ஃபீஸ் எங்கயிருக்குன்னு விசாரிச்சுக்கிட்டு நேரா அங்க போற. இந்த ஈ க்யூ லெட்டர அங்க பெட்டியில போட்டுட்டு அப்பறமா ஒங்க அக்கா வீட்டுக்குப் போற. ஆட்டோ புடிச்சிக்க, ட்ரிவேன்ட்ரத்துல ஆட்டோச் சீப்தான்.”

“ரொம்பத் தாங்ஸ் சார்” என்று இவன் கிளம்பின போது “அத வாசிச்சிப் பாத்தியா” என்று அவனை நிறுத்தினார்.

“இல்லையே சார்.”

“பாரு. வெயிட்டிங் எழுபத்தாறுன்னா செகண்ட் க்ளாஸ் கெடக்கிறது ரொம்பக் கஷ்டம். செகண்ட் க்ளாஸ்ல சான்ஸ் இல்லன்னா, செகண்ட் ஏ.ஸி குடுத்தாப் பரவாயில்லன்னு எழுதியிருக்கேன். ஸண்டே கட்டாயம் கௌம்பியாகணும்ல?”

“செகண்ட் ஏ.ஸியா!”

“ஆமாப்பா. ஒரு எண்ணூறு ரூபா அதிகமாகக் கட்ட வேண்டியிருக்கும்.”

இவனுக்குக் ‘குபுக்’கென்றது.

“எண்ணூறு ரூபாயா!”

“என்ன வாயப் பொளக்கற! இல்லன்னா அன்ரிஸர்வ்ட்ல வா.”

ரயில் புறப்படுகிற சமயம், கண்ணாடித் திரை போட்ட ஜன்னலோரமாய் உட்கார்ந்து பொட்டலத்தைப் பிரித்து ஒரு பஜ்ஜியையெடுத்துக் கடிக்கப் போகிற நேரத்தில் டிக்கட் பரிசோதகர் ப்ரசன்னமானபோது எம்.எல்.ஏ சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

“... இல்லன்னா அன்ரிஸர்வ்ட்ல வா...”

அப்படிக்கூட செய்திருக்கலாமோ?

அன்ரிஸர்வ்ட் கம்ப்பார்ட்மென்ட் பக்கம் போய் எட்டிப் பார்க்கக் கூடத் தோணாமப் போச்சு.

இப்போ ட்டு லேட்.

பர்ஸைத் திறந்து எட்டுத் தாள்களை எடுத்துப் பரிசோதகரிடம் நீட்டியபோது கை அதிர்ந்ததை உணர முடிந்தது.

பஜ்ஜி தின்ன மனசு வரவில்லை. அப்படியே கட்டி வைத்துவிட்டு மேலே ஏறிப் படுத்துக் கொண்டான். ராத்திரி சாப்பிட்டுக் கொள்ளலாம்.

எர்ணாகுளத்தில் உறக்கங்கலைந்து பார்த்தபோது கால் மாட்டில் தலையணை, பெட்ஷீட், டவல் மற்றும் போர்த்திக் கொள்ள ஒரு அட்டகாசமான கம்பளி!

கோடையிலே கம்பளி!

என்ன கூத்தெல்லாம் செய்கிறது இந்த எண்ணூறு ரூபாய்!

நாலு பெர்த்கள் கொண்ட அந்தத் தொகுதியில் இவனைத் தவிர மூணு பேர் இருந்தார்கள், இவனிலிருந்து வெகுவாய் வித்தியாசப்படுகிற தோரணையில்.

தொழிலதிபர்களாகவோ, டாப் எக்ஸிக்யூட்டிவ்களாகவோ இருக்க வேண்டும்.

கான்ட்டீன் சிப்பந்தி செவ்வகத் தட்டுகளில் பொத்திப் பொத்திக் கொண்டு வந்த உணவு வகைகளும் மினரல் வாட்டர் பாட்டில்களும் காலியாகிக் கொண்டிருந்தன.

இவன், கீழே இறங்கி பாத்ரூம் போய்விட்டு வந்து, மத்யான பஜ்ஜிகளை மறைவாய் விழுங்கினான்.

பிறகு, மூக்கு வரைக்கும் கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துக் கொண்டான்.

பகல்த் தூக்கம் ராத்திரித் தூக்கத்திற்கு வில்லங்கமாயிருந்தது.

கொஞ்ச நேரம் மறந்திருந்த இந்த எண்ணூறு ரூபாய் சமாச்சாரம் திரும்பவும் நினைவுக்கு வந்து சங்கடப்படுத்தியது.

என்னவெல்லாம் செய்திருக்கலாம் இந்த எண்ணூறு ரூபாயில்...

அக்கா குழந்தையின் பிஞ்சு விரலுக்கு சின்னதாய் ஒரு மினி மோதிரம் வாங்கி மாட்டியிருக்கலாம்.

அம்மாவுக்கு ஒண்ணும் அக்காவுக்கு ஒண்ணுமாய் ரெண்டு புடவைகள் எடுத்து ரெண்டு பேரையும் புளகாங்கிதப்படுத்தியிருக்கலாம்.

அடுத்த மாசமோ அல்லது அதுக்கடுத்த மாசமோ அம்மாவின் முறுக்கு டின்னோட இன்னொரு பிரயாணம் திருவனந்தபுரத்திற்கு மேற்கொண்டிருக்கலாம்.

...குறைந்தது மூணு ஞாயிற்றுக்கிழமைகளாவது திருச்சிக்குப் போய் நம்ம ஆளை தரிசித்துவிட்டு வந்து கனவு கண்டு கொண்டிருக்கலாம்...

இந்தக் கோடைக் குளிருக்கும் கம்பளிக்கும் கொடுத்த வாடகையில் எல்லாமே போச்சு.

இமைகளைத் தூக்கம் எப்போது தாக்கியதோ தெரியாது, காலையில் காட்பாடியில் கண்விழித்த கணமே திரும்பவும் உறுத்தல் ஆரம்பமாகிவிட்டது.

ரயில் பிரயாணங்களின்போது, காலையில் எழுந்ததுமே பல் விளக்கி, ஷேவ் செய்து, ரயிலை விட்டு இறங்குகிற போது புத்துணர்ச்சியோடு இறங்குவான்.

இன்றைக்கு அப்படி எதுவுமே செய்யத் தோணவில்லை. டாய்லெட் போய் வந்ததோடு சரி.

சென்ட்ரலில் வண்டி நின்றதும் சக பயணிகள் எல்லாரும் இறங்கிவிட்ட பிறகு இவன் சாவகாசமாய்த் தலைவாரிக் கொண்டு செருப்பை மாட்டிக்கொண்டு கடைசி மனிதனாய் இறங்கினான்.

இறங்கினவன், ஏதோ நினைவுக்கு வந்தவனாய்த் திரும்பவும் பெட்டியில் ஏறினான். தன்னுடைய பிரயாணப் பையின் சைடு பாக்கெட்டைத் திறந்து அதில் எப்போதும் வைத்திருக்கிற பாலிதீன் பையை எடுத்து விரித்தான், அக்கம்பக்கம் பார்த்து, தன்னை கவனிக்க யாரும் இல்லையென்று உறுதி செய்து கொண்டான்.

ரெண்டு ஸீட்களுக்கு இடையேயிருந்த சின்ன மேஜை மேலேயிருந்த காலி மினரல் வாட்டர் பாட்டில்கள் நாலையும் எடுத்துப் பாலிதீன் பைக்குள்ளே திணித்துக் கொண்டு கீழே இறங்கினான்.

# இனச் சேர்க்கை

சிவாவுக்கு 'இது எப்படி சாத்தியப்பட்டது!' என்று இன்னும் ஆச்சர்யமாய்த்தானிருந்தது. முந்தா நாள்தான் கொழும்பிலிருந்து ரஸாக்குடைய ஃபோன் வந்தது. அதன் பிறகு ரிக்கற் எடுத்து, வெயிற்றிங் லிஸ்ற்றிலிருந்ததை கன்ஃபம் செய்து, மற்ற சம்பிரதாயங்களெல்லாம் முடித்து, இதோ இப்போது ஏர்லங்கா விமானத்தில் பறந்து கொண்டிருப்பது தான்தானா என்று கிள்ளிப் பார்த்து உறுதி செய்து கொண்டான்.

விமானம் உயர எழும்ப எழும்ப நினைவுகள் தாழப்பறந்து பதினாலு வருஷங்கள் பின்னோக்கிச் சென்றன.

1983 ஆம் வருஷம்.

மருதானையில் புஸ்தகக் கடை வைத்து நாலு வருஷ உழைப்பில் சதம் சதமாய் சேமித்து, கொழும்பின் எல்லையில் கெலனியாவில் இவன் கட்டி முடித்தக் கனவு வீடு சரமாரியாய்க் கற்களால் தாக்கப்படுகிறது. அந்த ஞாயிற்றுக்கிழமை, ரஞ்சினியும் இவனும் பீதியோடு சன்னலுக்கு வெளியே பார்க்கிறார்கள். வெளியே காட்டுக் கூச்சலோடு கையில் கற்களோடும் தீப்பந்தங்களோடும் சிங்களக் காடையர்கள்.

ரெண்டு வருஷங்களுக்கும் மேலாய் இவர்கள் புழங்கி வந்த நகர்ப்புறப் பகுதி அது. தினசரி அங்கே பார்க்கிற சிங்கள முகங்களில் ஒன்றிரண்டாவது இந்தக் கும்பலில் தட்டுப்பட்டால், அந்த முகங்களில் சிநேகம் தேடி, எதிர்நோக்கியுள்ள பேராபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்றால் அறிமுகமான முகங்கள் ஒன்று கூட இல்லை.

தலைக்கட்டுக்குள் பாதி ஒளிந்திருந்த ஒரு முகம் மட்டும் பரிச்சயமானதாய்த் தெரிந்தது. கையில் தீப்பந்தத்தோடும் கண்களில் கொலை வெறியோடும் நிற்கிற அவன் யார்? ஓ! நாணயக்கார! சிவாவுடைய கார்ச் சாரதி.

ஐயோ இது என்ன! வெறிக் கூச்சலுக்கிடையே, கராஜில் நிற்கிற இவனுடைய புத்தம் புது போஜோ காருக்கு நெருப்பு வைக்கிறான். தானே சாரதியாயிருக்கிற காருக்கு நெருப்பு வைக்க இந்தப் பாவிக்கு எப்படி மனசு வந்தது. எவ்வளவு விசுவாசமான ஊழியனாயிருந்தான்! உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்பதெல்லாம் இந்த இனக் கலவரத்தின் முன்னால் நீரில் கரைந்த உப்பாகிவிடுமா?

கார் கொழுந்து விட்டு எரிகிறது. வீட்டின் வெளிக் கண்ணாடிகளெல்லாம் ஒவ்வொன்றாய் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வன்முறை கும்பலிடம் உரக்கக் கத்தி ஏதோ சொல்லிவிட்டு நாணயக்கார, தனியாய் வீட்டுக்குள்ளே பிரவேசிப்பதை ரஞ்சினியும் சிவாவும் மாடி அறையிலிருந்து பயத்தோடு பார்க்கிறார்கள். அடுத்த சில விநாடிகளில் அவன் மாடியறையில் இவர்கள் முன்னே நிற்கிறான். இவர்கள் ரெண்டு பேரும் சுவரோடு ஒட்டியபடி, நேற்று வரை இவர்கள் முன் கைகட்டி நின்றவனிடம் உயிர்ப்பிச்சை கேட்கிற மாதிரி அவனைக் கலவரத்தோடு பார்த்து நிற்கிறார்கள். நாணயக்கார சிங்களத்தில் இவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

“என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் மஹத்தயா. நீங்களும் என்னை மன்னியுங்கள் நோனா. காரை நான் கொளுத்தாமல் விட்டிருந்தால் என் மேல் இவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்காது. நான் உங்கள் முன்னே இப்போது நின்று கொண்டிருந்திருக்க முடியாது. வீட்டைத் தரைமட்டமாக்காமல் இவர்களுடைய வெறி அடங்காது. வீட்டைக் காப்பாற்ற முடியாது. உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். பின்வழியாய் சுவரேறிக் குதித்து ஓடி விடுங்கள். நான் துணைக்கு வருகிறேன். பொலீஸ் ஸ்ரேஷனில் போய்த் தஞ்சமடைந்து விட்டால், மற்றதைப் பொலீஸ் பார்த்துக் கொள்ளும்.”

பல நாளாய் கற்பனை பண்ணித் திட்டமிட்டு செங்கல் செங்கலாய்க் கட்டின வீடு திரும்பவும் செங்கல் செங்கலாய்ப் போய்விட்டது. நாணயக்காரவின் உதவியால் பொலீஸ் ஸ்ரேஷன் வந்து, ராத்திரி முழுவதும் வெறும் தரையில் உட்காந்த நிலையிலேயே இவர்களைப் போல அங்கே வந்து சேர்ந்த பாவப்பட்ட தமிழர்களோடு கலவரக் கதைகளையும் கண்ணீரையும் பரிமாறிக் கொண்டு இரவைக் கழித்துவிட்டு விடிய, பொலீஸ் வேனில் அடைக்கப்பட்டு பம்பலப்பட்டி முருகன் கோவில் அகதி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கேயிருந்து உடுத்திய துணியோடு காலில் செருப்புக் கூட இல்லாமல் நடந்து கொல்லுப்பிட்டியில் ரஸாக் வீட்டுக்கு வந்து, அவனைக் கட்டிக் கொண்டு கதறி...

கொழும்பில் ஒரு முஸ்லீம் நண்பனாய் ரஸாக் இருந்ததால், மூணு மாசம் அவன் வீட்டில் பாதுகாப்பாய்த் தங்கியிருக்க முடிந்தது.

பிறகு, இவர்களுக்கு விமான ரிக்கற் எடுத்துக் கொடுத்து, இந்தியாவில் நண்பர்களுக்குக் கடிதம் கொடுத்து, முப்பதாயிரம் ரூபாய்க்கு அமெரிக்க டொலர்ஸ் மாற்றிக் கொடுத்து சென்னைக்கு விமானமேற்றிவிட்டது ரஸாக் தான்.

சென்னைக்கு வந்த பின்னால் ஆரம்பத்தில் ரஸாக்கோடு அதிகமான கடிதத் தொடர்பு இருந்தது. காலம் செல்லச் செல்ல, சென்னையில் நன்றாய்க் காலூன்றிக் கொண்டபின், அலுவல்களும் அதிகமான பின், கடிதப் பரிமாற்றம் வெகுவாய்க் குறைந்து விட்டது. மூணு நாலு மாசத்துக்கொருதரம் பரஸ்பரம் நலன் விசாரித்து எழுதிக் கொள்வதோடு சரி.

முந்தா நாள் எதிர்பாராமல் ரஸாக்கிடமிருந்து ஃபோன். உம்மாவை ஹொஸ்பிடலில் சேர்த்திருக்கிறானாம், ஒரு ஓப்பரேஷனுக்காக. அவவுடைய ரத்தம் ஏ.பி.ஓர் ஹெச் நெகட்டிவ். ரொம்ப ரொம்ப அபூர்வமான குரூப். ஆட்களை சரி செய்து பிரதம மந்திரியின் கந்தோரில் லிஸ்ற் எடுத்துப் பார்த்ததில் சிவப்பிரகாசம் என்றொரு பெயர் இருந்ததாம், சிவாவுடைய கெலனியா விலாசத்தோடு. ரஸாக்குக்கு வலு சந்தோசமாம். உடனே சிவாவுக்கு ஃபோன்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் தனக்கு வகுப்புத் தோழனாயிருந்து, தீபாவளிக்கு இங்கேயும் ரம்ஜானுக்கு அங்கேயுமாய் விருந்துகளையும் குதூகலங்களையும் பரிமாறிக் கொண்டிருந்து, கடைசியில் கலவரத்தில் அரணாயிருந்து பாதுகாத்த நண்பன் கேட்டதால், கொழும்புப் பக்கமே தலை வைத்துப் படுக்கக்கூடாது, சிங்கள முகங்களில் விழிக்கவே கூடாது என்ற இவனுடைய வைராக்கியத்தைத் தளர்த்த நேர்ந்தது.

பண்டாரநாயகா சர்வேதேச விமான தளத்தில் சுங்கச் சோதனை, இமிக்ரேஷன் எல்லாம் முடிந்து வெளிவாயிலுக்கு வந்த போது உடம்பெல்லாம் சந்தோஷமாய் அங்கே ரஸாக்.

இவனைப் பார்த்ததும் ஓடிவந்து கட்டிக் கொண்டான். ரெண்டு பேரும் உணர்ச்சி வசப் பட்டுக் கொஞ்ச நேரம் மௌனத்தைப் பரிமாறிக் கொண்ட பின்னரே வார்த்தைகள் உருப்பெற்றன.

“ஏன் மச்சான் உன்னை ஏர்ப்போற்றுக்கு வரவேண்டாமென்றுதானே சொன்னனான், உம்மாவை ஹொஸ்பிடலிலை வச்சிட்டு நீ ஏன் வந்தினி? நான் ஒரு ராக்ஸி புடிச்சிட்டு வந்திருப்பன்தானே?”

“நீ என்ன விசர்க்கதை கதைக்கிறாய் மச்சான். கன காலத்துக்கப்புறம் சந்திக்கிறம், எப்படியும் வந்து சேர் எண்டு விட்டிடறதுதான் நாகரிகமே? நாங்கள் எத்தனை விஷயம் கதைக்க வேண்டியிருக்கு. காரிலை போகேக்குள்ளே கதைச்சுக் கொண்டே போகலாம்தானே. பேசாமல் காரிலை ஏறு.”

“கதைக்க வேண்டுமென்கிறாய், பிறகு காரிலை பேசாமல் ஏறுங்கிறாய்...”

“பகிடி பண்ணாதை மச்சான். கொழும்பு எப்பிடி மாறிப் போயிருக்குது எண்டு பார்த்துக் கொண்டே வா.”

காரில் போகிற போது பதினாலு வருஷ சங்கதிகளைக் கதைத்துக் கொண்டே போனதில் நேரம் போனதே தெரியவில்லை.

பாதையெங்கும் பதினாலு வருஷ மாற்றங்களும் முன்னேற்றங்களும் தெரிந்தன.

சிவாவுக்கு மிகவும் பரிச்சயமான காலி வீதியில், மெஜஸ்ற்றிக் தியேற்றர் இருந்த இடத்தில் ஒரு பிரம்மாண்டமான ஷொப்பிங் கொம்ப்ளக்ஸ் இப்போது. கிரீன் காபினுக்கு எதிரே ஷறாஸ் கடை இருந்த இடத்தில் ஒரு நவீன நகைக்கடை. எத்தனையோ ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள். எத்தனையோ அடுக்கு மாடிக் கடைகள்.

கார் ரேடியோவில் பொங்கும் பூம்புனல் இசைத்துக்கொண்டிருந்தது. மயில் வாகனன் காலத்திலிருந்து அப்துல் ஹமீத், கே.எஸ்.ராஜா காலம் வரை தமிழ் மக்களின் வாழ்க்கையின் ஓர் இணைபிரியாத அங்கமாகவே ஆகிவிட்டிருந்த இலங்கை வானொலியைப் பதினாலு வருஷம் பிரிந்திருந்ததெப்படி என்பது ஆச்சர்யமாயிருந்தது.

கொல்லுப்பிட்டியிலிருந்த வாடகை வீட்டை விட்டுவிட்டு ரஸாக் இப்போது வெள்ளவத்தையில் சொந்த வீடு வாங்கியிருந்தான்.

வீட்டில் ரஸாக் மனைவி மலர்ந்த முகத்தோடு வரவேற்றாள்.

“பிரதர் வாங்கோ. ரஞ்சினியையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாம்தானே.”

சிவா, சிரித்தபடி ஏதோ சமாதானஞ் சொல்ல வாயெடுக்க, ரஸாக் வழி மறித்தான்.

“இன்ஷா அல்லா அடுத்த தடவை கூட்டிக் கொண்டு வருவினம், என்ன மச்சான்? கொழும்புக்கு இப்ப வழி தெரிஞ்சிட்டுதுதானே?”

“குளிச்சிட்டு வாங்கோ, உங்களுக்குப் பிடிச்ச இடியாப்பம், சொதி, வட்டலாப்பம் எல்லாம் செஞ்சு வச்சிருக்கன். சாப்ட்டுட்டு ஹொஸ்பிடலுக்குப் போக வெளிக்கிடலாம். ஒரு வாரம் பத்து நாள் நிப்பியள்தானே?”

“இல்லையம்மா, நாளை ராத்திரி ஃப்ளைற். றிட்டன் ரிக்கற் எடுத்துத்தான் வந்தனான்.”

“இதென்ன பேசறியள்? பதினாலு வருஷம் கழிச்சி வந்திருக்கிறியள்!”

“ஓமப்பா, பதினாலு வருஷம் ஆச்சு. ஆனா ரஞ்சினி அஞ்ச தனியா நிக்கிறவதானே?”

ஆசுப்பத்திரியில் டொக்டர் தவராசா இருந்தார். இவர்கள் கொழும்பில் இருந்தபோது இவர்களுக்குக் குடும்ப டொக்டர். கலவரத்தில் அவரும் பாதிக்கப்பட்டு, அவுஸ்திரேலியாவில் போய் இருந்து, ரெண்டு வருஷம் முந்திதான் கொழும்புக்குத் திரும்பியிருக்கிறார் என்று ரஸாக் சொல்லியிருந்தான்.

பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பிறகு, ரத்தம் கொடுக்கும் அறைக்குக் கொண்டு செல்லப்பட்டு ரத்தம் எடுக்கப்பட்டது. அடுத்த மாடியிலிருந்த தியேற்றரில் ரஸாக்கின் தாய்க்கு ஒப்பரேஷன் என்று சொன்னார்கள். ஓய்வுக்காக இவன் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

ரஸாக்கின் வீட்டில் கட்டிலில் படுத்தபடி ரூபவாஹினி, ஐட்டி என் என்று மாறி மாறி ரிவி பாரத்துக் கொண்டிருந்ததிலும், பழைய வீரகேசரிகளின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்ததிலும் அன்றைய தினம் கழிந்தது. நாளைக்குத்தான் ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டும். பிறகு, ராத்திரி, சிறிலங்காவுக்கு ஐபோவன்!

அடுத்த நாள் எழுந்தபோது, களைப்பு நீங்கி பெருமளவு தெம்பு திரும்பிவிட்ட மாதிரி இருந்தது. பல்லுத் தீட்டி, குளித்து முடித்து, சாப்பாட்டு மேசையில் பாண் மற்றும் பொல்சம்பலை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தபோது ரஸாக்கை விசாரித்ததில், விடிய எழுந்து அவன் ஹொஸ்பிடலுக்குப் போய்விட்டதாய் மனைவி சொன்னா.

தன்னுடைய ரத்தத்தைப் பெற்றுக் கொண்ட அந்தத் தாயை வருத்தம் பார்க்க போகவில்லையே என்று உறைத்தது. காலையில் அந்த வேலையை முதலில் முடித்து விட வேண்டுமென்று ஹொஸ்பிடலுக்குப் போனால் அங்கே ரஸாக் கண்ணில் தட்டுப்படவில்லை.

அங்கேயிருந்த நர்ஸ்களிடம், தான் நேற்று ரத்தம் கொடுத்த விவரத்தைச் சொல்லி, ரத்தம் பெற்ற தாயின் அறையை விசாரித்து அங்கே போனால் அங்கே வேறு யாரோ ஒரு பெண்மணி.

மிஸஸ் தர்மவர்தன என்று பேர் சொன்னார்கள்.

சிங்களப் பெயர்.

“இவ இல்லையப்பா. ஒரு முஸ்லிம் மனுசி.”

“ஏ.பி.ஓர் ஹெச் நெகட்டிவ்தானே?”

“ஓம்.”

“நேற்று ஓப்பரேஷன் நடந்தது தானே?”

“ஓம்.”

இந்தியாவிலையிருந்த வந்து ரத்தம் குடுத்ததுதானே?”

“ஓம், ஓம்.”

“அது இந்த மனுசிதான்.”

தனக்கெதிராய் ஒரு திட்டமிட்ட சதி நடந்திருப்பது சிவாவுக்குப் புரிய ஆரம்பித்தது. ரஸாக்கும் டொக்டரும் எல்லாரும் சேர்ந்து ஏமாற்றியிருக்கிறார்கள். போயும் போயும் ஒரு சிங்களப் பெண்ணுக்கா இவனுடைய தூய தமிழ் ரத்தம் தாரை வார்க்கப்பட்டிருக்கிறது!

உடம்பில் மிச்சமிருந்த ரத்தமெல்லாம் கொதித்தது.

“உவன் ரஸாக் எங்கை?”

ஆவேசமாய் ஆசுப்பத்திரி முழுக்க சுத்திச் சுத்தி வந்தான். கடைசியில் வரவேற்பு மேசைப் பக்கம் போனபோது, அப்போதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்த ரஸாக் கண்ணில் பட்டான்.

சிவா பாய்ந்து போய் ரஸாக்கின் சட்டைக் கொலரைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்க, அவன் வாயைத் திறந்து வார்த்தைகளால் குதற ஆரம்பிக்கு முன்பே ரஸாக்குக்கு விஷயம் விளங்கிவிட்டது.

பற்றிய கொலரை விடுவிக்காமலேயே சிவா கத்த ஆரம்பித்தான்.

“கேவலம் ஒரு சிங்கள மனுசிக்கு ரத்தம் குடுக்கவா இந்தியாவுலயிருந்து என்னைக் கூப்பிட்டனி? தமிழன் ரத்தம் அவ்வளவு கேவலமே? ஒண்ட உம்மாக்கு ரத்தம் என்ன உசிரைக் கூடக் குடுப்பினம். உம்மா பேரைச் சொல்லி இப்படி மோசம் பண்ணிட்டாயே மச்சான்! சீ! உன்னை மச்சாணெண்டு சிநேகமாய்ச் சொல்லுறதும் பாவம். இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது.”

ரஸாக் அவனை சாந்தப்படுத்த முயன்றான்.

“மச்சான் இஞ்சை ஹொஸ்பிடலிலை வச்சுக் குழப்படி பண்ணாதை. வா வூட்டிலை போய் ஆறுதலாய்க் கதைப்பம்.”

சிவா ரஸாக்கின் சட்டையை விடுவித்துவிட்டாலும் சினம் அதே நிலையில்தான் இருந்தது.

“வீட்டிலை போய் என்னத்தைக் கதைக்க? நீ செய்த மோசடி வேலையை இஞ்சையே சத்தம் போட்டுச் சொன்னா எல்லாருக்கும் தெரியும்.”

கட்டுப்பாடில்லாமல் கத்திக் கொண்டேயிருந்தவனைச் சுற்றி ஒரு சின்னக் கும்பல் சேர, டொக்டர் தவராசாவும் வந்து சேர்ந்தார்.

“மிஸ்டர் சிவப்பிரகாசம் உமக்கென்ன விசரே? வாசலிலை நிண்டு சத்தம் வைக்கிறியள்?”

சிவா பீரங்கியை அவர் பக்கம் திருப்பினான்.

“வாலிலை நிண்டு சத்தம் வைக்கக் கூடாதெண்டால் வாங்கோவன், அந்த மனுசிடை ரூமுக்குப் போவோம்.”

அவருடைய பதிலை எதிர்பார்க்காமல் அந்தப் பெண்மணி இருந்த அறைக்கு ஓடினான், ரஸாக்கும் டொக்டரும் பின் தொடர.

அதிரடியாய் அவன் அந்த அறைக்குள்ளே நுழைந்ததில் அதிர்ந்து, படுத்திருந்த பெண் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தா.

அறைக்குள் நுழைந்த வேகத்தில் சுவரோரமிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, குலுங்கி குலுங்கி அழுதான். அழுகை அடங்கும்போது, திரும்ப ஒரு புயல் கரையைக் கடக்குமென்று ரஸாக்கும் டொக்டரும் எதிர்பாரத்துக் காத்திருந்தார்கள்.

கடந்தது. சேதம் ரொம்ப மோசமாயிருந்தது.

“இப்பிடிப் பச்சைத் துரோகம் ஏன் செய்தனி ரஸாக் நீ? சிங்களவங்க எங்களை எவ்வளவு கேவலப்படுத்தினாங்க, எவ்வளவு கொடுமைப்படுத்தினாங்க, எல்லாம் உனக்குத் தெரியுந்தானே? கல்லூரிப் படிப்பிலை எங்களை மட்டந்தட்டினாங்கள், எங்கடை திரிகோணமலையிலை திட்டம் போட்டு சிங்களவங்களைக் குடியேற்றினார்கள். அத்தனையும் சகிச்சுக் கொண்டு சுமுகமா இருந்தம். ஆனாலும் அந்தக் காடையன்களுக்கு மனசு ஆறாமல் எங்கட வீடுகளை இடிச்சாங்கள். கார்களைக் கொளுத்தினார்கள், கடைகளை அழிச்சாங்கள், எங்கட மனுசிகளைக் கற்பழிச்சாங்கள், எங்கட பிள்ளைகளைக் கொன்று போட்டாங்கள், எங்கட ரத்தத்தைக் குடிச்சாங்கள். குடிச்ச ரத்தம் போதாதெண்டா இப்ப எண்ட ரத்தத்தை உறிஞ்சி ஒரு சிங்கள உடம்புக்குத் தந்தனி?”

அவனை ஆசுவாசப்படுத்துகிற மாதிரி ரஸாக் அவனுடைய தோளைத் தட்டிக் கொடுத்தான்.

“சிவா கொஞ்சம் பொறுமையாயிரு மச்சான். இந்த மனுசியைப் பத்தித் தெரிந்து கொள்ளாம அவ மனசைப் புண்படுத்தாதையடா.”

“சீ, கையை எடு.”

தட்டிக்கொடுத்த கையைத் தட்டி விட்டான்.

“ஒரு சிங்கள மனுசி மனசு புண்படுதெண்டு கதைக்கிறாய், எம்பத்தி மூணிலை ஆயிரமாயிரம் தமிழ்க் குடும்பங்கள் மனசும் உடம்பும் புண்பட்டு கட்டின துணியோட ஓடினதைப் பத்தி நீ கவலைப்படுகிறாயில்லை. பாலுக்கும் காவலாய் பூனைக்கும் தோழனாய் இருக்கிற இனமல்லலோ நீங்கள்! நாங்கள் கலவரத்திலை பாதிக்கப்பட்ட இனம். நீங்கள் கலவரத்தை வேடிக்கை பார்த்த இனம். உங்களுக்கு இந்த வேதனை புரியாது. எங்கட ஆத்திரம் உங்களுக்குத் தெரியாது. தமிழங்களுக்கு அனுதாபப்படுறது போல நடிப்பினம். பிறகு சிங்களவர்களோட குழைவினம். பாம்புக்கு பாலையும் மீனுக்குத் தலையையும் காட்டுகிற விலாங்கு மீன் ஜாதியல்லோ உங்கள் இனம். அதுதான் நீ இப்படிக் கேவலமான காரியம் செய்தனி.”

சிவாவுடைய அபாண்டங்கள் ரஸாக்கின் மனசின் மென்மையான பகுதியைக் குதறி ரணப்படுத்திவிட்டதென்பது அவன் கண்கள் பனித்ததில் தெரிந்தது. ரஸாக் வாயடைத்துப் போனதையடுத்து டொக்டர் தவராசா வாயைத் திறந்தார்.

“மிஸ்டர் சிவப்பிரகாசம், நீங்கள் அளவுக்கு மீறிப் போயிட்டியள். போதும் இதுக்கு மேலை கதைக்க வேண்டாம். ஆனது ஆகிப் போச்சு. இனி என்ன செய்யணுமென்டு சொல்லுறியள்?”

“சொன்னா உங்களுக்குச் செய்யேலுமே?”

“சொல்லுங்கோவன் பாப்பம்.”

“எண்ட ரத்தம் எனக்கு மறுபடி வேணும்.”

டொக்டருக்குத் தூக்கி வாரிப் போட்டுது.

மிஸஸ் தர்மவர்தன புடவைத் தலைப்பில் முகம் மறைத்துத் தேம்பினா.

முந்தைய அதிர்ச்சியிலிருந்தே இன்னும் மீளாத ரஸாக் மட்டும் சலனமில்லாமலிருந்தான்.

அதிர்ச்சியிலிருந்து மீண்டு டொக்டர் கொஞ்சம் உரத்த குரலில் எகிறினார்:

“என்ன விசர்க்கதை இது மிஸ்டர் சிவப்பிரகாசம், உள்ளே போன ரத்தத்தைத் திருப்பி எடுக்கேலுமே?”

“ஏன், உண்ட உடம்பிலை ரத்தம் எடுத்து அவ உடம்புக்குள்ளை விட்டீங்கதானே, இப்ப அவ உடம்பிலை எடுத்து என் உடம்புக்குள்ளை செலுத்துங்கோவன்.”

“அவ உடம்பிலையிருந்து ரத்தம் எடுத்தா உயிர் போயிரும்.”

“கலவரத்திலை எத்தனை தமிழ் உயிர் போச்சுது! இப்ப ஒரேயொரு சிங்கள உயிருக்கு ஏன் இப்பிடி மெனக்கிடுறீங்கள்?”

இவனுடைய வெறித்தாக்குதலின் விளைவாய் மிஸஸ் தர்மவர்தனவின் கேவல்கள் அதிகமாகி அதிகமாகி உச்சக்கட்டத்தையடைந்து பிறகு மெல்லத் தணிந்தன.

அழுகைகளெல்லாம் அடங்கிப் போய், அந்த அறையில் அமைதி.

அமைதியைக் கலைத்தது மிஸஸ் தர்மவர்தனவின் குரல்.

தங்கு தடையில்லாத தமிழ்க்குரல்.

“டொக்டர், அவர் சொல்கிற மாதிரியே செஞ்சிருங்கோ.”

“நீங்களும் விசர்த்தனமாய்த்தான் கதைக்கிறியள்.”

“இல்லை டொக்டர். நான் தெளிவாய்த்தான் இருக்கிறன். அந்த ரத்தத்தை எடுத்திருங்கோ.”

“அது கொலை. என்னாலை செய்யேலாது.”

“கொலை இல்லை டொக்டர், கருணைக் கொலை, அது அனுமதிக்கப்பட்டதுதான். என் சாவினால் விளையும் நன்மைகளைப் பார்க்கும் போது நீங்கள் இதைத் தயங்காமல் செய்யலாம் டொக்டர்.”

டொக்டருக்கும் மிஸஸ் தர்மவர்தனவுக்கும் நடந்து கொண்டிருந்த வாக்குவாதத்தை சிவா ஒரு வியப்போடு அவதானித்தான்.

“டொக்டர், இவ சிங்கள மனுசியல்லோ? இவ்வளவு நல்லாத் தமிழ் கதைக்கிறவ?”

“சிவப்பிரகாசம், உமக்கும் இவவுக்கும் ஒரேயொரு வித்தியாசம்தான். உங்கட தமிழ் சத்தமான தமிழ், இவவுடைய தமிழ் சுத்தமான தமிழ். இந்தப் பைத்தியக்கார சிங்கள மனுசி எண்பத்து மூணு கலவரத்திலை பாதிக்கப்பட்ட ஏழு தமிழ்க்குடும்பங்களை வீட்டிலை வச்சு ரெண்டு மாசம் காப்பாத்தினவ. கலவரத்திலை அநாதையாகிப் போன நாலு தமிழ்ப் பிள்ளைகளைத் தத்து எடுத்து வளர்க்கிறவ, தமிழ்நாட்டிலை போய்த் தமிழ்ப் படிக்க வேணுமெண்டு ஆசைப்பட்டு, திருநெல்வேலித் தமிழ்தான் சுத்தமான தமிழ் எண்டு இந்தியா போய், திருநெல்வேலியிலை அஞ்சு வருஷம் நிண்டு தமிழ்ப் படிச்சவ. இந்த மனுசிக்குத் தேவைப்பட்ட ஏ.பி.ஹெச் நெகட்டிவ் ரத்தம் சிறியங்காவிலை எத்தனையோ சிங்களவங்களுக்கு இருந்தும், தன்னோட உடம்பிலை தமிழ் ரத்தம் கலக்க வேண்டுமெண்ட பிடிவாதத்திலை பிரைம் மினிஸ்டர் ஒஃபீஸிலை லிஸ்ற்றைப் பார்த்து ஒரு தமிழ்ப் பெயரைக் கண்டுபிடிச்சவ. அவவுடைய துரதிருஷ்டம் அந்தத் தமிழ்ப் பேர் மனிதாபிமானமே இல்லாத உங்கட பேராய் அமைந்தது.

இந்த ரஸாக்கட துரதிருஷ்டம் இந்தப் பொறுப்பு அவர் தலையிலை விடிஞ்சுது. சிங்கள மனுசியெண்டா நீங்கள் யோசிப்பினமெண்டுதான், ரஸாக் தன்னோட உம்மா

எண்டு சொன்னவர். ஆனா, இப்பிடியொரு முட்டாள்த்தனமான தமிழ் வெறியராய் நீங்கள் இருப்பினமெண்டுதான் எங்கள் யாருக்கும் தோணேல்லை."

மிஸஸ் தர்மவர்த்தன டொக்டரை இடைமறித்தாள்.

"அவரை ஒண்ணுஞ் சொல்லாதையுங்கோ டொக்டர். தப்பு எங்களுடையதுதான். காலங்காலமா தமிழினத்தை நசுக்கித்தான் வந்திருக்கிறோம். இனச்சுரண்டல் எல்லாத்துக்கும் சிகரமாய் 83 கலவரம். இந்தக் கலவரம் தந்த அந்த ரணத்தோட வடு எவ்வளவு ஆழமானது என்று நாங்கள் உணராமல் போயிட்டோம். ஒரு சிங்கள மனுசி, நாலு தமிழ்க் குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வதனாலோ, ஏழு தமிழ்க் குடும்பங்கள்க்கு சாப்பாடு போட்டதினாலேயே, திருநெல்வேலியிலை போய்த் தமிழ்ப் படிச்சதனாலேயோ அந்த ஆழமான காயத்தோட ரத்தத்தைத் துடைக்கலாம், ஆனா ரணத்தை குணப்படுத்த முடியாது என்று எனக்கு இப்போதுதான் புரிகிறது. கலவரத்திலே தமிழ் ரத்தம் குடித்த சிங்கள வெறியர்களுக்கும் இப்போது தமிழ் ரத்தத்துக்கு ஆசைப்பட்ட எனக்கும் என்ன வித்தியாசம்? மிஸ்டர் சிவப்பிரகாசம் சொல்லுறது ஞாயம் டொக்டர். அந்த ரத்தத்தை எடுத்திருங்கோ, அதனால எனக்கு மரணமே நேரட்டும். நான் இறந்தவுடனே கண்களையும் கிட்னியையும் எடுக்க ஏற்பாடு பண்ணுங்கோ. ஆனா நான் முன்னமே சொன்னது ஞாபகமிருக்கட்டும் டொக்டர். என்னுடைய கண்களும், கிட்னியையும் கூடுமானவரை ஒரு தமிழ் ஆளுக்குத்தான் போய்ச் சேர வேண்டும். நான் உயில் எழுதி வச்சிட்டேன் என் நாலு பிள்ளைகளுக்கும். எனக்குப் பிறகு என்னோட குழந்தைகளை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும் டொக்டர்."

அந்தக் கடைசி வாக்கியத்தில திருப்பவும் மனசு உடைந்து சின்னதாய் ஒரு அழுகை.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு சிவா சிலையாய் உட்கார்ந்திருந்தான்.

டொக்டர் அவன் பக்கம் திரும்பினார்.

"என்ன மிஸ்டர் சிவப்பிரகாசம், ரத்தத்தை எடுத்திருவோமா ஐஸே? ஆனால் உங்கட தமிழ் ரத்தம் சிங்கள ரத்தத்தோடை கலந்து போச்சு. நீங்கள் குடுத்த அளவு ரத்தம் எடுக்கலாம். ஆனால் சிங்கள ரத்தத்தையும் தமிழ் ரத்தத்தையும் பிரிக்கேலாது. பரவாயில்லைதானே?"

சிவாவிடமிருந்து பதில் இல்லை. டொக்டரே தொடர்ந்து பேசினார்.

"நானுந்தான் கலவரத்திலை பாதிக்கப்பட்டனான், மிஸ்டர் சிவப்பிரகாசம். ஆனா இப்பவும் அதையே நினைச்சுக் கொண்டிருந்தா நிம்மதியா வாழேலாது. நிலைமை இப்ப ரொம்ப மாறிப் போச்சு. நாங்களும் மாறத்தான் வேணும். உங்களைப் போலை விரோதத்தையும் குரோதத்தையும் வளர்த்துக் கொண்டே இருந்தா விமோசனமே இல்லை."

சிவா தலை குனிந்து உட்கார்ந்திருந்தான். வேகமெல்லாம் ஒடுங்கிப் போய் பேசுவதற்கு வார்த்தைகளுக்கு தட்டுப்பாடாய் இருந்தது. ரஸாக் இன்னும் மௌனமாகவே இருந்தான். அந்த மௌனம் சிவாவை இன்னும் சங்கடப்படுத்தியது. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்கிற மாதிரி, ஆத்திரத்தில் அசிங்கமான வாக்கியங்களைப் பாவித்து,

தனக்கு அடைக்கலம் கொடுத்த ரஸாக்கையும், தன்னைப்போன்ற பல தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த மிஸஸ் தர்மவர்தனவையும் அநாவசியமாய் வேதனைப்படுத்திவிட்டோமே என்கிற வருத்தம் தலை தூக்கியது.

ரஸாக்கையே, மிஸஸ் தர்மவர்தனவையோ ஏறேடுத்துப் பார்க்கத் தெம்பில்லை.

டொக்டரைப் பார்த்து,"ஐ ஆம் ஸொரி டொக்டர், என்னை மன்னச்சிருங்கோ" என்று சொல்லி விட்டுக் குனிந்த தலை நிமிராமல் வெளியேறினான்.

ரஸாக்கின் வீட்டில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவன் மனைவியிடமும் குழந்தைகளிடமும் விடைபெறும் போது கூட மனச்சிக்கல்தான்.

டொக்டரு ரஸாக்கும் ஏர்ப்போற்றுக்கு உடன் வந்தார்கள். காரினுள்ளே ஏ.ஸியிலும் புழுக்கம். டொக்டர்தான் இறுக்கத்தைத் தளர்த்தினார்.

"என்ன மிஸ்டர் சிவப்பிரகாசம் அதையே நினைச்சுக் கொண்டிருக்காதையுங்கோ, ரஸாக்குக்கு அது எப்பவோ மறந்திட்டுது. ஏதாவது பேசுங்கோவன்."

சிவா, ரஸாக்கின் ஒரு கையைத் தன்னுடைய கைகளில் எடுத்து "ஐ ஆம் ஸொரி மச்சான்" என்று தழுதழுத்தான்.

அதற்காகவே காத்திருந்த மாதிரி ரஸாக் அவனுடைய கழுத்தில் கையைப் போட்டுத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

ஏர்ப்போற்றில் வைத்து ரஸாக் கேட்டான்.

"ஏன் மச்சான் மெட்ராஸிலை யாராவது டொக்டர்ட்ட டெஸ்ற் எடுத்தியோ? எங்கையாம் கோளாறு?"

"அதைப் பத்தித்தான் டொக்டர் தவராசா கூட கதைக்க நினைச்சனான்."

"என்னிடத்திலை என்ன கேக்க நினைச்சியள் சிவப்பிரகாசம், சொல்லுங்கோ."

"ரஞ்சினிக்கும் எனக்கும் கல்யாணமாகிப் பதினெட்டு வருஷம்."

"ஓம்."

"டெஸ்ற் எடுத்த டொக்டர் சொன்னவர், இனி சான்ஸ் இல்லையெண்டு… அதாலை…"

"அதாதலை?"

"நான் தத்து எடுக்க நினைக்கிறன்."

"நல்ல விஷயம், ஐ ஸே."

"அடுத்தகிழமை ரஞ்சினியும் நானும் ஒருக்கா கொழும்புக்கு வருவினம்."

“அடுத்தகிழமையே?”

“ஓம் டொக்டர். மிஸஸ் தர்மவர்த்தனவையும் கலந்து, நாங்கள் கொழும்பிலை நிற்கிற நாளிலை ஒரு குழந்தையைத் தத்தெடுக்க ஏற்பாடு செய்ய வேணும் - ஒரு சிங்களக் குழந்தையை.”

சிவா பெருமிதத்தோடு சொன்னான்.

கனபேர் கூடியிருக்கிற ஏர்ப்போற் என்பதையும் யோசிக்காமல் டொக்டரும் ரஸாக்கும் சிவாவை பனித்த விழிகளோடு கட்டிக் கொண்டார்கள்.

-தமிழ் அரசி, 21.02.1999, 28.02.1999

# ஊனமும் மானமும்

குடிசைக்கு முன்னால் இற்றுப்போன கயிற்றுக் கட்டிலில் கால்களை நீட்டி உட்கார்ந்திருந்த மாணிக்கத்துக்கு முனுசாமியைப் பார்த்ததும் ரொம்ப சந்தோஷமாய்ப் போனது.

கையசைத்துக் கூப்பிட்டான். முனுசாமி இவனைக் கவனித்த மாதிரிதான் இருந்தது. ஆனாலும் அலட்டிக் கொள்ளாமல் யாரிடமோ பேசிக் கொண்டு நின்றிருந்தான்.

மாணிக்கம் கை தட்டினான். முனுசாமி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலிருந்தாலும் அவனோடு பேசிக் கொண்டிருந்தவன் ஓசை வந்த திசையில் பார்வையைத் திருப்பி மாணிக்கத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு முனுசாமியின் முகத்தைப் பிடித்து மாணிக்கத்தை நோக்கித் திருப்பினான்.

வேறே வழியில்லாமல் முனுசாமி மாணிக்கத்தை நோக்கி நடந்தான், போலிச் சலிப்புடன்.

“இன்னாபா இது பேஜார்ப் பண்ற. கொஞ்சநேரம் சொதந்தரமாயிருக்க வுட மாட்டியா? ஒன்னத் தூக்கிச் சொமந்து சொமந்தே நா குள்ளமாப் போய்ட்டேன்னு செந்தூரம் சொல்லு நா. இன்னம் நாலு இஞ்சி வளந்தாததான் என்னக் கட்டிக்குமாம். சோ, நா ரொம்ப ரொம்ப சாரி பாட்னர், நா கௌம்பறேன் ஆள வுடு.”

அங்கிருந்து நகரப்போன முனுசாமியின் கையை எட்டிப் பிடித்து இழுத்துக் கட்டிலில் அமர்த்தினான் மாணிக்கம்.

“யப்பா, இன்னா புடி புடிக்கிறபா நீ, கை நெறிய மஸில்ஸ் வச்சிக்கினு கீறியே! இன்னாத்துக்குக் கூப்ட்ட சொல்லு.”

“சொல்றேன். ஒரு சந்தோசமான சமாசாரம்ல!”

“இன்னாடா சந்தோசமான சமாசாரம், இன்னிக்கி சினிமாக்கு இட்டுக்கினு போறியா! நீ எங்க என்ன இட்டுக்கினு போப் போற. நாந்தான் ஒன்ன சொமந்துக்கினு போவணும்!”

“அதத்தான் நயினா சொல்ல வந்தேன், இனி நீ என்னச் சொமக்கவே வாணாம்!”

“ஏண்டா, நீ செகண்ட் ஹார்ன்ட்ல ஹெலிகாப்டர் ஏதும் வாங்கப் போறியா?”

“அட அது இல்லபா. ஒரு மூணு சக்கர சைக்கிள். கையில பெடல் சுத்தற சைக்கிள். புச்சு புச்சோ புச்சு!”

“அட்டி சக்க! ஏதும்மா காசு ஒனக்கு?”

மாணிக்கம் உடனே பதில் சொல்லாமல் ஒரு இடைவெளி கொடுத்தான். சட்டைக் காலரை உயர்த்திவிட்டுக் கொண்டு நண்பனைப் பெருமையாய்ப் பார்த்தான்.

“சொன்னா நீ அசந்துருவ.”

“அட, சொல்லு கண்ணு.”

“லாட்டரி சங்கம் தெரியுமா ஒனக்கு, லாட்டரி சங்கம்?”

முனுசாமி பெரிதாய்ச் சிரித்தான்.

“லாட்டரி சங்கமா? நம்மள மாதிரி சோத்துக்கு லாட்டரியடிக்கிறவனுங்க சேந்து நடத்தற சங்கமா அது? பணக்கார சங்கம்டா கண்ணு. லாட்டரி சங்கமில்ல, ரோட்டரி சங்கம்.”

“சரி ஏதோ ஒண்ணு, அந்த சங்கத்துக்காரங்க எனக்கு ஒரு மூணு சக்கர சைக்கிள் வாங்கித் தரப் போறாங்க நாளக்கி. பாபுன்னு ஒருத்தர் வந்தாரு. டையெல்லாம் கட்டி மாருதி கார்ல வந்தாரு. பேர் அட்ரஸ் எல்லாம் கேட்டு எளுதிட்டுப் போனாரு.”

“பேர் சரி, அட்ரஸ் ஏதும்மா ஒனக்கு!?”

“அட, ஒம் பங்களா அட்ரஸக் குடுத்தேன்னு தான் வச்சிக்கயேன். நாளக்கி சாயங்காலம் ஆறு மணிக்கி நாம கௌம்பறோம். ஏளு மணிக்கி விளாவாம். எங்க தெரியுமா? அடையார்ல ஒரு அஞ்சு நச்சத்தர ஓட்டல் இருக்காமே, அங்கதான்.”

முனுசாமி வாயைப் பிளந்தான்.

“அந்த ஓட்டலா! மெய்யாலுமா! எம்மாம் பெரிய ஓட்டல்பா அது! நம்ம சின்னச்சாமி அண்ணாத்த சவாரி போனப்ப ஒட்டிக்கினு ஒரு தபா ஆட்டோல போனேன். மெட்ராஸ்ல கீற பைஸ்டார் ஓட்டல்லயே அதான் பெரிய ஓட்டலாம்.”

“அப்ப அது சிக்ஸ்டாரோ செவன்ஸ்டாரோ இருக்கும்!”

மாணிக்கத்துக்கு ரொம்பப் புளகாங்கிதமாயிருந்தது. முனுசாமி கட்டிலில் அவனை நெருங்கி உட்கார்ந்து, அவனுடைய சூம்பிப் போன போலியோ கால்களைப் பரிவோடு நீவி விட்டான்.

“மாணிக்கம், நா ஒன்ன இனி சொமக்க மாட்டேன்னு சொன்னதுக்குக் கோச்சிக்கினியாடா கண்ணு? சும்மா வெளயாட்டுக்குச் சொன்னேண்டா!”

மாணிக்கம் அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டான்.

“ஒன்னப் பத்தி எனக்குத் தெரியாதா முனுசாமி! எத்தினி வருசமா சலிச்சிக்காம என்னச் சொமந்துக்கினு போற. இனி ஒன்ன நா நம்ம சைக்கிள்ள டபுள்ஸ் வச்சிக்கினு பேவேன்!”

ரெண்டு பேரும் கண்கள் பனிக்கச் சிரித்தார்கள்.

அடுத்த நாள் சாயங்காலம் சின்னச்சாமி அண்ணாத்த இவர்கள் ரெண்டு பேரையும் ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு போய் அந்த பிரமாண்டமான ஹோட்டலின் முன்னால் இறக்கி விட்டார்.

படிகளில் தவழ்ந்து ஏறப்போன மாணிக்கத்தை அணைத்துத் தூக்கிக் கொண்டான் முனுசாமி.

பதினெட்டாம் நூற்றாண்டு கிழக்கிந்தியக் கம்பெனி சிப்பாய் மாதிரி உடையணிந்து செம உயரமாய், ரெண்டாள் உயரக் கண்ணாடிக் கதவின் வெண்கலக் கைப்பிடியைப் பிடித்தபடி நின்றிருந்த காவலாளி,"தம்பி, ரோட்டரி கிளப்புக்கா?" என்று கேட்டுக் கதவைத் திறந்து விட்டது, இவர்களுக்குப் புல்லரிப்பாயிருந்தது.

ஹோட்டலுக்குள்ளே பிரவேசித்ததும் புல்லரிப்பு பல மடங்காகியது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்த லாபி. வானளவுக்கு உயர்ந்த கூரை. மிருதுவான குளிர். கூரையிலிருந்து தொங்குகிற விதவிதமான விளக்குகள். அரச கட்டளை படத்தில் எம்.ஜி.ஆர் தொங்கிக்கொண்டே சண்டை போடுகிற மாதிரி கன்னாபின்னாவென்ற சைசில ஒரு ராட்சச சர விளக்கு.

கண்ணாடித் தடுப்புக்கு அந்தப்புறம் சினிமாவில் வருகிற மாதிரி அட்டகாசமான நீச்சல் குளம். அதில், மிகக் குறைந்த உடையலங்காரத்தோடு சில வெள்ளை உருவங்கள்.

கையில் சில கம்யூட்டர்க் காகிதங்களோடு இப்படியும் அப்படியுமாய் ஒயிலாய் நடைபோடுகிற, சினிமா நடிகைகள் மாதிரி அழகான பெண்கள். இன்றைய நம்மூர்க் கதாநாயகர்கள் மாதிரி கன்னங்கரேலென்றும், நாலு நாள் தாடியோடும், சலவைக்குப் போட வேண்டிய மூஞ்சிகளோடும் இல்லாமல் ஹிந்திப் பட ஹீரோக்கள் மாதிரி மொழு மொழுவென்று சிகப்பான சிப்பந்திகள்.

இந்தப் பிரமிப்பான சூழலில் முனுசாமி மேலே ஆரோகணித்துப் போவது மாணிக்கத்துக்கு வெட்கமாயிருந்தது.

“என்னக் கீள எறக்கி வுடுபா" என்றான் அவன் காதில்.

“இன்னும் கொஞ்ச நேரத்துக்குத்தான் ஒன்னத் தூக்கிச் சொமக்கப் போறேன். அப்பால நீ ஜாலியா சைக்கிள்ள போயிருவ, கம்னு வா." என்று அவனைக் கீழே விட மறுத்த முனுசாமியிடம் திமிறிக் கொண்டு மாணிக்கம் கீழே இறங்கிக் கொண்டான்.

தரை ஜில்லென்றிருந்தது. பளபளவென்றும்.

“...மெட்ராஸ்ல ரோடெல்லாம் இப்டிக் கண்ல ஒத்திக்க மாறி இருந்திச்சின்னா எனக்கு மூணு சக்கர சைக்கிளே வேண்டாம். உருண்டுக்கினே ஊரச் சுத்துவேன்..."

எந்தப் பக்கமாய்ப் போவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த போது இவர்களுக்குக் கதவைத் திறந்துவிட்ட காவலாளியே உதவிக்கு வந்தார்.

“தம்பி, இந்த லிஃப்ட்ல உள்ள போங்க. உள்ள போன வொடன கதவு தானா மூடிக்கும். ரெண்டாம் நம்பர் பட்டன அமுக்குங்க. ரெண்டாவது மாடீல போய்க் கதவு தொறக்கும். அங்க ஆட்கள் இருப்பாங்க. அட, அவன ஏந்தம்பி கீழ உட்டுட்ட? தூக்கிக்கலாம்ல?”

“இல்லங்க, தொரக்கி வெக்கமா இருக்காம்.”

முனுசாமி சொன்னதைக் கேட்டுக் காவலாளி சிரித்தார். மாணிக்கம் அவரை அண்ணாந்து பார்த்துச் சிரித்தான்.

மீட்டிங் நடந்த ஹாலுக்குள் மெத்தை மாதிரி மெதுவான கார்ப்பெட் விரித்திருந்தது. மாணிக்கம் அந்த மென்மையை அனுபவித்துத் தவழ்ந்தான்.

ஹாலின் ஒரு கடைசியில் சுவரோரமாய் பளபளக்கும் பாத்திரங்கள் மூடி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாத்திரத்துக்குக் கீழும் விளக்கு மாதிரி அடுப்பு.

அந்தத் திசையில் மாணிக்கம் பார்ப்பதை அவதானித்த முனுசாமி அவனிடம் சொன்னான்.

“அதான் கண்ணு சாப்பாடு. ஐட்டம் கன்னாபின்னான்னு இருக்கும். மீட்டிங் முடிஞ்சா பைஸ்டார் விருந்துதான், ஜாலிதான்.”

“அது சரி, நமக்கு சாப்பாடு குடுப்பாங்களா?” என்று சந்தேகப்பட்ட மாணிக்கத்துக்கு முனுசாமி நம்பிக்கையூட்டினான்.

“சாப்பாடு மட்டும் இல்லம்மா, அங்க பார், வக வகயா கலர்க் கலரா பாட்டில்! அல்லாம் பாரின் சரக்காத் தெரியுது!”

மாணிக்கம் அவனுடைய தொடையில் கிள்ளினான்.

“அடேய் நயியா, பாட்டிலப் பாத்து நீ ஜொள்ளு வுட்டுக்கினு இருக்காத. தண்ணியடிச்சுக்கினு நீ மல்லாந்துக்கினீனா, அப்பால ஒன்ன நா அம்போன்னு வுட்டுட்டு புது சைக்கிள்ள ஏறி சவாரி வுட்டுக்கினே இருப்பேன். பேசாம சாப்பாடு ஐட்டத்த மட்டும் ஒரு வெட்டு வெட்டுக்கினு போய்க்கினே இருப்போம். இன்னான்ற? மட்டன், சிக்கன், வஞ்சிரம் ஐட்டமெல்லாம் கீது! இப்பவே வாசம் தூக்குது பாரு!”

மீட்டிங் ஆரம்பித்தது. இந்த ரெண்டு பேருக்கும் புரியாத ஆங்கிலத்தில் ஆளாளுக்கு வெளுத்துக் கட்டினார்கள்.

மாணிக்கத்தின் பெயர் ஒரு முறை உச்சரிக்கப்பட்டபோது மேடையிலிருந்த பாபு, நேற்று இவனை நாடி வந்தவர், எழுந்து நிற்கும்படி செய்கை செய்யவும், டக்கென்று முனுசாமி மாணிக்கத்தை உயர்த்திக் கூட்டத்திற்குக் காட்டினான். படபடவென்ற கரவொலி. அதற்குப் பிறகு மீட்டிங்கில் அவர்கள் பேசிக் கொண்டது எதுவும் இந்த ரெண்டு பேருக்கும் உறைக்கவில்லை.

செவிக்குணவில்லாததால் வயிற்றுப்பசி வாட்டத் தொடங்கியது.

‘சீக்கிரமாய்ப் பேசி முடித்தார்களென்றால் இந்தச் சிக்கனையும் மட்டனையும் மீனையும் ஒரு பிடி பிடித்துவிட்டு புது சைக்கிளில் ஏறி காலா காலத்தில் பேட்டைக்குப் போய்ச் சேரலாம்’.

ஒரு வழியாய் மீட்டிங் முடிந்தது. அதற்காகவே காத்திருந்த மாதிரி சங்க அங்கத்தினர்கள் சிலர், லிக்விட் டயட்டிலிருக்கிறவர்கள் - ஆளுக்கொரு கோப்பையைக் கைகளில் ஏந்திக் கொண்டார்கள். கலர்க்கலராய்த் திரவங்கள் கோப்பைகளை நிறைத்தன.

முனுசாமி அந்தத் திக்கையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்க, பாபு அவர்களை நெருங்கி வந்து, “வாங்க தம்பி வெளிய போகலாம்” என்றதும் இவர்களுக்கு ‘சப்’பென்று ஆகி விட்டது.

‘கைக்கெட்டிய அஞ்சு நட்சத்திர ஐட்டங்கள் வாய்க்கெட்டாமல் போய்விடும் போலிருக்கே!’ என்று மாணிக்கத்துக்கு ஏமாற்றம்.

முனுசாமிக்கோ டபுள் ஏமாற்றம். ‘திரவ உணவுதான் கிட்ட வாய்ப்பில்லை. திட உணவாவது வாய்க்குமென்று பார்த்தால்...’

“ஒன்னோட ட்ரை சைக்கிள் முன்னாடி போர்ட்டிகோல நிக்கிது தம்பி. வெளிய போய் ஃபோட்டோ எடுத்துட்டு வந்திருவோம், ரெண்டு பேரும் வாங்க” என்று பாபு விளக்கங்கொடுத்த பிறகுதான் மாணிக்கத்துக்கு வயிற்றில் பால் வார்த்த மாதிரியிருந்தது.

முனுசாமிக்கு வயிற்றில் பீயர் வார்த்த மாதிரி.

போர்ட்டிகோவில் மாணிக்கத்துக்கு சொந்தமாகப் போகிற ட்ரை சைக்கிள் புத்தம் புதுப் பொலிவுடன் நின்றது.

முனுசாமி, மாணிக்கத்தை அலக்காய்த் தூக்கி ஸீட்டில் உட்கார்த்தி வைத்தான்.

ஃபோட்டோ எடுத்துக் கொள்வதற்காக அங்கே குழுமியிருந்த சங்கத்து முக்கியஸ்தர்களையெல்லாம் நன்றிப் பெருக்கோடு மாணிக்கம் கையெடுத்துக் கும்பிட்டான்.

“இந்தாப்பா தம்பி, நீ கொஞ்சம் ஒதுங்கிக்க, ஃபோட்டோவெல்லாம் எடுத்தப்புறம் வா” என்று முனுசாமிக்கு உத்தரவு வந்தது.

இந்த ரெண்டு பேருக்கும் திகைப்பு.

“சார், இவந்தா என்ன இட்டுக்கினு வந்தவன்.”

“அது சரி, அவனே ஒன்ன இட்டுக்கினு போகட்டும். இப்ப ஒரு அஞ்சு மினிட் ஒரு ஸைடா ஒதுங்கிக்கினே நின்னுக்கினே இருக்கட்டும். எங்க தம்பி கொஞ்சம் ஜகா வாங்கு.”

என்று இன்னொரு முக்கியஸ்தர் மெட்ராஸ் பாஷையில் முனுசாமிய ஓரங்கட்டவும் அங்கே ஒரு குபீர்ச் சிரிப்பு.

சிநேகம் நாடி மாணிக்கம் பாபுவைத் தேடிய போது. பாபு இந்த நகைச்சுவை மன்றத்தில் கலந்து கொள்ளாமல் இன்னொருவருடன் தீவிரமாய் ஏதோ விவாதித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"தம்பி, டைமாச்சுப்பா ஒதுங்கு" என்று இன்னொரு குரல் நெட்டித் தள்ளவும் வேறு வழியில்லாமல் முனுசாமி காமரா எல்லையிலிருந்து விலக வேண்டியதாயிற்று.

படப்பிடிப்பு ஒரு வழியாய் முடிந்ததும் முனுசாமி மாணிக்கத்தோடு வந்து சேர்ந்து கொண்டான். ரெண்டு பேருக்குமே உற்சாகம் குன்றிவிட்டிருந்தது.

குன்றிப் போனதை அடியோடு குலைத்து விடுகிற மாதிரி பிடறியிலறைந்தது ஒரு குரல்.

"படமெடுத்து முடிஞ்சிருச்சில்ல தம்பி, நீங்க கௌம்பலாம்."

மாணிக்கமும், முனுசாமியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள், உணர்ச்சியின்றி.

இன்னொரு குரல் இவர்களுக்குப் பரிந்துரை செய்தது.

"ப்ரஸிடென்ட் ஸார், இவங்க ரெண்டு பேரும் உள்ள வந்து சாப்ட்டுட்டுப் போகட்டுமே, நா கமிட் பண்ணிட்டேன்..."

பாபு.

பாபுவை அடக்கியது, ப்ரஸிடென்ட்டின் குரல்.

"டோன்ட் பி ஸில்லி பாபு. ஒங்க பாட்டுக்கு ஏதாவது கமிட் பண்ணிட்டிருக்காதீங்க ஸார். வேல முடிஞ்சதுன்னா அவங்களப் பாக் பண்ணி அனுப்பி வப்பீங்களா, அத விட்டுட்டு சம பந்தி போஜனத்துக்கு ஸெட் அப் பண்ணிட்டிருக்கீங்களே! அதுக்கு வேற ப்ராஜக்ட் இருக்கு ஸார். அவனுங்க கையில ஒரு அம்பது ரூபா குடுத்து விடுங்க. வழியில சாப்ட்டுட்டுப் போய்ச் சேருவாங்க. அனுப்ச்சி வச்சுட்டு சீக்கிரம் உள்ள வந்து சேருங்க. எல்லாரும் வெய்ட் பண்ணிட்டிருப்பாங்க. நா போறேன்."

ப்ரஸிடென்ட் உள்ளே போன பின்னால் பாபு இந்தப் பக்கம் முகத்தைத் திருப்பாமலேயே பாக்கெட்டிலிருந்து கர்ச்சீஃபை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு, வாலட்டிலிருந்து ஒரு புத்தம் புது நூறு ரூபாய்த் தாளை உருவி விரலிடுக்கில் வைத்துக் கொண்டு இவர்கள் நோக்கித் திரும்.

அந்த இடம் வெறுமையாயிருந்தது.

பதற்றத்தோடு பாபுவின் கண்கள் நாலாபுறமும் அலைபாய, “ஸார்!” என்று அவரை விளித்து, வாசலில் நின்ற காவலாளி கேட்டின் பக்கம் சுட்டிக் காட்டினார். அங்கே கேட்டில், முனுசாமி வெளியேறிக் கொண்டிருந்தான், மாணிக்கத்தை சுமந்தபடி.

இங்கே போர்ட்டிகோவில் ஓர் ஒதுக்குப்புறமாய் நின்று கொண்டிருந்தது, மாணிக்கத்துக்கு சொந்தமாகவிருந்த மூணு சக்கர சைக்கிள்.

-ஆனந்த விகடன், 18.04.1999

(சைக்கிள்)

# சின்னச் சின்ன வட்டங்கள்

அமிஞ்சிக்கரைப் பள்ளியில் நோன்பு திறந்து கஞ்சி குடித்துவிட்டு, மக்ரிப் தொழுகைக்குப் பின்னால் பொடி நடையாய் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் ஹசன் பாய். என்றைக்குமில்லாமல் இன்றைக்கு நோன்புக் கஞ்சி குடித்த பின்னாலும் உடம்பில் தெம்பு வரவில்லை. கால்கள் சோர்ந்து போன மாதிரியிருந்தது. இந்த பலவீனத்துக்குக் காரணம் மனச்சோர்வுதான் என்பது அவருக்குப் புரிந்தது.

வீட்டையடைந்து காலிங் லைட் பொத்தானை அழுத்தினார்.

ஹலிமாவின் வசதிக்காகக் காலிங் பெல்லுக்கு பதிலாய்க் காலிங் லைட்.

கதவைத் திறந்த ஹலிமா, வழக்கம் போல மலர்ந்த முகத்தோடு கணவனைக் கையைப் பற்றி உள்ளே அழைத்துப் போனாள். ஹசன்பாய் ஹலிமாவோடு நேராய் அடுக்களைக்குப் போய்விடுவார். ஹலிமா தயாராய் எடுத்து வைத்திருக்கும் உணவைக் கொண்டு பசியாறி விட்டு சூடாய் ஒரு கப் டீ குடித்த பிறகுதான் அவருக்கு நோம்புக் களைப்பு நீங்கும்.

ஆனால், இன்றைக்கு மனச் சோர்வுக்குப் பின்னால் பசி பதுங்கிக் கொண்டது. சாப்பிட மனசில்லை. மனைவியிடமிருந்து கையை விடுவித்துக் கொண்டு முன்னறையில் ஈஸிச் சேரில் சரிந்து கண்களை மூடிக் கொண்டார்.

'...ரமலான் மாதத்தில் கல்யாணங்கள்தான் செய்வதில்லை, மக்கள் கல்யாண ஏற்பாடுகள் கூடவா செய்யாமலிருந்து விடுவார்கள்! அப்படியானால் என்னைப் போன்ற கல்யாணத் தரகர்களின் வருமானத்துக்கு என்ன வழி? கடந்த இருபது இருபத்தஞ்சு நாளாய் ஒரு பயல் வந்து வீட்டுக் கதவைத் தட்டவில்லையே! அல்லாஹ்தான் ஒரு வழிகாட்ட வேண்டும்...'

கடவுளை நினைத்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு கிடந்தார்.

வழக்கத்துக்கு மாறாகக் கணவன் சாப்பிட வராமல் கவலையாய் படுத்திருப்பது ஹலிமாவின் மனசைப் பிசைந்தது. 'என்ன மனச்சுமையோ என்ன பிரச்சினையோ, எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்வது?' அவர் சொன்னாலுந்தான் இவளுக்கு உடனே புரிந்து விடவா போகிறது!

கணவனுடைய கால் மாட்டில் உட்கார்ந்து அவருடைய முழங்காலில் முகம் புதைத்தாள்.

அப்படியே ஒரு அரைமணி நேரம் ஆகியிருக்கும். திடீரென்று அழைப்பு விளக்கு 'பளிச் பளிச்'சென்று எரிந்து எரிந்து அணைந்தது.

...கல்யாண விஷமாய்த்தான் யாராவது கஸ்டமர்கள் வந்திருப்பார்கள். வேலை அமையாததுதான் இவருடைய இன்றைய கவலை என்றால், இதோ வேலை வந்துவிட்டது. அல்லாஹ் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டான்! அல்ஹம்துல்லாஹ்!..'

உற்சாகமாய்க் கணவனை எழுப்பி விட்டுவிட்டுக் குசினிக்குள் போனாள்.

'இந்த நேரத்தில் யார் வந்திருக்கக் கூடும்?' என்கிற குறுகுறுப்புடனே ஹசன்பாய் போய்க் கதவைத் திறந்தார். வாசலுக்கு வெளியே நின்றிருந்த உருவம் இவருக்கு அவ்வளவு உற்சாகத்தைத் தரவில்லை. கல்யாண விஷயமாய் இவரைப் பார்க்க வருகிறவர்கள் பெண்ணைப் பெற்றவர்களாய் அல்லது பையனைப் பெற்றவர்களாயிருப்பார்கள். இளம் முதியவர்களாய், நடுத்தர வயசைக் கடந்தவர்களாய். இதோ இவனைப் பார்த்தால் இருபத்தஞ்சு வயசு இளைஞனாய்த் தெரிகிறான். இவன் யாருக்காக இவரைத் தேடி வந்திருக்கக்கூடும்? தன் சகோதரி யாருக்காகவாவது...?

ஹசன்பாயின் யோசனைகளை அந்த இளைஞனின் 'அஸ்ஸலாமு அலைக்கும்' கலைத்தது.

அவனுடைய சலாமுக்கு பதில் சொல்லி, அவனை உள்ளே அழைத்து நாற்காலியில் அமரச் செய்து, தான் ஈஸிச் சேரில் அமர்ந்தவாறு அவன் முகத்தைப் பார்த்தார்.

"சொல்லுங்க தம்பி, எங்கயிருந்து வர்றீக, என்ன விஷயமா வந்தீக..."

கொஞ்சம் தயக்கத்துக்குப் பின் வந்தது அந்த இளைஞனோட பதில்.

"இங்கதான். அண்ணா நகர்ங்க... கல்யாண விஷயந்தான்."

"யாருக்கு, ஒங்க ஸிஸ்டருக்கா?"

"இல்லீங்க, எனக்குத்தான்."

ஹசன் பாய்க்கு ஆச்சர்யம். இவருடைய பதிமூணு வருஷ சர்வீஸில், தனக்கென்று பெண் கேட்டு இளைஞனொருவன் இவரிடம் வருவது இதுதான் முதல் தடவை. ஹசன்பாய்க்கு சுவாரஸ்யம் தட்டியது. அந்த சுவாரஸ்யம் தந்த உற்சாகத்தில் இத்தனை நேரம் ஒளிந்திருந்த பசி மெல்ல எட்டிப் பார்த்தது.

'தம்பி, வாங்களேன் பசியாறிட்டே பேசுவோம்" என்று அவனையும் அழைத்தார்.

"இப்பதாங்க நோம்பு தெறந்துட்டு வீட்ல சாப்புட்டு வர்றேன். நீங்க இன்னும் சாப்புடலியா? சாப்ட்டுட்டு வாங்க, நா வெய்ட் பண்றேன்."

"அப்ப ஒரு அஞ்சு நிமிஷம் உக்காருங்க தம்பி, நா சீக்கிரமா சாப்ட்டுட்டு வந்துர்றேன்... ஆமா, தம்பி பேர் சொல்லவே இல்லையே..."

"இக்பால்ங்க."

“இக்பால் தம்பி, இருங்க டீ போடச் சொல்றேன். டீ ரெடியாவறதுக்குள்ள சாப்ட்டுட்டு வந்துர்றேன்.”

அவர் உள்ளே போன பின்னால் எதிர்ப்பக்கத்துச் சுவரில் அழகான எழுத்துக்களால் எழுதப்பட்டு ஃப்ரேம் போட்டு மாட்டியிருந்த வாசகத்தில் இக்பாலின் பார்வை லயித்தது.

‘...உங்களில் யார் பராமரிப்புச் செலவுக்கு சக்தி பெற்றுள்ளாரோ அவர் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் (பிறன்மனை நோக்குவதை விட்டும்) பார்வையைத் தடுக்கக் கூடியதாகவும், கற்பைக் காக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.’

-நபிமொழி.

தன்னுடைய தொழிலோடு தொடர்புடைய நபிமொழியொன்றைத் தேர்ந்தெடுத்து எழுதி வைத்திருந்த நேர்த்தி இக்பாலைக் கவர்ந்தது.

இந்த மாதிரி வித்தியாசமான சிந்தனைகளும் செயல்களும்தான் மற்ற கல்யாணத் தரகர்களிடமிருந்து ஹசன் பாயைப் பிரித்து உயர்த்திக் காட்டுகிறது என்பது இக்பால் கேள்விப்பட்டதுதான். அவரைப் பற்றி இவன் கேள்விப்பட்டிருந்த இன்னொரு விஷயம், அவருடைய திடீர் நிக்காஹ் பற்றியது. அதைப் பற்றி அவரிடமே கேட்டுவிடுவது என்று நினைத்துக் கொண்டிருந்த போது ஹசன்பாயே அங்கே பிரவேசித்தார், ரெண்டு கைகளிலும் தேநீர்க் கோப்பைகளை ஏந்தியபடி. ஒரு கோப்பையை இக்பாலிடம் கொடுத்துவிட்டு, இன்னொன்றை அனுபவித்து உறிஞ்சினார் ஈஸிச் சேரில் உட்கார்ந்து.

“தம்பி இக்பால், விவரம் சொல்லுங்க.”

“சொல்றேங்க பாய். அதுக்கு முந்தி ஒங்க புரட்சி நிக்காவைப் பத்திச் சொல்லுங்களேன்...”

“புரட்சி நிக்காவா? அப்படி யாருக்கும் நா நிக்காஹ் பண்ணி வக்யலியே!”

“ஓ, அந்தக் கதையக் கேக்கீங்களா!”

ஹசன் பாய் வாய்விட்டுச் சிரித்தார். சிரித்த சிரிப்பில் தேநீர்க் கோப்பை அலுங்கி, டீயெல்லாம் கொட்டப் பார்த்தது.

“புரட்சியாவது மண்ணாங்கட்டியாவது தம்பி. இந்தப் பொண்ணை அல்லாஹ் என்னோட நஸீப்ல எழுதி வச்சிருக்கான். மத்தவங்களுக்குக் குடுத்து வக்யல அதான்.”

“கொஞ்சம் விவரமா சொல்லுங்க பாய்.”

“எட்டு வருஷத்துக்கு முந்தின கதை தம்பி. ஒரு கொமரோட ஃபோட்டோவக் கொண்டுக்கிட்டு ஒரு பெரியவர் என்ட்ட வந்தார். ஃபோட்டோல இருந்த பொண்ணு, சும்மா சொல்லக்கூடாது, மாஷா அல்லாஹ், அப்ஸரஸ் மாதிரி இருந்துச்சு. ‘இந்தப் பொண்ணக் கட்டிக்க மாப்பிள்ளைங்க க்யூவுல வந்து நிப்பானுங்களே ஹஜரத், நீங்க புரோக்கரைத் தேடிக்கிட்டு வந்திருக்கீங்களே’ன்னு ஆச்சர்யமாக் கேட்டேன். பெரியவர்

தலையக் கவுந்துக்கிட்டார். ‘வாஸ்தவந்தான் தம்பி, மாப்பிள்ளைங்க க்யூவுல நிக்கிற அளவுக்கு அழகைக் குடுத்த அல்லாஹ், குரலைக் குடுக்காம வுட்டுட்டான். எம் மகளுக்கு வாய் பேச ஏலாது தம்பி. நானும் பல இடங்கள்ள முயற்சி பண்ணிப் பாத்துட்டேன் தம்பி. பொண்ணோட அழகுக்கு வாயப் பொளந்துக்கிட்டு வர்றவங்க அது வாயில்லாப் பூச்சின்னு தெரிஞ்சதும் கப் சிப்னு வாயப் பொத்திக்கிட்டு ஓடிப் போயிர்றானுங்க. ஒண்ணும் அமஞ்சுவராம, ஒரு புரோக்கர் மூலமாவது முயற்சி பண்ணிப் பார்ப்பமேன்னுட்டு உங்கட்ட வந்திருக்கேன். ஏதாவது அமையுமான்னு பாருங்க. அதுக்காக உண்மைய மறைக்க வேண்டாம். பொண்ணு ஊமைங்கறதை முன்னக் கூட்டியே சொல்லிப்புடுங்க. பொய் சொல்லி ஏமாத்தி நிக்காஹ் செஞ்சிட்டதா இருக்கப்படாது. அது நஸீப்ல கல்யாணம்னு இருந்தா நடக்கட்டும். இல்லாட்டி அல்லாஹ்வோட நாட்டம் எப்படியோ அப்படியே நடக்கட்டும்’னு பெரியவர் கண்ணீர் வுட்டார். பெரியவர் கையப் புடிச்சிக்கிட்டு நா சொன்னேன், ஹஜரத், நா இதை ஒரு சவாலா எடுத்துக்கறேன். மூணே மாசத்துல உங்க மகளோட அழகுக்குப் பொருத்தமா ‘ஜாம் ஜாம்’னு ஒரு பையனக் கொண்டுட்டு வர்றேன், இன்ஷா அல்லாஹ்’, அப்படீன்னு ஒரு நம்பிக்கை கொடுத்துப் பெரியவரை அனுப்பி வச்சேன். சவால்தான் பெரிசா வுட்டுட்டேனே தவிர, ஒரு ஊமைப் பொண்ணுக்கு மாப்பிள்ளையக் கண்டு பிடிக்கிறது அப்படியொண்ணும் சுளுவான வேலையாத் தெரியல. பல எடங்கள்ல எளக்காரமாப் பேச்சு, வசவு, அவமரியாதை, கடேசீல ஒலு பெரிய மனுஷர் நக்கலாச் சொன்னார், ‘நீ ஏன் தம்பி இப்படி வெட்டியா அலஞ்சிட்டிருக்க, நீயே தான் அதக் கட்டிக்கோ’யன்னார்.”

“அப்புறம்?”

“அப்புறமென்ன, முப்பத்தஞ்சு வயசு வரக்யும் கல்யாணம் பண்ணிக்காம இருந்த எனக்கு அல்லாஹ் இப்படியொரு குணமும் அழகும் அமஞ்ச ஹலிமாவைக் குடுத்தான். இந்தப் பொண்ணை வேண்டாம்னு தட்டிக் கழிச்சவனெல்லாம் இப்ப என்னப் பாத்தா வயிறெரியிறானுங்க. அது சரி தம்பி, என்னோட சரித்திரம் போதும். நீங்க ஒங்க சமாசாரத்தச் சொல்லுங்க.”

“சொல்றேன் பாய். சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாறேன். ‘பஷீர், பஷீர்’னு எனக்கு ஒரு சிநேகிதன். அவனுக்கு ரஸியான்னு ஒரு தங்கச்சி. பஷீரும் நானும் ரொம்ப ரொம்ப தோஸ்த். அவன் தங்கச்சிய எனக்குத் தரணும்னுட்டு அவனுக்கு ரொம்ப ஆசை. எனக்கும்தான். ஆனா, எங்க வூட்லயும் அவங்க வூட்லயும் பெரியவங்க சம்மதிக்க மாட்டாங்களோன்னு ஒரு பயம். ஏன்னா, இதுல ஒரு சிக்கல் இருக்கு. சிக்கல்னு நெனச்சா அது சிக்கல். பரந்த மனப்பான்மையோட பாத்தா சிக்கலில்ல.”

“ஒங்க வியாக்கியானமே சிக்கலாத்தானிருக்கு.”

“சிக்கலை விடுவிக்கத்தானே பாய் ஒங்ககிட்ட வந்திருக்கேன். நீங்க ஒரு முற்போக்கு சிந்தனையாளர், பரந்த மனப்பான்மையுள்ளவர்னு நா நம்பறதுனாலதான் ஒங்களத் தேடி வந்திருக்கேன். நீங்கதான் பாய் பெரியவங்கட்ட பேசி இந்த சிக்கலத் தீத்து வச்சு இந்த நிக்காவ நடத்தி வக்ய முடியும்.”

“சிக்கல் என்னன்னு நீங்க சொல்லவேயில்ல.”

“அதான் சொன்னேனே பாய், அது சிக்கலா இல்லையாங்கறதே அவங்க அவங்க மனநிலையப் பொறுத்ததுதான். போகப் போக நீங்களே புரிஞ்சுக்குவீங்க.”

“இன்ஷா அல்லாஹ், முயற்சி பண்ணுவோம். உங்க அட்ரஸையும் பொண்ணு அட்ரஸையும் குடுங்க. பொண்ணு எந்த ஊரு?”

“வாணியம்பாடி பாய். இந்தாங்க அட்ரஸ்.”

“சரி தம்பி இக்பால், போக்குவரத்துச் செலவுக்கு ஒரு இருநூறு ரூபா குடுத்துட்டு போங்க. பெருநாள் கழிச்சி ஒரு ரெண்டு நாள் செண்டு வந்து பாருங்க. அதுக்குள்ள நா வாணியம்பாடிக்குப் போய் அறிஞ்சிட்டு வந்துர்றேன்.”

“ரொம்ப நன்றிங்க பாய். நா வர்றேன், அஸ்ஸலாமு அலைக்கும்.”

இக்பால் கிளம்பிப் போன பின்னால் ரொம்ப நாளைக்குப் பிறகு ஒரு வேலை வந்த சந்தோஷத்துக்கு அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லிவிட்டு, கதவைத் தாளிட்டுக் கொள்ள ஹலிமாவிடம் சொல்லிவிட்டு ஹசன் பாய் தராவீஹ் தொழுகைக்குக் கிளம்பினார்.

பெருநாள் வரைக்கும் இக்பால் பொறுமையோடு காத்திருந்தான். அதன் பிறகு ரெண்டு நாள் கழிவதுதான் ஸ்லோமோஷனில் நகர்வது மாதிரி இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்துவிட்டு மூணாம் நாள் காலை ஹசன்பாயைப் பார்க்கக் கிளம்பினான்.

கதவைத் திறந்த ஹசன்பாய் குரலில் உற்சாகமில்லாமல் அவனை வரவேற்றார்.

“வாங்க தம்பி, ஒக்காருங்க. ஒங்க விஷயமா வாணியம்பாடிக்குப் போய்ட்டு வந்தேன்.”

இக்பால் ஏதும் பேசாமல், அவரே எல்லாம் சொல்லி முடிக்கக் காத்திருந்தான். ஹசன் பாய் தொடர்ந்தார்.

“நீங்க ‘சிக்கல், சிக்கல்’னு என்னமோ புதிர் போட்டீங்களே தம்பி, அது சிக்கல் இல்ல. பெரிய பாறாங்கல். அதத் தாண்டிப் போக ஏலாது. அதனால...”

“அதனால?”

“இத மறந்துருங்க.”

இக்பால் அவரை ஆழமாய்ப் பார்த்தான்.

“இவ்வளவுதானா?”

அந்தக் குரலிலிருந்த ஏளனம் ஹசன்பாய்க்குப் புரிந்தாலும், அவர் பொருட்படுத்தாமல் அவனுக்கு விளக்கம் சொன்னார்.

“தம்பி, நீங்க வாணியம்பாடின்னு சொன்னப்பவே நெனச்சேன், நீங்க சொன்ன சிக்கல் இதுவாத்தான் இருக்கும்னு. நா நெனச்சது சரிதான். புதிர் போடாம நீங்களே

ஒடச்சுச் சொல்லியிருக்கலாம். நா தமிழ் முஸ்லீம், அந்தப் பொண்ணு உருது முஸ்லீம்னு. நா அப்பவே சொல்லியிருப்பேன் இது ஒப்பேறாத கேஸ்னு. எனக்கும் ஒங்களுக்கும் நேரமும் பணமும் மிச்சமாயிருக்கும்."

"ஏன் பாய், உருது முஸ்லிம்னா இஸ்லாமானவங்க இல்லியா?"

"கிண்டலாக் கேக்கறிங்க. பரவாயில்ல. எல்லாம் இஸ்லாமானவங்கதான் தம்பி, ஆனா நாம சில நடைமுறைச் சங்கடங்களப் பாக்க வேண்டியிருக்கில்ல! பொதுவாவே உருது முஸ்லிம்களும் தமிழ் முஸ்லிம்களும் சம்மந்தம் வச்சுக்கிறதில்ல தம்பி. மொழிப் பிரச்சனை வருதில்ல?"

"என்னங்க பெரிய மொழிப்பிரச்சனை. பஷீருக்கு, ரஸியாவுக்கு ஏன் அந்தக் குடும்பத்துல இருக்கிற எல்லாருக்குமே தமிழ் பேச வரும். எனக்கு இப்ப உருது தெரியாதுதான், ஆனா உருது பேசக் கத்துக்கிறது ஒண்ணும் முடியாத காரியமில்ல. தமிழ்நாட்டில இருக்கற உருது ஸ்பீக்கிங் முஸ்லிம்கள்ள பாதிப்பேருக்கு மேல உருது படிக்கவோ, எழுதவோ வராது, பேச மட்டுந்தான் தெரியும், தெரியுமா ஒங்களுக்கு?"

"அதெல்லாம் நமக்கு அநாவசியம் தம்பி. மொத்தத்துல, எங்கேயாவது எப்பவாவது அபூர்வமா ஒண்ணு ரெண்டு கல்யாணம் நடக்குதேயொழிய உருது முஸ்லிம்ஸும் தமிழ் முஸ்லிம்ஸும் கல்யாண உறவு வச்சிக்கிறது வழக்கத்துல இல்ல."

"அப்ப நீங்க முயற்சி பண்ணப் போறதில்ல."

"நா முயற்சி பண்ணலாம் தம்பி, ஆனா அதுக்கு பலன் இருக்காதே! பெரியவங்க ரெண்டு குடும்பத்துலயுமே இதுக்கு ஒப்புக்க மாட்டாங்களே!"

"பெரியவங்களை வழிக்கிக் கொண்டுவரத்தானே பாய் நான் ஒங்களத் தேடி வந்தேன். மொழியே இல்லாத ஒரு பொண்ணைக் கட்டிக்கிட்டு ஒரு முன் மாதிரி படைச்ச நீங்க, வேற்று மொழிப் பொண்ண நிக்காஹ் செய்றதுக்கும் ஒரு வழி அமைச்சுக் குடுப்பீங்கங்கற நம்பிக்கைலதான் ஒங்களத் தேடி வந்தேன். ஆனா, நீங்க இப்ப பின்வாங்குறதுலயிருந்து ஒண்ணு புரியுது. நீங்க வாய் பேசாத பொண்ணைக் கட்டிக்கிட்டதுக்குக் காரணம் முன்மாதிரியோ, தியாக மனப்பான்மையோ, பரந்த உள்ளமோ, முற்போக்குச் சிந்தனையோ எதுவுமில்ல. நிர்பந்தம்தான் காரணம். வேறே வழியே இல்லாமத்தான் ஒரு ஊமைப் பொண்ணைக் கட்டிக்க வேண்டிய கட்டாயத்துக்கு நீங்க நிர்பந்திக்கப்பட்டீங்கன்னுதான் இப்ப நெனைக்க வேண்டியிருக்கு. சரிதானே பாய்?"

இக்பாலின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் 'நறுக் நறுக்'கென்று அக்குபங்ச்சர் ஊசிகளாய்த் தைத்தன. ஹசன்பாய்க்கு பதில் பேச சொற்கள் கிடைக்கவில்லை. அவருடைய பங்குக்கும் சேர்த்து திரும்ப இக்பாலே பேசினான்.

"ஹசன்பாய், நீங்க என்னை விட வயசுல எத்தனையோ பெரியவர். இருந்தாலும் எனக்குத் தெரிஞ்சதை சொல்றேன். இந்தியால தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம் இந்த மூணு ஸ்டேட்ஸ்ல மட்டுந்தான் முஸ்லிம்ஸ் அந்தந்த மாநில மொழிகளைப் பேசறாங்க. மத்த எல்லா ஸ்டேட்ஸ்லயும் முஸ்லிம்ஸ் உருதுதான் பேசறாங்க. இந்த மூணு மாநிலங்களும் உருது மஹா சமுத்திரத்துல இருக்கிற மூணு தீவுகளாயிருக்கு.

தமிழ்நாட்டுல இருக்கிற உருது முஸ்லிம்ஸ் கர்நாடகால, ஹைதராபாத்ல இருக்கிற உருது முஸ்லிம்ஸ் கூட திருமண சம்பந்தம் வச்சிக்கிறாங்க. ஆனா, நீங்க சொல்ற மாதிரி தமிழ்நாட்ல இருக்கிற தமிழ் முஸ்லிம்ஸும் உருது முஸ்லிம்ஸும் திருமண உறவு வச்சுக்கிறதில்லைங்கறது உண்மை. ஆனா, அது ஏன்? இந்தத் தடை அவசியந்தானா? அது சரியானதுதானா? தமிழ் முஸ்லிம்ஸ் தமிழ் முஸ்லிம்ஸுக்குள்ளேதான் சம்மந்தம் வச்சுக்கணுங்கறதும், உருது முஸ்லிம்ஸ் தங்களுக்குள்ளேயேதான் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கறதும் யார் விதிச்ச கட்டுப்பாடு? இந்தச் சின்னச் சின்ன வட்டங்களை ஒடச்சு நிமிர்த்தணும்னு நம்ம சமூகப் பெரியவங்களுக்கு ஏன் தோணவேயில்ல? தோணாமயில்ல; நாம எல்லாருமே இந்த விஷயத்தக் கண்டும் காணாதது மாதிரி ரொம்ப வசதியாப் பாசாங்கு பண்ணிட்டிருக்கோம்.

ஹிண்டு பேப்பர் மாதிரி இங்லீஷ் பத்திரிகைகள்ள நம்ம மக்கள் கொடுக்கிற கல்யாண விளம்பரங்கள்ள கூட உருது ஸ்பீக்கிங் முஸ்லிம், டாமில் ஸ்பீக்கிங் முஸ்லிம்னு பாகுபடுத்தித் தானே குடுக்கறாங்க! அடைமொழிகள் இல்லாம முஸ்லிம்ங்கற ஒரே வார்த்தைய உபயோகிச்சா என்ன? தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கிடையில இருக்கிற இந்த மொழித்திரை விலகி, இங்கே முஸ்லிம்ங்கறது ஒரே இனம்தான்னு ஆகணும்னா அது ஒங்கள மாதிரி கல்யாணத் தரகர்கள் கிரியா ஊக்கியாயிருந்து செயல்பட்டாத்தான் முடியும். அது எல்லாத் தரகர்களாலயும் முடியாது; கொஞ்சம் வித்யாசமான சிந்தனையுள்ளவங்களாலதான் முடியும். மெட்ராஸ்ல இருக்கிற கல்யாணத் தரகர்கள்ளயே நீங்கதான் ஒரு வித்யாசமான மனிதர்னு நா கேள்விப்பட்டதை வச்சு ஒங்கட்ட வந்தேன்…”

ஹசன்பாய் பார்வையைத் தாழ்த்தி உட்கார்ந்திருந்தார், சிந்தனை வசப்பட்டவராய்.

தன்னுடைய பேச்சுக்கு அவரிடமிருந்து பதிலேதும் வராமற்போகவே, இக்பால் எழுந்து கொண்டான்.

“சரி, அப்ப நா போயிட்டு வரேன் பாய்.”

வாசல் வரைக்கும் நடந்தவன் திரும்பவும் பின்புறம் திரும்பி ஹசன்பாயைப் பார்த்தான்.

“என் மனசுக்குப் பிடிச்ச ரஸியா பேகம், ஒங்களோட ஹலிமா மாதிரி பாஷையில்லாத பொண்ணாயிருந்திருந்தா இந்த நிக்காஹ், இன்ஷா அல்லாஹ், ‘ஜாம் ஜாம்’னு நடந்திருக்கும். என்னோட கெட்ட நேரம், அவளோட கெட்ட நேரம், இந்த சமூகத்தோட கெட்ட நேரம், அவ ஊமையாப் பொறக்காம வாயுள்ள பொண்ணாப் பொறந்துட்டா.”

ஹசன்பாய் ‘சட்’டென்று நிமிர்ந்து பார்த்தார். அவருடைய பார்வையில் ஓர் உறுதி தெரிந்தது.

எழுந்து இக்பாலை நோக்கிப் போய் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார்.

“நீங்க சொல்றது வாஸ்தவந்தான் தம்பி.”

குரலில் உணர்ச்சிகள் ததும்பின.

“வாஸ்தவந்தான். நம்மளச் சுத்தி மொழி வட்டங்களப் போட்டுக்கிட்டு உள்ளேயே பாலன்ஸ் பண்ணிக்கிட்டு நிக்கிறோம். அதோடில்லாம வட்டங்களே இல்லாத மாதிரி பாவலா பண்ணிட்டிருக்கோம். நீங்க சொல்ற மாதிரி தரகர்கள் எவ்வளவோ செய்யலாம். நான் செய்றேன். நான் செய்றேன் தம்பி. இந்த மொழிப்புரட்சி ஒங்க நிக்காவோட ஆரம்பிக்கட்டும். அல்லாஹ் உதவியோட இந்த வட்டங்களை நிமிர்த்துவோம்.”

ரெண்டு பேரும் கைகளைப் பற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய முயற்சிக்கு வாழ்த்து சொல்கிற மாதிரி லுஹர் தொழுகைக்கான பாங்கு ஒலி, பள்ளியின் ஒலி பெருக்கியிலிருந்து இனிமையாய் மிதந்து வந்தது.

-மல்லாரிப் பதிப்பகம், ஆகஸ்ட் 1995

# ஆசிரியர் குறிப்பு

1975ல் ஆரம்பித்த கோரியின் எழுத்துப் பயணம் இன்று வரை தொடர்கிறது. முழுநேர எழுத்தாளராக உருவெடுத்த கடந்த பத்தாண்டுகளில் எழுத்துலகிற்கு இவரது பங்களிப்பு மகத்தானது. படைப்புகள் கணையாழி, கல்கி, வடக்கு வாசல், கவிதை உறவு, கல்கி, சமநிலைச் சமுதாயம், கலைமகள், பாக்யா, யுக மாயினி, நவீன விருட்சம், தாமரை, மல்லிகை மகள் உள்ளிட்ட அனைத்து வெகுஜன மற்றும் இலக்கிய இதழ்களிலும் வந்திருக்கின்றன. இவையனைத்தும் பத்துக்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்திருக்கின்றன. கி.வா.ஜ. நினைவுச் சிறுகதைப் போட்டியிலும், அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு கிடைத்தது. படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில், ஜோதிவிநாயகம் நினைவு சிறுகதைப் பரிசுத்திட்டம் என்ற அமைப்பை இலக்கிய நண்பர்களுடன் இணைந்து ஏற்படுத்தியிருக்கிறார்.